This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# பிரிவோம் சந்திப்போம்
## பாகம் – 2

### 1

மீனம்பாக்கத்தில் முதல்முறையாக அப்பா கண்ணீர் சிந்துவதைப் பார்த்தான் ரகு.

"எனக்குக் கொஞ்சம் பயமா இருக்கு ரகு."

"எதுக்கு? நீங்கதானப்பா ஒரு மனசோட என்னை அப்ளை பண்ண வெச்சு அமெரிக்கா போய்த்தான் ஆகணும்னு ஒத்தைக் கால்ல நின்னீங்க."

"அது சரி ரகு. நீ அமெரிக்காவுக்கு எதுக்குப் போற தெரியுமா?"

"படிக்கிறதுக்கு."

"அதுக்கு மட்டும் இல்லை, படிச்சுட்டு திரும்பி வர்றதுக்கு. அதுதான் எனக்கு முக்கியம். திரும்பி வர்றது!"

"ஏம்பா, திரும்பி வராம எங்கே போயிருவேன்!"

"அமெரிக்கா மாயதேசம். பெற்ற தகப்பனைக்கூட மறக்க அடிச்சுரும்."

"நான் அப்படிப்பட்டவன் இல்லைப்பா. அமெரிக்காவிலேயே இருந்துருவேன்னு கவலைப்படறிங்களா? எப்படிப்பா சாத்தியம்? ஸ்டூடண்ட் விசாவில போறேன், கோர்ஸ் முடிஞ்சதும் அவங்களே துரத்திருவாங்க."

"இல்லை ரகு. அங்க போயிட்டா. அந்த தேசத்தில ஒட்டிக்கிறதுக்கு பல வழிகள் இருக்குது."

"எங்கே ஒண்ணு சொல்லுங்க பார்க்கலாம்."

"மாட்டேன்! எனக்கு நீ திரும்ப வேணும்" கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். "சில வேளையில தமிழ் சினிமா மாதிரி நிஜ வாழ்க்கையில நடந்துக்க வேண்டியிருக்குது."

"அப்பா, உங்களுக்கு அமெரிக்காவில இருந்து என்ன வேணும் சொல்லுங்க?"

"நீதான்! ஜெயந்தி, கேளு. உனக்கு ஏதாவது அமெரிக்காவில இருந்து அனுப்பச் சொல்லட்டுமா?"

"அது என்னமோ சொல்றாளே ரைஸ்–குக்கர்?"

"இந்த குக்கர் புத்தி உன்னை விட்டுப் போகாது!" ஜெயந்தியை இடுப்பில் குழந்தையுடன் பார்க்கும்போது ஒரு மாதிரி இருந்தது. குழந்தையைத் தூங்கப் பண்ணிவிட்டு, அப்பாவின் பக்கத்தில் போய்ப் படுத்துக் கொள்ள, சே! அப்படி எல்லாம் நினைக்காதே!"

"ரகு கொஞ்சம் தனியா வரியா?"

"என்னப்பா!" சான்ஸ் பிரயாணிகள் வியர்த்து விறுவிறுத்துக் கொண்டிருந்தார்கள்.

"என்கிட்ட ஒரு சத்தியம் பண்ணிக் கொடுக்கணும்."

"மதுமிதாவை அங்க சந்திக்க முயற்சி செய்யக்கூடாது. அதானே?"

அவர் சற்று அதிர்ந்து போய் "தட் வாஸ் கிளவர்! என் மனசை நீ புரிஞ்சுட்டிருக்கே! அதுவரைக்கும் சந்தோஷம்தான்."

"அந்தக் காதல் கதையெல்லாம் எப்பவோ முடிஞ்சு போயிருச்சுப்பா. ஒரு வருஷத்துக்கு அப்புறம் இப்ப நினைச்சுப் பார்த்தா என்னைப் போல ஓர் அடி முட்டாள் இருக்க முடியாது. கேவலம் ஒரு பெண்ணுக்காகத் தற்கொலை செய்துக்க இருந்தேன் பாரு! சே! அவ எக்கேடு கெட்டுப்போனா எனக்கென்ன!"

ஒலிபெருக்கி பம்பாய் செல்பவர்களை செக்யூரிட்டிக்கு அழைத்தது. "அப்ப போய்ட்டு வரியா...? லெட்டர் போடு. அந்த டெலிபோன் நம்பர் பத்திரமா வெச்சிருக்கல்ல? பாஸ்போர்ட், டிராவலர்ஸ் செக்."

"அப்பா நீங்க எத்தனை பெரியவர்" என்றான் அவர் கையைப் பற்றி. "இருக்கட்டும், பரவாயில்லை" என்று சிரித்தார்.

"என்னை ஸ்திரப்படுத்தி, உபதேசம் தந்து அமெரிக்கா போறதுக்குத் தூண்டுகோலா இருந்து, பிரயாணத்துக்குப் பணம் சேகரிச்சு டிக்கெட் வாங்கித் தந்து... இதையெல்லாம் எப்படிப்பா நான் திருப்பித் தரப் போறேன்!"

"இப்ப நீ சென்டிமெண்டலா ஆயிட்டிருக்கே! ஹாவ் எ நைஸ் ட்ரிப். அமெரிக்காவில இங்கிலீஷ் மெல்லப் பேசு!"

அவரைத் தயங்காமல் முத்தமிட வேண்டும் போல் இருந்தது. சம்பிரதாயமாக 'டாட்டா' காட்டினால் விமானப்படி விலகும்வரை அவர் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார் என்று தோன்றியது. துக்கம் நெஞ்சை அடைத்தது. எதிர்காலம் தெரியாததன் பயம் வயிற்றில் கனமாக இருந்தது. முதல் விமானப் பயணம். ஏர்பஸ்ஸின் பிரமாண்டம் வேறு கலக்கியது. ஸீட்-பெல்ட்டுடன் திணறினான். ஹோஸ்டஸ் கொடுத்த பஞ்சைப் பிரிக்கக்கூடத் தயங்கினான். முட்டை ஜன்னலுக்கு வெளியே சென்னை நகரமும் அப்பாவும் அவனை விட்டு ஸ்திரமாகப் பிரிந்து நகர்வது போலத் தோன்றியது. இப்போதிலிருந்தே அவன் செலுத்தப்பட்டவன் போலத்தான் உணர்ந்தான். சென்னைக்கு வடக்கே அதிகம் சென்றிராதவன் திடீர் என்று தொளாபுளா என்று ஒரு சூட்டையும் மாட்டிக் கொண்டு அமெரிக்காவுக்கு விமானமேறி விட்டான்.

பம்பாயில் ஸாஹர் பகுதிக்கு மாறி நள்ளிரவில் ஏர்ஃப்ரான்ஸ் விமானத்தில் ஏறிக்கொண்டான். இந்த விமானம் அதைவிட பெரிசாக கல்யாணமே பண்ணலாம் போல இருந்தது. உள்ளே ஒலிபெருக்கி ப்ரெஞ்சு பாஷை பேசியது. பயணிப்பெண்கள்



www.writersujatha.com

கட்டம் போட்ட சட்டை அணிந்து உயரமாக அங்கே இங்கே உலவினார்கள்.

ரகுபதி இத்தனை பிரமிப்புக்குத் தயாராக இல்லை. பகலா இரவா என்று தெரியாத சுமார் பதினெட்டு மணி நேரப் பிரயாணம். பாரிஸில் இறங்கியதா என்ன? எப்போதோ யாரோ அவனை எழுப்பி, "இந்தா வெஜிடேரியன் சாப்பாடு" என்று பிளாஸ்டிக் பிளாஸ்டிக்காக இலை தழைகளைச் சமர்ப்பித்து விட்டு சிரித்து விட்டுப் போன போது இன்றைக்கு என்ன கிழமை என்பதுகூட மறந்து போச்சு. விமானத்துக்குள்ளேயே சின்னதாகத் திரைபோட்டு சினிமா காட்டினார்கள். 'ஹெட்போன்' வாங்கிக் கொள்ளத் தெரியாமல், அதன் மௌனச் சலனங்களை அரைத் தூக்கத்தில் பார்த்துக் கொண்டிருக்க, ப்ரெஞ்சு சப்–டைட்டில்களுடன் அதிலும் ஒரு காதல் கதை. எதிர்த்த வீட்டிற்குக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்திருப்பவள் பழைய காதலி. காதல்! சே! என்ன ஒரு சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டு விட்டேன்! மதுமிதா கிடைக்கவில்லை என்று அழுது ஆகாத்தியம் பண்ணி ஓர் அமெச்சூர் தற்கொலை கூட முயன்று பார்த்து...

மதுமிதாவா! யாரவள்?

**ஜே**எஃப்கே விமான நிலையத்தில் இறங்கும் நிமித்தமாக 747 விமானம் மெல்லச் சரிய ஜன்னலுக்கு வெளியே நியூயார்க் நகரம் மெல்ல அசைந்தது. உயரம் குறைய அந்த நெளியும் ஒளி மலைப்பாம்பு கார் வரிசை என்பதும் நட்சத்திரக் குவியல்கள் எல்லாம் நகரத்தின் மெகா வாட் மின்சார விழிகள் என்பதும் புலனாயிற்று.

விமானம் தரை தொட்டபோது சற்றே சிணுங்கியது. விமான நிலையம் அம்பர் வெள்ளத்தில் நினைந்திருக்க, மண்டை மேல் பளிச் பளிச் வண்டிகள் அலைய விமானம் ரதம்போல மெல்ல நகர்ந்து கான்க்ரீட் சிக்கலை நாட, அதன் வாசலை ஓர் இயந்திரக் கை வந்து அணைத்துக்கொள்ள தோளில் 'பாவநாசம் ஏவி ஸ்டோர்ஸ்' பை உடல் முழுதும் பாஸ்போர்ட், டிக்கெட் போன்ற உபரிக் காகிதங்கள்; வயிற்றில் தழை தின்ற பசி, ஒரு நாள் சவரம் துறந்த முகம், களைப்பு, ஆயாசம், கொஞ்ச பயம், கவலை என்று கதம்பமாக விமானத்தை விட்டு வெளி நடந்தான்.
கைக்கடிகாரத்தில் மணி பார்த்தால் கன்னாபின்னா என்று இருந்தது. எஸ்கலேட்டரில் அல்லது அதன் பெயர் 'வாக்வே'யா அதில் கால் வைக்கத் தயக்கமாக இருந்தது. எங்கே போவது என்று தீர்மானமில்லாமல் அவர்கள் எல்லோரும் ஊர்ந்த திசையில் தொடர்ந்தான். ஒரு கறுப்பு அதிகாரி அவன் பாஸ்போர்ட்டைக் கேட்டார். அவர் ஆங்கிலம் இவனுக்குப் புரியவில்லை. இவன் ஆங்கிலம் அவருக்கு! 'சப்பக்' என்று முத்திரை குத்தி, 'போ' என்றார். எங்கே போவது என்பது விளங்கவில்லை. அம்புக் குறிகளைச் சாட்சியாக வைத்துக் கொண்டு நடந்தான். நடந்தான் என்பதைவிட, நடக்க வைக்கப்பட்டான் என்றால்தான் பொருந்தும்.

அமெரிக்காவில் முதல் கண்ணாடிக் கதவு ரகுபதிக்குத் தானாகவே திறந்து வழிவிட்டது. ஹால் வந்தது. அதில் ரப்பர் பாம்பின் முதுகின் மேல் அவனுடைய அழுக்கு சூட்கேஸ் ஊர்ந்து வந்தது. அதைக் கவர்ந்து கொண்டு ரகுபதி அமெரிக்காவுக்குத் தயாரானான். முதலில் அப்பா கொடுத்த நம்பருக்குப் போன் செய்து பார்க்க வேண்டும்.

அருகில் குட்டையான ஸ்டூல்களில் உட்கார்ந்து கொண்டு நிறைய ஜனங்கள் வரிசையாகக் காசு போட்டு உற்சாகமாகப் போன் பேசுவதைப் பார்த்தான். முயன்று பார்க்கலாம் என்று தோன்றி, அப்பா கொடுத்த டெலிபோன் எண் 212 987 9254 பார்த்தாலே பயமாக இருந்தது. ஒரு காலி போனுக்கு அருகில் சென்று முதலிரவு மாப்பிள்ளைபோல அதைக் கையில் எடுத்துப் பார்த்தான். காசு போடும் விதத்தைப் பற்றி அதன் மூஞ்சியில் ஒரு சரித்திரமே எழுதியிருந்தது. பையிலிருந்து ஏதோ ஒரு காசைப் போட்டு அந்த எண்களை நம்பிக்கையில்லாமல் பட்டனில் ஒத்தினான்.

"தயவு செய்து இருபத்தைந்து செண்ட் போடவும்" என்றது ஒரு குரல்.

"மிஸ் நான் இருபத்தைந்து செண்ட்தான் போட்டேன் என்று நினைக்கிறேன்.

"தயவு செய்து இருபத்தைந்து செண்ட் போவும்" என்றது ஒரு குரல்.

"என்னிடம் இருக்கும் நாணயம் இருபத்தைந்து என்றுதான் காட்டியதாக ஞா..."

"தயவு செய்து இருபத்தைந்து செண்ட் போடவும்' என்றது குரல். கொஞ்ச நேரத்தில் மற்றொரு க்ளிக் கேட்டு "குட் ஈவினிங்... ஆர் யூ இன் ட்ரபிள்?" என்றது மற்றொரு பெண் குரல்.

"இதற்கு முன் ஒரு பெண் இருபத்தைந்து செண்ட் போடச் சொன்னாள்" மெல்ல ஆங்கிலம் பேசினான்.

"அது பெண்ணில்லை. கம்ப்யூட்டர் குரல்! நீங்கள் போட்டது பத்து செண்ட். இதோ, அதைத் திருப்பி தருகிறேன்." – டெலிபோன் அவன் கேட்ட நாணயத்தைத் துப்பியது. "இப்போது இருபத்தைந்து செண்ட் நாணயமா என்று பார்த்துப் போடுங்கள்!"

"தாங்க்ஸ்! நீங்களும் கம்ப்யூட்டரா?"

"இல்லை, நான் மனிதகுலம்தான்!" என்று சிரித்தது மறுமுனை.

ரகுபதி கோட்டுப் பாக்கெட்டுக்குள் தேடி நாணயத்தைத் தேர்ந்தெடுத்து அதை ஓட்டைக்குள் செலுத்தி மறுபடி அந்த எண்களை ஒத்திப் பார்த்தான்.

கொஞ்சநேரம் ஒற்றை ஒற்றையாக அடித்த பிற்பாடு மறுமுனை "அலோ!" என்றது.

"மை நேம் இஸ் ரகுபதி. ஐம் தி ஸன் ஆஃப் ஒன் மிஸ்டர் கோவிந்தராஜ் ஆஃப் பாவநாசம் இன் டின்னவேலி டிஸ்ட்ரிக்ட் ஆஃப் டமில்நாடு இண்டியா..."

"ராஜ் மகனா நீ! தமிழ்ல பேசேன்! எதுக்கு கஷ்டப்பட்டு எங்க ஊர் இங்கிலீஷ் பேசறே..."

ரகுபதிக்கு அந்த ஆசாமியைப் பார்க்காமலேயே பிடித்துப் போய்விட்டது. "ஸார்! ரொம்ப தாங்க்ஸ் ஸார்! உங்க ஊர் ரொம்ப குழப்பமா இருக்குது! வந்த உடனேயே கம்ப்யூட்டர் அதட்டுது!

"எங்க இருக்கே?"

"விமான நிலையத்திலே"

"ஜேஎஃப்கே தானே?"

"அது என்னவோ ஸார்!

"ஜேஎஃப்கேலதான் வந்திருப்பே... எந்த டெர்மினல்?"

"அதான் ஸார், இமிக்ரேஷன் எல்லாம் செக் பண்ணிட்டு வெளியே ஒரு ஹாலுக்கு..."

"இத பாருப்பா, இந்த அடையாளம் போதாது. இந்த ஊர்ல எல்லாமே பெரிசு; ஜேஎஃப்கே விமான நிலையத்தில் ஏகப்பட்ட டெர்மினல் இருக்கு. எந்த ஃப்ளைட்டில வந்த?"
"ஏர் பிரான்ஸ்"

"சரி, அங்கேயே இரு. விலகவே விலகாதே."

"நான் டாக்ஸி புடிச்சு..."

"சரிதான்! சொத்தையே எழுதி வெக்க வேண்டியிருக்கும்! நான் இருக்கிறது அங்கிருந்து நாற்பத்தஞ்சு மைல்... இந்த ஃபார்மாலிட்டியெல்லாம் வேண்டாம்."

"நாப்பத்தஞ்சு மைலா!"

"நாப்பத்தஞ்சு மைல்ங்கிறது இந்த ஊர்ல கூப்பிடு தூரம். அங்கேயே இரு. வரேன். எதாவது சாப்ட்டியா?"

"வெஜிடேரியன் மீல்ஸ் கொடுத்தாங்க!"

"செத்த நீ! வெள்ளாட்டுக்கு வைக்கற தழைகள் எல்லாம் கொடுத்திருப்பாங்களே, சரி, உனக்கு நல்ல தயிர் சாதமா தயார் பண்ணி வைக்கறேன். காத்திரு வரேன்!"

"சரி ஸார், வெச்சுரவா?"

"சரிதான்! வெச்சுட்டன்னா, நான் உன்னை எப்படி அடையாளம் கண்டுபிடிக்கிறது? நீ இருக்கிறதுக்குப் பக்கத்தில ஏதாவது ஒரு அடையாளம் காட்டு!"

"ஹெர்ட்ஸ்ரெண்ட் எ கார்னு எழுதியிருக்கு ஸார்."

"அதுபோதும் அடையாளம், ஹெர்ட்ஸ் ரெண்ட் எ கார் டெஸ்க்குக்கு பக்கத்தில கண்ணில பஞ்சடைச்சு ஓர் இந்திய இளைஞன்! வரேன்!

புன்னகையுடன் டெலிபோனை வைத்தபோது அமெரிக்கா அவ்வளவு அச்சுறுத்தவில்லை.

## 2

**வி**மான நிலையமே ஒரு நகரம்போலத்தான் இருந்தது. டெர்மினலுக்கு டெர்மினல் ஷட்டில் பஸ்கள் ஹைட்ராலிக் சுவாசத்துடன் கதவைத் திறந்து பிரயாணிகளைக் கொட்டிக் கொண்டிருந்தன. கண்ணாடிக்கு வெளியே கார்கள். கார்களைக் கார்களால் துரத்திக் கொண்டிருக்க, இந்தப் பக்கம் திரும்பினால் நெடுக ஏரோப்ளேன்கள் ஏதோ பொம்மைக் கடையில் போல இறைந்திருந்தன. மின்வெளிச்சம் அங்கங்கே வைர ஊசிகள் பொருத்தினாற் போலத் தாக்கியது. ஓட்டல்களுக்கு அழைப்பு விடுக்கும் இலவச டெலிபோன்கள் வரிசையாக ஒரு சுவர் பூராவும் காத்திருந்தன.

தள்ளு வண்டியில் கோலிகுண்டுக் கண் பாப்பாக்கள் பனியனில் 'ஐ லவ் நியூயார்க்' தீப்பிடித்தாற்போலத் தலைமயிற் வைத்துக் கொண்டு ஊசிமுனைக் காலணிகளில் நடக்கும் வெள்ளைக்காரி. தலை முழுவதும் திரிதிரியாகப் பின்னிக் கொண்டு ரத்தச் சிவப்பில் லிப்ஸ்டிக் அணிந்து கொண்டு ஆண் பிள்ளை கோட்டும் பாண்ட்டும், அணிந்து

கொண்டு கொசகொச என்று நாயுடன் நடக்கும் நீக்ரோ பெண்மணி. உலகத்திலுள்ள அத்தனை கலரிலும் ஜனங்கள்.

ரகுபதி தன் சூட்கேஸை அணைத்துக் கொண்டு சற்று நேரம் உட்கார்ந்தான். கதகதப்பாகத்தான் இருந்தது. வெளியே குளிரும் போல் இருந்தது. வெகுதூரத்தில் பல மாடிக் கட்டடம் ஒன்றில் கார்கள் மாளிகை சாமான்போல் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது தெரிந்தது. கீழ் வானம் நகரத்தால் ஒளி பெற்றிருக்க, நிலா அபத்தமான உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது.

www.writersujatha.com

“நீ தானேப்பா ரகுபதி?"

திரும்பினான். "பார்த்த உடனே கண்டுபிடிச்சுட்டேன். அம்போன்னு உக்கார்ந்துகிட்டு இருக்கியே! எப்படி சௌக்கியம் எல்லாம்? இந்தியாவில் மாதம் மும்மாரி மழை பெய்துகிட்டு இருக்குதா? இந்திராகாந்தி சுகமா இருக்காங்களா? எம்ஜீயார் சௌக்கியமா?"

ரகுபதி எழுந்து நின்றான். இவருக்கு சுமார் நாற்பதுக்கு அருகில் இருக்கும் போல இருந்தது. தலை சற்று வழுக்கையாக இருந்தாலும். இருக்கிற முடியை புஸு புஸுவாக்கிச் சமாளித்திருந்தார். கழுத்து வரை மறைக்கும் பனியன் போட்டிருந்தார். அதில் ஈட்டி என்று ஆங்கிலத்தில் எழுத்துக்கள் எழுதியிருந்தன. ஜீன்ஸ் அணிந்து ஓட்டக்காரனின் ஷூக்கள் அணிந்திருந்தார்.

"எம்பேர் மோகன்ராம். உங்கப்பாகூட ஒர்க் பண்ணியிருக்கேன். எப்படி இருக்கார் கோவிந்தராஜ்?"

"நல்லாயிருக்கார் ஸார். உங்களுக்குத்தான் ரொம்ப சிரமம்"

"அமெரிக்காவில் கார் ஓட்டிக்கிட்டு வர்றது சிரமமிருந்தாலும் என்ன? அதுக்காக சும்மா வார்த்தைகளை வீண் செய்யாதே. சீக்கிரம் வா. தகாத இடத்தில் பார்க் பண்ணிட்டு வந்திருக்கேன். பார்க்கிங் லாட் போகணும்னா அரைமணியாயிரும். வேகமா வா" என்று அவன் பெட்டியைப் பற்றிக் கொண்டு விரைவாக நடந்தார் ரகுபதி. அவருக்குப் பின் ஏறக்குறைய ஓட வேண்டியிருந்தது.

அவருடைய கார் நீளமாக இருந்தது. நாலு பக்கங்களிலும் விளக்கு பளிச்சிட்டுக் கொண்டிருக்க, அதன் பின் ஸீட்டில் அவன் பெட்டியை வீசிவிட்டுக் கதவை திறந்து உட்கார வைத்து ஸ்டியரிங் கழுத்தில் இருக்கும் சாவியைத் திருகினதும் பாட்டு கேட்டது. உடனே புறப்பட்டு "நல்ல வேளை... போலீஸ்காரன் பார்க்கலை. டோ பண்ணிட்டுப் போயிருப்பான். அங்க நிறுத்தக் கூடாது. பெல்ட் போட்டுக்க. கொஞ்சம் வேகமா போக வேண்டியிருக்கும்.

ரகுபதி இப்போதே மீட்டர் 60 காட்டுவதைப் பார்த்தான்.

"எங்க அட்மிஷன் கிடைச்சிருக்கு உனக்கு?"

"நியூயார்க் யூனிவர்ஸிட்டியில ஸார். கிராஜுவேட் ஸ்கூல் ஆஃப் பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன்."

"பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷனா...? அடிசக்கை! அஸிஸ்டன்ஸ் கிடைச்சிதா?"

"இல்லை ஸார். இன்னும் இல்லை. கொடுக்கறதா சொல்லியிருக்கார்."

"ரொம்ப கஷ்டம்பா, ரொம்ப காசாகும். டெக்ஸாஸ் பக்கம் கொஞ்சம் ட்யூஷன் ஃபீ குறைச்சலா இருக்குமே!"

"இங்க கூட அதிகம் இல்லை ஸார். அஸிஸ்டண்ட் ஷிப் கிடைக்கிறதுக்கு நல்ல சான்ஸ் இருக்குன்னு எழுதியிருக்காங்க. காம்பஸ்ல வேலை செய்யறதாகவும் இருக்கேன்."

"தட்டு துடைப்பியா?"

"துடைச்சா போச்சு!"

"என்ன பாக்கறே? இதான் நியூயார்க்!"

காரிலிருந்து குனிந்து பார்த்தாலும் மாடிக் கட்டட உச்சி தெரியவில்லை.

"பிரமிப்பா இருக்கலாம்!"

நியான்கள் நடனமிட. சதுரம் சதுரமாக ஆயிரம் விளக்குள். கருநீல வானத்தை ஈட்டி குத்திய கான்க்ரீட் ஸ்தம்பங்கள். ஆறு வரிசையில் கார்கள் பம்பருடன் பம்பர் ஒட்டிக்கொண்டு எல்லாமே அறுபது மைல் வேகத்தில்!

"நெர்வஸா இருக்கு ஸார். முதல்ல இந்த வலப் பக்கத்து டிரைவிங்கே ஒரு மாதிரி இருக்கு. அப்புறம் இத்தனை வேகம்!"

"இங்கதான் இண்டியாவை விட கார் ஓட்டறது சுலபம்."

"சட்டுனு ஏதாவது டயர் பஸ்ட் ஆயிட்டா?"

"இன்ஸ்டண்ட் சொர்க்கம்! பயப்படாதே. டயர் எல்லாம் நல்லாத்தான் வெச்சிருக்கோம். எங்க இருக்கு உன் ஸ்கூல்?"

"சர்ச் அண்ட் தேம்ஸ் ஸ்ட்ரீட்டுனு போட்டிருந்தது. தெரியுமா உங்களுக்கு?"

"விசாரிச்சுக்கலாம். நியூயார்க் உள்ளத்தான் இருக்கும். என்னத்தைப் படிக்கப் போறியோ?"

"ஏன் ஸார்?"

"இந்த நகரத்தில் பொல்லாத விஷயங்கள் ரொம்ப ஜாஸ்திப்பா. இதபார்... நிக்கறா பாரு."

ரோடோரத்தில் தனியாக சிகரெட் பிடித்துக் கொண்டு ஒரு பெண் பளிச்சென்று நின்று கொண்டிருந்தாள்.

"**ஹு**க்கர்"

"அப்படின்னா."

"நியூயார்க் வந்த முதநாளே தெரிஞ்சுக்க வேண்டாம்."

"நீங்க எங்க ஸார் தங்கியிருக்கீங்க?"

"ஸ்டாட்டன் ஐலண்ட் தாண்டிப் போகணும். கோவிந்தராஜ் மகன் பிஸினஸ் அட்மின் படிக்கப் போறியா? வெரிகுட் வெரிகுட்! நானும் உங்கப்பாவைப் போல அந்த ப்ராஜெக்ட்டில வந்து சேர்ந்தவன்தான். அங்கேயே இருந்திருந்தேன்னா இந்நேரம் ஜூனியர் இன்ஜினியர் ஆகியிருப்பனா? எத்தனை சம்பளம்– எழுநூறா?" என்று சிரித்தார். "இங்க டெலிபோனுக்கே எனக்கு சில மாதங்களில் எழுநூறு டாலர் ஆகும்."

பளீர் பளீர் என்று பச்சை விளக்குகள் கண் சிமிட்டும் வாயிலை அடைந்தபோது காரை வேகம் குறைத்து நிறுத்தினார் மோகன்ராம். "பாலத்துக்குள்ள நுழையறதுக்கு முன்னாடி கப்பம் கட்டணும், ஒண்ணேகால் டாலர். நியூயார்க் நகரம் ரொம்ப பாப்பர்... எல்லாத்துக்கும் காசு புடுங்குவாங்க. எனக்கு தினம் வந்தாகணும். டோக்கன் வாங்கி வெச்சுகிட்டேன்" என்று மெஷின் வாயில் போட, தடுப்பு தானாக விலக, பிரமாண்டமான பாலத்துக்குள் நுழைந்தது.

"வெரஸானோ பிரிட்ஜ். உலகத்திலேயே மிக நீளமான ஸஸ்பென்ஷன் பிரிட்ஜ். 4,260 அடி."

எக்ஸ்பிரஸ்வே, த்ரூவே, பார்க்கவே என்று என்ன என்னவோ எழுத்துக்களையெல்லாம் புரியாமல் வியந்து பார்த்தான். "கொஞ்ச நாள்ல எல்லாம் பழகிடும். நீயே கார் ஓட்டலாம். நம்மூர் மாமிங்கள்லாம் ஓட்டறாங்க."

"நம்மூர்க்காரங்க நிறைய பேர் இருக்காங்களா ஸார்?"

"நிறைய குஜராத்திக்காரங்க, ஸர்தார்தான் ஜாஸ்தி."

"தமிழங்க?"

"இருக்காங்க. எப்பவும் போல மூணு தமிழ்ச் சங்கம் அமைச்சுகிட்டு பிள்ளையார் கோயில், பாரதி, சேஷகோபாலன் கச்சேரி, வீடியோவில பாக்யராஜ் படம்னு பார்த்துக்கிட்டு சௌக்கியமா சண்டை போட்டுக்கிட்டு இருக்காங்க. ஏன், உனக்கு யாரையாவது தெரியுமா?"

'ஒருத்தியை மட்டும் தெரியும்' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டான். "தெரியாது."

அவருடைய வீடு மிக அமைதியான சுற்றுப்புறத்தில் தனிப்பட்டு இருந்தது. பிளாட்பாரத்தில் பாதி ஏற்றி காரை நிறுத்தி அவன் பெட்டியைப் பற்றிக் கொண்டு இடக்கையால் சாவி போட்டுத் திறந்து உள்ளே செல்வதற்குள் நியூயார்க் குளிர் கொஞ்சம் உறைத்தது. உள்ளே போனதும் மறுபடி சூடாகி விட, "உக்காருப்பா ஸ்காட்ச் ஏதாவது சாப்பிடறியா, இல்லை, நேரா தயிர் சாதம்தானா?"

"இல்லை ஸார்... சரி ஸார்"

"எதுக்கு இல்லை? எதுக்கு சரி?

"சாதமே சாப்பிடறேன்."

"குட்! ஆனா கூடிய சீக்கிரம் அமெரிக்காரில மாமிசம் சாப்பிடப் பழகிக்க. வெஜிட்டேரியனுக்கு இது நரகம். பிட்ஸா பிட்ஸான்னு மூணு வேளையும் சாப்பிட்டா பைத்தியம் புடிச்சிரும்."

வீட்டுக்குள் நுழைந்ததுமே சமையலறை தெரிந்தது. அங்கிருந்து விலகினாற்போல ஒரு பெரிய ஹால் இருந்தது. பேஸ்மெண்ட்டுக்குப் போகும் படிகள் தெரிந்தன. மேல்



www.writersujatha.com

பாகத்தில் பெட் ரூம், கெஸ்ட் ரூம் என்று தனித்தனியாக இருந்தது. வீடு முழுவதும் கார்பெட் போட்டிருந்தது. டெலிவிஷன் பெரிசாக இருந்தது. "முதல்ல உனக்கு தயிர் சாதம். என்ன பாக்கறே?"
"வீடு ரொம்ப பெரிசா இருக்கு ஸார்."

"ஓர் ஆளுக்கு கொஞ்சம் அதிகம்தான். நீ டார்மிட்டரிக்கோ போகிறவரை இங்கியே தங்கலாம்."

"நீங்க தனியா இருக்கிங்களா ஸார்?"

"ஆமாப்பா. ஒரு வருஷமா தனியாத்தான் இருக்கேன்" என்றார்.

கொஞ்சநேரம் மௌனமாக இருந்தார். ரகுபதிக்கு அதற்குமேல் கேட்பது அநாகரிகமாகப்பட்டது.

"குட்! லெட்ஸ் ஹாவ் தயிர் சாதம் அண்ட் ஊர்காய்!" மேசை மேல் பீங்கான் தட்டு வைத்து நிறையவே தயிர் சாதம் வைத்தார். ரகுபதி மிகவும் ரசித்துச் சாப்பிட்டான். "யூ லைக் இட்?" என்றார்.

"டிவைன் ஸார்!" ஃபிரிஜ்ஜின் ஒரு போட்டோவில் இரண்டு குழந்தைகள் சிரித்துக் கொண்டிருந்தன.

"செல்வம் அண்ட் நீனா! என் செல்லக்கண்ணுங்க."

"ஊருக்குப் போயிருக்காங்களா?"

"இல்லை... அவ அம்மா கூடா இருக்காங்க! வீக் எண்ட் மட்டும் வருவாங்க."

ஒரு நிமிஷம் அவர் கண்களில் லேசாக நீர் திரையிடுவது போலத் தோன்றியது. சட்டென்று சிரித்து, "ஐம் கிளாட் யூ கால்ட் மி... ரொம்ப தனியா இருந்து போர் அடிச்சுப் போயிடுச்சு... இந்த வீடு எனக்கு ரொம்பப் பெரிசு. அது தனியா இருக்கிறவனுக்கு... நீ எத்தனை நாள் வேணுமின்னாலும் இருக்கலாம். ஸ்யூர் யூ டோன்ட் வாண்ட் ஸ்காட்ச்?" என்று தனக்கு அரை கிளாஸ் ஊற்றிக் கொண்டு அதில் ஐஸ்கட்டி கட்டி போட்டுக் கலக்கிக் கொண்டார்.

"அப்பாடா! இப்பத்தான் உன் கண்ல ஒரு ஜோதி கிளம்புது. சொல்லு, உங்கப்பா எப்படி இருக்கார்? ரொம்ப நல்லவராச்சே! இந்தியாவில் எப்படி சமாளிக்கிறார்? அப்புறம் இந்தியா எப்படி இருக்கு? என்ன மாதிரி ஆளுங்கள்ளாம் திரும்பி வரலாமா? எம்.பி.ஏ படிச்சதும் என்ன செய்யறதா உத்தேசம்."

"திரும்பிப் போயிர வேண்டியதுதான் ஸார்."

"சரிதான்... அங்க இதுக்கேத்த வேலை கிடைக்குமாப்பா? இங்கேயே இருந்துரு. திஸ் இஸ் எ லாண்ட் ஆஃப் ஆப்பர்ச்சூனிட்டிஸ்... பணம், கேளிக்கை."

"எங்கப்பா ஸ்ட்ரிக்டா சொல்லியிருக்கார் ஸார். முடிஞ்ச கையோட திரும்பி வரணும்னு."

"திரும்பிப் போகமாட்டே. இங்க இரண்டு வருஷம் இருந்துட்டா திரும்பிப் போகமாட்டே. இப்ப என் கேஸையே எடுத்துக்க. ஒவ்வொரு வருஷமும் திரும்பிப் போகணும்னுதான் பன்னிரண்டு வருஷமா இருக்கேன். இன்னும் போகலியே! இந்த



www.writersujatha.com

தேசம் ஒரு போதைப் பொருள். பழக்கமாயிருச்சுன்னா விடறது கஷ்டம். திடுதிடுப்புனு நட்ட நடு ராத்திரியில ஸில்லியா டிவி ப்ரொக்ராம் பார்த்துகிட்டு இருக்கிறபோது தோணும். போசாம முத்தரநல்லூரு திரும்பிப் போயிரலாம். காவேரில குளிக்கலாம். சம்பாதிச்சது போதும்னு. காலைல மனசு மாறிடும், நியூயார்க் அப்படிப்பட்டது. காந்தம் மாதிரி வருஷா வருஷம் மில்லியன் கணக்கில் ஜனங்க வராங்க.. திரும்பிப் போறவங்க கொஞ்சம்! இந்த நகரத்தில் இல்லாத சொர்க்கம் இல்லை, இங்கு இல்லாத சாக்கடை இல்லை. ஆனா விட்டுட்டுப் போறது ரொம்ப கஷ்டம்."

"பார்க்கலாம் ஸார். எனக்கு இன்னும் இந்த ஜெட் பிரமிப்பே தீரலை."

"தூக்கம் வருதா?"

"இப்ப என்ன பகலா, ராத்திரியா?"

"நடு ராத்திரி. கொஞ்ச நேரம் டிவி பார்த்துட்டுத் தூங்கு பால் சாப்பிடறியா?" என்று ராட்சசக் கானிலிருந்து பால் ஊற்றிக் கொடுத்தார். "அமெரிக்காவில் உள்ள அத்தனை தமிழர்களையும் கணக்கெடுத்து ஒரு டைரக்டரி தயாரிக்கப் போறேன். பொழுது போக வேண்டாமா? நடந்ததை எல்லாம் மறக்க வேண்டாமா?" என்றார்.

அத்தனை விஸ்கியையும் ஒரே மடக்கில் குடித்துவிட்டு, "இத பாரு, உம் பேர் கூட மறந்துருச்சு அதுக்குள்ள!"

"ரகுபதி ஸார்."

"காதல் பண்ணியிருக்கியா நீ?" என்றார்.

## 3

**மோ**கன்ராம் கையில் கிளாஸுடன் சோபாவில் உட்கார்ந்து கொண்டு, அருகில் இருந்த ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தை எடுத்து அதில் பட்டனை அழுத்த, சற்று தூரத்தில் எதிரே இருந்த டி.வி. உயிர் பெற்றது. "பத்து சானல் இருக்குது. கேபிள் டி.வி. இருக்குது. வீடியோ இருக்குது. எது வேணும் சொல்லு?" என்றார்.

"எதாவது ஒண்ணு சார். எனக்கு எதைப் பார்த்தாலும் ஆச்சரியமா இருக்குது."

அவர் இங்கிருந்து பட்டன்களை ஒத்த ஒத்த, அங்கே சானல் மாறிக்கொண்டே வர, "பேஸ் பால் பாக்கறியா?" என்றார்.

வாயில் எதையோ மென்றுகொண்டே பிட்சர் பந்தை எறிய அதை செங்குறியாக ஒரு கறுப்பன் அடித்துவிட்டுப் பதறிப் போய் ஓடினான். நாற்பதாயிரம் ஜனங்கள் ஆரவாரம் செய்து, கோச் அல்லது மேனேஜர், அவரும் மென்று கொண்டே, எச்சில் துப்பிவிட்டு மென்று கொண்டே வந்து பந்து போடுபவரை நாடி ரகசியம் பேசினார்.

"இவங்கள்ளாம் என்னத்தை மென்னுகிட்டு இருக்காங்க?"

"புகையிலை அல்லது கஞ்சா... இந்த கேம் புரியுதா உனக்கு?"

"இல்லை ஸார்... கொஞ்சம் கொஞ்சம் கிரிக்கெட் மாதிரி இருக்கு." அடுத்த பந்தை அடிக்குமுன் விளம்பரம் குறுக்கிட்டது. "நாள் பூரா கமர்ஷியல்தான். எல்லாம் எனக்கு நெட்டுரு ஆயிருச்சு!"

"ஆர்ன்ட் யூ ஹஅ அங்ரி பர்ஜர் கிங்!" என்று சேர்ந்து பாடினார்.

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லலையே...!"

"என்ன கேட்டீங்க?"

"காதல் பண்ணியிருக்கியா?"

"காதல்னு நினைச்சுக்கிட்டு ஏதோ அமர்க்களம் பண்ணேன் ஸார். இப்ப சரியாப் போச்சு!"

"சரியாப் போச்சில்லே! சந்தோஷம்! இத பாரு. நான் வயசானவன் சொல்றேன்; இந்த உலகத்தில் சுயநலமா இருக்கணும். அப்பதான் பொழைக்க முடியும். 'எய்ன் ராண்ட்' படிச்சிருக்கியா?"

"இல்லை ஸார்."

"குடுக்கிறேன், படிச்சுப்பாரு. இப்ப என்ன தூக்கமா?"

"ஆமா ஸார். கொஞ்சம் களைப்பா இருக்கு. ப்ளேன்ல தூக்கம் பத்தலை!"

"படுத்துக்க" என்று பரிவுடன் அவனுக்குப் படுக்கை அமைத்து ஏர்கண்டிஷனரை எழுபத்தெட்டில் அமைத்துவிட்டுச் சென்றார்.

நிசப்தமாக இருந்து, கண்ணாடிக்கு வெளியே ஓய்வில்லாத கார்கள் மௌனமாகச் சென்று கொண்டிருந்தன. புதிய தேசத்தில் முதல் ராத்திரி. வீட்டுக்குள் எப்போதும் அடைந்திருந்தால் கொஞ்சம் அடர்த்தியாக உணர்ந்தான். ஒருவித வாசனையும் இருந்தது. வயிற்றை லேசாகப் புரட்டியது.

கொஞ்ச நேரம் இருட்டில் கண் விழித்திருந்தான். அமெரிக்கா அமெரிக்கா என்று இதோ அமெரிக்கா! எதற்காக வந்திருக்கிறேன். படிப்பதற்காக! அந்தப் பெண்ணைப் பற்றி இமைப்பொழுதும் எண்ணக்கூடாது. மோகன்ராம் உற்சாகமாக இருந்தாலும் அவர் கண்களில் ஒரு வருத்தம் ஸ்திரமாக இருந்ததைக் கவனித்திருக்கிறான். மனைவி உடன் இல்லை. அப்படியென்றால்? மோகன்ராம் அமெரிக்காவில் வாழும் தமிழர்களின் விலாசங்களையெல்லாம் சேர்த்து ஒரு டைரக்டரி தயாரிக்கிறாராம். அதில் மதுமிதா ராதாகிஷன் என்று நோ! வேண்டாம். உறங்கிப்போ!

என்னை ஸார்னு கூப்பிடாதே மது!

பின்ன உங்க பேர் சொல்லியா.

நீ என்னை கல்யாணம் செய்துக்கப் போறதானே?

ஆமா!

அதோ அந்த மரத்தடிக்குப் போயி கொஞ்சம் சரிவில இறங்கிட்டா நம்மை யாரும் பார்க்கமாட்டாதானே?

ஆமாம்!

அந்தச் சரிவில போய் உட்கார்ந்துகிட்டு நீ வந்து நீ வந்து என்னை கிஸ் பண்றியா? ரகுபதி தலையை இப்படியும் அப்படியும் அசைத்துக் கொண்டு நினைவுகளைத் துரத்தினான். 'இன்னொருத்தன் மனைவி. இன்னொருத்தன் மனைவி' என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டான். இப்போது இதே இரவில் அமெரிக்காவில் எங்கோ ஒரு பகுதியில் அந்த ராதாகிஷன் அவளை...

ரகு நீ எதுக்கு அமெரிக்கா வந்திருக்கே?

படிக்கிறதுக்கு... மதுமிதாவைப் படிக்கிறதுக்கு.

அப்பாவின் காதல்ங்கறது Nature's Way of ensuring pregnancy!

தூங்கிப்போய் விட்டான்.

அதிகாலை எழுந்து மணி பார்த்தபோது நம்பிக்கையாக இல்லை. "ஸார்! பத்து மணி ஸார்! எழுப்பறதுக்கு என்ன ஸார்?"

"குட் மார்னிங். உன்னுடைய அசதி எனக்குத் தெரியும். தூங்கட்டும்னு சும்மா இருந்துட்டேன."

"உங்களுக்கு ஆபீஸ் இல்லையா?"

"சொந்த பிஸினஸ்! எப்ப வேணா போகலாம் போன்லயே எல்லா வேலையும் முடிஞ்சுரும்! அமெரிக்காவில வந்து எப்படியாவது ஒட்டிக்கிட்டே. பணம் சம்பாதிக்கிறது ஒண்ணும் பிரமாதமில்லை! கல்லைக் கூட பணம் பண்ணான் ஒருத்தன் போன வருஷம்! அதைப்பத்தி அப்புறம் சொல்றேன். காப்பி சாப்பிடு இன்ஸ்டண்ட் காப்பிதான் என்னால முடியும். உனக்கு ஸிரியல் வேணும்னா ஃப்ரிஜ்ஜில் இருக்கு. எடுத்து சாப்பிடு தயங்காதே. உனக்கு காலேஜ்லே எப்ப சேரணும்?"

"திங்கட்கிழமை ஸார்!"

"அப்ப இன்னிக்கு நியூயார்க் சுத்திப் பார்க்கறியா?"

"அதுக்கெல்லாம் அத்தனை அவசரம் இல்லை ஸார்! வீட்டிலேயே இருக்கேன் டி.வி. பார்த்துக்கிட்டு."

"இருபத்தி நாலு மணி நேரமும் டி.வி. இருக்கு. வீடியோவில் டமில் மூவிஸ் இருக்கு. பார்க்கிறியா?"

"அதெல்லாம் எங்க ஊர்லயே பார்த்தாச்சு ஸார்."

"எதுவேணா இருக்கு, ப்ளூபிலிம்கூட இருக்கு. இஃப் யூ ஃபீல் லைட் இட்!"

"டி.வி.ல எது நல்லா இருக்கும் ஸார்?"

"என்னைக் கேட்டா... நான் நியூஸ் ஒண்டிதான் பார்ப்பேன். போஸ்கட்பால். பிலியர்ட்ஸ் ஏதாவது வந்தா பார்ப்பேன். அவ்வளவுதான். இல்லைன்னா பைத்தியமா அடிச்சுரும் இந்தப் பெட்டி! ஆனா அறிமுகத்துக்கு ஒருநாள் பாரு. நல்லாவே இருக்கும். நான்

ஆபீஸ் வரைக்கும் போய்ட்டு மூணு மணிக்கு வந்துர்றேன். என்ன? யாராவது கதவைத் தட்டினா திறக்காதே. பைபிள் விக்கிறவங்களா இருப்பாங்க. இல்லை. கம்போடியாவில குழந்தைகளுக்கு சத்துணவு தர டொனேஷன் கேட்டு வருவாங்க! யாருக்கும் கதவைத் திறக்காதே!"
"சரி ஸார்."

பிற்பகர் முழுவதும் திகட்டத் திகட்ட டி.வி. பார்த்தான். விரலை வைத்தால் வேறு ப்ரோக்ராம். வண்ண வண்ணமாக யாரோ காமெடி பண்ண ஸ்டூடியோ செயற்கை சிரிப்பு. மூன்று பெண்கள் துப்பறிந்தார்கள். கப்பலில் செல்பவர்கள் காதல் புரிந்தார்கள். கறுப்பர்கள் நடனமாடினார்கள். விளம்பரம்! விளம்பரம்! இருபத்து நாலு மணி நேரம் பார்த்தால் ஒரே நாளில் பைத்தியம் பிடித்து விடும் போலத்தான் இருந்தது. நடுவே ஒருமுறை விணு விணு என்று டெலிபோன் தொடர்ந்து அடித்தது. எடுக்கலாமா வேண்டாமா என்று யோசித்துவிட்டு அது நிற்காததால் எடுத்து 'ஹலோ' என்றான். ஒரு பெண் குரல், "ஹாய் மோகன்! ஆர் யூ தேர்?"

"மன்னிக்கவும். நான் மோகன் இல்லை. மிஸ்டர் மோகன்ராம் வீட்டில் இல்லை."

**"ஹூ** இஸ் திஸ்?"

"என் பெயர் ரகுபதி. அவருடைய நண்பன். ஏதாவது சொல்ல வேண்டுமா?"

"பார்ப்ரா கூப்பிட்டதாகச் சொல்லு."

பார்ப்பரா என்று எழுதிக் கொண்டான். எதிரே மோகன்ராம் மனைவி படத்தைப் பார்த்தான். வெள்ளக்காரி. மோகன்ராமை அணைத்துக்கொண்டு இரண்டு குழந்தைகளும் சிரிக்க, மேஜை மேல் வைத்திருந்த தபாலில் ஏகப்பட்ட பில்கள் இருந்தன. ரகுபதிக்கு இந்த மாதிரி பார்ப்பது கொஞ்சம் குற்ற உணர்ச்சியாக இருந்தது. ஓர் அந்தரங்கத்தில் எட்டிப் பார்ப்பது போல இருந்தது. ஃபிரிஜ்ஜைத் திறந்தான். நிறைய பால் இருந்தது. விதவிதமான கேக் வகைகள். ஐஸ்க்ரீம் செங்கல், சாக்லேட்.

கொஞ்சம் ரொட்டித் துண்டும் பாலும் சாப்பிட்டான். பசி அதிகம் இல்லை.

திங்கட்கிழமை மோகன்ராம் அவன் சேரப் போகும் காலேஜை விசாரித்து அவனை வாசலில் இறக்கி விட்டுச் சென்றார். ரகுபதி மெல்ல அந்த வாசலை அணுகி உள்ளே சென்றான். அமெரிக்காவில் அவன் படிப்பின் முதல் தினம்! கையில் வைத்திருந்த கடிதத்தில் வரைபடம் எல்லாம் போட்டு 'ஆல்ட்ரிச்ஹால்' என்னும் இடத்தில் ரூம் நம்பர் 108–இல் ஹாமில்டன் என்பவரை எட்டரை மணிக்கு சந்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. அந்தக் கட்டடத்தைப் பார்த்தால் கல்லூரி என்று பிரத்தியேகமாகச் சொல்லிவிட முடியாதபடி எல்லா நியூயார்க் கட்டடங்கள் போலத்தான் இருந்தது. மூன்று கட்டடங்கள் ஒன்றை ஒன்று காப்பியடித்துக் கட்டினது போல நட்டிருந்தன. 'என், ஒய். யூ ஸ்கூல் ஆஃப் பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன்' என்று உயர அழைத்துக் கொண்டு போகும் விசாலமான படிகளுக்கு முன் பித்தளையில் எழுதியிருந்தது. பலர் மர நிழலில் நின்று கொண்டிருந்தார்கள். இவர்களெல்லாரும் மாணவர்களா!" எல்லாரையும் ஸார் என்று கூப்பிட வேண்டும் போல வாட்டசாட்டமாக இருந்தார்கள். அதில் சுமாரான அளவில் ஒருத்தனைத் தேர்ந்தெடுத்து 'ஆல்ட்ரிச் ஹாலுக்கு' வழி கேட்டான். அவன் தோளைக் குலுக்கிக் கொண்டு பக்கத்தில் இருப்பவனைப் பார்த்தான்.

"ஸாரி கம் எகய்ன்!"

மறுபடி கேட்டான்.

அவனுக்கு இவன் பேசும் ஆங்கிலம் புரியவில்லை. கையில் இருக்கும் கடிதத்தைக் காட்டினான்.
"ஓ! ஆல்ட்ரிச்ஹால்? டவுன்தேர் ஆன்யுர் லெஃப்ட்!"

அவர்களைக் கேட்டிருக்கவே வேண்டாம். கொட்டையாக ஆல்ட்ரிச் ஹால் என்று அம்புக்குறியுடன் போட்டிருந்தது. அதன் உள்ளே நுழைந்தான். ஒரு கட்டடத்துக்கும் இன்னொன்றுக்கும் வித்தியாசமே இல்லை. காரிடாரில் சில்லென்று காற்றடித்தது. கோகோ கோலா மிஷின் இருந்தது. எல்லா அறைகளும் ஒரே மாதிரி இருந்தன. அங்கங்கே வழுக்கைத் தலை ப்ரொபஸர்களின் பட்டங்கள் மாட்டியிருந்தன. ரூம் நம்பர் 108–ஐக் கண்டுபிடித்து உள்ளே போனதும் கொஞ்சம் பிரமித்துப் போனான். அவன் எதிர் பார்த்தது ஓர் ஆபீஸ் அறையை. அங்கே பார்த்தது ஒரு வகுப்பறையை. உள்ளே முழுதும் அடைக்கப்பட்டு சூடாக இருந்தது. செயற்கை வெளிச்சம் பரவி ஒரே ஒரு மின்சார கடிகாரம் கரும்பலகைக்குமேல் பொருந்தியிருக்க, அது எட்டு இருபது காட்டியது. வகுப்பறையில் அங்கங்கே பலர் உட்கார்ந்திருந்தார்கள். எல்லாரும் ரகுபதி உள்ளே வருவதைக் கண்கொட்டாமல் பார்த்தார்கள்.

"ஓ நோ!" என்று குரல் கேட்டது. நிமிர்ந்து பார்க்கத் தயக்கமாக இருந்தது. அந்த முகங்கள் எல்லாமே விரோதமாக இருப்பது போல் தோன்றியது. சீனாக்காரர்களும் தெரிந்தார்கள். சில கறுப்பர்கள், இரானியர்கள் போல இருவர், தான் மட்டும்தான் இந்தியனோ! டெஸ்க்குகள் அரை வட்டத்தில் இருந்தன. லேசாக சரிவு இருக்க தனித்தனியாக சுழலும் நாற்காலிகள் இருந்தன. கரும் பலகைக்கு அருகில் நீண்ட சதுர மேஜை இருந்தது. அதில் ஒரு பெண் நின்று கொண்டு சில காகிதங்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். ரகுபதியைப் பார்த்தாள். வா என்று அவனை சமிக்ஞை செய்தாள்.

ரகுபதி அவளருகில் சென்று தன் கடிதத்தைக் கொடுத்தான்.

"ரகு பாட்டி!" என்று அவன் பெயரை வாசித்துத் தன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டாள். அவனிடம் அவள் வேகமாகப் பேசிய அமெரிக்க ஆங்கிலம் புரியவில்லை. கையில் ஒரு பட்டியலைத் தந்தாள். மார்பில் அவன் பெயர் எழுதிய நீண்ட சதுர பிளாஸ்டிக்கைப் பொருத்தினாள். பத்தொன்பது டாலர் தொண்ணூற்றாறு செண்ட்டுக்கு சப்ளை கிட் என்று ஒரு பட்டியல் இட்டு, ரிப்போர்ட் பேப்பர், உறைகள் பைண்டர்கள், ஸ்கராட்ச் பாட் என்று என்னென்னவோ வாங்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. 'யூ கிவ் மி தி மணி ப்ளீஸ்!"

ரகுபதி இன்னும் தன் டிராவல்ஸ் செக்குகளை மாற்றிக் கொள்ளவில்லை.

"ஐ கன் கிவ் யூ இன் ட்ராவலர்ஸ் செக்ஸ்"

"ஃபார் ட்வெண்டி டாலர்ஸ்!" என்றாள் சற்று கேலியாக. "ஓகே! யூ சேஞ்சிட் அண்ட் கிவ் மி. நோ ப்ராப்ளம்!"

"வாட் டு ஐ டூ நௌ?"

"வெய்ட் ஃபார் ப்ரொபஸர் ஹாமில்டன்!"

இடம் தேடினான். அந்த முகங்கள் மறுபடி அவனைக் கூர்ந்து பார்த்தன. எல்லாம் புதிய முகங்கள். விரோத முகங்கள். அவன் வந்து சேர்ந்ததையே வெறுப்பது போலப்

பார்க்கும் முகங்கள். இன்னும் சில நாள்களில் அவனுடன் மிகவும் பரிச்சயமாகி, அவனிடம் அளவளாவப் போகும் முகங்கள்.

"இஸ் யூர் நேம் பட்டேல்?" என்று ஒரு குரல் கேட்டது.

"நோ" என்று சிரித்தான்.

"ஐ தாட் ஆல் இண்டியன்ஸ் ஆர் பட்டேல்ஸ்! யூ ஆர் ஃப்ரம் விச் பார்ட் ஆஃப் இண்டியா?"

"டமில் நாடு..."

"ஸிட் டவுன்."

ரகுபதி உட்கார்ந்தபோது உடனே விழுந்தான்.

"வெல்கம் ரகுபாட்டி!"

## 4

கீழே விழுந்ததும் எழுந்திருக்கப் பிரயத்தனப்பட்ட போது ரகுபதி மறுபடி தடுமாறி விழுந்தான். எல்லாரும் சிரித்தார்கள். யாரையும் திரும்பிப் பார்க்காமல் நாற்காலியைப் பரிசோதித்து விட்டு உட்கார்ந்தான். உயரமான ஒரு மாணவன் அவனருகில் உட்கார்ந்து, "ஹாய்! ஐம் ஸாம் மக்கயர்! கால் மி ஸாம்" என்று கை கொடுத்தான். "அவர்களை மதிக்காதே. விளையாட்டு புத்தியுள்ளவர்கள். வகுப்புத் துவங்கியதும் சரியாகிவிடும்" என்றான். ரகுபதிக்கு கண்களில் கோடிட்ட கண்ணீரை அடக்கிக் கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது.

ப்ரொபஸர் ஹாமில்டனைப் ப்ரொபஸர் என்று ஒப்புக் கொள்வது சிரமமாக இருந்தது. இளவயதினராக இருந்தார். கண்ணாடி விளிம்பில்லாமல் முகத்துடன் பொருந்தியிருக்க, கொஞ்சம் மஞ்சளான பற்களால் சிரித்தபோது கன்னத்துச் சுருக்கங்கள் சற்று வயது காட்டியது. வந்த உடனே மேஜை விளிம்பில் இயல்பாக உட்கார்ந்து கொண்டார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ரகுபதி தன்னைச் சுற்றிலும் மெல்லப் பார்த்தான். தொண்ணூற்று நான்கு பேர்! அடுத்த ஜூன் வரை இவர்களோடு சேர்ந்து பழக வேண்டும். முதல் மூன்று அனுபவமே நேராக இல்லை. எல்லாரிடமும் ஒருவித விரோதம் இருக்கிறது. ஒருவித மேல்தட்டு உணர்ச்சி இருக்கிறது. தன்னை எல்லாரும் தாழ்வாகப் பார்ப்பதாகத் தோன்றியது. மெல்ல ப்ரொபஸர் ஹாமில்டன் சொல்வதில் கவனம் செலுத்தினான்.

"நீங்கள் எல்லாரும் என்னை நேசிக்க வேண்டியதில்லை" – மேஜை முன் விளிம்பில் சாய்ந்து கொண்டு சற்றே முன்பக்கம் குனிந்து கொண்டு யாரையும் பார்க்காமல் பொதுவாக ஒரு திசையில் பார்த்துக்கொண்டு பேசினார். "நீங்கள் என்னை வெறுத்தாலும் பரவாயில்லை. நீங்கள் இந்தப் பள்ளிக்கு எதற்கு வந்திருக்கிறீர்கள் என்பதை உணர்ந்தால் போதும். உங்களில் அதிர்ஷ்டக்காரர்கள் இருந்தால் சிலர் தொழிலில் தலைவராவீர்கள். சிலர்தான். என் வகுப்புக்கு வரும்போது கோட், டை அணிந்து வருவது நல்லது. அதை நான் விரும்புகிறேன். இன்றிலிருந்து, இந்தக்

கணத்திலிருந்து, உங்கள் படிப்புத் தொடங்குகிறது. நாளை நாளை என்று ஒத்திப் போடுவதில் பயனில்லை. எனவே, உங்கள் முதல் அஸைன்மெண்ட் இப்போதே தொடங்குகிறது..." என்று கத்தை கத்தையாகக் காகிதங்களை வகுப்பில் உள்ள மாணவர்களிடம் கொடுக்க, அந்தக் காகிதங்கள் கைமாறி ரகுபதிக்கு ஒரு செட் கிடைத்தது. அதைப் பிரித்துப் படித்தால் புரியும் என்று தோன்றவில்லை. 'கிராஜுவேட் ஸ்கூல் ஆஃப் பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன்' என்று தலைப்புக் கொடுத்து ஏதோ சிமெண்ட் கம்பெனி திவாலாகும் நிலையில் இருப்பதை வருணித்து இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்று ஆயிரத்து ஐநூறு வார்த்தைகளுள் இரண்டு நாளில் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தது. ரகுபதிக்கு மலைப்பாக இருந்தது. ஒன்றுமே சொல்லித் தராமல் இப்படி ஆரம்பித்தால் என்ன எழுதுவது?

காண்டீனில் அவர்கள் எல்லாரும் ஹாம்பர்கர் சாப்பிட்டார்கள். சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கே வகை வகையாக இருந்த பொருள்களில் ஏதாவது ஒரு வகையில் மாமிசம் இருந்தது. கொஞ்ச கொஞ்சமாக அவன் அமெரிக்காவில் தான் மிகவும் வருத்தப்படப் போகிறோம் என்கிற பயம் அதிகரித்தது. மரத்தடியில் தனியாக உட்கார்ந்து கொண்டு அப்பாவுக்குக் கடிதம் எழுத யோசித்தான். பாதி எழுதிவிட்டுக் கிழித்துப் போட்டான். முதல் வாரமே எதுவும் முடிவுக்கு வரக்கூடாது.

வாரம் முழுவதும் நடந்த வகுப்புகள் எதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. யாரும் அவனுடன் பேசவில்லை. சாயங்காலங்களில் லேசாகக் குளிர ஆரம்பித்து லேசாக பனிப் போர்வை படர்ந்து கொண்டது. பாதியில் எழுந்து போய் விடலாமா என்று பலமுறை தோன்றியது. எங்கே போவது? திரும்ப மோகன்ராமின் வீட்டுக்குப் போக ஸப்வே பிடித்து வோர்ல்ட் ட்ரேட் ஸெண்டரில் ஸ்டாட்டன் ஐலண்ட் ஃபெர்ரி பிடித்து செல்ல வேண்டும். ரகுபதிக்கு நியூயார்க் இப்போது மறுபடி அச்சமளித்தது. வகுப்பு முடிந்ததும் அவர்கள் பெரும்பாலானோர் ஆளுக்கொரு காரில் ஏறி விருட்டென்று சென்று விடுவார்கள். தனியாக நடந்தான். கல்லூரி வாசலை விட்டு வந்ததும் ஸப்வே ஸ்டேஷன் அருகிலேயே இருந்தது. படியிறங்கி பூமிக்கடியில் செல்லும்போது அவன் அச்சம் முற்றுப் பெற்றிருந்தது. குகை போல வழி சுவர்களில் விளம்பரங்கள் என்ன என்னவோ கிறுக்கல்கள். படியில் உட்கார்ந்துகொண்டு ஓர் இளைஞன் தாளம் போட்டுக் கொண்டு சித்தார் வாசித்துக் கொண்டிருக்க, அவனகே தரையில் சில நாணயங்கள் கிடந்தன. அவன் வாசிக்கும மெட்டு எங்கும் எதிரொலித்தது. அண்டர்கிரவுண்டின் சுவாசக் காற்று சில்லென்று இருந்தது. எங்கோ பேரிரைச்சல் போலக் கேட்டது நான்கு நீக்ரோக்கள் காத்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் ரகுபதியின் அருகில் வந்து "ஹே மான்! கிவ் மி எ டாலர்" என்றான். ரகுபதி அவன் என்ன கேட்கிறான் என்று புரியாமல் விழித்தபோது மற்றொருத்தன் அவன் பையைத் தடவினான். இன்னொருத்தன் அவனை உலுக்கினான். கீழே பிளாட்பாரத்தில் சில்லறை சிதற, அதற்குள் ரயில் வந்து விட மூவரும் தானாகத் திறந்த கதவுகளில் நுழைந்து உள்ளே சென்று ஜன்னல் வழியாக அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். ரகுபதி செயலற்றுப் போய், வண்டியில் ஏறிக் கொள்ளத் தைரியமில்லாமல், கீழே கிடந்த நாணயங்களைப் பொறுக்கிக் கொண்டபோது அவனிடம் இருந்த டாலர் நோட்டுகள் அத்தனையும் பறி போயிருந்ததை உணர்ந்தான். அங்கு ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டான். முழங்காலில் புத்தகங்களை வைத்துக்கொண்டு அழுதான். எதற்காக அழுகிறோம் என்று தெரியாமல் அழுதான்.

"அப்புறம் எப்படி வந்தே?" என்று மோகன்ராம் சிரித்தார்.

"நல்லவேளை, ட்ராவலர்ஸ் செக் எல்லாம் பைக்குள் இருந்தது. மறுபடி மேலே வந்து எக்ஸ்சேஞ்சில மாத்திக்கிட்டு டாக்ஸி புடிச்சு வந்துட்டேன."

"டாக்ஸி புடிச்சு வந்தியா? சரிதான்! ரொம்ப காசாயிருக்குமே?"

"இல்லை ஸார்! என்னால மறுபடி ஸப்வேல போக முடியாது."

"ஏன்?"

"பயமா இருக்கு!"

"சேச்சே! இதெல்லாம் இங்க சாதாரணம்! நீ இன்னிக்கு தப்பிச்சே. உங்கிட்ட காசில்லைன்னா 'மக்' பண்ணியிருப்பாங்க. தலைல ஒரு நெத்து! உடனே மயக்கமாயிருப்பே. தப்பிச்சே நீ.. ஸப்வேல போறதுக்கு ஒரு தர்மம் இருக்கு. தனியா எங்கயும் நிக்காதே. யார்கூடயாவது நில்லு. கூட்டமாயுள்ள பிளாட்பாரத்தில்! நியூயார்க் ஸப்வே ராத்திரி வேளைலதான் டேஞ்சர்னு நினைச்சேன். இப்ப சாயங்காலமே ஆரம்பிச்சிட்டாங்களா? டாக்ஸிக்கு எத்தனை கொடுத்தே?"

"எத்தனையோ ஸார்! வீடு வந்தா போதும்னு ஆயுருச்சி ஸார், எனக்கு அமெரிக்கா வேண்டாம்!"

"ஏம்ப்பா ஒரு வாரத்தில இப்படி சொல்றே?"

"இல்லை ஸார். கிளாஸ்ல மத்தவங்க கலாட்டா பண்றாங்க. லெக்சர் புரிய மாட்டேங்குது. இந்த ஆக்ஸெண்டே வேற மாதிரி இருக்கு. போதாக்குறைக்கு இந்த அனுபவம் வேற. ஸார், நான் திரும்பிப் போயிர்றேன். எனக்குப் படிப்பும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம்!"

"முதல்லே காப்பி சாப்பிடு, மத்தியானம் என்ன சாப்பிட்டே?"

"காப்பி கோக்!"

"அதான் நல்ல பசில இருக்கே. ஏன், ஹாட்டாக் ஏதும் சாப்பிடலையா?"

"எல்லாத்திலயும் மாமிசம். எனக்கு மாமிசம் சாப்பிட ஆப்ஜெக்ஷன் இல்லை. ஆனா இந்த ஊர் மாமிசம் ஒத்துக்காது போல இருக்கு. ஒருவிதமான டேஸ்டும் இல்லை!"

"யோகர்ட், ஸலாட் எதாவது சாப்பிடறது!"

"எதைப் பார்த்தாலும் பயமா இருக்கு. ஸார் நான் வரலை! நான் போறேன்!"

"இரு இரு அவ்வளவு சுலபமாக உன்னை அமெரிக்கா விட்டுருமா! ஒரு வாரத்தில இவ்வளவு ஆடிப் போயிட்டியா? நியூயார்க்கோட கரிய முகத்தைப் பார்த்தே! அதுக்கு ஒரு இனிய முகமும் இருக்கு. அதைப் பார்க்கலாமா இன்னைக்கு?"

"இல்லை ஸார். எனக்கு எங்கயும் போகணும் போல இல்லை."

"கிளாஸ்ல ஒருத்தரும் இண்டியன்ஸ் இல்லையா?"

"இல்லே. மத்தவங்க கலாட்டா பண்றாங்க. நாற்காலியை இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கறாங்க."

அவர் சிரித்து, "ரொம்ப நொந்து போயிருக்கே! நான் ஒண்ணு சொல்றேன் கேளு. என்கூட வா. சில இந்தியர்களை முதல்ல சந்திக்கலாம். உன் மாதிரி மாணவர்களா வந்து இங்க படிக்கிறவங்க, வேலை கிடைச்சு செட்டில் ஆனவங்க, மாமிகள்,



www.writersujatha.com

குழந்தைகள் எல்லாரையும் சந்திக்கலாம். அவங்கள்ல யாரையாவது ஃப்ரெண்டு பண்ணிக்க. அவங்க முதல் தின அனுபவத்தைக் கேட்டுப் பாரு. கிளாஸ்ல கலாட்டா பண்றாங்கன்னு உடனே ஓடிப் போயிடறேன்னு சொல்றது டிஃபீட்டிஸம்!"

"என்ன ஸார்! இந்த மாதிரியே தினம் தினம் இருந்தா என்னால் தாங்க முடியாது!"
"தினம் அப்படி இருக்கும்னு எப்படி நீ தீர்மானிக்க முடியும்?"

இஷ்டமில்லாமல்தான் அவருடன் புறப்பட்டான். அவனிடம் குளிருக்கு ஆடைகள் சரியாக இல்லாததால் ஓர் அனோராக் கோட் கொடுத்தார். சாயங்காலம் ஏழு மணி சுமாருக்கு அவர்கள் கிளம்பி மன்ஹாட்டன் நோக்கிச் சென்றார்கள்.

இப்போது பனிப்படலம் சற்று விலகியிருந்தது. பாலத்தைக் கடக்கும் போது மன்ஹாட்டன் தீவு ஒரு ரத்தின சொர்க்கம் போல இருந்தது. வோர்ல்ட் ட்ரேட் ஸெண்டரின் இரட்டை டவர்கள் நெட்டையாக மின்சார விழிப்பில் ஜொலித்தன.

"பார்த்தியா! எத்தனை லைட்டு! எத்தனை ஜாஜ்வல்யம்!"

'எல்லாம் தூரத்தில இருந்து நல்லாருக்கு ஸார். கிட்ட போனா அசிங்கம்."

'நல்லது பொல்லாதது எல்லாம் இருக்குப்பா இங்க. நீ அனுகறப்ப பொல்லாததைத் தவிர்க்கத் கத்துக்கணும்! ஸப் வேல வந்தே. அந்த அனுபவம் ஏற்பட்டது. அதுக்காக ஸப்வேயை நிராகரிக்க முடியாது. கொஞ்சம் ரிஸ்க்! எச்சரிக்கை போதும். நான் எல்லாம் சொல்லித் தரேன். கவலைப்படாதே! அதுக்காக இந்த சொர்க்கபுரியைத் தொட்டுப் பார்க்காமலேயே டாட்டா காட்டிட்டு. போறேன்னு சொல்லாதே! நீ பார்க்க வேண்டிய நல்ல விஷயங்கள் இன்னும் எத்தனையோ இருக்கு."

மன்ஹாட்டன் தீவின் பரபரப்பான போக்குவரத்தில் சேர்ந்து கொண்டு ஊர்ந்தார். கட்டடங்களின் உயரமும் பிரம்மாண்டமும் அவர்களை அணைத்துக் கொள்ள, பற்பல அவென்யூக்களையும் ஸ்ட்ரீட்களையும் கடந்து கடந்து பார்க் செய்வதற்கு இடம் தேடினார்.

"நாம போக வேண்டிய இடத்திலிருந்து ஒரு மைல் வந்தாச்சு பார்க்கிங்குக்கு!"

"எங்கே போறோம்?"

"இண்டியன் அஸோஸியேஷன்ல ஒரு நிகழ்ச்சி."

"என்ன நிகழ்ச்சி?"

"குச்சுப்புடி டான்ஸ். ஆந்திராவில இருந்து பார்ட்டி வந்திருக்கு."

"குச்சுப்புடியெல்லாம் நான் நிறைய எங்க ஊர்ல பார்த்தாச்சு ஸார்."

"குச்சுப்புடி பார்க்கவா கூப்பிடறேன்? அதைப் பார்க்க வர்றவங்களைப் பார்க்க."

கடைசியாக ஒரு பார்க்கிங் பிரதேசம் கிடைத்து. பெரு மூச்சு விட்டு, காரை நிறுத்தி மீட்டரில் காசு போட்டு விட்டு நடந்தார்கள்.

அவர் கொடுத்த கோட்டு குளிருக்கு இதமாக இருந்தது. சில்லென்று காற்று முகத்தில் அடித்து ரகுபதிக்கு இவரிடமிருந்து சீக்கிரத்தில் கழன்று கொண்டு தனியே போய்விட வேண்டும் என்று தோன்றியது. எதிலும் விருப்பமில்லாமல் இருந்தது. கண்ணாடிக்குப்

பின் அமெரிக்கா வண்ணவண்ணமாகக் குப்பைகளை அலங்கரித்து விற்றுக் கொண்டிருந்தது. எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். உலகத்தில் உள்ள அத்தனை நிறத்தினரும் வீதியில் தென்பட்டார்கள். காதலர்கள் அவ்வப்போது நின்று நின்று முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தனர். செய்தித்தாள்கள் வாங்குவார் இன்றி அநாதையாகத் தெரு முனையில் காத்திருந்தன. மஞ்சள் டாக்ஸிகள் மஞ்சள் டாக்ஸிகளைத் துரத்திக் கொண்டிருந்தன. நகரம் முழுவதும் சிவப்பு, அம்பர், பச்சை என்று ஆயிரம் கண்கள் விழித்துக் கொண்டிருந்தன.

இந்த தியேட்டர் அவனுடைய யூனிவர்ஸிடிக்கு அருகில்தான் இருந்தது. ஏதோ ஒரு கல்லூரியைச் சார்ந்ததாம். இந்த மாதிரி நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விடுகிறார்களாம்.

இந்தியர்கள் பலர் தியேட்டர் வாசலில் காத்திருந்தனர். குழந்தைகள் ஊடாடின. அமெரிக்க ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு இந்திய டாக்டர்கள் கோக் உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள். மனைவிகள் பட்டுப் புடவையில் உலவ மோகன்ராம் பலரைப் பார்த்துச் சிரித்தார். பலரை அவனுக்கு அறிமுகப்படுத்தினார். ஐந்து டாலர் கொடுத்து உள்ளே போய் உட்கார, செக்ரட்ரி வீடியோவை அமைத்துக் கொண்டிருக்க அதிலிருந்து கூச்சல் ஒலி கேட்க, திரையை விலக்கி ஒரு குழந்தை எட்டிப் பார்க்க, சிறுவர்கள் காரிடாரில் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு ஓட, ரகுபதிக்கு மறுபடி இந்தியா வந்து விட்ட மாதிரி இருந்தது. மிருதங்கம் நியூயார்க்கில் சுருதி சேர மறுத்தது. பாடவந்த அம்மாள் ஸ்ட்ரெஸில் விழுங்கி கனைத்துக் கொண்டிருக்க, கச்சிதமான இரண்டு ஆந்திரப் பெண்கள் ‘பாரிஜாத புஷ்பம் சத்தியபாமா' என்று தெலுங்கில் ஏதோ பாடிக் கொண்டு ஆடினார்கள்.

அதற்கு ஒரு ப்ரொபஸர் ஆங்கிலத்தில் விளக்கம் கூற, ரகுபதி சுற்றிலும் பார்த்தான்.

அவன் இருந்த வரிசைக்கு மூன்று வரிசை முன்னே, ஓரத்தில் மதுமிதா உட்கார்ந்திருந்தாள்.

## 5

ஒரு வருஷம் கழித்து அவளைப் பார்க்கிறான். ஒரு காலத்தில் மூச்சுக் காற்று ஒவ்வொன்றிலும் அவளைச் சுவாசித்துக் கொண்டிருந்தாள். இரவு பகலாக ஏங்கினான். அவளைக் கிட்ட வந்தாள், தொட்டு ஒதுக்கப்பட்டு வெறுப்பின் எல்லைகளைத் தொட்டு மலை முடிவிலிருந்து குதிக்க முயற்சி செய்து விட்டு இப்போது...

பக்கத்தில் உட்கார்ந்திருந்த மோகன்ராம், "என்னப்பா டான்ஸ் பாக்காம அங்கேயே பார்த்துக்கிட்டு இருக்கியே – எதாவது இன்ட்ரஸ்டிங்கா இருந்தா சொல்லு" என்றார்.
"இல்லை ஸார்"

மேடையில் மானசீகக் கிருஷ்ணரை 'குளிக்க வா' என்று கெஞ்சிக் கெஞ்சிக் கொண்டிருந்தாள் நடனி.

"வாட்ஸ் ஷி ஆஸ்கிங்?" என்றது அமெரிக்காவில் வளர்ந்த ஒரு தமிழ்க் குழந்தை.

"ஷீ இஸ் ஆஸ்கிங் கிஷ்ணா டு கம் ஃபர் பாத்."

"ஹூ இஸ் கிஷ்ணா?"

"இதுக்குத்தான் அமர்சித்ரகதா மாதிரி ஏதாவது வாங்கிக் கொடுங்கோன்னு சொல்றேன். கிருஷ்ணா யாருன்னு கேக்கறது... ரோலிங் ஸ்டோன்ஸ் யாருன்னு கேட்டா பதில் சொல்றது."

"வாட்ஸ் ஷி வேரிங் இந் ஹெர் மூக்கு?"

ரகுபதிக்கு இதெல்லாம் கவலையே இல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மதுமிதாதான் இங்கிருந்து அவள் பரிச்சயமான பக்கவாட்டுத் தோற்றம் தெரிகிறது. அந்த மூக்கை விரலால் ஒட்டிப் பார்த்திருக்கிறான். பக்கத்தில் யார் என்று பார்த்தான். கணவனைக் காணோம். அந்தக் கண்ணாடி அம்மாள் மாமியாராக இருக்கலாம். ரகுபதி எழுந்து போய் "ஹலோ மது" என்று விசாரிக்க ஆசைப்பட்டான்.

எழுந்திருக்கவில்லை.

"அது யாருப்பா? அங்கே பார்த்துக்கிட்டு இருக்கே?"

"இல்லை ஸார்... தெரிஞ்சவங்க மாதிரி இருந்தது போகலாமா?"

"போலாமாவது...! இன்னும் மெயின் டான்ஸே வரலை. அதுக்கப்புறம் மிமிக்ரி இருக்கு. நாலு டாலர் கொடுத்துட்டு பாதில எழுந்து வர்றதாவது!"

நடனம் முடிந்ததும் சோகையாகத் கைதட்ட, திரை மைக்கில் மாட்டிக் கொள்ள, அதை ஒரு கமிட்டி மெம்பர் வந்து ஒதுக்க, மதுமிதா எழுந்து தன்னை நோக்கி வருவதைப் பார்த்து அப்படியே உறைந்து போனான். இதோ வந்து விட்டாள். என்னைப் பார்க்கிறாள். இல்லை பார்க்கவில்லை. இவன்தான் அவளை முழுசாகப் பார்த்தான். புடவை கட்டிக்கொண்டு இருந்தாள். கரும்பச்சையில் மஞ்சள் பார்டர் போட்டு பளபளவென்று கொஞ்சம் சதை போட்டிருக்கிறாள். லேசாக லிப்ஸ்டிக். கழுத்தில் ஒரே ஒரு ரத்தினமாலை காதில் பழங்காலத்து லோலாக்கு தலையைப் பின்ன முடியாமல் ரப்பர் வளையத்தால் சிறைப்படுத்தி அவனைக் கடக்கும்போது அந்த வாசனையைக் கொஞ்சம் விட்டுவிட்டுதான் சென்றாள்.

"இந்தப் பொண்ணை நான் தொட்டிருக்கேன் ஸார்" என்று சொல்ல வேண்டும் போல இருந்தது.

"இன்ட்ரஸ்ட்டட்? விசாரிக்கட்டுமா பொண்ணு கல்யாணத்துக்கு இருக்குதான்னு?" என்றார் ராம்.

"இல்லை ஸார். இந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் ஆயிருச்சு."

"அட! எப்படித் தெரியும்?"

ஓ மைகாட்! இவளைதான் சந்திக்கக் கூடாதுன்னு உங்கப்பா கடிதம் எழுதியிருக்காரில்லை...? தி ப்ளாட் இஸ் திக்கனிங்!

"பயப்படாதிங்க. நான் அவளைச் சந்திக்கப் பிரயத்தனப்படப் போறதில்லை."

"அடடா! நான் சரியாப் பார்க்காம விட்டுட்டனே. அழகாத்தான் இருந்தாப்பல ஞாபகம்..."

"அழகாத்தான் இருப்பா."

"என்ன வயசு?"

"பத்தொம்பது இருபதுதான் இருக்கும்."
"ஹஸ்பண்ட் பேர் என்ன?"

"ராதாகிஷன்."

"ஜல் ஃபைண்ட் அவுட்."

"வேண்டாம் ஸார். அநாவசியத்துக்கு சிக்கலாக்காதீங்க. அவங்களைப்பத்தி எதும் தெரிஞ்சுக்க, அவங்களைச் சந்திக்க விருப்பமே இல்லை எனக்கு."

ரகுபதி மௌனமாக இருந்தான்.

"நீ அந்த ராதாகிஷன் என்ன பண்றான்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"அதெல்லாம் தேவையில்லை."

"தற்போதைக்கா, எப்போதைக்குமா?"

"வாங்க ஸார் போயிரலாம். போர் அடிக்கிறது."

"அவங்க தியேட்டர் வாசல்ல காருக்காகக் காத்திருந்தாங்கன்னா?"

"அப்ப கொஞ்ச நேரம் கழிச்சுப் போகலாம்" என்றான்.

மோகன்ராம் அவனைக் கொஞ்ச நேரம் நிதானமாகப் பார்த்தார். "யூ ஆர் கன்ஃப்யுஸ்!"

"வில் யூ ப்ளீஸ் கீப் கொயட்" என்று பின் ஸீட்டு அதட்டியது.

"ஸாரி."

எட்டரை மணிக்குப் புறப்பட்டு விட்டார்கள். ஸெண்ட்ரல் பார்க் ஃபிஃப்த் அவென்யூ பக்கம் அழைத்துக் கொண்டு சென்றார். மெல்ல மெல்லப் பச்சை விளக்குகள் விழிக்கக் காத்திருந்து இங்கே அங்கே புகுந்து திடீர் என்று அந்த நியான் நகரத்தில் நுழைந்தார்.

மைகாட்!

வண்ண வண்ண மின்சார எழுத்துக்கள் நகர்ந்ததும் கண்சிமிட்டியுடன் வானத்தில் கார்ப்பெட் விரித்தது போல் தன்னைத் தானே துடைத்துக் கொண்டு, கலர் மாற்றிக் கொண்டு இரவு ஒரு வானவில் வர்ணப்பகலாயிருந்தது. "இங்க நின்னுக்கிட்டு லைட்டைப் பார்த்துக்கிட்டு இருந்தாலே ராத்திரி பூரா போயிரும். இந்தப் பிரதேசத்தில் இல்லாத நாகரிகம், கல்ச்சர் இல்லை. இங்க இல்லாத விகாரங்களும் இல்லை. 42–வது தெரு, ப்ராட்வே தியேட்டர் டிஸ்ட்ரிக்ட் எல்லாம் பார்த்துட்டு அப்புறம் உனக்கு விருப்பமிருந்தா ஒரு ஷோ பார்க்கலாம் என்ன?"

"சரி ஸார்."

"உங்கப்பா என்னைத் திட்டப் போறான்."

"இல்லை ஸார்! எனக்குப் பார்க்கணும் போல இருக்கு."

"அவளை மறக்க! அதுக்குத்தானே?"

"அப்படியில்லை."

"ஒரு பெண் உடம்புங்கறது எவ்வளவு சல்லிசான விஷயம்னு நீ இங்க தெரிஞ்சுக்கலாம். இதபார், இந்தத் தெரு முழுதும் மஸாஜ் பார்லர், டாப்லஸ் பார், ஸ்ட்ரிப் பர்லஸ்க், ஸ்விங்கர்ஸ் கிளப், அடல்ட் மூவிஸ்..."

www.writersujatha.com

கண்ணாடி வழியாகப் பெரிய எழுத்துக்கள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் கன்டின்யூவஸ் லைவ் லெக்ஸ்' என்று உரத்த வர்ணத்தில் அறிவித்தன. மேலிருந்து வழியும் வெளிச்ச வெள்ளத்தில் நனைந்த ஜனங்கள் கண்ணாடிப் பெட்டிக்குள் மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார்கள். "காமிக் ஸ்டிரிப்புனு ஓர் இடம் இருக்கு. ஸ்ட்ரிப்டீஸையே வேடிக்கையா பண்ணுவாங்க."

"உங்களுக்கு இதெல்லாம் பிடிக்குமா ஸார்?"

"இல்லை, உனக்காகத்தான்."

"எனக்காகவா?"

"செக்ஸ் மட்டும்தான்னா எவ்வளவோ சுலபம் இந்த தேசத்திலே. உனக்குத் தேவையானா ஒரு வாரத்துக்குக்கூட ஒரு பெண்ணைக் கொண்டு வெச்சுக்கலாம். இட்ஸ் ஸோ ஈஸி! என் மனைவி என்னை விட்டுப் பிரிஞ்சப்புறம் கொஞ்ச நாளைக்கு வெறி பிடிச்சாப்பல இருந்தது. அப்ப இந்த இடத்துக்கு வந்தேன். என்ன வேணா ஆகட்டும்னு தனியா போனேன். தனியா போகவே கூடாது. அதை எப்படி விசாரிச்சுக்கிட்டுப் போறதுன்னும் தெரியாது. ஏதோ ஒரு சந்தில நுழைஞ்சேன். ஸ்விங்கர்ஸ் கிளப். மஸாஜ் பார்லர் எல்லாம் போட்டிருந்தான். உள்ள போய் பிரமை பிடிச்சாப்பல உக்காந்தேன். அந்தப் பொண்ணு நூறு டாலர் கொடுத்தா, உன் வாழ்க்கைல மறக்க முடியாத ராத்திரியை உனக்குத் தரேன்னு சொன்னா. நூறு டாலர் கொடுத்தா அதை வெச்சுக்கக் கூட உடம்பில ஒண்ணும் இல்லை அவகிட்ட! பதினாறு வயசுப் பொண்ணு! எங்கிட்ட நிறையவே பணம் இருந்தது. அவகிட்ட அத்தனையும் வெச்சுக்கன்னு கொடுத்துட்டு சட்டையைப் போட்டுக்கிட்டு வெளியே வந்துட்டேன்."

"ஏன்?"

www.writersujatha.com

"அந்தப் பொண்ணு என் டாட்டர் சாயலா இருந்தா. திகீர்னுச்சு, வந்துட்டேன்!"

"முத முதலா உங்க மனைவியைப் பத்தி சொல்றிங்க ஸார்."

"அது என்னுடைய சொந்த சோகம். வி.ஆர் டிவோர்ஸ்ட். வீக் எண்ட் குழந்தைகள் வரும். பார்க்கலாம்."

"இந்த வீக் எண்ட் வரலையே!"

"பொண்ணுக்கு உடம்பு சரியில்லைன்னு போன் பண்ணியிருந்தா."

"பேசுவிங்களா?"

www.writersujatha.com

"பேசாம என்ன? நாங்க ரெண்டு பேரும் இன்னும் ஃப்ரெண்ட்ஸ் தான்!"

"மறுபடி கல்யாணம் செய்துக்க உத்தேசமா?"

"இப்போதைக்கு இல்லை. ஆனா அந்த சாத்தியம் இருக்குன்னு தான் சொல்லணும். நல்ல பொண்ணா பார்த்து சொல்லேன்."

"இங்க டிவோர்ஸ் சகஜமா ஸார்?"

"ஏன்? எதுக்கு கேக்கறே?"

"சும்மா கேட்டேன் ஸார்."

"இந்தப் பொண்ணு பேர் என்ன சொன்ன?"

"மதுமிதா."

"நைஸ் நேம்... எங்க பார்த்தே?"

"பாவநாசத்தில. நான் பாட்டுக்கு சும்மா இருந்தேன். அம்மா, அப்பா, பொண்ணு எல்லோரும் என்கரேஜ் பண்ணாங்க. உங்ககிட்ட சொல்லியிருக்கேன்னு நினைக்கிறேன்."

"அந்தப் பொண்ணும் ஃப்ரீயா பழகிச்சா?"

"ஆமா ஸார்."

"டிட் யூ ஹவ் ஸெக்ஸ்?"

"இல்லை."

"ரொம்ப ஆதர்ச காதலாக்கும்?"

"அப்படி ஒண்ணும் இல்லை."

"இங்க அங்க தொட்டுக்கிட்டு, முத்தம் கொடுத்துக்கிட்டு..."

"ஆமா ஸார்."

"இண்டியா அவ்வளவு தூரத்துக்கு முன்னேறிச்சா? கடைசில என்ன ஆச்சு?"

"ஸிம்பிள். என்னை விட நல்ல மாப்பிள்ளையா கிடைச்சான். என்னை அம்போன்னு விட்டுட்டாங்க."

"ஜஸ்ட் லைக் தட்!"

"ஜஸ்ட் லைக் தட்! அதை நான் பெரிசா எடுத்துக்கிட்டு தற்கொலை முயற்சிவரைக்கும் போயிட்டேன். எங்கப்பா என்னைக் காப்பாத்தினார்... என்னை ஸ்திரப்படுத்தினார்."

"நீ அவ அப்பாவைக் கேக்கலையா?"

"கேட்டேன் என் பொண்ணுக்கு நல்ல வாழ்க்கை அமையணும்னு நினைக்கிறது தப்பா?ன்னு கேட்டார்."

"பொண்ணு என்ன சொல்லிச்சி?"
"அது கொஞ்சம் வெகுளி ஸார். கொஞ்சம் குழப்பமான பொண்ணு. 'என்ன பண்றது. எங்கப்பா அம்மாவானா இப்படி சொல்றாங்க, ஐம் ஸாரி" அவ்வளவுதான்."

"நல்லவேளை, அவளை நீ கல்யாணம் பண்ணிக்கலை. அதுக்கப்புறம் பெரிசா எதாவது தப்பு பண்ணிட்டு 'ஐம் ஸாரி... அவ்வளவ்தான்'னு..."

"ஒரு பொண்ணு அழகா.. இருந்தா பல குறைகள் மன்னிக்கப்படுகின்றன ஸார்."

"அழகா இருந்தாளா...? நான் சரியா கவனிக்கலையே!"

"அமெரிக்காவில இன்னும் கொஞ்சம் அழகா இருக்கா ஸார். என்னை அந்த ஷோவுக்கு கூட்டிக்கிட்டுப் போறீங்களா!" என்றான்.

## 6

ஐந்தாவது அவென்யூ பதினைந்தாம் தெருவில் இருந்தது அந்த இடம். பார்க் செய்யும் இடத்தில் டாலர் கொடுத்து கார் மாடிக்கு லிஃப்டில் போகும் வித்தையைப் பார்தது விட்டு அங்கிருந்து நடந்தார்கள்.

"பயப்படாத! நான் உன்னை எதும் கெட்ட இடத்துக்கு அழைச்சிட்டுப் போகமாட்டேன். ஒரு பிரம்மசாரியைக் கெடுத்த பாவம் எனக்கு வேண்டாம். கெட்டுப் போறதா இருந்தா சொந்தமா கெட்டுப் போய்க்கோ" என்றார் மோகன்ராம்.

"நாம எங்க போறம்?"

"எலக்ட்ரிக் ஸர்க்கஸ்"

"ஸர்க்கஸா?" என்றான்.

"இல்லை. இது டிஸ்கோ கிளப்."

"அங்கே என்ன?"

"பாரேன்."

நுழைந்ததும் 1928–ஆம் வருஷத்திய தீ அணைக்கும் இஞ்சின் அலங்காரமாக வரவேற்றது. பின்பால் இயந்திரங்களில் இரும்பு கோலிகள் உருண்டு உருண்டு படும் இடத்தில் எல்லாம் சப்தம் பண்ணிக்கொண்டு பார்வையாளர் முகங்களை ரத்த நிற ஒளியில் காட்டின. பற்பல வண்ண வண்ண கண்ணாடிகளைக் கடந்து சென்றார்கள். விளக்குகள் ஆரவாரமாக அவர்களை விந்தைக் கீற்றுகளோடு வருடிக் கொண்டிருக்க, மையத்தில் த்ரீ ரிங் ஸர்க்கஸ் போல மூன்று இடங்களில் ஒதுக்கப்பட்டு அதில் டிஸ்கோ சங்கீதத்துக்கு இளைஞர்கள் தொம் தொம் என்று பதறிப்போய் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

"உங்க ஊர்ல டிஸ்கோ உண்டா?"

"உண்டு ஸார். இவ்வளவு விகரஸ்ஸா ஆட மாட்டாங்க."

"ஃபிஸிக்கல்னு ஒலிவியா நியூட்டன் ஜான் பாட்டு ஒண்ணு இருக்குது. அவளே டி.வி.ல் வந்து டான்ஸ் பண்ணுவா. அந்த உடம்புக்காகவே அந்தப் பாட்டு கோஸ்ட்டு–கோஸ்ட் அலறுது. டைனிங் ரூம் தனியா இருக்குது. அங்கு போய் ஏதாவது சாப்பிடலாமா?"

"இல்லை. பார்க்கலாம் ஸார்."

www.writersujatha.com

ஆண் பெண் வித்தியாசம் மறந்து பாட்டின் துடிப்பு ஒன்று மட்டும்தான் அந்த இடத்து நிஜம்போல ஆடிக் கொண்டிருந்தார்கள். மதுமிதாவுக்கு இதெல்லாம பிடிக்குமோ இல்லையோ, அவள் ஸாரி கட்டிக்கொண்டிருந்தாள். இந்த ஊருக்கு வந்து மாமியாகி விட்டாளா? ஒருகணம் மதுமிதாவை உடை மாற்றி அவளுடன் அந்த மைய வட்டத்தில் ஆடினான்.

"இவங்கள்ளாம் யாரு!"

"யாரெல்லாம்?"

"இங்க ஆடிட்டிருக்காங்களே."

"எல்லாரும் இருப்பாங்க. சின்னவங்க மட்டும்னு இல்லை? வயசானவங்களும் ஆடுவாங்க. இவங்க வயசாயிருக்கறதை ஒப்புத்துக்கவே மாட்டாங்க. கிழவிங்கள்ளாம் பிரமாதமா டிரெஸ் பண்ணிப்பாங்க. அம்பது வயசில கல்யாணத்தைப் பத்திப் பேசுவாங்க. உடம்பை ட்ரிம்மா வெச்சுப்பாங்க. எதைக் கண்டாலும் வாங்குவாங்க. வரவுக்கு மேல செலவழிக்கிறதுங்கறது தேசிய குணம். அமெரிக்காவே க்ரெடிட் கார்டில ஓடுது."

"ஏதாவது புதுசுக்காக எப்பவும் அலைஞ்சுக்கிட்டே இருப்பாங்க போல."

"அமெரிக்காவில் நாய் பூனைன்னு நிறைய வளக்கறாங்க இல்லை. அதுக்கு செலவழிக்கிற பணம் எவ்வளவு தெரியுமா?"

"தெரியாது ஸார்."

"வோர்ல்ட் பாங்கில என் ஃப்ரெண்டு ஒருத்தர் சொன்னார். அந்தப் பணத்தை வெச்சுகிட்டு இந்தியாவில் இருக்கிற ஏழ்மையை கம்ப்ளீட்டா ஒழிச்சுரலாமாம்!"

www.writersujatha.com

"மைகாட்! நாய்க்கும் பூனைக்குமா?"

"அதாவது பரவால்லையே போன வருஷம் புதுசா ஒண்ணு ஆரம்பிச்சாங்க. நாய் பூனைன்னா அதனால ரொம்ப தொந்தரவு ஆயிருது. அவற்றை வளக்கிறதில் சிக்கல்ளாம் இருக்கு. அதுக்காக ஒருத்தன் ஒரு ஐடியா கொடுத்தான், ஆளுக்கொரு கல்லை வளக்கலாம்னான்!"

"கல்லா?"

"ஆமா சின்னதா கருங்கல்லு! 'பெட் ஸ்டோன்'னு எவனோ ஒருத்தன் கிளப்பிவிட்டான். அது தேசம் பூரா புடிச்சுக்கிச்சு! ஆளுக்கொரு செல்லக் கல்லு. அதுக்கு செக்ஷன்! கல்லுக்கு செல்ல சட்டை; கழுத்துப்பட்டை! கல்லை வாக் அழைச்சுட்டுப் போறது!

www.writersujatha.com

www.writersujatha.com

பைக்குள்ள வெச்சிக்கறது. கொஞ்சறது!"

"எல்லாம் கல்லு."

"ஆமா...!" இந்த ஐடியாவை வித்து ஒருத்தன் மிலியன் டாலர் பண்ணிட்டான்."

"க்ரேஸி!" என்றான் ரகு.

"பைசாவை வெச்சுகிட்டு என்ன பண்றதுன்னு தவிக்கிறாங்க. எல்லாமே அலுக்கற வரைக்கும் கிடைச்சுருது, அடையறதில ஒரு த்ரில் இல்லை! எதுவும் அத்தனை சுலபம்! அதனாலதான் இந்த மாறுதல்களைத் தேடறாங்க. சொர்க்கத்தில் தினப்படி கின்னர கிம்புருடர்களாக இருந்தா சரியா ஒரு வாரத்தில் போர் அடிச்சுரும் இல்லையா? அது மாதிரிதான்! டான்ஸ் ஆடிப்பாக்கறியா?" என்றார் மோகன்ராம்.

"வேண்டாம் ஸார் பாக்கறதே போதும்" என்றான்.

பீனா கொலாடா என்ற எதையோ ஆர்டர் செய்தார். பைன் ஆப்பிள், ரம் எல்லாம் கலந்து ஒரு மாதிரியாக இருந்தது. தேங்காய் கூடப் போட்டிருந்தாற் போல இருந்தது. "இந்த மாதிரி காக்டெய்ல்ங்களும் என்ன என்னவோ ட்ரை பண்ணுவாங்க. நியோ ப்ளடி மேரின்னு ஒண்ணு இருக்குது. ஆளை அடிச்சிடும்."

இரவு திரும்பி வந்தபோது ஒரு மணி இருக்கும். காலை காலேஜ் போக வேண்டும்போலவே இல்லை. லீவு போட்டுவிட்டு நாள் பூரா டி.வி பார்த்துக் கொண்டிருக்கலாம் என்று தீர்மானித்தான். ஆனால் நாளைக்கு முக்கியமாக லெக்சர் இருக்கிறது, ஓர் அஸைன்மெண்ட்டுக்கு கடைசி தினம் வேறு. அதை இன்னும் தொடக்கூட இல்லை, மற்ற மாணவர்கள் மிகவும் உற்சாகமாக இருக்கையில் அவனுக்குக் கல்லூரிக்குப் போவதற்கே வெறுப்பாக இருந்தது. நாளை போய்த்தான் ஆக வேண்டும். நூலகத்துக்குப் போய் எதையாவது புத்தகத்தைப் பார்த்து எழுதி விட வேண்டியதுதான். குறித்த காலத்தில் எழுதி முடிக்க வேண்டியதுதான் அந்தக் கல்லூரியில் முக்கியம். அவர்கள் ரிப்போர்ட்களை எல்லாம் யாராவது படிக்கிறார்களா என்பது தெரியவில்லை. ராத்திரி படுத்துக் கொண்ட போது மதுமிதாவை அவள் தம்பி என்ன பெயர் சொல்லிக் கூப்பிடுவான் என்று கொஞ்ச நேரம் யோசித்துப் பார்த்தான். நினைவுக்கு வரவில்லை. பீனா கொலாடாவினால் கனவில்லாமல் தூங்கினான்.

**லை**ப்ரரியைச் சுற்றிலும் கண்ணாடி போர்த்தியிருந்தது. உள்ளுக்குள் கதகதப்பாக இருந்தது. வரிசையாக அத்தனை புத்தகங்களும் அவன் படிப்பை ஞாபகப்படுத்தின. மூச்சு விட்டால் வழக்கம்போல மௌனம். ரகுபதி வெயில்படும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு தன் அஸைன்மெண்ட்டை அவசரமாக எழுதிக்கொண்டிருந்தான். ஒரு கற்பனை சிமெண்ட் கம்பெனி திவாலாகும் நிலையில் இருக்கிறது. பக்கத்தில் ஒரு பெரிய அணைகட்ட டெண்டர் போட்டிருக்கிறது. அந்த டெண்டர் அதற்குக் கிட்டினால் தான் அதனால் பிழைக்க முடியும். அதன் முக்கிய போட்டிக்கார கம்பெனி ஏற்கெனவே டெண்டர் கிடைப்பதற்கு முன்பே அந்த அணைக்கட்டின் அருகில் ஒரு ஃபாக்டரி வைக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறது! இந்தச் சூழ்நிலையில் அந்தக் கம்பெனி என்ன செய்ய வேண்டும் என்பதை 1,500 வார்த்தைகளில் ரிப்போர்ட் எழுதித் தர வேண்டும். என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்பது தலைகால் புரியாமல் எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தான். லெக்சரர் நன்றாகத் திட்டப் போகிறார். துரத்தி விட்டாலும் ஆச்சரியமில்லை.

நூலகத்தை விட்டு வெளியே வரும் டெஸ்க்கின் அருகில் இருந்த பெண் அவனைப் பார்த்துச் சிரித்தாள். ஏதோ ஒரு புஷ்பத்தை அவனிடம் கொடுத்தது போல இருந்தது. வெளியே வரும்போது வானம் நீலமாக இருந்தது. குளிர் தாங்கும்படியாக இருந்தது.

அந்தப் பெண் அவனை "அஸைன்மென்ட். எழுதி விட்டாயா? என்று கேட்டாள். திரும்பிப் பார்த்தான். இவளை வகுப்பில் பார்த்திருக்கிறான். பெயர் அமர்ந்தாவோ, மேரியோ– சரியாக ஞாபகம் இல்லை. ஒரு பக்கம் வகிடெடுத்து ஆண் பிள்ளைகள் போல கிராப் வைத்திருந்தாள். சட்டை மேல் சின்னதாக ஜாக்கெட் அணிந்து அதன் காலரை உயர்த்தியிருந்தாள்.

"ஏதோ எழுதி முடித்து விட்டேன்" என்றான் ரகுபதி."

"சிமெண்ட் கம்பெனியில் எல்லோரும் தற்கொலை செய்து கொண்டுவிட வேண்டும் என்று நான் எழுதியிருக்கிறேன்."

"நானும் ஏறக்குறைய அதைத்தான் எழுதியிருக்கிறேன்" என்றான்.

"இதையெல்லாம் யாராவது படிப்பார்களா?"

"படித்து எல்லார் முன்னிலையிலும் மார்க்கெடுத்து மானத்தை வாங்கப் போகிறார்கள்."

"உன் பெயர் என்ன?"

"மேரி எமர்ன்."

"உன் பெயரை உச்சரிக்க இன்னும் ஒரு வாரத்தில் பழகி விடுவேன் எந்த ஊர்?"

"டெர்டெனஸி. ஆனால், இங்கே ஸிஸ்டம் அனலிஸ்ட்டாக இருக்கிறேன். எம்.பி.ஏ. செய்தால் அதிக சம்பளம் வரும். அந்த ஒரு குறிக்கோளில்தான் இந்த நகரத்துக்கு வந்திருக்கிறேன். உனக்கு இது பிடித்திருக்கிறதா?"

"எனக்கு இன்னும் தலைகால் புரியவில்லை. சில சமயங்களில் எதற்காக இங்கு வந்து மாட்டிக்கொண்டோம் என்றிருக்கிறது."

"எனக்கு எப்போதுமே அப்படி இருக்கிறது" கோக் மெஷினில் காசு போட்டு இரண்டு கோக் வாங்கிக் கொண்டு அவனுடன் நடந்து வந்து மரத்தடியில் உட்கார்ந்தாள். "உன்னை வகுப்பில் அவர்கள் கலாட்டா பண்ணுவதைப் பார்த்தேன். அது தப்பு. எனக்கு இந்தியாவின் பேரில் ஓர் ஆர்வம் உண்டு. உங்கள் கலாச்சாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஆசையாக இருக்கிறது. ஒருமுறை வார இறுதியில் என் அறைக்கு வருகிறாயா?"

"சரி" என்றான். அவள் வாங்கிக் கொடுத்த கோக்கைக் கடித்துத் திறந்து கொண்டான்.

அவள் அவனைப் பார்த்துக் சிநேகிதமாகச் சிரித்தாள். மெல்லிய மார்பு, ஓட்டக்காரி போல் இருந்தாள். அமெரிக்கப் பெண்களுக்கு வயது சொல்வது ரொம்ப கஷ்டம் என்று தோன்றியது.

"எதற்கு வந்திருக்கிறேன் என்றே தெரியவில்லை. நான் சம்பாதிக்கும் பணம் போதும். பதவி உயர்வு கிடைத்தால் தலைவலிதான் அதிகமாகும்."

"நான் ராத்திரி இரண்டு மணிக்கு எழுந்து விட்டதைப் பார்த்துக் கொண்டு "மைகாட்! அமெரிக்காவில் என்ன செய்து கொண்டிருக்கிறேன்" என்று என்னையே கேட்டுக் கொள்கிறேன்!"

"நம் இரண்டு பேருக்கும் நிறைய பொது வெறுப்புகள் இருக்கின்றன! நாம் சந்திக்க வேண்டும். எனக்கு ஹிந்துயிஸம் பற்றி என்றைக்காவது ஒரு நாள் நீ சொல்ல வேண்டும்."

"எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது."
"நீ ஒரு ஹிந்துதானே?"

“ஹிந்துக்கள் எல்லாருக்கும் ஹிந்துயிஸத்தைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. பார்க்கப் போனால் உனக்கு என்னைவிட அதிகமாகத் தெரிந்திருக்கலாம். உன் ஆர்வத்தினால் நீ அதைப் பற்றி நிறையப் படித்திருக்கலாம். இந்த ரிப்போர்ட்டைக் கொடுத்து விட்டு நாம் இரண்டு பேரும் கிளாஸிலிருந்து தப்பித்துக் கொண்டு எங்கேயாவது போகலாமா? என்ன சொல்கிறாய்?” என்றான்.

"எங்கே?"

"ஏதாவது பஸ்ஸைப் பிடித்துக்கொண்டு நியூயார்க்கைச் சுற்றலாம்!"

"விடுதலை கிடைத்தது போல் ப்ரான்க்ஸ்பார்க்கில் சுற்றினார்கள். அவ்வளவு சுறுசுறுப்பான நகரத்தின் அருகில் இத்தனை ஏக்கர் பச்சைப் பரப்பும் ஏறக்குறைய ஒரு காடு போன்ற சூழ்நிலையும் இருப்பது ஆச்சரியகரமாக இருந்தது. "நியூயார்க் நகரத்தில் மொத்தம் முப்பத்தி ஏழாயிரம் ஏக்கர் பார்க் பிரதேசமே இருக்கிறது" என்றாள். "இந்த மாதிரி **ஜூ** உங்க ஊரில் இருக்கிறதா?"

"எங்க ஊரே **ஜூ**தான்" என்று சிரித்தான்.

"ஏன் அப்படி சொல்கிறாய்?"

"சும்மா விளையாட்டுக்கு! நான் சொன்னதை எல்லாம் ஸீரியஸாக எடுத்துக் கொள்ளக் கூடாது."

"முதலில் இந்தியர்களையே எனக்குப் புரியவில்லை. நீங்கள் தலையாட்டினால் 'ஆமா'மா, 'இல்லை?யா என்பதே தெரிவதில்லை.

"அதேபோல் அமெரிக்கர்களையே எனக்கு சுத்தமாகப் புரியவில்லை. 'ஐ டோண்ட் கேர்' என்று நீங்கள் சாதாரணமாகச் சொல்கிறீர்கள். அதற்கு எங்கள் ஊரில் விபரீதமான அர்த்தம்.... அலட்சியப்படுத்துவதாக அர்த்தம்!"

"நாம் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் இன்னும் தெரிந்து கொள்ளலாம் என்று தோன்றுகிறது.”

அந்த வரவேற்பில் மெலிதான சரசம் இருந்தது.

வீட்டுக்கு திரும்பி வந்ததும் மோகன்ராம். "என்ன இன்னிக்கு காலேஜில?" என்றார்.

"காலேஜ் இன்னிக்கு கட்" என்றான்.

"ஏன்?"

"ஒரு அமெரிக்க சிநேகிதி கிடைச்சா. அவகூட பார்க், மியூஸியம்னு சுத்தினேன்!"

"சரியாப் போச்சு. உங்கப்பாவுக்கு லெட்டர் எழுதிர வேண்டியது தான். அமெரிக்கப் பெண்கள் கிட்ட ஜாக்ரதையா இருக்கணும்!"

"நானே எழுதிர்றேன்" என்றான்.

## 7

ரகுபதிக்கு வகுப்பில் நடப்பது அத்தனையும் பாசாங்கு போலத்தான் தோன்றியது. பெரிய ப்ரொபஸர்கள், வயது வந்த மாணவர்கள் எல்லாரும் சேர்ந்து ஆடும் விளையாட்டு. சின்ன வயசில் ஆடிய அப்பா – அம்மா விளையாட்டுக்கும் இப்போது அவன் கற்றுக் கொள்வதற்கும் அதிக வித்தியாசம் இல்லையென்று உணர்ந்தான். அது அப்பா–அம்மா இல்லை. அதற்குப் பதில் கார்ப்ரேஷன்கள். முதல் வருஷ மாணவர்கள் அத்தனை பேரையும் பற்பல கார்ப்பரேஷன்களாக (இருபத்தி நாலா) பிரித்திருந்தார்கள். ஒவ்வொரு கார்ப்பரேஷனுக்கும் மூன்று பேர். ஒவ்வொன்றும் மூன்று டிவிஷன்களாம். ஒவ்வொரு டிவிஷனிலும் இரண்டு தொழிற்சாலைகளாம். இந்தத் தொழிற்சாலைகளை ஆறு ஆறாகப் பிரித்து, அந்த ஆறும் ஒரே பண்டத்தை உற்பத்தி செய்வதால் அதனதன் கார்ப்பரேஷன்களுக்குள் மார்க்கெட்டில் போட்டியாம். இந்தப் போட்டியைச் சமாளிக்க மார்க்கெட் ரிஸர்ச், விளம்பரங்கள், எத்தனை பேரை வேலைக்கு எடுத்துக் கொள்வது. எத்தனை பேரைப் போட்டிக்காரர்களிடமிருந்து ஈர்ப்பது என்றெல்லாம் தீர்மானம் செய்து அந்த விவரங்களைப் பள்ளியின் கம்ப்யூட்டருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அது அவர்கள் தீர்மானங்களை அலசி கார்ப்பரேஷன் பிழைக்குமா, திவாலாக்குமா என்ற அச்சடித்துக் கொடுக்கும்.

விநோதமான விளையாட்டுத்தான். ஆனால் எல்லாரும் அதை சீரியஸாக எடுத்துக் கொண்டார்கள். கற்பனை இன்ஜினீயர்களைத் துரத்தினார்கள். மார்க்கெட்டின் கற்பனைச் சரிவுகளை விவாதித்து சிகரெட் குடித்தார்கள். காப்பி வெள்ளமாகப் பருகினார்கள். இதற்கெல்லாம் மார்க்கு! இருபது மார்க் கார்ப்பரேஷன் லாபம் பண்ணினால்; முப்பது மார்க், போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் கார்ப்பரேஷன் எத்தனை மேலாக இயங்குகிறது என்று தீர்ப்பளிப்பதற்கு.

ரகுபதிக்கு வாய்த்த கார்ப்பரேஷனில் அந்த மேரி எமர்சனும் ஹோல்டன் என்பவனும் கூட இருந்தார்கள். அவர்கள் கொடுத்த ரிப்போர்ட்டுக்கு கம்ப்யூட்டர் எத்தனையோ லட்சம் டாலர் நஷ்டம் காட்டியது. காட்டி மார்க் போடாமல் ஒரு பொன்மொழி வேறு கொடுத்து வெறுப்பேற்றியிருந்து; 'ஒரு விளையாட்டை எப்படி விளையாடுகிறாய் என்பது முக்கியமில்லை. விளையாட்டில் ஜெயிப்பதுதான் முக்கியம்."

ஹோல்டன் ரொம்ப நொந்து போயிருந்தான். கப்பல் கவிழ்ந்தாற்போல் கன்னத்தில் கை வைத்து "உங்களுடன் சேர்ந்ததே தப்பு" என்று அரற்றிக் கொண்டிருந்தான். மேரி 'இட்ஸ் ஆல் ஸில்லி' என்று சிரிப்பது வேறு அவன் எரிச்சலை அதிகப்படுத்தியது. ரகுபதிக்கு என்ன உணர்வது என்று கூடப் புரியவில்லை.

"நம்முடைய கார்ப்பரேஷன் திவாலானதைக் கொண்டாட ஒரு நாடகம் பார்க்கலாம் வருகிறாயா?" என்றாள், அவள் கேட்பது? இயல்பாகத்தான் இருந்தது. ஓரத்தில் மோகன்ராமின் எச்சரிக்கை உறுத்தியது.

"ராத்திரி ரொம்ப நேரமாகிவிடும்."

"கார் இருக்கிறது. நான் கொண்டு போய் உன் வீட்டில் பத்திரமாக விடுகிறேன். ஏன் பயப்படுகிறாய்? என்னைக் கண்டால் பயமா?" என்றாள். விழிகளில் குறும்பு இருப்பதைக் கவனித்தான். அவளைப் பக்கவாட்டில் பார்க்கும்போது அவள் மார்பு திடமாக இருப்பதையும் அவள் உள்ளுடைகள் லேசாகத் தெரிய, ஏதோ ஒரு

சந்தர்ப்பத்தில் இவள் என்னைப் படுக்கைக்கு அழைக்கப் போகிறாள் என்கிற எண்ணம் ஒருவித எச்சரிக்கையாகவும் சுகமாகவும் மலர்ந்தது.

"என்ன நாடகம்?"

"பிராட்வேயில் எதற்கு டிக்கெட் கிடைக்கிறதோ அதற்குத்தான் போக முடியும். எல்லாமே நன்றாகத்தான் இருக்கும்."

"எனக்குத் புரியாது என்று நினைக்கிறேன்."

"நான் புரிய வைக்கிறேன். எனக்கு இன்றைக்கு எங்கேயாவது போய் ஏதாவது செய்தாக வேண்டும். ஆர்.எம்.எச். கார்ப்பரேஷன் திவாலானதில் ரொம்ப கலங்கிப் போயிருக்கிறேன். ஹோல்டன் நாளை வகுப்புக்கு வரவில்லை என்றால் தற்கொலை பண்ணிக் கொண்டு விட்டான் என்று அர்த்தம்" என்றாள். நாடகம் எட்டரை மணிக்குத்தான். அதற்காக முன்பே போய் டிக்கெட் வாங்கிக் கொண்டாள்.

"இருபத்தைந்து டாலர்! அக்கிரமம்!"

"இருபத்தைந்து டாலருக்கு எங்கே இடம் என்று பார்."

"முன் வரிசையிலா?"

"கடைசி வரிசை டிக்கெட்டைப் பார்த்தாள். "கம்ப்யூட்டர் அடித்துக் கொடுத்த டிக்கெட்! பாழாய்ப் போன கம்ப்யூட்டர் நுழையாத இடமே இல்லை – படுக்கை அறையைத் தவிர!"

"எட்டரை மணிவரை என்ன செய்வது என்று சிறிது யோசித்தார்கள். உலக டிரேட் சென்ட்டரில் பேஸ்மெண்ட் கடைகளில் அலைந்தார்கள். மாடிக்குப் போய் நியூயார்க் நகரத்தை உயரத்திலிருந்து பார்க்க விரும்பினான். முப்பதாவது மாடிக்குமேல் கட்டடத்தை மேகம் அணைத்துக் கொண்டிருந்தது. அங்கிருந்து ஒன்றும் தெரியாது என்ற ஒரு மக்டோனல்ட் கடைக்குப் போய் அவள் ஹாம்பர்கள் வாங்கிக் கொண்டாள்.

"உனக்கு...?"

"ஃப்ரெச் ஃப்ரை! ஹாட் சாக்லேட்"

"இதிலே எத்தனை காலம் ஜீவித்திருக்க முடியும்?"

"ஏன்?"

"எப்போது மாமிசம் சாப்பிடப் போகிறாய்?"

"இன்னும் தீர்மானிக்கவில்லை."

"வெஜிடேரியன்கள் எல்லாம் திறமைசாலிகள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்."

"எதில்?"

"படுக்கையில்!" என்றாள்.

ரகுபதி பேசாமல் ஹாட் சாக்லேட்டைக் கலக்கினான்.

"போன வருஷம் ஒரு சுவாமி இங்கு வந்து யோகாவைப் பற்றிப் பேசினார். பதஞ்சலி யோக சாஸ்திரத்தில் ஒருமுறை இருக்கிறதாம். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி அரை யோகிகள் முழுவதும் உறிஞ்சி விடுவார்களாம்..." 'பட்டஞ்சலி" என்று உச்சரித்தாள்.
"எதால்? என்று கேட்க விருப்பமின்றி லேசாகச் சிரித்தான். "இந்தியாவில் எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கின்றன. இது ஒன்றுதான் உனக்கு ஞாபகம் இருக்கிறது."

"இதுபற்றி கோஸ்லர்கூட எழுதியிருக்கிறார். எனக்கு அந்த வித்தையைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது."

"என்னால் செய்ய முடியாது" என்று நிதானமாகச் சொன்னான். அவள் பெரிசாகச் சிரித்தாள். பற்கள் அப்படி ஒன்றும் அழகாக இல்லை என்று தோன்றியது. அதிகம் இனிப்புகள் சாப்பிடுவதாலோ என்னவோ, மஞ்சளாக இருந்தது. அதை அவள் உணர்ந்து கொண்டது போல சட்டென்று சிரிப்பை நிறுத்திக் கொண்டு விட்டாள்.

தியேட்டருக்கு முக்கால் மணி நேரம் முன்பே சென்று விட்டார்கள். விண்டர் கார்டன் என்ற பெயரில் "கொஞ்சம் பழங்காலத்துக் கட்டடமாக இருக்கிறது" என்றான்.

"இங்குள்ள பெரும்பாலான தியேட்டர்கள் இப்படித்தான் இருக்கும். உள்ளே பார்; இன்னும் பழசு, ஒரு ஐந்தாறு தெருக்களிலேயே சுமார் நாற்பத்தைந்து தியேட்டர்கள் இருக்கின்றன. ஆஃப் ப்ராட்வே என்று அது ஒரு நாற்பது இருக்கும்."

"எல்லாவற்றிலும் நாடகங்கள்!"

'ஆம், உலகத்தில் உள்ள அத்தனை நாடகாசிரியர்களின் – நடிகர்களின் மெக்கா இது" என்று இயல்பாக பிளாட்பாரத்தில் உட்கார்ந்தாள். அதற்கேற்ப அவள் ஜீன்ஸ் அணிந்திருந்தது சௌகரியமாக இருந்தது.

ரகுபதி அவளுக்கு அருகில் உட்காரத் தயங்கினான் "ஏன் நிற்கிறாய்? உனக்கு அலைந்து கால் வலிக்கவில்லையா?"

"இல்லை" என்றான்.

"தெரிகிறது, நீ என் அருகில் உட்கார வெட்கப்படுகிறாய்."

"ரகுபதி மௌனமாக இருக்க "ஒரு பெண்ணின் பக்கத்தில் உட்கார்ந்ததே இல்லையா நீ? அவ்வளவு வர்ஜினா நீ?"

எதற்கு வம்பு என்று அவளருகில் உட்கார்ந்து கொண்டு விட்டான். "தட்ஸ் பெட்டர்" என்றாள். உன்னைப் பார்த்தால் ஒரு டாஸ்டாயவ்ஸ்கியன் டெஸபேர், தெரிகிறது" என்றாள்.

"கேலி செய்கிறாய், பரவயில்லை."

"ஒரு பெண்ணின் விரல்களைப் போல இருக்கின்றன" என்று அவன் விரல்களைப் பற்றி ஆராய்ந்து, "உனக்குக் கைரேகை தெரியுமோ?" என்றாள்.

இவ்வளவு கிட்டத்தில் ஒரு பெண் இருப்பது ரகுபதிக்கு அநியாயமாகப் பட்டது. கைகளைப் பின்னால் நீட்டிக்கொண்டு, சோம்பல் முறிக்கும் புலிபோல உடம்பை இழுத்தாள். ஒருகணம் அவள் சட்டை பிரிந்து வயிறு தெரிந்தது.

"உன் பேர் என்ன?"

"மேரி, மறந்துவிட்டாயா?"

"இல்லை! எனக்குத் தெரிந்த பெண் ஒருத்தி, நீ இப்போது சோம்பல் முறித்தது போல செய்த ஞாபகம் வந்தது."

"அவளைப் பற்றிச் சொல்லேன் பெயர் என்ன?"

"மதுமிதா!"

"மது...?"

"மிதா...!"

"என்ன அர்த்தம்?"

"மது என்றாள் கள், தேன் என்றெல்லாம் அர்த்தம், மிதா என்றால் என்ன என்று எனக்குத் தெரியும். சமஸ்கிருத வார்த்தையாக இருக்கலாம்."

"மதுமிதா!" என்று மறுபடியும் சொல்லிக் கொண்டு "அழகான பெயர்! பெயரிலேயே ஏதோ ஒரு சரசம் இருக்கிறது."

கொஞ்சநேரம் கழித்து "அவளுடன் படுத்திருக்கிறாயா?" என்றாள். (டிட் யூ லே ஹர்?)

"அங்கே அமெரிக்காவில் போல அத்தனை சுலபமில்லை!" என்றான். மணி அடிக்க, எல்லாரும் உள்ளே சென்றார்கள்?

**கொ**ஞ்சம் கொஞ்சம் சென்னை ம்யூஸியம் தியேட்டரை ஞாபகப்படுத்தும் வட்டமான அமைப்பு. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சீட்டு உச்சாணியில் இருந்தது. நெருக்கமான இருக்கைகள் முழங்கால் இடித்தது. டிராமாவுக்குப் புத்தகம் விற்றார்கள். அவர் உட்கார்ந்த இடத்திலிருந்து நடிகர்களின் தலைகள் ஏரோப்ளேனிலிருந்து பார்ப்பதுபோல இருக்கும் என்று தோன்றியது.

"இருபத்தைந்து டாலர்" என்றாள் மேரி. அரங்கம் இருட்டாக, சட்டென்று எல்லாரும் அமைதியாக விட்டார்கள். மூச்சுவிடும் சப்தம்கூடக் கேட்கும்போல இருந்தது.

நாடகத்தில் மூன்று பெண்கள்தான். வேறு நடிகர்களே இல்லை. ஒரு கன்னிமாடத்தின் மதர் சுப்பீரியர், அதில் ஒரு கன்னிகாஸ்திரீ, ஒரு மனோதத்துவ டாக்டர். அந்தக் கன்னிகை கர்ப்பமாகி விடுகிறாள். அதை மறைத்து வைத்து மறைத்து வைத்து, பிறந்த குழந்தையைக் கொன்று விடுகிறாள். அதை விசாரிக்க போலீஸ் இலாகா ஒரு மனோதத்துவ டாக்டரை அனுப்புகிறது. அவள் அதை விசாரிக்கும்போது அந்தப் பெண் ஒன்றுமே அறியாத சிறுகுழந்தைபோல் இருப்பதையும், அவளும்–ஏன், அந்த மதர் சுப்பீரியரும் கூடச் சேர்ந்து, ஆண் சேர்க்கை இல்லாமலே அவள் கர்ப்பமானதாக நம்புகிறார்கள். மனோதத்துவ டாக்டர் அந்தப் பெண்ணை ஹிப்னாடிஸத் தூக்கத்தில் ஆழ்த்தி அவள் சின்ன வயசின் நிகழ்ச்சிகளைக் கொண்டு வருகிறாள். அவள் அறியாமைக்கும் செய்கைக்கும் உண்மையான காரணம் சிறு வயதில் அவளுக்கு ஏற்பட்ட கொடுமைகளில் பொதிந்திருப்பதை அறிகிறாள்.

இரண்டரை மணி நேரம் ஒரே செட்டில் இடைவெளியில்லாது போடப்பட்ட அந்த நாடகம் முடிந்தது. வெளியே வந்தபோது "எப்படி?" என்று கேட்டாள் மேரி.

"என்னை மிகவும் பாதித்தது! இந்த மாதிரி நாடகங்களை எல்லாம் எப்படிப் போட அனுமதிக்கிறார்கள்? கத்தோலிக்கர்கள் எதிர்க்க மாட்டார்களா?"

"அதற்கெல்லாம் இந்த நாட்டில் கொஞ்சம் அதிகமாகவே சுதந்திரம்தான்."

"ஏன் என்னவோ போல இருக்கிறாய்?"

"அழுதேன்" என்றாள்.

"ஏன்?"

"அவளுடைய சின்ன வயது நிகழ்ச்சிகள். அதே மாதிரி என் அம்மாவும் எனக்குத் தொடையில் சிகரெட் நெருப்பால் சூடு போட்டிருக்கிறாள். தழும்பு இருக்கிறது."

"ஓ மைகாட்! எதற்கு?"

"நான் குழந்தையில் அழுததற்கு! எனக்கு லேசாக ஞாபகம் இருக்கிறது. அந்த ஒரு சம்பவம் என் மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்தது. இன்றைக்கு மறுபடி தலைகாட்டியது. இனி இந்த மாதிரி நாடகத்துக்கு போகவே கூடாது. தலைவலி" என்றாள்.

காரில் அவளுடன் ஏறி உட்கார்ந்ததும். “எங்கே போக வேண்டும்?" என்றாள்.

"ஸ்டாட்டன் ஐலண்ட். அவர் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்."

"அதற்கு முன் என் தழும்பைப் பார்க்கிறாயா?" என்றாள்.

## 8

ரகுபதி சற்றே பிரமித்துப் போய், "வேண்டாம், நீ சொன்னதை நான் நம்புகிறேன்" என்றான்.

அவள் சிரித்து "பயப்படாதே காட்டி விட மாட்டேன். என் அபார்ட்மெண்டுக்கு வந்துவிட்டுப் போயேன்" என்றாள்.

"அது எங்கிருக்கிறது?"

"கவலைப்படாமல் வா. என் இந்திய நண்பனை ஸ்காட்டன் ஐலண்டில் பத்திரமாக அவனுடைய கன்னிமை மாறாமல் சேர்ப்பித்துவிடுகிறேன்" என்றாள். காருக்குள் இருந்த ரேடியோ, 'க்ரேஸி எட்டி'யின் கடையில் அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்குள் ஆயிரக்கணக்கில் கம்ப்யூட்டர்கள் விலை போயாக வேண்டும் என்று பதறிப்போய் விளம்பரித்துக் கொண்டிருந்தது.

"மூச்சு விடாமல் பேசுகிறார்கள்" என்றாள்.

"இந்த ஸ்டேஷனில் கொஞ்சம் க்ளாஸிக்கல் பாட்டுக்கள் வரும். அதற்காக விளம்பரத்தை எல்லாம் சகித்துக் கொள்வேன்."

மேற்கு 47–வது தெரு வழியே செல்லும்போது "இந்த இடத்தைப் பற்றித் தெரியுமா?" என்றாள்.
"என்ன?"

"மாலை வேளைகளில் வந்து இங்கே பார்க்க வேண்டும். நிஜமாகவே இந்தத் தெரு முழுவதும் தங்கம் வைரத்தால் இழைத்திருக்கும். டைமண்ட் சென்டர்!"

"கடை கடையாக மெல்லிய ஒளியில் பாதுகாப்பில் ஜொலித்துக் கொண்டிருக்க, "இந்த இடத்தில் அமெரிக்காவில் எண்பது சதவிகிதம் தங்கம், வைரம் புழங்குகிறது. இங்கிருந்துதான் ரிச்சர்ட் எனக்கு ஒரு மோதிரம் வாங்கிக் கொடுத்தான்."

"உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?"

"ஏறக்குறைய!"

"புரியவில்லை"

"ரிச்சர்டும் நானும் கல்யாணம் செய்து கொள்ளலாமா என்று யோசித்துப் பார்த்தோம். நிச்சயதார்த்தம் கூட நடந்து விட்டது."

"கைவிட்டு விட்டானா?"

"இல்லை. நான்தான் கை விட்டு விட்டேன்."

"ஏன்?"

"அவனுக்கு நான் அலுத்து விட்டேன். எனக்கு அவன்! என்னை முன்னறையில் வைத்துக் கொண்டே மற்றொருத்தியை அவசரமாக முத்தமிட்டுக் கொண்டிருந்தான். எனக்கு அது சற்றுப் பிடிக்கவில்லை."

"இங்கு எல்லாரும் சகஜமாக முத்தமிட்டுக் கொள்கிறார்களே?"

"சகஜம்தான்! உடம்பில் ஒன்றுமில்லாமல் முத்தமிட்டுக் கொள்வது அவ்வளவு சகஜமில்லை" என்றாள்.

ரகுபதி பேசாமலிருந்தான்.

"என்ன மௌனமாகி விட்டாய்?"

"உங்கள் உறவின் அடையாளங்களே எனக்குப் புரியவில்லை."

"அடைவது என்பது எங்களுக்கு உச்சகட்டமல்ல. அடைகிற வரையில்தான் எதிர்பார்ப்பு, பரபரப்பு எல்லாம்! அடைந்த பின் அடுத்தது எதை அடைவது என்று மாறுதல் தேடுவதுதான் எங்கள் சித்தாந்தம்."

"இப்போது என்னை அடைவது என்பது இவளுக்குப் புதிய இச்சையாக இருக்குமோ?" என்று ரகு கவலைப்பட்டான். அலட்சியமாக கார் ஓட்டிக் கொண்டிருந்தவளைப் பக்கவாட்டில் பார்த்தான்.

அமெரிக்க உடம்பை ஒரு முறையாவது முழுமையாகப் பார்த்து விடலாம் என்றொரு சைத்தான் இச்சையைக் கஷ்டப்பட்டு விலக்கிக் கொண்டான்.

அவளுடைய அபார்ட்மெண்ட்டுக்கு லிஃப்டில் போகும்போது கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டு தன் தலைமயிரைச் சரி செய்து கொண்டாள். கைப்பையிலிருந்து சாவி எடுத்து கதவைத் திறந்து உடனே விளக்கைப் போட்டு ரெஃப்ரிஜிரேட்டரைத் திறந்து ஆராய்ந்து, "உனக்கு வெஜிட்டேரியனாக ஒன்றும் இல்லை. சீஸ்? யோகர்ட்? ஏதாவது வேணுமா?"

"ஒரு கப் பால் போதும்."

"ஸ்காட்ச் எதும் வேணுமா?"

"வேண்டாம்" என்று உட்கார்ந்தான். ஒரு சின்ன அறை அது. சோபாவை இழுத்துப் போட்டால் படுக்கை ஆகி விடும் என்று தோன்றியது அல்லது சுவருக்குள் எங்கேயாவது படுக்கை ஒளிந்து கொண்டிருக்குமோ என்னவோ! சின்னதாக டி.வி. வைத்திருந்தது. ஜப்பானிய ஹை-ஃபி செட் ஒன்று இருந்தது. அதனருகில் விவால்டி, பாஹ், ப்ராம்ஸ் என்று அழகழகான ஜாக்கெட்டுகளுடன் நிறைய எல்பி ரிக்கார்டுகள் இருந்தன. புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டு... பொதுவாக அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பிரயத்தனம் தெரிந்தது. ஓரத்தில் ஒரு கிச்சன் தெரிந்தது. மிக சுத்தமாக இருந்தது. ஓவனின் பற்பல ஸ்விட்சுகளைத் திருகி காபிக்குத் தயார் செய்தாள்.

"காபி வேண்டாம்!"

"எனக்கு வேண்டும். உட்கார். நன்றாக உட்கார்" என்று காபி கோப்பையுடன், அவனுக்கு நிறைய பாலுடன் வந்து அவனருகில் உட்கார்ந்தாள்.

"என் மேல் இன்னும் உனக்கு சந்தேகங்கள் இருக்கிறது. யூ திங் ஐம் எ ஃப்ளர்ட்?"

"இல்லை."

"நீ எப்போதும் என்னைப் பார்க்கும்போது கண்களில் ஒரு பயம் இருக்கிறது."

"அது பொதுவாக எல்லா அமெரிக்கர்களைப் பார்த்தாலுமே எனக்கு இருக்கிறது."

"அமெரிக்கர்களிடம் என்ன பயம்?"

"இன்ஃபீரியாரிட்டி."

"நாங்கள் அவ்வளவு மோசமில்லை, தெரியுமா?"

"மோசமில்லைதான்!" பாலில் கொஞ்சம் வனில்லா வாசனை வந்தது. "நைஸ் மில்க்!" என்றான்.



www.writersujatha.com

அவள் சிரித்ததில் புரையேறிக் கொண்டது. "பாலில் என்ன நைஸ்! கானில் வருவதை ஊற்றிக் கொடுத்தேன். எதற்காக என்னிடம் பாசாங்கு வார்த்தைகள்? என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய், சொல்லேன்?"

"சொல்லி விடட்டுமா"

"சொல்லேன்."

"கோபித்துக் கொள்ளமாட்டாயே?"
"இல்லை. சொல்லு."

"நீ தேடும் மாறுதல்களில் நானும் ஒருவன்."

சொல்லிவிட்டு 'ஏண்டா சொன்னோம்' என்றாகி விட்டது. அவள் முகம் சற்று மாறிவிட்டது. கொஞ்ச நேரம் கோபிப்பதா, சிரிப்பதா என்று தெரியாமல் தவிப்பது போலத் தோன்றியது. சட்டென்று சமாளித்துக் கொண்டு "நீ அப்படி நினைக்கிறாயா?"

"கேட்டாய். சொன்னேன்."

"உன்னைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று சொல்லவா?"

"சொல்லு, பரவாயில்லை."

"உன்னைப் பற்றி நான் ஏதும் நினைக்கவில்லை" என்று சட்டென்று சிரித்தாள். "உன்னை செக்ஸ் ரீதியாகப் பரிசோதித்துப் பார்ப்பது என்பது மிக சுலபம். எந்த ஆணும் லேசில் தவிர்க்க முடியாதபடியான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது ரொம்ப எளிது! இப்போது நான் என் மேல் சட்டையை நீக்கினால் உன்னால் சும்மா இருக்க முடியுமா?"

"இருக்க முடியாதுதான். ஆனால் நமக்குள் சில பாசாங்குகள், சில கலாசார வித்தியாசங்கள் இருப்பதால் பெரும்பாலான சமயங்களில் அவ்வாறு நிகழாது என்றே நான் எதிர்பார்க்கிறேன்."

"அவ்வாறு நிகழ்ந்தால்?"

"என் உணர்ச்சிகளின் பேச்சைக் கேட்க வேண்டி வரும்.'

அவள் தன் சட்டையின் முதல் பட்டனை மெல்ல, வேண்டுமென்றே மெல்ல, கழற்றினாள். ரகுபதிக்கு உடல் முழுவதும் சில்லென்று ஆகிவிட, "நோ மேரி, வேண்டாம்" என்றான். அவள் எழுந்து அவனருகில் மெல்ல வந்து அப்படியே ஸ்தம்பித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தை இரண்டு கைகளாலும் தாங்கிக் கொண்டு "எழுந்திரு" என்றாள்.

"எதற்கு?"

"உன் வீட்டில் உன்னைக் கொண்டு போய் விடுவதற்கு. முட்டாளே! வேறு என்ன நினைத்தாய்?" ரகு பதிலுக்கு சட்டென்று விளக்கணைத்தது போல் நரம்பின் எல்லாத் துடிப்புகளும் இளகிப் போயின. காரில் மௌனமாக வந்தாள். "உனக்கு இடம் கொடுத்து சோறு போடும் மகானுபாவரைப் பகல் வெளிச்சத்தில் பார்க்க வேண்டும். இப்போது போய் வருகிறேன். குட் நைட்" என்று அவனை வீட்டு வாசலிலேயே

விட்டுவிட்டுப் புறப்பட்டாள். "மேரி, மெதுவாகப் போ" என்று கத்தியது அவள் காதில் விழுவதற்குள் வெரஸோனா பாலம் போயிருப்பாள் என்று தோன்றியது.

இத்தனை லேட்டாக கதவைத் தட்டுவதற்குத் தயக்கமாக இருந்தது. மோகன்ராம் வந்து கதவைத் திறந்தவுடன் "ஸார், மன்னிச்சுக்குங்க, ரொம்ப லேட்டாயி..."

"ஷ்ஷ்ஷ்" என்று அவனை அதட்டினார்.

"ஏன் ஸார்?"

"குழந்தைகள் வந்திருக்குது. தூங்குது! மெல்லப் பேசு."

"எப்ப வந்தாங்க?" என்றான் மெல்ல.

"சாயங்காலம். உனக்காகக் காத்திருந்தேன். சாப்பிட்டியா?"

"ஆச்சு ஸார்"

"எங்க போயிருந்தே."

"ப்ராட்வே ப்ளே."

"யார் கூட?"

"மேரி எமர்ஸன்!"

"போய்ப் படு" என்றார். அவனை சீக்கிரத்தில் வெட்டி விட்டாற்போல் தோன்றியது. அவன் மேல் சற்று ஆயாசம் என்று கூடத் தோன்றியது. இத்தனை தாமதமாக வருவதிலிருந்து அமெரிக்காவுக்கு உண்டான அர்த்தங்கள் பண்ணிக்கொண்டு விட்டார் போலும். "ஸார், அங்கே ஒண்ணும் செய்யலை. சும்மா பாட்டில் பால் மட்டும்தான் சாப்ட்டுட்டு வந்தேன்' என்று சொல்ல விரும்பினான்.

"குட் நைட்! என்று விளக்கை அணைத்தார். "டி.வி. போட்டுக் கிட்டா சத்தம் குறைச்சலா வையி!"

படுக்கையில் வந்து படுத்தபோது எமர்ஸன் மாதிரி ஓர் அபார்ட்மெண்ட் கிடைத்தால் போய்விட வேண்டும் என்று தீர்மானித்தான். வாடகை எப்படி இருக்குமோ? மோகன்ராமுக்கு என்மேல் கோபமில்லை. வந்து கொஞ்ச நாளாகிவிட்ட பழக்கத்தால் அலுத்துவிட்டது. நாளைக்கு அவர் குழந்தைகளுக்கு எதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும். விளையாட்டுக் காட்ட வேண்டும், ஏதாவது அவர் மகிழும்படியாகச் செய்ய வேண்டும். அவருக்கு என்மேல் பொறாமைகூட இருக்கலாம். டி.வி. போட்டுக் கொள்ளவில்லை. பேசாமல் படுத்துக்கொண்டு விட்டான். மேரி பட்டனைத் தளர்த்தியபோது லேசாக அவள் மார்பின் சிவப்பு நிறம் தெரிந்தது. அவனைக் கிறக்கத்தில் ஆழ்த்தியது. மேரிக்குப் பதில் சட்டென்று மதுமிதா தோன்ற விளக்கைப் போட்டுக் கொண்டு சம்பந்தமே இல்லாமல் புத்தகத்தைத் தேடினான். மோகன் ராமின் 'நேஷனல் ஜியாக்ராஃபிக்'தான் அகப்பட்டது. அதைப் புரட்டினாலும் பப்புவா–ந்யூகினி பிரதேசத்தில் மார்பில் ஏதும் இல்லாத பழங்குடிப் பெண்கள் கிராப் வைத்துக் கொண்டு சிரித்துக்கொண்டிருந்தார்கள். மூடி வைத்து, திருவாசகம் சொல்லிப் பார்த்தான். பாதியில் மறந்து போய்விட்டது... கொஞ்ச நேரத்தில் தூங்கி விட்டான்.

"மிஸ்டர் ரகுபட்டி! உங்களைப் ப்ரொபஸர் ஹாமில்டன் கூப்பிடுகிறார்."



www.writersujatha.com

துணுக்குற்று பேனாவை மூடிவைத்து விட்டு வகுப்பறையிலிருந்து எழுந்து நடந்தான். மேரி முன் ஸீட்டிலிருந்து "பெஸ்ட் ஆஃப் லக்!" எதற்கு சொல்கிறாள் என்று தெரியவில்லை.

ஹாமில்டன் சிம்ஸன்ஸ் லைப்ரரி கட்டடத்தின் பிரம்மாண்டமான மத்திய ஹாலில் ஓரத்தில் தனியாக கண்ணாடிக்கு வெளியே நகரும் கப்பல்களை நோக்கிக் கொண்டு பைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவர் பின் போய் நின்று "ஸார்!" என்றான். சற்று நேரம் பொறுத்துத்தான் திரும்பினார். "ஸிட் டவுன்!" என்றார். சற்று பயத்துடன் நாற்காலி விளிம்பில் உட்கார, ஹாமில்டன் தன் புகைக்குழாயை ரொம்ப சிரத்தையுடன் கெட்டித்தார். ரகுபதிக்கு அந்த ஹாலே பிரமிப்பும் பயமும் தந்தது. சிம்ஸன் என்கிற ஒருவர், அதிகம் படிக்காத பணக்காரர் அன்பளிப்பாகத் தந்த கட்டடம் அது. சிம்ஸன் மார்பு மட்டும் வெண்கலச் சிலையாக ரகுபதியைத் துயரமற்ற கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தார். இங்கிருந்து வாசகசாலை தெரிந்தது. அதில் ரோஸன், மக்கயர் இருவரும் தெரிந்தார்கள். அவர்கள் இந்தப் பக்கம் அவனை ஓரக் கண்ணால் பார்ப்பது போல இருந்தது.

"ரகுபட்டி, உன் ரிப்போர்ட்டை நாங்கள் படித்தோம்."

மௌனம்.

"நீ எழுதின எல்லா ரிப்போர்ட்களையும் படித்தோம்."

மௌனம்.

நீலத்தில் புகை கிளப்பிவிட்டு "உன்னால் அஸ்ட்ரா கம்பெனிக்கு ஏழு மில்லியன் டாலர் நஷ்டம்" என்று அவனை நிமிர்ந்து பார்த்தார்.

ரகுபதி அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

"இது சிரிக்கிற காரியமில்லை. உனக்கு டிகிரி கொடுத்து அனுப்பினால், நாளைக்கு நிஜமாகவே ஓர் அஸ்ட்ரா கம்பெனியை மூழ்கடித்து விடுவாய்." மறுபடி திரும்பி கண்ணாடி வழியாகக் கப்பல் பார்த்தார். "சொல்லு! என்ன ஆயிற்று உனக்கு? நாங்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் புரியவில்லையா?"

"நீங்கள் சொல்லிக் கொடுக்கிறீர்களா! அஸைன்மெண்ட் அஸைன்மெண்ட் என்று உயிரை வாங்கத் தானே உங்களுக்குக்கெல்லாம் நேரம் சரியாக இருக்கிறது?" என்று சொல்வதற்குப் பதில் "அதெல்லாம் இல்லை சார்" என்றான்.

"உன் கிரேடு, ஸெலக்ஷன் எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது! ஏன்? உனக்கு இந்த எம்.பி.ஏ. பாடத்தில் இஷ்டமில்லையா? இஷ்டமில்லையென்றால் ஏன் வர வேண்டும்? பேசாமல் கம்ப்யூட்டர் ஸைன்ஸ், எலக்ட்ரானிக்ஸ் எதாவது செய்யலாமில்லையா? இந்தப் பள்ளிக்கூடத்தில் நாங்கள் குதிரைக்குத் தண்ணீர்தான் காட்டுவோம். அதைக் குடிக்க வைக்க முடியாது. உனக்கு இதில் ஆர்வம் இல்லையென்றால் இப்போதுகூட தாமதமாகி விடவில்லை வேறு பாடம் எடுத்துப் படிக்க வேறு கல்லூரிக்குப் போ!"

"இல்லை ஸார்! மன்னித்து விடுங்கள்" என்றான்.

சட்டென்று எங்கே இருந்து என்று தெரியவில்லை. அந்தக் காகிதங்களை எடுத்தார். "இதோ உன் அஸைன்மெண்ட் ரிப்போர்ட்" என்று அவன் முன் விசிறினார். காகிதங்கள் பாதி அவன் கையில் சிக்கின. மீதி தரையில் உதிர்ந்தன. அவர் அதை கவனித்ததாகத்

தெரியவில்லை. "இதை எடுத்துக் கொண்டு போய் இன்னும் இரண்டு நாளைக்குள் மற்றொரு ரிப்போர்ட் எழுதிக் கொண்டு வா. அதை ரிவிஷன் கமிட்டிக்குக் கொடுக்க வேண்டும். அப்புறம் ஓர் இண்டர்வ்யூ இருக்கும். அதை..."

"சரி ஸார்" என்று காகிதங்களைப் பொறுக்கிக் கொண்டான்.

"மறு ரிப்போர்ட்டையும் இண்டர்வ்யூவையும் பொறுத்தது உன் எதிர்காலம்!"

"ஸார்!"

"சரியாகச் செய்யவில்லையெனில் உன்னைக் கல்லூரியிலிருந்து நீக்கிவிடத் தயங்க மாட்டோம்."

## 9

**மோ**கன்ராமின் குழந்தைகள், செல்வம், நீனாவுடன் காலைப்பொழுதைப் போக்கியதில் காலேஜ் கவலை தற்சமயத்துக்கு மறந்து போயிருந்தது. செல்வம் மூத்தவன். பெயரைத் தவிர இந்தியத்தனம் எதுவுமில்லாமல் ஐந்து வயசு அமெரிக்கக் குழந்தை போலவே இருந்தான். நீனா கொஞ்சம் காபி கலந்தாற் போல ஒரு ஷேடு. கறுப்பாக அப்பாவைப் போல முக ஜாடையுடன் விளையாடிக் கொண்டிருந்தது. சுறுசுறுப்பான குழந்தைகள். ஒரு நிமிஷம் சும்மா இருக்காமல் அவ்வப்போது அபாயகரமான விஷயங்களில் கவனமாக வீட்டைத் தலைகீழாகப் புரட்டிக் கொண்டிருந்தன. மோகன்ராம் ஏராளமான பொம்மைகள் வாங்கி வைத்திருந்தார். அத்தனை பொம்மைகளையும் அக்கக்காகப் பிரித்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்க ஆவலாயிருந்தான் செல்வம். எதிர்வீட்டு, பக்கத்து வீட்டு கிழவர்களையெல்லாம் "ஹாய் க்ரிஸ்! ஹாய் ஸாம்!" என்று பெரிய மனிதன் போல விசாரித்துக் கொண்டிருந்தான். நீனா அவன் நிழலிலேயே அலைந்து கொண்டிருந்தது.

மோகன்ராம் "வாட் டு யூ திங்க் ஆஃப் தெம்?" என்றார்.

"லவ்லி சில்ட்ரன்" என்றான்.

"வாரம் தவறாமல் அவர்கள் அம்மாவிடம் அடம் பிடித்து வந்து விடுவார்கள்."

"வாரத்தின் மற்ற நாள்களில் எப்படிப் பிரிந்து இருக்கிறீர்கள்?"

"என்ன செய்வது? கோர்ட் ஆர்டர் அப்படி! இந்த நாட்டின் டிவோர்ஸ் விதிகள் கணவர்களுக்குப் பாரபட்சமானவை."

குப்புற அடித்தும் ஓடிப் பிடித்துக் கொண்டும், தலையணை சட்டை போட்டுக் கொண்டும் விளையாடும் சந்தோஷப் பறவைகள். "அவர்களுக்குத் தெரியுமா?" என்றான்.

"ஏதோ அவர்களுடைய சின்ன வயசு லாஜிக்படி தெரியும். சரியாகப் புரியாமல் தெரியும்... ஒரு முறை பையன் என்னைக் கேட்டான். 'நீயும் அம்மாவும் ஏன் ஒரே வீட்டில் இல்லை' என்று "

"என்ன சொன்னீர்கள்?"

"உண்மையைச் சொல்லி விட்டேன். 'அம்மாவும் அப்பாவும் சேர்ந்து வாழ முடியாது. இரண்டு பேருக்கும் அபிப்ராய பேதங்கள் இருக்கின்றன" என்று."

"அது அவனுக்குப் புரியுமா?"

"புரிகிறதோ இல்லையோ–அவர்களைத் தயார்படுத்த உண்மையை முதலிலிருந்தே சொல்லிவிட வேண்டும். மெல்ல மெல்ல அவர்களுக்குப் புரிய ஆரம்பித்துவிடும்."

"நீங்கள் உங்கள் மனைவியுடன் மறுபடி சேர்ந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறதா?"

"இல்லவே இல்லை!"
"வாட் வெண்ட் ராங்?" என்றான்.

"எவ்ரிதிங்! முதலில் அந்தக் கல்யாணமே தப்பு. காதல் என்னும் ஆவேசம் மற்ற எத்தனையோ விஷயங்களைப் பூசி மழுப்பி விடுகிறது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மற்ற முரண்பாடுகள் மேலுக்கு வருகின்றன. ப்ச்! அதைப் பற்றி என்ன பேச்சு?"

"இந்தக் குழந்தைகளை நினைத்தால்தான் எனக்கு வயிற்றைக் கலக்குகிறது."

"அமெரிக்காவில பிறந்ததற்கு அவர்கள் கட்ட வேண்டிய அபராதம்! பழகிப் போய் விடுவார்கள். மற்ற ஐந்து நாள்கள் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நான் கேட்பதே இல்லை. ஆனால் வெள்ளிக்கிழமை இரவு அவர்கள் இங்கு வர வில்லை என்றால் கோபத்தில் தாறுமாறாக அவளைத் திட்டி விடுவேன்."

நீனா ஓடிவந்து முழங்காலைக் கட்டிக்கொண்டு செல்வத்தைப் பற்றி ஏதோ புகார் செய்தாள். அவள் ஆங்கிலம் ரகுபதிக்குப் புரியவில்லை. குழந்தைகள் இரண்டும் நல்ல புஷ்டியாக இருந்தன. நீனாவின் கன்னத்தில் சின்னதாகக் காயம் இருந்தது.

குழந்தைகளை அழைத்துக் கொண்டு எல்லாரும் சென்ட்ரல் பார்க்கில் கரௌஸில் பெவிலியனுக்குப் போனார்கள். மோகன்ராம் சின்னக் குழந்தை போல பழங்காலத்து மரக்குதிரைகளின் முதுகில் உட்கார்ந்து கொண்டு சுற்றினார். அவர்களுடன் கோமாளித் தொப்பிகள் அணிந்தார். க்ரூய்ஸ் லைனின் ஏறிக்கொண்டு போட்டில் மன்ஹாட்டன் தீவை மூன்று மணிநேரம் சுற்றி வந்தார்கள். பெண்ணுக்குத் தலை வாரிவிட்டார். சூசூ போவதற்கு உதவி செய்தார். பையனுடன் பெரியவர்கள் பேச்செல்லாம் பேசினார். பொதுவாகவே இரண்டு குழந்தைகளும் வயசுக்கு அதிகமாக முதிர்ச்சியுடன்தான் இருந்தார்கள். அதிகமான விஷயங்கள், அதிகமான தீனி, அதிகமான ஊட்டம், பருமன். இந்தியாவில் இந்தக் குழந்தைகளுக்கு எட்டு, ஒன்பது என்று வயசிருக்கும் போலத் தோன்றியது. நீனாவைத் தூக்கி மேலே போட்டுப் பிடிக்க ரகு சிரமப்பட்டான்.

குழந்தைகளை அழைத்துப் போக அவர்களின் தாய் வருவாள் என்று எதிர்பார்த்தான். பதிலாக அவள் சிநேகிதிதான் வந்திருக்கிறாள். அந்தக் காட்சி ரகுவின் நெஞ்சை உருக்கியது. குழந்தைகள் இருவரும் அப்பாவுடன் பசை போட்டாற் போல் ஒட்டிக்கொண்டு "டாடி டாடி ஐ டோன் வான்கோ' என்று கண்களில் கண்ணீருடன் அலறின. அவர்களை ஏறக்குறையப் பிடுங்கிக்கொண்டு செல்லும்படியாக இருந்தது.

"பரிதாபம் ஸார். பெரியவர்கள் தப்பு செய்ததற்கு இவர்கள் மனசை எப்படித் தாக்கறோம் பாருங்க."

"இதை எல்லாம் ஏத்துக்க பக்குவம் வந்துரும்!"

"இத்தனை சின்ன வயசிலா? போங்க ஸார்?" பேசாம உங்க ஒய்ஃப்கூட சமாதானமாயிருங்க குழந்தைகளுக்காக!"

"அதெல்லாம் எப்பவோ போயிருச்சு! அவ மறு கல்யாணம் செய்துக்கப் போறா. நானும் அதை யோசிச்சுக்கிட்டு இருக்கேன். எதாவது நல்ல இந்திய பெண்ணா இருந்ததுன்னா ஸஜஸ்ட் பண்ணேன். ஹோம்லியா, இங்கிலீஷ் தெரியாம, வீட்ட விட்டு வெளிய போகாம!"

"இன் அதர் வோர்ட்ஸ் யூ வான் பேபி ஸிட்டர்!"

பிள்ளைகள் போனதும் மோகன்ராம் எல்லாருக்கும் போய் காட்டமாக ஸ்காட்ச் ஊற்றிக் கொண்டு சோபாவில் உட்கார்ந்து தொடர்ந்து குடித்துக் கொண்டிருந்தார். ராத்திரி படுக்கப் போகுமுன் அவர் தள்ளாடித் தள்ளாடிச் செல்ல கண்களில் கண்ணீர் கரையிட்டிருந்ததைப் பார்த்தான். அவரைச் சிரமப்பட்டு படுக்கைக்கு அழைத்து சென்றான். காலணிகளைக் கழற்றி அவரைப் படுக்க வைத்தான். படுக்கைக்கு அருகில் செல்வம், நீனாவின் போட்டோ இருந்தது. அலமாரியில் ஏகப்பட்ட மாத்திரைகள் இருந்தன. ரகுபதிக்குப் பயமாக இருந்தது.

"**ஹா**மில்டன் என்ன சொன்னார்? என்றாள் மேரி. நியூயார்க்கில் அந்த தினம் பகல் வேளையில் மேக மூட்டமாக இருக்க, காற்று வீச, நினைத்து நினைத்து நச நச என்று மழை பெய்ய, குளிர் தாங்கும்படியாக கோட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். டிசம்பர் வந்து விட்டால் உறைந்துபோய் விடுவான் – அதாவது டிசம்பர் வரை இங்கு தாக்குப்பிடிக்க முடிந்தால்.

"என் ரிப்போர்ட்கள் எதுவுமே அவருக்குத் திருப்தி தரவில்லையாம். மற்றொரு சந்தர்ப்பம் தந்திருக்கிறார். இந்த முறை சரியில்லை என்றால், பள்ளியை விடடுத் துரத்தி விடுவார்களாம். மேரி! அவ்வாறு நிஜமாகவே செய்வார்களா?"

"நிச்சயம்! தயக்கமே இல்லாமல் செய்வார்கள்" என்றாள்.

"உனக்கு என்ன சொன்னார்?"

"என்னை இன்னும் அழைக்கவில்லை. ஆனால் ஒரு பெண் என்பதால் எனக்கு சில சலுகைகள் இருக்கின்றன. ஹாமில்டன் என்னைப் பார்க்கிற பார்வையிலேயே தெரிந்து போகிறது."

"பெண் ப்ரொபஸர் யாரும் இல்லையா?" என்றான் ரகு.

மேரி சிரித்து, "என்னை செய்வதாய் உத்தேசம்?"

"என்ன செய்ய? ரிப்போர்ட்டை இன்னும் கொஞ்சம் ஒழுங்காகப் படித்துத் திருப்பி எழுதிக் கொடுக்க வேண்டும்."

"போன தடவை எழுதிக் கொடுத்ததற்கு ஏறுமாறாக எழுதிக் கொடுத்துப்பார்."

"மேரி! நிச்சயமாகவே துரத்தி விடுவார்களா?"

"ஆம் தயங்கவே மாட்டார்கள்!"

"அப்புறம் எனக்கு என்ன ஆவது?"

"திரும்ப இந்தியா போவது" என்றாள்.



www.writersujatha.com

www.writersujatha.com

"இத்தனை செலவழித்த பிறகா? என் அப்பா உயிரை விட்டு விடுவார்! அவருடைய சேமிப்பு எல்லாவற்றையும் என் மேல் முதலீடு செய்திருக்கிறார்."

"அதை டௌரியாக வாங்கிவிட்டால் போகிறது. உங்கள் ஊரில்தான் அது அதிகமாமே!"

"என் தந்தை அதெல்லாம் வாங்குற ஜாதியில்லை."

"எதற்காக இருண்ட பகுதியையே நினைத்துப் பார்க்கிறாய்? இரண்டாம் முறை ரிப்போர்ட் எழுதிவிட்டு அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாகவே எண்ணிக் கொள்ளேன்!"

"இண்டர்வ்யூ வேறு இருக்கிறது."

"அதில் உன் அப்பா பட்டிருக்கிற கஷ்டங்களை எல்லாம் சொல்லிப்பார்."

கேலி செய்கிறாளா, நிஜமாகப் பேசுகிறாளா?

போகிற போக்கில் பேசிக்கொண்டே சென்றாள்.

"இன்றிலிருந்து மிகத் தீவிரமாக ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணிநேரம் படிப்பதாகத் தீர்மானித்து விட்டேன். எப்படியாவது இதைச் சமாளித்து விட வேண்டும்."

"தட்ஸ் தி ஸ்பிரிட்! வைராக்கியம் இருந்தால் போதும். என் அபார்ட்மெண்டுக்கு வருகிறாயா, இரண்டு பேரும் சேர்ந்து படிக்கலாம்?"

"உன் அப்பார்ட்மெண்ட்டுக்கு வந்தால் என்னால் படிக்க முடியாது."

"ஏன்?"

"ஒன்றுமே தெரியாதவன் போல பாசாங்கு பண்ணிக்கொண்டு, நீ கேட்கும் கேள்விகள் எல்லாம் மிகவும் ரசிக்கும்படியாக இருக்கின்றன."

"அப்படியா?"

"இந்த 'அப்படியா'வும் அதில் ஒன்று."

www.writersujatha.com

மேரி அவனைச் சற்று நேரம் கண் கொட்டாமல் பார்த்தாள். "உன்னிடம் நான் தேடுவது என்ன என்று அன்று நீ சரியாகவே சொல்லி விட்டாய். எனக்கு உன்னிடம் ஓர் ஆர்வம் இருப்பது போல, உனக்கு என்னிடம் இருந்ததாக வேண்டும். இல்லையெனில் நீ ஆண் பிள்ளை இல்லை."

"நான் ஆண்பிள்ளைதான்" என்றான்.

"இதோ பார்! நமக்குள் காதல் வேண்டாம். காதல் என்பதெல்லாம் ரொம்ப விலை உயர்ந்த, பணம் அதிகம் செலவாகும் விஷயம். அதற்கு அங்கே இங்கே அழைத்துப் போக வேண்டும். கடிதங்கள் கவிதைகள் எல்லாம் எழுதியாக வேண்டும். பெருமூச்சுக்கள் விட வேண்டும். உறக்கம் இழக்க வேண்டும். இதெல்லாம் தொந்தரவு 'லாஸ்ட் டாங்கோ இன் பாரிஸ்' பார்த்தாயா?"

"இல்லை. ஏன்?"

"அதைப் பார்க்காவிட்டால் நான் சொல்வது புரியாது உனக்கு. பரவாயில்லை சொல்லிப் பார்க்கிறேன். காதல், கல்யாணம், இந்தக் கட்டாயங்கள், தடைகள் இல்லாமல் ஓர் ஆணும் பெண்ணும் சிநேகிதமா இருக்க முடியும் என்று நம்புகிறாயா?"

"எதுவரை அந்த உறவு நீடிக்க முடியும்?"

"ஒருவருக்கு ஒருவர் அலுக்கும் வரை. ஒரு ரெயில்வே கம்பார்ட்மெண்ட் போன்று ஓர் உறவு... எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. உனக்கு என்னை. இரண்டு பேரும் கொஞ்சம் காலம் சேர்ந்து இருந்து பார்க்கலாமே!"

"இன்ட்ரஸ்டிங்" என்றான்.

"சீக்கிரம் யோசித்துச் சொல்லு. என் மனசு மாறுவதற்குள்."

"முதலில் இந்தத் தலைவலியை ஒழித்து விட்டு வருகிறேன். ஒரு வாரமாவது தீவிரமாக, கடுமையாய் படித்து விட்டு முதலில் என்னை ஸ்திரப்படுத்திக் கொள்கிறேன் என்ன?"

"சரி, பெஸ்ட் ஆஃப் லக்?" என்றாள் மேரி.

அவள் நடந்து சென்று கோட்டை முழுவதும் மூடிக்கொண்டு லைட்ரரி கட்டடத்தை விட்டு, குளிரில் சென்று மஞ்சில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தபோது ரகு ஒரு கணம் 'ஏன் கூடாது' என்று யோசித்தான். கடமை ஞாபகம் வந்தது.

டிம்; இரண்டாவது வருஷ மாணவன், சொன்னது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

"முதல் வருஷம் அப்படித்தான் இருக்கும். தரையில வைத்துத் தேய்த்து விடுவார்கள். அவர்கள் திரும்ப செய்யச் சொல்வதையெல்லாம் முறையாகச் செய்துவிடு. வெளியில் அனுப்புவது என்பது மிகத் தீவிரமான தண்டனை. ஓர் ஆள் மிக மிக மோசமாக இருந்தால்தான் வெளியே அனுப்புவார்கள். கவலைப்படாதே."

முதலில் தன்னுடைய ரிப்போர்ட்டை எடுத்துப் படித்தான். அதில் என்ன தப்பு என்று அலச விரும்பினான். கொஞ்சம் கால வித்தியாசத்தில் அதைப் படித்துப் பார்த்ததில் அதில் உள்ள தவறுகள் சுலபமாகப் புரிந்தன. அந்தக் கற்பனை கம்பெனிக்கு ரிஸர்ச் பண்ணுவதற்காக ஒரு லட்சத்து அம்பதாயிரம் டாலர் கட்டியிருந்தான். அந்தச் செலவை இருபத்தைந்தாயிரமாகக் குறைக்க முடியும் என்று தோன்றியது. மற்றும் உற்பத்திப் பகுதியில் சில பகுதிகளை ஆட்டோமெஷன் செய்வதன் மூலம் தொண்ணூறு பேரை நீக்க முடிந்தது. அசெம்பிளியிலிருந்து இன்னும் இருபது பேரை நீக்கினான். போட்டிக்கார கம்பெனிக்கும் இவனுக்கும் விற்பனை விலையில் தொண்ணூறு சென்ட் வித்தியாசம் இருப்பதை உணர்ந்தான்.

இதை எப்படிக் குறைக்கலாம். போட்டிக்காரனுக்குப் பத்து சென்ட் குறைவாக விற்றால் என்ன ஆகும் என்று கணக்கிட்டுப் பார்த்தான். இரண்டு விதமான கம்ப்யூட்டர் மாடல் தயாரித்துப் பார்க்க, இ.டி.பிக்கு சென்று கம்ப்யூட்டர் நேரத்துக்கு மனுப்போட்டான்.

ரகுபதிக்கு இந்த விளையாட்டில் ஈடுபாடு வந்துவிட்டது. பஸ்ஸில் செல்லும்போது ஃபெர்ரியில் ஸ்டாச்சு ஆஃப் லிபர்ட்டியைத் தூரத்தில் பார்த்துக்கொண்டே நகரும் போது, வீட்டில் காபிக்கு கெட்டில் வைக்கும் போதெல்லாம் தன்னுடைய கற்பனை கார்ப்பரேஷனில் நல்வாழ்வைப் பற்றியே சிந்தித்தான். ரிப்போர்ட்டை மறுபடி

எழுதுவதற்காக காகிதங்கள், பேனா, பென்சில் கோக் சகிதமாக உட்கார்ந்த போது டெலிபோன் மணி அடித்தது. மோகன்ராம் இல்லை. அவர் எங்கேயோ போவதாகச் சொல்லி வைத்திருந்த குறிப்பை மேஜை மேல் தேடிக் கொண்டே டெலிபோனை எடுத்தான்.

"மே ஐ ஸ்பீக்டு ரகுபதி, ஹி இஸ் ஃபாரம் பாபநாசம்?"

"எஸ்! திஸ் இஸ் ரகுபதி ஸ்பிக்கிங்! **ஹூ** இஸ் திஸ்?"
"ரகு, என்னைத் தெரியவில்லை? மது பேசறேன்!"

"மது? யூ மீன் மதுமிதா?"

"ஆமாம், எப்படி இருக்கே? எப்படி கண்டுபிடிச்சேன் பாரு! ஹௌ ஆர் யூ ரகு?"

பிரமித்துப் போய், பேச வராமல் தயங்கினான்.

"ஹலோ! ஆர் யூ தேர்?'

"எப்படி, எப்படி நான் இங்க வந்திருக்கிறதைக் கண்டுபிடிச்சே?"

"அதெல்லாம் அப்புறம் சொல்றேன். நியுஜெர்ஸி வாயேன். வரியா? வில் பி ஹாப்பி டு ஸீ யூ!"

"இல்லை மது. எனக்குப் பரீட்சை இருக்கு. இண்டர்வ்யூ இருக்கு."

"நான்சென்ஸ் எனக்கு போர் அடிக்குது! ராதா கூட சொல்லித்து! அட்ரஸ் எழுதிக்க ஆர், ஐ'ல் டூ திஸ்! நீ எங்க இருக்க?"

"ஸ்டாட்டன் ஐலண்டில!"

"அட்ரஸ் சொல்லு."

"எதுக்கு?"

"நாங்க வந்து உன்னை பிக்–அப் பண்ணிக்கிறோம். இன்னிக்கு சாயங்காலம்!"

"இல்லை மது. ஸம் அதர் டைம்! எனக்கு ரொம்ப முக்கியமான இண்டர்வ்யூ இருக்கு, ரிப்போர்ட் ஒண்ணு எழுதியே ஆகணும்" என்று சொல்லுவதற்குப் பதில் "அட்ரஸ் எழுதிக்க" என்றான்.

## 10

ரகுபதிக்கு என்ன செய்கிறோம், அதன் விளைவு என்ன ஆகும் என்கிற எண்ணமே இல்லாமல் தன் வாழ்நாள் முழுவதும் போன் வரக் காத்திருந்தது போல மதுமிதா 'வா' என்றதும் 'சித்தம் மகாராணி' என்று உடனே விலாசத்தைக் கொடுத்துவிட்டுக் காத்திருப்பதை நினைத்து வியந்தான். அதற்கு அர்த்தம் அவன் ரத்தத்திலிருந்து மதுமிதா மோகம் இன்னும் விலகவில்லை என்பதே! வெளியுலகத்துக்குத்தான் அவள்

கல்யாணமானவள். இன்னும் அவன் அடிமனதில் அவள் காதலி. எஜமானி, ஆணையிடும் ராணி.

அவளுக்கு எப்படி என் டெலிபோன் நம்பர் தெரிந்திருக்கும்? அதுவே அவனுக்குப் புரியவில்லை. அதிலேயே விதியின் விளையாட்டு இருப்பதாகப் பட்டது. என்ன செய்வான்? அவன் விதியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறான்! ரகுபதியால் தன்னிச்சையாக ஆகக் கூடியது எதும் இல்லை. செலுத்தப்படுகிறான். இப்படியெல்லாம் தன் செய்கைக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டான். மோகன்ராம் "என்னப்பா குஷியா இருக்க?" என்று கேட்க.

"ஒண்ணும் இல்லை ஸார்.

"இல்லை. உன்னப் பார்த்தா தேன் குடிச்ச நரி மாதிரி இருக்க. காலேஜ்ல எதாவது மெடல் கொடுத்தாங்களா?"

"இல்லை ஸார் துரத்தி விடாம இருந்தாலே பெரிசாயிடும் போல இருக்கே?"

"இல்லை வேற எதாவதா? அமெரிக்கப் பொண்ணுகிட்ட ஏதாவது விஷமம் பண்ணியா? ஜாக்கிரதையா இருந்துக்க. ஏதாவது வம்பில மாட்டிக்கிட்ட?"

"சேச்சே. அதெல்லாம் இல்லை ஸார்."

"என்னவோ இருக்குது."

இருக்கிறது. சொல்ல விருப்பப்படவில்லை. தப்பாக எடுத்துக் கொண்டு அப்பாவுக்கு நீட்டி முழக்கிக் கடிதம் எழுதி விடுவார்.

"ஸார், நீங்க சாயங்காலம் திரும்பிவர லேட்டாகுமா?"

"திரும்பி, வர லேட்டாகணும்னு கேக்கறாப்பல இருக்கே? என்ன, யாரையாவது கூப்பிட்டிருக்கியா?"

"சேசே, என்ன ஸார் நீங்க... எதை எடுத்தாலும் குதர்க்கமா அர்த்தம் பண்ணிக்கிட்டு..."

"சரி, சாயங்காலம் வர லேட்டாகும். ஏழாகும்."

"நான் வீட்டுக்கு வந்துட்டு அப்புறம் காலேஜ் லைப்ரரி போகலாம்னு இருக்கேன். அதுக்குத்தான் கேட்டேன்."

"ஓ அதுக்குத்தானா?" என்று நம்பிக்கையில்லாமல் சொன்னார். "நோ ப்ராப்ளம். சாவியை நீ எடுத்துக்கிட்டு போயிரு. எங்கிட்ட டூப்ளிகேட் இருக்கிறது."

"தாங்க்ஸ் ஸார்!"

"காலேஜ் போறியா இல்லையா?"

"காலேஜ் போகாம?"

"போகாமலே இருந்திருக்கலாம். வகுப்பில் எதிலும் கவனம் செல்லவில்லை. ஹாமில்டன் காரிடாரில் பார்த்து "ஹௌ இஸ் இட் கோயிங்?" என்றார்.

"வெரி வெல் ஸார்" என்றான்.

"வார இறுதிக்குள் ரிப்போர்ட் வந்தாக வேண்டும். இல்லையென்றால்..." என்று எச்சரிக்கையாகக் கை காட்டினார்.

"ஷ்யூர் ஸார்" மதுமிதாவுடன் அதிக நேரம் செலவழிக்கக் கூடாது. அவர்கள் வீட்டிற்குப் போய் கொஞ்சம் நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு உடனே வந்துவிட வேண்டும், ரிப்போர்ட்! நியூயார்க்கில் அலையும்போது முடிதிருத்தம் செய்து கொள்ளலாமா என்று யோசித்தான். பத்து டாலர் பயமுறுத்தியது. கடைகளில் வண்ணக் கண்ணாடிகளில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டான். 'மேஸீஸ்'ல் கோட்டுகளை எல்லாம் மாட்டிக் கொள்ள ஆசையாக இருந்தது. எத்தனை மணிக்கு வரப் போகிறாள்? தெரியவில்லை. நாலரைக்கே வீட்டுக்குப் போய் விட்டான். கதவைத் திறந்து மோகன்ராமின் பர்ஃப்யூம்களை எல்லாம் தன் மேல் பிசிறிக் கொண்டான்.

புதுசாக சட்டை எடுத்து அணிந்து கொண்டான். காலணிக்கு முகம் தெரிய பாலிஷ் போட்டுக் கொண்டான்.

காத்திருந்தான் ஐந்தரை மணிக்கு கார் வந்து நிற்பதைக் கவனித்து விரைவாகச் சென்று கதவைத் திறக்க மோகன்ராம்! "என்ன ஸார், சீக்கிரமா வந்துட்டீங்க?"

"இல்லை, நீ வீட்டில என்ன விஷமம் பண்ணப் போறேன்னு பார்க்கணும்னுட்டுதான் வந்தேன்" என்று சிரித்தார். எரிச்சலாக வந்தது. “இதான் நீ லைப்ரரிக்குக் கிளம்பற லட்சணமா? ஷோக்கா டிரஸ் பண்ணிகிட்டு தலைவாரிக்கிட்டு என்னோட சென்ட்டை எல்லாம் வாரிப் பூசிக்கிட்டு? இத பார் ரகு! என்னை மாமாவா நினைக்காதே. கன்ஸிடர் மி அஸ் ஃப்ரண்ட். என்ன விஷயம் சொல்லு?"

"உங்ககிட்ட இனியும் ஒளிச்சு வைக்க விரும்பலை ஸார். இன்னிக்கு மதுமிதா வரா இங்க!"

"ஓ மை காட்! விஸ்கி பாட்டிலை எல்லாம் ஒளிச்சு வெச்சியா? அவளுக்கு நீ இங்க இருக்கிறது எப்படித் தெரியும்?"

"அதான் எனக்குத் தெரியலை."

"நீ காண்டாக்ட் பண்ணி சொல்லியிருப்ப."

"சேசே. இல்லை ஸார். அவளாத்தான் எனக்கு போன் பண்ணினா. இப்ப வருவா. கேட்டுப் பாருங்க."

"அப்படியா, கதை இப்படிப் போறதா? இதை பாருப்பா கல்யாணம் ஆன பொண்ணுங்ககூட எதும் வெச்சுக்காத! அது இந்த ஊர்லகூட மகா பாவம்!"

"சேசே! என்ன ஸார் தாறுமாறா இமாஜின் பண்ணிகிட்டு."

இப்போது மிக நீளமாக ஓல்ட்ஸ் கார் ஒன்று வந்து நிற்க அதிலிருந்து 'டுட்' என்று ஹாரன் சிக்கனமாக ஒலிக்க... "அவதான்னு நினைக்கிறேன்" என்று ரகுபதி படபடத்தான்.

"இரு, சொக்கா மாத்திக்கிட்டு வந்துர்றேன். காதலனும் காதலியும் சந்திக்கிறதை நான் மிஸ் பண்ணவே கூடாது! நீ போய் அவர்களை அழைச்சுக்கிட்டு வா!"

கார் கதவைத் திறந்து ராதாகிஷன் இறங்க, உடன் மதுமிதா இறங்கி வந்தாள்.

"ஹாய் ரகு!" என்றாள் மது. நீல நிறத்தில் சட்டை அணிந்து கொண்டு கார்டுராயல் பாண்ட் அணிந்து கொண்டிருந்தாள். நேராக அவனிடம் வந்து ராதாகிஷன் கை குலுக்க, அவளிடமிருந்து கண்ணை எடுக்கவில்லை.

"எனக்கு பார்க்குறே ரகு? உன்னுடைய பழைய காதலி எப்படி இருக்கா?" என்று சிரித்தான் ராதா.

"இது யார் வீடு!" என்றாள் பெரிய கண்களால் வீட்டை அளந்து.

"மிட்டி! ஹௌ லாங் டு யூ திங் யு' ல்பி ஸ்டெயிங் ஹியர்?"

"எபவுட் என் ஆர் ராட்?"

"ஓகே. நோ ப்ராப்ளம். நான் போய்ட்டு வந்துர்றேன். டேக்கேர் ஆஃப் மை வைஃப்! டோன் டு எனிதிங் நாட்டி" என்று ராதாகிஷன் அவளைப் பின் பக்கத்தில் தட்டிவிட்டு மறுபடி காரில் ஏறிக் கொண்டு புறப்பட்டு விட்டான். அவன் கிளம்பி கொஞ்ச நேரம் கழித்துத்தான் காரின் பின்புறம் தெரிந்தது அத்தனை பெரிய கார்!

அதற்குள் மோகன்ராம் முன் வாசலுக்கு வர, "எங்கே? போய்ட்டாரா?"

"ஹாய்! ஐம் மோகன்ராம்!"

"ஹாய்!"

"கமானின் ப்ரெட்டி கர்ள்!"

அவளை வயது தந்த சலுகையில் அணைத்துக் கொண்டு உள்ளே செலுத்திக் கொண்டு சென்றார்.

ரகுபதி பின்னே சென்றான். உள்ளே உட்கார "வாட்'ல் யூ ஹவ்? என்றார் மோகன்ராம்.

"ஜின்" என்றாள் மது.

"தட்ஸ் தி ஸ்பிரிட். என்ன ரகு நீ"

"நானும் ஜின் சாப்பிடறேன் ஸார்" என்றான்.

"பிரமாதம். வில் ஹவ் எ பார்ட்டி உட்கார். உன்னைப் பத்தி ரகு நிறைய சொல்லியிருக்கான். ஆனா நீ இவ்வளவு அழகானவனு சரியா சொல்லலை. உக்காரு... உக்காரு..."

மதுமிதா கன்னம் கொஞ்சம் உப்பலாக இருந்தாள். அதனால் முகம் சற்று உருண்டையாகி விட்டது போலத் தோன்றியது. கழுத்துக்குக் கீழே சதை பிடிப்பு அதிகமாகி அவளிடமிருந்த கோணல்களை எல்லாம் மழுப்பி விட்டாற் போல இன்னும் அழகாக, இன்னும் பெண்ணாக, முதிர்ச்சி பெற்ற குழந்தை போல, அவனைப் பிரமிக்க வைத்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"எப்படியிருக்கே ரகு?"

"ஐம் ஓகே. நீ?"

"ஸோ ஸோ' பாவநாசத்தில் பாத்ததுக்கு பெருத்துத்தானே இருக்கேன்?"

"ஆமா அதனால பரவாயில்லை..."

"ஐம் ஸோ ஒரிட்! ராட் கிட்ட ஐஸ்க்ரீம் கொடுத்து டெம்ப்ட் பண்ணாத பண்ணாதன்னா குடுத்துக்கிட்டே இருப்பார்!"

"யூ நீட் என் ஐஸ்க்ரீம் யங் லேடி?"

"வேண்டாம் மாமா."

"நோ மாமா மோகன்!"

"ஓக்கே... மோகன்!"

"மது, நான் இங்க இருக்கறது உனக்கு எப்படி தெரிஞ்சுது?"

"இங்க இருக்கறது தெரியும். நியூயார்க் பிஸினஸ் ஸ்கூல்ல எம்.பி.ஏ. படிக்கிறது தெரியும்."

"எப்படி?"

"உங்க ஸ்கூல்ல எமர்ஸ்ன்னு ஒரு பொண்ணு படிக்குதில்லை?"

"மேரி எமர்ஸன்?"

"ஆமா, அவ ராட் ஆபீஸ்ல ஒர்க் பண்ணது. அவ ஒரு பார்ட்டியில சொல்லிச்சு. ஓர் இண்டியன் படிக்கிறதா பேர், அது என்ன பேர் ரகுபட்டின்னு, ரகுபட்டி!" என்று கலகலவென்று சிரித்தாள். கழுத்தில் அணிந்திருந்த மாலை மிக விலையுயர்ந்ததாக இருக்கும் போல இருந்தது.

"இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துரும் ராட்."

"ரகு, உன்னுடைய ஓல்ட் ஃப்ளேம்னு சொன்னானே மது?"

"அப்படியா சொன்னான்? தாங்க்ஸ் அங்கிள்! ஸாரி... மோகன், ஜின் கொஞ்சம் ஸ்ட்ராங்கா இருக்கு. கொஞ்சம் லைம் சேத்துக்கட்டுமா?"

மோகன்ராம் உள்ளே செல்ல, ரகுபதி அவளை முழுசாகப் பார்த்தான்.

"என்ன பார்க்கறே?"

"இன்னும் அழகா இருக்க."

"ஒரு தடவை சொல்லிட்ட! ராட்தான் சொல்லும் குண்டாயிட்டேன்னு! இன்னும் ஒரு மணியில வந்துரும். ரகு அப்புறம் எங்க அப்பா அம்மாவையெல்லாம் பார்த்தியா?"

"இல்லை"

"ஏன்?"

"கோபம்."

"உனக்குக் கல்யாணம் ஆயிருச்சா?"

"இல்லை."

"எப்ப கல்யாணம்?"

"படிப்பு முடிஞ்சப்புறம் தான்."

"நியூயார்க் புடிச்சிருக்கா?"

"பரவாயில்லை."

"மேரி சொன்னாளே. நீங்க ரெண்டு பேரம் பிராட்வே ப்ளே போயிருந்ததா?"

"ஏதோ அழைச்சுக்கிட்டுப் போனா."

மோகன்ராம் 'ஹியர் யூ ஆர்" என்று அவளை அணைத்துக் கொள்கிறாற்போல ஜின்னில் எலுமிச்சை ரசம் சேர்க்க, அவர் நடந்துகொள்ளும் விதத்தைக் கண்டு அவனுக்கு ஆத்திரமாக வந்தது. ஏன் இந்த வயசில் இவருக்கு! அவள் அருகில் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்து அவளிடம் பெண்களிடம் சொல்லக்கூடாத ஜோக் சொல்ல ஆரம்பித்தார். ரகு எதிரில் உட்கார்ந்துகொண்டு இந்த மனுஷன் எப்போது நிறுத்துவார் என்று காத்திருந்தான்.

"ஸார், எனக்குக்கூட கொஞ்சம் லெமன் வேணும்" என்றான்.

"போய் எடுத்துக்க."

"ஸார் ப்ளீஸ்!"

"கழட்டி விடறியா? இத பார் யங் லேடி, இவன் உன்னை கிஸ் பண்ண முயற்சி பண்ணா கன்னத்துல பளீர்னு அறைஞ்சுரு."

மதுமிதா சிரித்தாள். அவர் உள்ளே செல்ல அவளருகில் சென்று "மது, எதுக்கு என்னைப் பார்க்க வந்தே?" என்றான்.

"சும்மாத்தான்."

"இல்லை. எதாவது காரணம் இருக்கணும்."

"சேசே? அதெல்லாம் ஒண்ணும் இல்லை. அம்மா அப்பாகிட்ட இருந்து ஏதாவது சேதி இருக்குமான்னுட்டு?"

"நீ சந்தோஷமா இருக்கியா மது!"

"ம்! நீ"

"நான் இல்லை மதி."



www.writersujatha.com

"ஏன்?"

"உன்னையே நினைச்சுக்கிட்டு இருக்கேன்."

"இன்னுமா?"
"இன்னும்!"

மோகன்ராம் மறுபடி வந்தார்.

"எனக்குதான் கல்யாணம் ஆயிருச்சே மோகன்! ராட் வரதுக்குள்ள ஐல் ஹேவ் அனதர், இஃப்யூ டோன்ட் டைமண்ட்" என்றாள். "ரகு என்ன இன்னும் சாப்பிடாமலேயே வெச்சுருக்கே?"

ராதாகிஷன் வரும் வரைக்கும் மதுமிதாவும் மோகன்ராமும் பேசிக்கொண்டிருப்பதை ரகு பேசாமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

## 11

மதுமிதாவுடன் அமெரிக்காவில் முதல் சந்திப்பு எதிர் பார்த்ததற்கு மாறாக இருந்தது என்ன என்னவோ நினைத்துக் கொண்டு இருந்ததெல்லாம், அவள் திரும்பத் திரும்ப தன் கணவனைப் பற்றிக் குறிப்பிடுவதிலும், சம்பாஷணையைப் பெரும்பாலும் மோகன்ராம் ஆக்கிரமித்ததிலும் கலைந்து போயிற்று. அடிக்கடி அவள் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். "ராட் வர நேரமாச்சு" என்றாள். அந்தக் கை இன்னும் அழகாக இருந்ததும் அதை அவன் மெல்ல பாவநாசத்தில் வருடியிருந்ததும் இப்போது ரொம்ப தூரத்து விவகாரங்களாகத்தான் பட்டன. உனக்கும் எனக்கும் ஒரு மானசீகமான சுவர் இருக்கிறது என்பதை அவளது சின்னச் சின்ன செயல்கள் அடிக்கடி ஞாபகப்படுத்துவது போலத் தோன்றியது. முடிந்த வரை அவனை நேராகப் பார்ப்பதைத் தவிர்த்தாள். மது இன்னும் ஒரு புதிராகத்தான் இருந்தாள்.

ராத்திரி எட்டு மணிக்கு ராதாகிஷன் அவளை அழைத்துப் போக வந்தான். "உம் பேர் என்ன? சட்டுனு மறந்து போச்சு."

"ரகுபதி"

"என்ன, எல்லாம் பேசியாச்சா என் ஒய்ஃப் கிட்ட?"

"ம்..."

"பாக்கணும் பாக்கணும்னு சொல்லிக்கிட்டே இருந்தா. எனக்கு எங்க டயம் கிடைக்கிறது? எம்பிஏ பண்றியாமே? மேரி சொன்னா. எம்பிஏ எல்லாம் இப்ப இங்க யூஸ்லஸ்ப்பா. பிஎச்டி-க்குத்தான் கொஞ்சம் மவுசு இருக்கு. ரொம்ப ரிஸஷன். டி.வி. பார்த்த இல்லை? என் எம்ப்ளாய்மெண்ட் ஃபிகர் பதினோரு பர்ஸண்ட்! டிப்ரஷன் டயத்தில்கூட அப்படி இருந்ததில்லை. கம்ப்யூட்டர் ஸாஃப்ட்-வேர் கத்துக்க, அதுக்குத்தான் இப்ப கொஞ்சம் சான்ஸ் இருக்கு. என்ன மது போகலாமா?"

"ரகுவை இன்வைட் பண்ணேன் ராட்."

"ஓ எஸ் மறந்துட்டன்! எங்க வீட்டுக்கு வாப்பா... வரியா?"

"வரேன் ஸார்."

"எப்ப வரே?"
"வீக் எண்ட்"

"சரி, போகலாமா?"

மது சிரித்துவிட்டு, "அட்ரஸ் கூட கொடுக்கலை. எப்படி அவனால் வர முடியும்?"

"அதான. நீ அட்ரஸ் குடுக்கலியா? நியூ ஜெர்ஸில இருக்கேன். ஸார், என்ன இது? ஸ்காட்சா?"

"ஆமாம்" என்றார் மோகன்ராம்.

"என் பொண்டாட்டி ஜின் சாப்பிட்டிருப்பாளே, சான்ஸ் கிடைச்சா விடமாட்டாளே."

"ஷி ஹாட் ஒன்."

"எப்படி பெருத்துப் போயிருக்கா பாருங்க! ஏதாவது வேலை கீலைக்குப் போன்னா சோம்பேறி!" என்று அவளை அவர்கள் முன் முத்தமிட்டான். மதுமிதா சட்டென்று விலக்கிக் கொண்டு, "என்ன இது? பப்ளிக் பர்ஃபார்மன்ஸா?"

"ஸார், நான் என் மனைவியை முத்தமிடலைன்னா யாரை முத்தமிட முடியும்?" என்றான்.

"வாஸ்தவம்தான். ஷி இஸ் எக்ஸ்ட்ரீம்லி கிஸ்ஸபிள்" என்றார் மோகன்ராம்.

"பார்த்தியா மிட்டி! என்ன சொல்றார் பாரு. உனக்கு இன்னொரு அட்மைரர்" என்று மறுபடி முத்தமிட்டு காதோடு சொன்னான்.

"போ" என்று கன்னம் சிவந்தாள். ரகுபதிக்கு எல்லாமே அருவருப்பாக இருந்தது. அவன் வேணுமென்றே உலகத்துக்கும் பிரத்தியேகமாக ரகுவுக்கும் இவள் என் மனைவி என்பதை அடிக்கடி அநாவசியமாக நிலைநாட்டிக் கொண்டிருப்பதாகப் பட்டது. "உங்களுக்கு நேரமாயிட்டாப்பல இருக்கே?" என்றான்.

"வீட்டுக்குப் போன்னு துரத்தறே. அப்படித்தானே?"

அப்படித்தான்.

மதுமிதா, "ரகு! எப்ப எங்க வீட்டுக்கு வரே!" என்றாள்.

"பார்க்கலாம் மது."

"பார்க்கலாம்னெல்லாம் சொல்லக் கூடாது. கரெக்ட்டா ஒரு தேதி சமயம் சொல்லு. வந்து நானே பிக்அப் பண்ணிக்கிட்டு போறேன்."

"என்னை யாரும் இன்வைட் பண்ணலியே" என்றார் மோகன்ராம்.

"ஸாரி ஸாரி... நீங்களும் தாராளமா வாங்க ஸார்."



www.writersujatha.com

"வரோம். என்ன ரகு, வர்ற வெள்ளிக்கிழமை போகலாமா? என் குழந்தைகளையும் கூட்டிட்டு வரேன். வி கான் ஹாவ் எ பிக்னிக்."

"கம் ஒன் கம் ஆல்" என்றான் ராதாகிஷன்.

அவர்கள் வெளியே சென்றபோது வழியனுப்ப வாசலுக்கு மோகன்ராம் தான் போனார்.

ரகுபதிக்கு அழுகை வரும்போல இருந்தது. தான் இனிமேல் கதாநாயகன் இல்லை என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. இவள் எதற்கு என்னைப் பார்க்க வந்தாள்?

உள்ளே வந்த மோகன்ராம், "டிலைட்ஃபுல் கர்ள்! இவளை எப்படிப்பா நீ மிஸ் பண்ண? குதிரை மேல கொண்டு போய் திருட்டுத் தாலின்னா கட்டிருக்கணும்! ராதாகிஷன் ரொம்ப லக்கி."

"அவன்தான் ஸார் குதிரைமேல கொண்டுபோய் திருட்டுத் தாலி கட்டிட்டான்."

"சரியான இளிச்சவாயான்பா நீ."

"நீங்க ஒண்டிதான் பாக்கி."

"அதுதான் எனக்கும் புரியலை..."

"ஒருவேளை, குற்ற உணர்ச்சியா இருக்கும். வெள்ளிக்கிழமை போறப்ப நான் கேட்டுர்றேன். சந்தர்ப்பம் வருமில்லை?"

"அதெல்லாம் வேண்டாம் ஸார்? வெள்ளிக்கிழமை நான் வரலை. நீங்க போங்க."

"ஏம்பா...? உன்னைத்தான் கூப்பிட்டிருக்கா, நான் ஒட்டுவால்."

"இல்லை ஸார். இந்த மாதிரி கணவனும் மனைவியும் முத்தமிட்டுக்கறதை ஃப்ரீஷோ பாக்கறதில் எனக்கு அதிகம் சுவாரஸ்யம் இல்லை. அவன் நாகரிகமில்லாதவன்; அவ புத்தியில்லாதவ. ரெண்டுபேரும் சேர்ந்து நம்ம டயத்தை வேஸ்ட் பண்ணாங்க."

"நீ போகலைன்னா நான் போகலை."

"நீங்க போய்ட்டு வாங்க ஸார். உங்களுக்கு இதெல்லாம் பிடிச்சிருக்கும்னு நினைக்கிறேன்."

"வாட் எக்ஸாட்லி டுயூ மின் பை தட்?" என்றார் சற்று கோபமாக.

"அமெரிக்காவில உள்ளவர்களுக்கு இந்த மாதிரி அமெரிக்க நடத்தை எல்லாம் பிடிச்சிருக்கும்னு சொல்ல வந்தேன்."

"இது பாரு. எதிர்பார்த்து நடக்கலைன்னு உனக்குக் கோபம்! அதுதானே."

"சேச்சே! நான் ஒண்ணும் எதிர்பார்க்கலை. அவளாகத்தானே என்னைத் தேடி வந்தா!"

"தேடி வந்து 'நான் தப்புப் பண்ணிட்டேன், என் கணவன் என்னை சரியாவே நடத்தறதில்லை. அவன் ஒரு மூர்க்கன், அவனை விட்டுட்டு உன்கிட்ட வந்துர்றேன்'னு கால்ல விழுந்து கெஞ்சுவானு நினைச்சே, அது நடக்கலை அதனாலேதானே கோபம்."

உண்மை அதுதான் என்று அவரிடம் சொல்லாமல், "என்ன ஸார்! நிறைய குடிச்சுட்டு எகத்தாளமா கற்பனை பண்றீங்க" என்றான். "ஸார் நான் நினைச்சிருந்தேன்னா இந்தப் பொண்ணை எப்பவோ பாபநாசத்திலேயே கலைச்சிருக்க முடியும். ஷி வாஸ் ரெடி, ஐ வாஸ் நாட்! பெரிய மனுஷன் மாதிரி நடந்துக்கிட்டேன். என் அப்பா என்னை வளர்த்தவிதம் அப்படி, சந்து கிடைச்சா தாவற ஜன்மம் இல்லை நான். என்னை உங்களுக்கு சரியா தெரியாது. இந்தப் பொண்ணு இப்ப என்னைப் பார்க்க வந்த மரியாதைக்காக அவங்க பண்ண கோமாளித்தனங்களை எல்லாம் சகிச்சுகிட்டு இருந்தேன். ஆனா இந்த உறவை நீடிக்கிறதில எனக்கு எந்த விருப்பமும் இல்லை."

"அவளுக்கு இருக்காப்பல இருக்கே."

"இதெல்லாம் இல்லை ஸார், எவ்வளவு பெரிய வீட்டில் சௌகரியமா வாழறேன் பாருன்னு பெருமைப் பட்டுக்கறதுக்குத்தான். அதையெல்லாம் எனக்குக் காட்டி வெறுப்பேத்தறதுக்குத்தான் என்னைக் கூப்பிட்டாங்க. வேற வேலை இல்லை" என்று தன் அறைக்குச் சென்று படுத்தான். படுக்கையில் மல்லாந்துகொண்டு அவள் முகத்தையும் உருவத்தையும் யோசித்தான். எப்போதோ அவளைத் தொட்ட கணங்களை எல்லாம் மனத்தில் கொண்டு வந்தான்.

நீங்க என்னைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறீங்களா?

ஆமாம்.

கல்யாணம் எப்படி இருக்கும்.

நீதான் சொல்லேன்.

எனக்கு ஐடியாவே இல்லை பட் ஐ ஹேட் பேபிஸ்.

ஒரு வேளை உண்டாகியிருக்கிறாளோ என்று சந்தேகம் வந்தது. சரியாகக் கவனிக்கவில்லை. நிறைய உண்டாகட்டும். நிறையப் பெற்றுக் கொள்ளட்டும். 'இடுப்பில் ஒன்று, கழுத்தில் ஒன்றாக இரட்டை இரட்டையாகப் பிறந்து மை காட்! இது யாரு?

நான்தான் மது. ஞாபகமில்லை?

மதுவா? அடட! உங்கம்மான்னு நினைச்சேன்.

தூக்கத்தைத் துக்கம் தடுத்தது. அலமாரிக்குப் போய் அதில் நிறைந்திருந்த மாத்திரைகளில் தேடினான்.

"என்னப்பா?" என்ன மோகன்ராம் வந்து விசாரித்தார்.

"ட்ராங்க்விலைஸர் எதாவது இருக்கா? தூக்கம் வரலை. நிறைய வெச்சிருப்பிங்களே!"

"எனக்கும் வரலை" என்று அவனிடம் மாத்திரையைக் கொடுத்து விட்டு தானும் ஒன்று போட்டுக் கொண்டார்.

வெள்ளிக்கிழமைக்குள் அவனுடைய திருத்தப்பட்ட ரிப்போர்ட் கொடுக்க வேண்டியிருந்தது. லைப்ரரியில் பல மணி நேரத்தைச் செலவழித்தான். விற்பனை விலையைக் குறைக்க முடியாது என்பதை கம்ப்யூட்டர் சொல்லிவிட்டது. அதனால் நஷ்டம் அதிகமாகிறது. அதிக விற்பனையாகும் அதிக நஷ்டமும் ஆகும் விநோதமான சூழ்நிலை. போட்டிக்காரனின் சரக்கு தரத்தில் கொஞ்சம் உயர்வாக இருப்பதால் விற்பனை விலையைக் குறைப்பதால் அதிகம் வாடிக்கைக்காரர்கள் மனம் மாற மாட்டார்களாம். விளம்பரத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்திப் பார்த்தான். ஒல்லியாக நாலாயிரத்து ஐநூறு டாலர் லாபம் வந்தது. ரொம்ப சந்தோஷமாக இருந்தது. ஏறக்குறைய மதுமிதாவை மறந்துவிட்ட சந்தோஷம். மார்க்கெட்டில் அவனுடைய கம்பெனியின் ஷேர்கள் ஆறு சதம் ஏறியதாகச் சொன்னார்கள். போட்டிக்காரனின் விற்பனை கொஞ்சம் குறைந்திருப்பதாகவும் கம்ப்யூட்டர் தகவல் தந்தது. அதில் அவனுக்கு இன்னும் சந்தோஷமாக இருந்தது.

அடுத்த கட்டத்தில் திடீர் என்று ஒரு சீஸன் வந்தால் நாட்டின் பொருளாதாரத்தில் கொஞ்சம் மேம்பாடு ஏற்பட்டதால் திடீர் என்ற விற்பனை அதிகமாகி எண்பதாயிரம் டாலர் லாபம் காட்டியது கம்ப்யூட்டர். நிதி கிடைத்தாற் போலச் சந்தோஷப்பட்டான்.

எல்லாமே மாயை. அந்த மாதிரி கம்பெனியோ, விற்பனைப் பொருளோ, போட்டி கம்பெனியோ கிடையாது. இருந்தும் எல்லாம் நிஜம்போல் கம்ப்யூட்டர் காட்டுகிறது. கம்ப்யூட்டரிடம் தன் குறையை சொல்லி அழுதால் என்ன? இதோ பார் என்னுடைய கம்பெனியில் மதுமிதா என்று ஓர் அழகான இன்ஜினீயர் இருக்கிறாள். அவளை என்னுடைய கம்பெனிக்குக் கொண்டு வர நான் என்ன செய்ய வேண்டும்?

"அதிக சம்பளம் கொடுக்க வேண்டும்' என்றுதான் அது பதில் சொல்லும். அதற்குத் தெரியுமா பாவநாசத்தில் டென்னிஸ் ஆடியதும், பாண தீர்த்தத்தில் துள்ளி ஓடியதும், குளித்ததும், அவள் ரயிலுடன் ஓடி வந்ததும், எனக்காக ஏங்கியதும், என்னை எல்லாரும் விரும்பியதும், என்னை மாதிரி மாப்பிள்ளை இல்லை என்று அப்பாவும் அம்மாவும் தாங்கித்தாங்கி என்னைப் பைத்தியமாக அடித்ததும் கம்ப்யூட்டருக்கு என்ன தெரியும்?"

"எப்படி வந்து கொண்டிருக்கிறது."

நிமிர்ந்து பார்த்தபோது மேரி! "பரவாயில்லை. எண்பதாயிரம் டாலர் சம்பாதித்துவிட்டேன்."

"அதில் ஐம்பது செண்ட் கடன் கொடேன். ஒரு கோக் சாப்பிட."

"கோக் கோக் என்று ஏன் அலைகிறாய்?"

"மற்றொரு 'கோக்' இருக்கிறது. அதற்கு அலையாமல் இருக்கிறேனே அதுவே பெரிசு."

"மேரி. உனக்கு ராதாகிஷனைத் தெரியுமா?"

"சொல்ல மறந்துவிட்டேன்... ராட் உன்னைப் பற்றி விசாரித்தான்."

"அவனை எப்படித் தெரியும்?"

"ராட்டைத் தெரியாதவர்கள் எங்கள் கம்பெனியில் உயிர் வாழ முடியாது."

"பெரிய புள்ளியா!"



www.writersujatha.com

"ஸீனியர் வைஸ் பிரசிடெண்ட். உனக்கு வேலை வேண்டுமானால் கேள்."

"நீ அந்த கம்பெனியில்தான் வேலை செய்கிறாயா?"

"சகோதர கம்பெனியில், அவள் மனைவியைப் பார்த்திருக்கிறாயோ? அழகான இந்திய ராஜகுமாரி போல் இருப்பாள்."

"தெரியும்."

"ராதா கம்பெனியில் ரொம்ப பிரசித்தமான எக்ஸிக்யூட்டிவ், எம்.பி.ஏ. படிக்காமலேயே மார்க்கெட் தகிடு தத்தங்கள் எல்லாம் அவனுக்குத் தெரியும். போன வருஷம் அவனால் மட்டும் கம்பெனிக்கு நிகர லாபம் மிலியன் டாலர் என்று சொல்வார்கள்."

"அப்படியா?" என்றான் அசுவாரஸ்யமாக.

ரகுபதிக்குப் படிக்கவேண்டும். அது முக்கியம் என்று தோன்றியது. எப்போதோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ராதா கிருஷ்ணனுக்கு ஈடாக அல்லது அவனை மிஞ்ச வேண்டும்.

"வெள்ளிக்கிழமைக்குள் கொடுத்து விடுவாய் அல்லவா? கொடுத்த வாக்கை மீறாதே. ஹாமில்டன் கோபித்துக் கொள்வார்" என்றாள்.

"கொடுத்துவிடுவேன். போன ரிப்போர்ட்டில் உள்ள தவறுகள் சுலபமாகப் புரிந்துவிட்டன. இந்தமுறை தன்னம்பிக்கையுடன் தான் இருக்கிறேன்."

"நல்லது" என்று அவன் கன்னத்தில் லேசாகத் தட்டி விட்டுப் புறப்பட்டாள்.

வீட்டில் ரிப்போர்ட்டின் கைப் பிரதியை முழுவதும் தயாரித்து விட்டான். ஒருமுறை திருத்தி விட்டு டைப் அடிக்கக் கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. கம்ப்யூட்டர் ஸ்டேட்மெண்ட்களை இணைப்பதற்காக அவற்றை வரிசைப்படுத்திக் கொண்டிருந்த போது டெலிபோன் வந்தது.

"ரகு! நான் ராதாகிஷன் பேசறேன், மதுஸ் ஹஸ்பண்ட்."

"ஓ ஹலோ என்ன விஷயம்?"

"உன்ன வீக் எண்டுக்கு கூப்பிட்டிருந்தம் இல்லை? அதுக்கு பதில் ஃப்ளாரிடா போய்ட்டு வரியா?"

"புரியலை."

"ப்ளாரிடா தெரியாது? டிஸ்னி வால்ட், எப்காட் சென்டர், மையாமி."

"நான் அங்க எதுக்குப் போகணும்?"

"எனக்கு அபீஸ்ல கொஞ்சம் அர்ஜண்டா வேலை வந்திருச்சு, யூரோப் போகணும். மது கோவிச்சுக்குது, அவளை அழைச்சிக்கிட்டு போய் வாயேன்."

"எப்ப"

"வெள்ளிக்கிழமைதான்!"

www.writersujatha.com

## 12

**வெ**ள்ளிக்கிழமை அவன் மறு ரிப்போர்ட்டைக் கொடுக்க வேண்டிய நாள்.

"ஸார் மன்னிச்சுக்கங்க. வெள்ளிக்கிழமை என்னால வர முடியாது. காலேஜ்ல முக்கியமா ஒரு வேலை இருக்கு."

"என்னப்பா பெரிய காலேஜ்! 'தட் கன் வெய்ட்'" என்றான் ராதாகிஷன்.

"இல்லை ஸார். ஏற்கெனவே என் பர்ஃபார்மன்ஸ் ரொம்ப மோசம், டெட்லைன் தவறிட்டேன்னா என்னை வெளியே துரத்திடுவாங்க."

"அமெரிக்காவில் அதெல்லாம் பண்ணமாட்டாங்க. ஜஸ்ட் ஒரு வீக் எண்ட் தானே ரெண்டு நாள் போஸ்ட் போன்மெண்ட் கேட்டுக்க, நான் வேணா கேக்கட்டுமா? உங்க ப்ரொபஸர் யாரு? எனக்குத் தெரிஞ்சவராக்கூட இருக்கலாம்."

"வெரி ஸாரி. முடியாது" என்றான்.

"ஒரு நிமிஷம்" போன் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தது. வைத்து விடலாமா என்று தீர்மானிக்குமுன், "ரகு, நான் மது பேசறேன், என்ன வரமாட்டியா?"

"அதான் உன் ஹஸ்பண்ட்கிட்ட காரணம் சொன்னேனே மது. என்னால இந்த வாரம் வரமுடியாது."

"வெள்ளிக்கிழமை எப்ப குடுக்கணும் ரிப்போர்ட்?"

"மத்தியானம்"

"நாம சாயங்காலம் புறப்படலாம். என்ன ரகு. உனக்கு வரதுக்கு இஷ்டமில்லைன்னா சொல்லிடேன்."

"அதுகில்லை மது."

"நீ வந்தா நிறைய பேசலாம். உங்கிட்ட நிறைய பேசணும். நான் டிஸ்னி வர்ல்ட எல்லாம் சுத்திக் காண்பிக்கிறேன். வி'ல் ஹாவ் எ நைஸ் டைம். இந்த கிச்சு வேலை வேலைன்னு அலையட்டும். நாம போகலாமே! யோசிச்சுப் பாரு. மாட்டன்னு சொல்லாதே. ஃபர் ஓல்ட் டைம் ஸேக்!" என்றாள். அவள் குரலில் கொஞ்சல் இருந்தது.

"சாயங்காலம்தான் போகணுமா?"

"காலைல கிளம்பறதா இருந்தது. உனக்காக சாயங்காலம் புறப்படலாம். நேர உன்ன வந்து பிக்அப் பண்ணிக்கிடறேன். இங்கிருந்து லாக்வார்டியா போய்ட்டு ராத்திரிக்கு ஆர்லண்டோ போயிடலாம். டிஸ்னி வர்ல்டிலேயே தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கு."

"சரி வரேன்" என்றான்.

"தட்ஸ் தி பாய்!"

வெள்ளிக்கிழமை வரை அவனால் புத்தகங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. படிப்பு என்பது இரண்டாம் பட்சமாகிவிட்டது. ஆர்வமாக ரிப்போர்ட் எழுதி முடிக்க இருந்தவன், ஏனோதானோ என்று பூர்த்தி செய்தான்.

"என்னப்பா, எங்க புறப்படறாப்பல?"

"வந்து சார்... ராதாகிஷன் சொன்னார்..."

"ராதாகிஷன், மதுவின் கணவர்! என்ன சொன்னாரு!"
"ஃப்ளாரிடா போகப் போறேன்."

"கூட யாரு!"

"மதுமிதாவுக்கு எஸ்கார்ட்டா..." என்று அவரை நேராகப் பார்க்காமல் சொன்னான்.

"கணவன் வரலையா?"

"அவருக்கு வேலை இருக்காம்."

மோகன்ராம் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார்.

"எனக்கு ப்ளாட்டு போற தினுசு புரியலையே" என்றார்.

"ஏன்?"

"கணவன் தன் மனைவியை அவளுடைய மாஜி காதலனோட அதும் ஃப்ளாரிடாவுக்கு– அனுப்பறதாவது! அமெரிக்காவில இதெல்லாம் நடக்கும். ஆனா அமெரிக்காகாரங்–களுக்குள்ளதான் நடக்கும்."

"இதை விபரீதமாக பார்க்காம சாதாரண கண்களோடு பார்க்கலாமே ஸார்."

"சரி. சாதாரண கண்களோடு பார்த்து எனக்கு சொல்லு. இதுக்கு என்ன அர்த்தம்!"

"கணவனுக்கு அவமேல அபார நம்பிக்கைன்னு அர்த்தம்!"

"அப்படியும் இருக்கலாம். உனக்கு நம்பிக்கை இருக்கா?"

"யார் மேல்?"

"உன் மேலதான்" என்றார்.

"இருக்கு ஸார்" என்றான்.

"இருந்தா சரி. ஹேவ் எ நைஸ் டைம். ஒண்ணே ஒண்ணு, வெச்சுக்க. இந்த ஊர்ல தப்பு செய்யறது ரொம்ப சுலபம். ரெண்டு பேர் வாழ்க்கையும் சிக்கலாக்கிக்காதீங்க!"

"சேச்சே! அதெல்லாம் நடக்காது ஸார்!"

"குழந்தைகள் வராங்க. நீயும் இருப்ப ஜாலியா சுத்தலாம்னு நினைச்சேன். பரவாயில்லை. குழந்தைகளைவிட மற்றவன் மனைவி சகவாசம் கொஞ்சம் சுவாரஸ்யமானதுதான்."

"எல்லாத்தையும் படுக்கைவரை கொண்டு போகாதீங்க ஸார்!"

"படுக்கையைப் பத்தி யார் பேசினா? அந்த வார்த்தை ஸப்கான்ஷியஸா வரது பாரு!"

மோகன்ராமின்மேல் இப்போது ஆத்திரம் பரிபூரணமாகி விட்டது. இவருடைய இடக்கான பேச்சுகளை அதிக நாள்கள் தாங்க முடியாது. எப்படியாவது காலி பண்ணி... ஃப்ளாரிடாவுக்குப் பணம் வேண்டுமே? கையில் நூறு டாலர்தான் இருந்தது. இவரிடம் கேட்கலாம். வேண்டாம்! மதுவிடம் கடன் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். அப்புறம் கொடுத்து விடலாம்.

www.writersujatha.com

லாக்வார்டியாவில் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் விமானத்தில் நுழைவாசலில் இருந்த பெண் சிரித்து மதுமிதாவைப் பார்த்து, 'ஹாவ் எ நைஸ் ட்ரிப்'' என்று தன் டெர்மினலின் பட்டனைத் தட்ட, அருகே இருந்த இயந்திரம் கார்கர்ர் என்று கமறி இருவருக்கும் சேர்த்து போர்டிங் கார்ட்டு அடித்துக் கொடுத்தது. மதுமிதா ஏகப்பட்ட சாமான்கள் வைத்திருந்தாள். கைப்பை, போர்வை கோட்டு, பெரிசாக எல்லாவற்றையும் அணைத்துக் கொண்டு; புன்னகையிலேயே அதிகப்படியாக ஸாரி ஸாரி என்று சொல்லிக் கொண்டு, வா என்று அவன் புஜத்தைப் பிடித்து இழுத்து அழைத்துக் கொண்டு விமானத்துக்குள் ஓடினாள். பணிப்பெண் அவளுடைய கோட்டை வாங்கி அதற்கான பிரத்யேகமான இடத்தில் மாட்டினாள். இரண்டு பேரும் அவள் ஜன்னலோரத்திலும் அவன் எய்ல் ஸீட்டிலும் உட்கார்ந்து கொள்ள, அவளை ஆற அமர கவனிப்பதற்குக் கிடைக்காத சந்தர்ப்பம் இப்போது கிடைத்தது. சின்னப் பெண்கள்போல இரட்டைப் பின்னலாக ஏறக்குறைய காதருகிலிருந்தே இறங்கிப் பின்னியிருந்தாள். அவளிடத்தில் வாசனையாக இருந்தது. சீட்டு நிறைய உட்கார்ந்து அவன் மேல் அவள் லேசாகப் பட்டுக் கொண்டிருந்தாள். 'அட் லாஸ்ட். ஐ மேட் இட்! எத்தனை தடவை 'போஸ்ட்போன்' ஆயிடுச்சு தெரியுமா? அழைச்சுட்டுப் போறேன்னு பாச்சா காட்டிக்கிட்டே இருந்தது! பிஸினஸ் பிஸினஸ்தான். எப்பவாவது அதை விட்டுட்டு வரணுமா இல்லையா? நீயே சொல்லு. இந்தத் தடவை பார்த்தேன். நீ வராட்டி போ, நான் ரகுகூட போய்க்கறேன்னு சொல்லிவிட்டேன். நான் செய்தது சரியா இல்லையா?"

"ரூம் ரிஸர்வ் ஆயிடுச்சா மது?"

"அதுக்கென்ன? அமெரிக்காவில் அதெல்லாம் அஞ்சு நிமிஷ வேலை."

"தனித்தனி ரூம்தானே?"

"என்னது?"

www.writersujatha.com

"உனக்கும் எனக்கும் தனித்தனியா தானே ரூம் போட்ருக்கு?"

"தெரியலை அங்க போனத்தான் தெரியும்'' என்றாள் அலட்சியமாக. ஹோஸ்ட்டஸ் சிரித்துக்கொண்டே ஆக்ஸிஜன் மாஸ்க் உபயோகிப்பதுதான் உலகத்திலேயே சுவாரஸ்யமான விஷயம் போல, அதை மாதிரி காட்டினாள். டாக் டாக் என்று ஆண்பிள்ளைத்தனமாக நடந்து ஸீட்பெல்ட் ஒன்றை இறுக்கி இறுக்கி விடுவித்துக் கொண்டே எய்லில் கடந்து சென்றாள். 'கோக்'கும் அலுமினிய பாக்கெட்டில் கடலைக் கொட்டையும் கொடுத்தார்கள். விமானம் சரக்கென்று எழ ஜன்னலில் நியூயார்க் மின்சார வைரங்களைக் காட்டியது.

மதுமிதா ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்து "எத்தனை அழகா இருக்கு பாத்தியா?"

www.writersujatha.com

மிக அருகில் மிகத் தொலைவில் அவன் காதலி! இன்னும் அவளை அவன் காதலிக்கிறானா? உடல் இச்சைகளை நீக்கிவிட முடியுமானால் அதைக் காதல் என்று சொல்லலாமா? தாலி கட்டி சென்னையில் ஒரு சிறிய வீட்டில் சிறைப்படுத்தி மனைவி என்று பிரத்தியேக சொந்தம் கொண்டாடித் தன் உரிமையை, உடைமையை நிலை நிறுத்திக் கொண்டால்தான் காதலாக இவளைத் தொடாமல் இவளிடம் மரியாதையாகப் பழகி, உள்ளுக்குள் இவளை நேசிக்க முடியாதா? எல்லா ஆண் பெண் உறவும் எதற்காக கொச்சையாக ஸாட்டின் விரித்த படுக்கைகளில் முடிய வேண்டும்?

"என்ன யோசிக்கிறே ரகு?"

"மது, நீ இங்க வந்ததில இருந்து உன் அனுபவத்தைப் பற்றி எனக்குச் சொல்லு."

"அனுபவம்னா... 'முதல்ல அமெரிக்கா ரொம்ப த்ரில்லாயிருந்தது. டெலிவிஷன், எத்தனையோ சௌகரியம். எல்லாம் பிரம்மிப்பாவே இருந்தது."

"இப்ப?"

"இப்ப கொஞ்சம் பழகிப் போச்சு. கொஞ்சம் போர் அடிச்சுப் போச்சு."

"வேலைக்குப் போகலியா நீ? நிறையப் பேர் பெண்கள் வேலைக்குப் போறாங்களே?"

"ராதா வேலைக்குப் போன்னுதான் சொல்லுது. நான் சோம்பேறி. ஒத்திப் போட்டுக்கிட்டேயிருக்கேன்..."

"ஏன்?"

"தெரியலை. ராதா கம்பெனியிலேயே வேலை கிடைக்கிறது ஈஸி. நானே வேலை பார்த்துக்கறேன்னு சொன்னேன். கொஞ்சம் படிக்க ஆசையா இருக்குது."

"என்ன படிப்பு?"

"டீச்சருக்குத்தான்; இல்லை சைக்காலஜி. ராதா கம்ப்யூட்டர் ப்ரொக்ராமிங் படின்னு சொல்லுது. அதுலதான் நிறைய காசாம். ஒரு லெவலுக்கப்புறம் காசு அலுத்துப் போகுது இல்லை?"

"எனக்கு இன்னும் அலுக்கலை. பை தி வே, நீ எனக்குக் கடன் தரணும்."

"நத்திங் டூயிங், செலவு முழுக்க என்னதுதான். குளுருது இல்லை?"

ரகுபதி ஹூவரை மூடியபோது அவள் மேல் பட்டான். அதை அவள் மதித்ததாகத் தெரியவில்லை.

"நீ எங்கப்பா அம்மாவை அப்புறம் பார்க்கவே இல்லையா? பாவநாசம் போகலை?"

"எங்கப்பாவை மாத்திட்டாங்க. மணிமுத்தாறுக்குப் போட்டுட்டாங்க."

"ஒண்ணரை வருஷமா பாபநாசம் போகலைன்னு சொல்லு."

"போயிருந்தேன்."

"எங்கப்பாவைப் பார்க்கலையா?"

"இல்லை."

"ஏன்?"

"சொன்னேனே. கோபம்."

"என்னை உனக்குக் கல்யாணம் செய்து கொடுக்கலைன்னு கோபம். இல்லை?" என்று சிரித்தாள்.

"ஆமாம். அந்த ஏமாற்றம் என்னை ரொம்ப பாதிச்சுச்சு. அதுக்கப்புறம் நடந்தது எல்லாம் தெரியுமே உனக்கு!"

"என்ன நடந்தது?"

"அப்புறம் சொல்றேன்."

"நானும் நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டு இருந்தா எப்படி இருந்திருக்கும்?"

"நீதான் சொல்லேன்."

"ம்... வந்து... நீ எங்க வேலைல இருந்த, மெட்ராஸ்ல இல்லை?"

"வீடு எல்லாம் கூடப் பார்த்து வெச்சிருந்தேன்."

"நிறைய டமில் மூவிஸ் பார்த்திருக்கலாமில்லை? அதெல்லாம் இப்ப வீடியோவில் வர்றது. அன்னிக்கு என்ன பார்த்தேன்? சுஹாஸினியும் நாலு ஃப்ரெண்ட்**ஸு**ம்..."

"நான் மூவிஸ் பார்த்து ரொம்ப நாளாச்சு..."

"ஈ.ட்டி பார்த்தியோ?"

"மது, எப்படியாவது, எப்பவாவது நடந்ததைப் பத்தி வருத்தப் பட்டிருக்கியோ?"

"அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் 'ஆர்லண்டோ போன உடனே ராதா போன் பண்ணச் சொல்லிருக்கு' என்றாள். இங்க போன் எவ்வளவு வசதி பார்த்தியா?"

"மது, உனக்கு நடந்தது எல்லாம் ஞாபகம் இருக்கா? திருநெல்வேலி ஜங்ஷன்ல என்கூட ரெயிலோடே ஓடி வந்தியே, அது ஞாபகம் இருக்கா?"

"எப்ப?"

"எனக்கு உன்கூட இருந்த ஒவ்வொரு செகண்டும் ஞாபகம் இருக்குது. நீபேசின பேச்சு, எழுதின லெட்டர்!"

"லெட்டர் எல்லாம் கூடவா ஞாபகம் வெச்சுட்டிருக்க?"

"டியர் ரகு. எனக்கு நீ போனப்புறம் ரொம்ப சாப்பாடு பிடிக்கலை..."

"அப்படியா எழுதியிருந்தேன்?"

"மிஸ் யூ அண்ட் கிஸ்யூ'ன்னு கூட எழுதியிருந்தே மது. உன்னோட முழுசா பேச சந்தர்ப்பம் இப்பதான் கிடைக்கிறதினாலே, உங்கிட்ட இதை நான் சொல்லி ஆகணும். நீ என்னை ரொம்ப ரொம்ப ஏமாத்திட்டே!"

"அப்படியா?" என்றாள். அவனை நேருக்கு நேர் பார்த்தாள். 'இவள் யார்? குழந்தையா? அசடா? அழுத்தக்காரியா? இன்னும் தெரியவில்லையே... எப்படி அத்தனையும் ஒரு சின்ன 'அப்படியா'வில் அடக்க முடிகிறது இவளால்? எப்போதும் உள்ளத்தில் உள்ளதைத் திறந்து சொல்ல முடியாதவளா? சொல்லத் தெரியாதவளா?

"அதோ, நிலா பாரு! நம்ப கூடவே வருது?" என்றாள்.

ரகுபதி இவளுடன் எதற்காக வந்தோம் என்று வருத்தப்பட்டான்.

## 13

ஆர்லண்டோ விமான நிலையத்தில் இறங்கியபோது ராத்திரி மணி ஒன்பதாகி விட்டது. ரகுபதிக்கு அப்போதிலிருந்தே ரூம் பிரச்னை, நரம்பில் துடித்தது. இரண்டு பேரும் ஒரே ரூம் என்றால்?

விமான நிலையத்திலிருந்து வாக்வே, தரையடி தானியங்கி ரெயில் இதிலெல்லாம் போகும் போது கூட அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். டிஸ்னிவர்ல்டுக்கும் எப்காட் சென்டருக்கும் வழிகாட்டி விமான நிலையத்திலேயே இருந்தாள். அவளிடம் மதுமிதா பழக்கப்பட்டது போல தன் விசா கார்டைக் காட்டி விசாரிக்க, இருவரும் அமெரிக்க ஆங்கிலம் பேசுவதை விந்தையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வா ரகு! நமக்கு டிஸ்னிவர்ல்டிலேயே தங்க ஏற்பாடாயிருக்கு."

"அங்க எப்படி போறது?"

"ஓட்டலல்ல இருந்தே பஸ் வரும் பத்து நிமிஷத்தில."

வெளியே வந்தபோதே "கம்பா போகலாமா?" என்றாள்.

"நீ எங்க அழைச்சுட்டு போறியோ அங்க!"

"டிஸ்னிவர்ல்ட் வந்திருக்கியா நீ?"

"நியூயார்க் முக்கால்வாசி பார்த்ததில்லை நான். ஸ்டாட்டன் ஐலண்டிலிருந்து காலேஜ் போகிற வழி தெரியும். அவ்வளவுதான்."

"நான் டிஸ்னிலாண்டு பார்த்திருக்கேன். டிஸ்னிவர்ல்ட்ட பார்த்ததில்லை. எப்காட் சென்டர்னு புதுசா வந்திருக்கு. அதையும் பார்த்துரலாம்."

"நீதான் காப்டன் இப்ப" என்றான். "நான் உன் பின்னாடியே பெட்டியைத் தூக்கிட்டு வர்றேன். தாஹித்தி ஓட்டலா? நாம இப்ப ஹவாய்க்கு வந்திருக்கமா என்ன?"

"இல்லை டிஸ்னிவர்ல்ட்டில கூட ஒரு வீட்டில் தாஹித்தி இருக்கு!"

பஸ் கதவுகள் தானாகத் திறந்து கொள்ள, டிரைவர் இறங்கி அவர்கள் பெட்டிகளை ஒரு கையால் லாவி பாஸ் அடியில் செலுத்தி விட்டு, ஏறிக்கொண்டு ஸிபி ரேடியோவில் பேசிவிட்டுப் புறப்பட்டதை ஆச்சரியத்துடன் பார்த்தான் ரகு.

"ஒரு டிரைவர்தான் எத்தனை காரியம் செய்யறான் பாரு – டிரைவர், போர்ட்டர், ரேடியோ ஆப்பரேட்டர்."

நவீனமாக இருப்பதே தெரியாமல் பஸிஃபிக் தீவின் அம்சங்களுடன் வேடிக்கையாக இருந்தது அந்த ஓட்டல். பணிப்பெண்கள் காதில் பெரிதாக பூ வைத்திருந்தார்கள். பணியாளர்கள் கர்ரே முரே என்று சட்டை அணிந்திருந்தார்கள். தலைக்கு மேல் மானோ ரெயில் போய்க் கொண்டிருந்தது. ஓட்டலின் லாபிக்குள்ளே நுழைந்து விடும்போல இருந்தது.

"**ஹூ**லா ஆடாமல் இருந்தால் சரி, என்றாள். "வெல்கம் டு டிஸ்னிவர்ல்ட்!" ஒரு பெண் கலர் கலராகக் காகிதங்களைக் கொடுத்தாள். அறையின் சாவியே பிரம்மாண்டமாக இருந்தது. சாவிதான்.

ரகுபதி காதுகளில் உஷ்ணமாக உணர்ந்தான். அரை டிராயர் போட்டுக் கொண்டு அமெரிக்கர்கள் அலைந்தார்கள்.

"என்ன சிரிக்கறே மது?"

"இந்த மாதிரி நீ டிராயர் போட்டுக்கிட்டா எப்படி இருப்பன்னு யோசித்துப் பார்க்கறேன்."

எல்லாரும் ஹாய் ஹாய் என்று ரொம்ப நாள் பழக்கம் போல் சிரித்துப் பேசினார்கள்.

அறை மிகப்பெரிதாக இருந்தது. இரட்டை படுக்கை. முன்படுக்கை தனியாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு திவான் அமைந்திருந்தது. டெலிவிஷன் இருந்தது. பெரிசாகக் கண்ணாடியில் மதுமிதா பக்கவாட்டில் தெரிந்தாள். "அப்பா ஐ'ம் டயர்ட்" என்று படுக்கையில் படுத்துக் கொண்டு சோம்பல் முறித்தாள். படுத்துக் கொண்டே திருக டி.வி. உயிர் பெற்று அதன் சானல்களை பட்பட்டென்று மாற்றினாள். பேஸ்பால் – போலந்து – யாரோ சுட்டுவிட்டு ஓடுகிறார்கள் – ஒரு கறுப்பு வெளுப்பு படம் – கார்ட்டூன் – புட்பால் என்னும் ராட்சச ஆட்டம்–யாரோ யாரையோ பச்சென்று முத்தம்.

"போர்" என்று உட்கார்ந்தாள். "ராத்திரி என்ன சாப்பிடற?"

"ஏதாவது ஸ்டோருக்குப் போய் பழங்களும் யோகர்ட்டும் வாங்கிண்டு வந்துர்றேன். எனக்கு அது போதும்' பெட்டிகளை அலமாரியில் வைத்தான். "உட்காரு ரகு, சங்கோஜப்படறியே."

பக்கத்துப் படுக்கை விளிம்பில் உட்கார்ந்தான்.

"சொல்லு!" என்றாள்.

"என்ன சொல்ல?"

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கலைன்னு ரொம்ப நொந்து போய்ட்டியா?"

"ஆமாம்!" தற்கொலை முயற்சியைச் சொல்ல வேண்டாம் என்று தோன்றியது.

"உங்கப்பா உனக்கு வேற பெண் பார்க்கலையா?"

"கல்யாணம் வேண்டாம்னுட்டேன்."

"ஏன்?"

"படிச்சப்புறம் பார்த்துக்கலாம்"
"அமெரிக்காவில் எத்தனை நாள் இருக்கப் போறே?"

"படிப்பு முடியற வரைக்கும் ரெண்டு வருஷமாவது இருந்தாகணும்."

"வேலை கிடைச்சா இங்கேயே பர்மனண்டா இருந்துருவியா?"

"அதெல்லாம் இப்ப சாத்தியமில்லை. படிப்பு முடிஞ்சப்புறம் துரத்தி விட்டுருவாங்க."

"இந்தியாவில் இந்த படிப்பு இல்லையா?"

"இருக்கு!"

"பின்ன!"

"எதுக்கு இங்க வந்தேன்னு கேக்கறியா? அப்பாதான் பிடிவாதமாக உன்னாலயும் முடியும்னு சாதிச்சுக் காட்டுன்னு அனுப்பிச்சு வெச்சிருக்காரு."

அவள் எழுந்து, "எனக்கு லேசா தலைவலியா இருக்கு. நீ ஸ்டோருக்கு போய்ட்டு வர்றப்ப எனக்கு ஏதாவது மாத்திரை வாங்கிட்டு வரிறியா." என்று பாத்ரூமுக்குள் போனாள்.

சற்று நேரம் ரகுபதி அநாதையாய் அசைந்து கொண்டிருந்த டி.வி.யைப் பார்த்தான். படுக்கைகள் ஒட்ட வைத்துப் போடப்பட்டிருந்தன. ஏர்கண்டிஷனரைத் திருகிப் பார்த்தான். வாசல்புறம் போட்டிருந்த சோபா அவனுக்குப் போதுமானதாக இருக்கும் என்று தோன்றியது.

மதுமிதா வெளியே வந்து, "நீயும் போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிக்க. ஓ, நீ ஸ்டோருக்குப் போகணும்னு சொன்ன இல்லை? இங்க ஸ்டோர் இருக்குமாங்கறது சந்தேகம்தான். ஸிட்டி பக்கம் போக வேண்டியிருக்குமோ என்னவோ?– என்ன பார்க்கறே?"

"இந்த டிரஸ்ஸை நீ பாவநாசத்தில் ஒருமுறை போட்டுக்கிட்டு இருந்தே!"

"ஞாபகம் வெச்சிருக்கியா?"

"மது, நீ சந்தோஷமா இருக்கியா?"

"இப்பவா?"

"எப்பவுமே, இங்க அமெரிக்காவிலே கல்யாண வாழ்க்கை எப்படி இருக்கு?"

"எப்படி இருக்குன்னு கேட்ட... அது வந்து, ராதா வந்து ரொம்ப பிஸி. எனக்கு வீட்டில நிறைய டைம் இருக்கு டி.வி. பார்த்து போர் அடிக்கும். நிறைய திங்ஸ் வாங்கிட்டேன்.

ஏராளம் பாக்கிங் கேஸ்ல இருந்து பிரிக்காமயே நிறைய இருக்குது. எனக்குன்னு தனி கார் இருக்குது. டிரைவ் பண்றேன். ப்ளேஸ் பார்க்கறேன். அப்பப்ப இண்டியன் அஸோஸியேஷன்ல ஃபங்ஷன் வந்தப்ப போவேன். டமில் மூவிஸ் வீடியோவில பார்ப்பேன். வீக் எண்ட் எப்பவாவது வெளியே போவோம். பிட்ஸ்பர்க் போவோம். ஹ்யூஸ்டன் ஒருமுறை போய் வந்தேன். இப்படி போய்கிட்டு இருக்கு லைஃப்..."

"இது உனக்குப் பிடிச்சிருக்கா?"

"அமெரிக்கால எல்லாரும் இப்படித்தானே இருக்காங்க. சில இண்டியன்ஸ் வேலைக்குப் போறாங்க... வேலைக்கு எதுக்குப் போகணும்? பணம் வர்றதுக்கு ராதா நிறையவே சம்பாதிக்கிறது... ராதா சம்பளம் எத்தனை தெரியுமா? நைன்ட்டி! ரொம்ப டாக்ஸ் கட்டறோம். எங்க வீட்டை நீ பார்க்கலை இல்லை? மூணு லெவல்..."

"ராதாகிஷன் உன்னை நல்லா வெச்சிக்கிட்டு இருக்காரா? நல்லா ட்ரீட் பண்றாரா?"

"நான் கேட்டது எல்லாம் கொடுத்துருவாரு. எனக்குன்னு க்ரெடிட் கார்டு நாலு இருக்கு. ஓ எப்பவாவது உட்லண்ட்ஸ் போய் மசால் தோசை சாப்பிடுவோம். மற்ற இண்டியன்ஸ் கூட பார்ட்டி வைப்போம்..."

"குக்கிங் எல்லாம்?"

"வீக் எண்ட்தான் குக்கிங். மற்றபடி ஃபிரிஜ்ஜுக்குள்ள ஏது இருக்கோ அதை எடுத்துச் சாப்பிடுவோம். ராதா ஹெல்ப் பண்ணுவார். இங்கதான் எல்லாமே ப்ரீகுக்ட். சப்பாத்திக்கூட ப்ரீகுக்டா கிடைக்கும்."

"மது, இதுதான் உன்னோட குறிக்கோளா?"

"குறிக்கோள்னா?"

"உன் கணவனுக்கும் உன்மேல நல்ல நம்பிக்கை மது!"

"ஆமாம். பைசா கணக்கு கேக்கவே கேக்காது."

"அதுக்கு சொல்லலை மது. தைரியமா உன்னை என் கூட அனுப்பியிருக்காரே...!"

"ஏன், அதுல என்ன? சேகர் கூட பிட்ஸ்பர்க் போயிருந்தேனே கார்ல. அப்பகூட ராதா வரலையே!"

"அதில்லை மது! நானும் நீயும் ஒரு காலத்தில்..."

"ஓ எஸ்! காதல் பண்ணம்கறியா..." அதான் ஆயிருச்சே. நீ..."

"நிஜமாவே தீர்ந்து போச்சா மது?"

"நீ என்ன கேக்கறே?"

"என் மேல உனக்கு எந்தவிதமான ஃபீலிங்கும் இல்லையா?"

"ஃபீலிங்னா? லவ் அண்ட் ஆல் தட்?"

"இல்லை, ஏமாத்திட்டேன்னு ஒருவிதமான ஸிம்பதி கூட?"

"ரகு, நீயும் நானும் இன்னும் ஃப்ரண்ட்ஸ்" என்றாள்.

ரகு எழுந்து "நான் போய் சாப்பிட எதாவது கிடைச்சா வாங்கிட்டு வர்றேன்."

"சரி போய்டுட்டு சீக்கிரம் வந்துரு" என்றாள்.

**கீ**ழே போனால் அந்த மாதிரி ஸ்டோர் அந்த வட்டாரத்திலேயே இல்லை. அதற்காக ஓர்லண்டோ டவுன் போக வேண்டும் என்றும் ராபிட் பஸ்கள் வரும். அதில் ஏறிக்கொண்டு அஞ்சு டாலரோ என்னவோ கொடுத்தால் போகலாம் என்றும் செய்தி கிடைத்தது. பையில் சில்லறை அதிகம் இல்லை. ட்ராவலர்ஸ் செக்காக இருந்தது. அறைக்குப் போய் அவளிடம் கொஞ்சம் பணம் கேட்டு வாங்கிச் செல்லலாம் என்று திரும்பிச் சென்று அறைக்கதவைத் திறந்தபோது டி.வி. ஓடிக்கொண்டிருக்க மதுமிதா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஒரு காலை மடக்கிக்கொண்டு. வாய் திறந்து, மார்பு மேலும் கீழும் அசைய, கவலையில்லாத பூனைக்குட்டி போல உறங்கிக் கொண்டிருந்தாள். வயிறு லேசாகத் தெரிந்தது.

இந்த ஷர்ட் எனக்கு நல்லா இருக்கா ஸார்!

பிரமாதம். உனக்கு எல்லா டிரஸ்**ஸு**ம் நல்லாவே இருக்கு.

சுதா ரொம்ப கலாட்டா பண்றான். குதிரைக்குட்டி மாதிரி இருக்குன்னான்.

இங்க குண்டாயிட்டானாம். அம்மா சொல்றாங்க இந்த வயசுக்கு இப்படித்தான் இருக்கணுமாம். ஸார் ஐ டோண்ட் வேர் ப்ரா தெரியுமா?

பரிசோதித்துப் பார்க்க இப்போது ஆவலாக இருந்தது. அவன் பெருமூச்சு விடுவதும் மெல்ல அவள் மார்பகம் அலைவதும்... அருகே சென்றான். அவள் முகத்தின் அருகே குனிந்தான். லேசாக வாசனை வீசியது. அவள் மார்பின் பித்தான் தெரிந்தது. அவள் மூச்சின் சூடு தெரிந்தது.

விலகிக் கொண்டான். ஒரு தலையணையை எடுத்துக்கொண்டு வெளிப்பகுதிக்கு வந்து சோபாவில் சாய்ந்து படுத்தான். சற்று நேரம் பசித்தது. பசிக்கட்டும் அந்த எண்ணத்திற்குத் தண்டனை அதுதான். வயிறு காயட்டும்.

"**கு**ட்மார்னிங்! என்ன இப்படி குறட்டை விடறே? காப்பிக்கொட்டை மிஷின் மாதிரி?"

"குட்மார்னிங்!"

"நான் குளிச்சாச்சு. ஷவர் இஸ் வெரி குட்! என்ன என்னவோ அட்டாச்மெண்ட் எல்லாம் இருக்கு. முதுகு கூட பிடிச்சுவிடும். சீக்கிரம் குளிச்சுட்டு வா. இன்னிக்கு டிஸ்னி வால்ட் பார்த்துட்டு நாளைக்கு எப்காட் சென்ட்டர் போகலாம்.

அதைத் தனி உலகம் என்றுதான் சொல்ல வேண்டும். பெரியவர்களைக் குழந்தைகளாக்கும். சிலவேளை பைத்தியமடிக்கும் உலகம். 'மெயின் ஸ்ட்ரிட். யூ.எஸ்.ஏ.யில் சினிமா செட்டின் இடையில் நடந்து போவது போலத்தான் இருந்தது. பிரமாதமாக முகப்புக்கொண்டு கடைகள். தூரத்தே கனவு மாளிகை போல ஒரு கோட்டை 'டுமாரோலாண்ட்,' 'ஃப்ராண்டியர் லாண்ட்' எந்தப் பக்கம் திரும்புவது என்று பிரமிப்பு.

"இஷ்டத்துக்கு நடக்கலாம் ரகு. எங்க வேணா நுழையலாம். தின்னுக்கிட்டே இருக்கலாம் முதல்ல ஐஸ்க்ரீம், அப்புறம் ஐஸ் க்ரீம், பாப்கார்ன்..."

டிஸ்னியின் முதல் கார்ட்டூன் படங்கள் பார்த்தார்கள், நின்று கொண்டே பழைய சாப்ளின் படங்கள் பார்த்தார்கள். ஜெனரல் எலக்ட்ரிக் பொம்மை மனிதர்கள் மின்சாரத்தில் சாதனங்களில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியைப் பேசினார்கள். ராக்கெட்டில் சந்திரனுக்குச் சென்றார்கள். கேபிள் கார், ரோலர் கோஸ்டர்... நடுப்பகல் வரை ஐந்தில் ஒரு பகுதிதான் பார்க்க முடிந்தது. களைத்துப் போய் ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு, "ரொம்ப பார்த்தா போர் அடிக்கிறது இல்லை?" என்றாள்.

"எல்லாமே அப்படித்தான்!"

"சொல்றது சரிதான் ரகு. அமெரிக்கா, அமெரிக்கான்னு அங்க இருக்கறப்ப எல்லாம் எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்? இங்க வந்ததும் எதிர்பார்த்த அளவு, போட்டோவில் காட்டற மாதிரி இல்லை. கொஞ்சம் அதுக்கு கம்மியாத்தான் இருக்கு."

"டிஸ்னிவர்ல்ட் தவிர."

"இது உண்மையான அமெரிக்கா இல்ல ரகு!"

"உண்மையான அமெரிக்கா என்ன, சொல்வேன்?"

"அது எங்கயோ கண்டரி ஸைடில இருக்குங்கறாங்க. வாஷிங்டன் போய்ப் பாரு. அது வேற! மத்தபடி எல்லா அமெரிக்காவும் ஒண்ணு. எல்லா நகரமும் ஒண்ணுதான் டௌன் டவுன் இருக்கும். ஃபாஸ்புட் மக்டோனல்ட்ஸ், வெண்டிஸ், ஸ்கைஸ்ரேப்பர்ஸ், பளபளன்னு ஏர்போர்ட், நம்ம ஊர் அழுக்கா இருந்தாலும் ஊருக்கு ஊர் வேறவிதமான அழுக்கா இருக்கும். ஒரு ஊர் போல இன்னொரு ஊர்னு சொல்ல முடியாது."

"ராதா திரும்பிப் போறதைப் பத்தி பேசறாரா?"

"அதைப்பத்தி பேசினா 'அங்க என்ன இருக்கு? நீ வேணா போய்ட்டு வா'ங்கறது."

"அப்ப பர்மனண்டா உனக்கு அமெரிக்கா தானா?"

"ஆமா, ராதா ஸிட்டிஸன். நான் க்ரீன் கார்டு."

"பாவநாகத்தில பாணதீர்த்தத்தில் போட்டிங் போயிருந்தமே, ஞாபகம் இருக்கா?"

"வா ரகு. போகலாம். பொம்மை ரயில்ல சுத்தலாம்."

ஆலிஸின் மாட் ஹாட்டர்ஸ் பார்ட்டியில் பிரம்மாண்ட தேநீர் கோப்பைகளில் குடை ராட்டினம் சுற்றி விட்டு, அதை அடுத்து இரட்டை இரட்டையாக ஊர்ந்து குகைக்குள் சென்ற வண்டியில் ஏறிக் கொண்டார்கள். உள்ளே நுழைந்ததும் அவர்களை இருள் சூழ்ந்து கொண்டது. வண்டி மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

திடீர் என்று வேகமாகப் பொம்மை வௌவாலும் ஒரு சூனியக் காரியும் இருட்டில் திடுதிப்பென்று தோன்ற மதுமிதா 'ஊ' என்று அலறி ரகுபதியை இறுக்கி அணைத்துக்கொண்டாள்.

## 14

சற்று நேரம் இருட்டில் அவளை அணைத்துக் கொண்டபோது, ரகுபதிக்குப் பழைய நாள்கள் நினைவு வந்து, இரண்டு பேரும் பாபநாசத்தில் இருப்பதுபோல உணர்ச்சி ஏற்பட்டது. மதுமிதாவிற்கென்று அவள் அலங்காரங்களையும் பவுடர் பர்ஃப்யூம்களையும் மீறி ஒரு வாசனை இருந்தது. அந்த வாசனை கல்யாணமோ, அமெரிக்காவோ இன்னும் அழித்து விடாமல், பத்திரமாக இருந்தது, அவள் அவன் கழுத்தருகில் தலை சாய்த்திருந்தாள். பக்கத்தில் அவள் மார்பு அவன் மேல் பட்டது. இந்த ராத்திரி யுக இறுதிவரை நீடிக்கக் கூடாதோ என்று யோசிப்பதற்குள் பளிச்சென்று வெளிச்சம் வந்துவிட, மது அவனைக் கட்டிக்கொண்டிருப்பதை உணர்ந்து, "ஸாரி" என்றாள். 'பயமா இருந்தது.'

ரகுபதிக்குப் பேச வரவில்லை. அவன் வைராக்கியங்கள் எல்லாம் நீர்த்துப் போயிருந்தன.

"போன தடவை போனதும் டிஸ்னிலாண்டில் இந்த மாதிரி ஒண்ணு இருக்கு. பயந்து போயிட்டேன். ஸாரி ரகு, தப்பா நினைச்சுக்காதே என்ன?"

"சேச்சே..."

"பயமா இருக்கிறதா எதுவும் வேண்டாம், வேற எதாவது பார்க்கலாம் "ஸீ வர்ல்ட்" போகலாம் என்றாள்.

"அது எங்க இருக்கு?"

"எங்க இருந்தா என்ன? ரகு, கார் ரெண்டல் எடுத்துர்றேன். 'ஏவிஸ்'னு இங்க எங்கயாவது இருந்தா பாரு ரெண்டு நாளைக்கு எடுத்துரலாம். இஷ்டப்படி சுத்தலாம்..."

"பணம்?"

"க்ரெடிட் கார்டு இருக்கு கவலைப்படாதே. ஒரு காசு இல்லாமே இந்த அமெரிக்காவில் ப்ளாஸ்டிக்கைக் காட்டியே ஜீவிக்க முடியும்?"

"எப்பவாவது பே பண்ணித்தானே ஆகணும்?"

"அதுக்குத்தான் ராதா இருக்குதே! ராதான்னப்புறம் ஞாபகம் வருது; அதுக்கு போன் பண்ணணும். யூரோப் போறதுக்குள்ள போன் பண்ணுன்னு சொல்லிருக்கு. கொஞ்சம் இரு. இங்க எங்கேயாவது பூத் இருக்கான்னு பாக்கறேன்..."

"சில்லறை வேணுமா?"

"எங்கிட்ட இருக்கு. கலெக்ட் கால்தான் போடப் போறேன்."

நவீனமாக இருந்த போன் தடுப்புகளின் இடையில் நின்று, பட்டன்களை ஒத்தினவளைக் கண்கொட்டாமல் பார்த்தான். சடுதியில் விஞ்ஞானம் வேலை செய்து டிஸ்னிவர்ல்டில் ஒரு மூலையிலிருந்து உடனே நியூயார்க் இணைப்புக் கிடைத்தது. அவள் கணவனுடன் கையை ஆட்டிச் சிரித்துக் கொண்டு பேசியதை ஆர்வத்துடன் கவனித்தான். இவளை என்ன என்று எண்ணுவது? அவள் மேல் வேணும் என்றே பட்டபோது அவள் கொஞ்சங்கூட விலகவில்லை. பல சமயம், தன் கைகளை அவள்

கைகளுடன் கோத்துக் கொண்டு ஒட்டினாற் போல் வருகிறாள். தகாத இடத்தில் பட்டாலும் தப்பா எடுத்துக் கொள்வதில்லை...

சே, என்ன மோசமான மனசு எனக்கு என்று கடிந்து கொண்டான்.

டெலிபோன் பேசிவிட்டுத் திரும்பி வந்து, 'ராதா கிட்ட பேசிட்டன்" என்றாள் குதூகலத்துடன்.
"என்ன சொன்னார்...?"

"எல்லாம் சுத்திப் பாத்துட்டு 'மெல்ல வா'ன்னு... யூரோப்ல இருந்து திரும்பி வர மூணு நாளாகுமாம். உன்னை அப்படியே பயந்து போய் கட்டிப்புடிச்சுட்டதை ராதாகிட்ட சொல்லிட்டேன்."

"அதுக்கு என்ன சொன்னார்?"

"சிரிச்சுது 'ஹேவ் நைஸ் டைம்னு..."

"நீங்க ரெண்டு பேரும் ரொம்ப ஸ்ட்ரேஞ்ச் கப்பிள் மது!" என்றான்.

"ஏன்?"

"இது இந்தியாவில் நடக்குமா? தன் மனைவியை ஒரு கணவன் அவளுடைய மாஜி காதலனோடயே அனுப்பறது? அவ போன் பண்ணி, அவனை இறுகக் கட்டிக்கிட்டேன்னு சொல்றது? அதுக்கு அவன் 'கோ அஹட் ஹாவ் எ நைஸ் டைம்னு' சொல்றது"

"அது நீ எப்படிப் பாக்கறங்கறதில இருக்கில்லையா ரகு? இதில் என்ன தப்புன்னு இருந்துட்டா? எனக்கு ராதா கிட்ட ரொம்ப ஃபெய்த் ஜாஸ்தி. ராதாவுக்கும் எங்கிட்ட, நான் ஒண்ணையும் மறைச்சு வைக்க மாட்டேன். ராதாவும் எல்லாத்தையும் சொல்லிடும். கல்யாணத்துக்கு முந்தி ஒரு பெண்கூட நெக் பண்ணதெல்லாம் சொல்லியாச்சு. ரெண்டு பேருக்குள்ளேயும் ரகசியம் இல்லாட்டி ரொம்ப ஈஸியாயிடுது. சந்தேகம், சண்டை எதுவுமே கிடையாது. இல்லையா ரகு? நீ கேட்டாயே. நான் ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கேன் ரகு. ராதா ஒரு ஜெம் அஃப் எ ஹேஸ்பென்ட், நான் கேட்டது எல்லாம் வாங்கித்தரும். யார்கூட வேணா பேசலாம். போகலாம். ராதாவுக்கு நல்லாத் தெரியும். நான் வந்த பேசிக்கா அதுங்கிட்ட ஃபெய்த்ஃபுல்லா இருக்கேன். அதை நான் லவ் பண்றேன்னு தெரியும். கல்யாணத்துக்கு முந்தி எப்படி இருந்தேன்னு எனக்குக் கவலையே கிடையாது மது? நான் ஒண்ணும் ஒண்ணுமே செய்யாம ப்யூரா இல்லை. அப்படி யாராவது சொன்னா அது பொய். நீ ரகுவைக் காதலிச்சாப்பல நான் ஒரு பெண்ணோட டேட் பண்ணிட்டிருந்தேன். அதனால என்ன? கல்யாணம் ஆன பிறகு எப்படி இருக்கணும்ங்கறதுதான் முக்கியம்னு சொல்லும். அந்த விஷயத்தில் நான் ரொம்ப லக்கி ரகு."

"அவரும்தான்? மது, உன், மாதிரி ஒரு பெண் கிடைக்குறதுக்கு அவர் கொடுத்து வச்சிருக்கணும்..."

"அப்படிச் சொல்லாத. அமெரிக்கால பல பெண்ணுங்க என்ன ப்ரெட்டி தெரியுமா?"

"இருக்கலாம். ஆனா. உன் அழகு தனிப்பட்ட அழகு மது."

"எத்தனை நாளைக்கு வரும்... எல்லாருக்கும் உள்ளுக்குள்ள ஓர் அழகு இருக்குது ரகு. அதுதான் அப்படியே இருக்கும். நான் சொல்றது புரியுதா?"

"புரியுதுன்னு நினைக்கிறேன்."

**ஸீ** வர்ல்டுக்கு சாயங்காலம் போய்ச் சேர்ந்தார்கள். டால்பின் மீன்கள் சகஜமாக மேலே எம்பி, கையில் இருப்பதை லாவகமாகப் பறிப்பதைப் பார்த்தார்கள். பெரிய ஏரியில் நீர்ச் சறுக்கல் ஆடும் யுவன் யுவதிகளைப் பார்த்து பிரமித்தார்கள். ஸீல் மீன்களை வைத்து சிரிப்பாக நாடகமே நடத்திக் காட்டினார்கள்.

"நம்ம மனுஷங்களைவிட புத்திசாலித்தனமாக இருக்குது பாரு மீன்கள்..." என்றாள்.

"கதவைத் தட்டினா அவன் திரும்பிப் பார்த்தா அதுவும் திரும்பிப் பார்க்கறது"

"எல்லாம் பழக்கம்தான், ரிஃப்ளக்ஸ் ஆக்ஷன்தான். அப்பப்போ அதுக்கு சின்ன மீனை வாயில கொடுத்துக்கிட்டே இருக்கான் பாரு... அதுதான் அதுக்குச் செலுத்தற சக்தி உணவு? அதை வெச்சுகிட்டு மனுஷன் அதை டீஸ் பண்ணி டீஸ் பண்ணி பழக்கறான்."

"அப்ப இந்த மீனுக்குக் கதை தெரியாதா? கண்ணை எல்லாம் கசக்குது, நடக்குது, பிரேக் போட்டாப்லே நிக்குது?"

"எல்லாம் பசியால செலுத்தப்பட்ட இயந்திரச் செயல்கள்."

"நாமகூட ஒரு காலத்தில் இப்படி இருந்தமோ?"

"இப்பவே ஸோஷல் பிஹேவியர் படிக்கிறபோது பற்பல விதத்தில் அந்த மீனுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லேன்னுதான் தோணுது..."

"போடா பொய்யி?" என்று ரகுபதியின் தலைமேல் நெத்தினாள். "ராதாகிட்ட சொன்னா சிரிக்கும். ராதா சொல்லும்... 'மேனேஜ்மெண்டில ஒவ்வொருத்தரும் ஒரு தனிப்பட்ட ஐலண்டு'ன்னு சொல்லும். 'யாரையும் யாரும் முழுக்கத் தெரிஞ்சுக்க முடியாது'ன்னு சொல்லும்."

"அது ஒரு விதத்தில வாஸ்தவந்தான் மது."

கார் பார்க் பண்ணியிருந்த இடத்திற்கு நடந்து செல்லவே அரைமணி ஆயிற்று. மதுமிதா ஸ்ட்ராப் போட்டுக் கொண்டு, அவனையும் மடியில் கட்டிவிட்டு காரைக் கிளப்பி ஸர்ர் என்று பறந்தாள்.

"கார் நல்லா ஓட்டறே..."

"ராதா சொல்லும் அமெரிக்காவில ஆடுகூட கார் ஓட்டலாம். இந்தக் கார்ல பாரு எல்லாம் ஆட்டோமாட்டிக் ஒரே கியர்? 'பார்க்'ல இருந்து தள்ளணும். இப்படி 'டிரைவ்'க்கு தள்ளணும். அப்புறம் பெடலை மிதிக்கணும். அவ்ளதான். ஹைவேல போனா ஒரு ஸ்பீட் ஸெட் பண்ணி, இந்த பட்டனைத் தொட்டுட்டா காலையும் எடுத்துரலாம். ஸ்டியரிங்குக்குத்தான் இன்னும் ஆட்டோமாட்டிக் கண்டுபிடிக்கலை" என்றாள்.

திரும்ப வந்து அறைக்குள் நுழைந்தபோது, டெலிபோன் ஒலித்துக் கொண்டிருக்க, "ராதாதான் இருக்கும். யூரோப் போறதுக்கு முன்னாடி குட்பை சொல்லிக்க போன் பண்றன்னு சொல்லிச்சு" என்று, அதை ஆவலுடன் எடுத்துக் கேட்டுவிட்டு 'ஹாய் ராதா? என் கண்ணாச்சி குட்டி' என்று ரகுபதி இருப்பதை முற்றிலும் மறந்து பேசத் தொடங்கினாள்.

ரகுபதி ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். மாலை ஏழரை மணிக்கு சூரியன் போல மதுமிதா பேசுவதெல்லாம் பொய் போல, பாசாங்கு போல இருந்தது. அது அமெரிக்க வழக்கம். அன்பை மிகைப்படுத்துவது. இந்தத் தேசமே மிகைதானே? விளம்பரங்கள் பூராவும் மிகைதான்.

"கண்ணு டேக் கேர் ஆஃப் யூர் ஹெல்த். டோண்ட் ட்ரிங்க் டூ மச்."

"நானா? நான் கொஞ்சம் இரு... நாம எப்ப திரும்பறோம் ரகு?"

"நாளன்னைக்கு" என்றான். "இட் வாஸ் ஸோ நைஸ் ராட். யூஷட்'வ் கம் ஸ்டுப்பிட்?"

இருவரும் பிச்சுபிச்சு என்று டெலிபோனிலேயே முத்தம் பரிமாறிக் கொண்டார்கள். ரகுபதி தன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். இந்த மாதிரி நடத்தை அமெரிக்கர்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது. இந்தியர்களுக்கு செயற்கையாக இருக்கிறது.

போனை வைத்துவிட்டு, "கோபன் ஹாகன் போகப் போறதாம்? டு வாட்ச் ஆல் தோஸ் ந்யூட் கர்ள்ஸ்! போகாது. பிஸினஸ் பிஸினஸ்தான்? புதுசு புதுசா சின்ன கம்பெனியெல்லாம் வாங்கி வாங்கிப் போடறதுதான் பொழுதுபோக்கு. வாங்கிட்டு எங்கிட்ட ஒரு மாசம் அதைப் பத்தி போர் அடிக்கும்."

நீ இப்ப உன் கணவனைப் பத்தி பேசிப் பேசி போர் அடிக்கிறியே அதுபோல...

மதுமிதா படுக்கையில் படுத்தவாறே தலை வழியாக தன் சட்டையைக் கழற்றி, சாதுர்யமாக மாற்று உடையை மாட்டிக் கொண்டாள். காட்சியில் இருந்த சாமர்த்தியம் அவனைக் கிறங்க அடித்தது. இவளை இன்றிரவு கேட்டுப் பார்த்தால் என்ன?

கோபிக்க மாட்டாள். ஆனால் பத்தினித்தனத்தைக் காட்டுவாள். அமெரிக்கன் ரக பத்தினித்தனம்.

"ரகு! நீயே யோசிச்சுப் பாரு' எக்ஸெட்ரா... இவளைத் திறமையாக மாற்றியிருக்கிறான் ராதா. அதற்காக அவனுக்குப் பரிசு கொடுக்க வேண்டும்.

"சேச்சே! ஏன் அப்படி எண்ணுகிறாய்? உன் ஸினிஸிஸம் உன்னை விடாது. கணவன் மனைவி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் நம்பிக் கொண்டு, ஒருவர் மேல் ஒருவர் பூர்ண விசுவாசம் கொண்டு, ரகசியங்கள் ஒளிவு மறைவு எதுவும் இல்லாமல்..."

மதுமிதா தன் சட்டைக்குள் விரல் செலுத்தி ஒரு தங்க செயினை எடுத்து, 'இது என்ன தெரியுமோ ரகு?"

"ராதாகிஷன் படமா?" என்றான்.

"கரெக்ட். எப்படிக் கண்டுபிடிச்சே?"

"அது ஒருவிதமான ஹாபி எனக்கு" என்றான்.

**எ**க்ஸ்பெரிமெண்டல் ப்ரொட்டொடைப் கம்யூனிட்டி ஆஃப் டுமாரோ (எப்காட்) மறுதினம் முழுவதும் ரகுபதி தன்னையும் மதுமிதாவையும், தன் அமெரிக்க சூழ்நிலையையும் மறந்து, உலக சரித்திர நேற்றைய நாள்களை, நாளைகளை எலக்ட்ரானிக்ஸ் விந்தைகள் மூலம் 'அடியோ அனிமட் ரானிக்ஸ்' முறைப்படி

பிரமாண்ட டினோஸார்கள் எலக்ட்ரானிக்ஸ் உயிர் பெற்று, உலவ, நகரங்கள், நாகரிகங்கள் அத்தனையும் டிஸ்னியின் வழி வந்த இளைஞர்கள், அவர் கனவை நிஜப்படுத்தியிருந்த விந்தை நகரில் நாள் முழுவதும் போனதே தெரியாமல் கழிந்து விட்டது அவனுக்கு.

"மது! திஸ் இஸ் ரியலி ஒர்த் இட். ஒரு நாள் போதாது. நாளைக்குப் போகணும்..."

மதுவுக்கு அது அதிகம் பிடித்ததாகத் தெரியவில்லை. "போதும் ரகு. பாத்ததையேதானே பார்க்கிறோம்? எனக்கு இந்த கம்ப்யூட்டர் எல்லாம் சரியா புரியவே இல்லை."

"இதிவிட சுலபமா எக்ஸ்ப்ளெய்ன் பண்ண முடியுமா மது."

"ப்ச்! வா, போகலாம்.

"எங்க...?"

"வீட்டுக்குத்தான். நியூஜெர்ஸி திரும்பிரலாம்."

"ராதா இன்னும் வந்திருக்க மாட்டாரே..."

"பரவாயில்லை நாம போயிரலாம். என் வீட்டையும் பார்க்கணும் இல்லையா?"

"இனி வீட்டுக்கு எதுக்கு?"

"டி.வி. பார்க்கலாம். நான் உனக்கு ஒரு நாள் குக் பண்ணி சாப்பாடு போடறேன். ஹௌ எப்பௌட் இட்?"

"அதுகூட சரிதான்."

"மேரி உன்னை ப்ளே அழைச்சுட்டுப் போனாப்பல நானும் அழைச்சுட்டுப் போறேன். கோரஸ்லைன்."

"சரி போக வேண்டியதுதான். இட்ஸ் யுர் ட்ரிப்!"

ஃப்ளாரிடா விஜயத்தை ஒருநாள் குறைத்துக் கொண்டு, இரண்டாம் நாள் ராத்திரி திரும்பி விட்டார்கள். க்வார்டியாவில் பார்க் பண்ணியிருந்த காரை மறுபடி பெற்றுக்கொண்டு அவர்கள் இருவரும் ஜெர்ஸி திரும்பியபோது மணி இரவு ஒன்பது இருக்கும்.

"தப்பு பண்ணிட்டம். நிவார்க்ல ப்ளேன் பிடிச்சிருந்தா எங்க வீடு கிட்டக்க."

வீட்டின் வாசலில் சாவியை அவனிடம் கொடுத்துவிட்டு "நீ உள்ளே போய் ரிலாக்ஸ் பண்ணிட்டிரு ரகு. நான் போய் ஸ்டோர்ல தயிர், வெஜிடேபிள்ஸ் எல்லாம் வாங்கிட்டு வந்திர்றேன். ராத்திரி சமையல் பண்ணணுமே" என்றாள்.

"எனக்கு லைட்டெல்லாம் எங்க இருக்குன்னு தெரியாது மது."

"நோ ப்ராப்ளம். கதவைத் திறந்ததும் இடது பக்கத்தில் ஸ்விட்சு இருக்கும். அதைப் போட்டுக்க, பத்து நிமிஷத்தில வந்துர்றேன். ஸ்டோர் மூடிருவான். அதுக்குத்தான்."

அவள் காரைக் கிளப்பிக் கொண்டு செல்ல, அவள் கொடுத்த சாவியுடன் மெதுவாக அந்த வீட்டை அணுகினான். நிசப்தமாக இருந்தது. பெரிய வீடுதான். வெளியே விளக்கு எரிந்து கொண்டு தான் இருந்தது. அதன் மெலிய வெளிச்சத்தில் அவள் கொடுத்த சாவியை துவாரத்தில் முயன்று பார்த்தான். திறந்தது. கதவைத் தள்ளி தயக்கத்துடன் உள்ளே நுழைந்தான். இடப் பக்கம் துழாவி, அகப்பட்ட ஸ்விட்சைப் போட்டான். வெளிச்சம் பரவி வீட்டின் அடையாளங்கள் தெரிந்தன. நீலமான காரிடார் தெரிய இடப்பக்கத்தில் ஹால் இருக்கும் போல, கார்ப்பெட்டில் நடந்தான். ஹால் விளக்கு ஸ்விட்ச் இருக்கும் இடம் மட்டும் ஃப்ளாரஸண்ட் வெளிச்சத்தில் தெரிய அதைப் போட்டான்.

அவர்களைப் பார்த்தான்.

## 15

**வீ**ட்டில் யாருமில்லை என்று எதிர்பார்த்து உள்ளே நுழைந்தவனுக்கு அந்தக் காட்சி அதிர்ச்சி தந்தது. தரையில் ஒரு பெண்ணின் ஆடைகள் கிடந்தன. அருகிலேயே அவிழ்த்து வைக்கப்பட்ட ஷூ, பாண்ட் சோபா மறைத்துக் கொண்டிருக்க வெண்மையான கால்கள் விளிம்பில் தெரிந்தன. விளக்கைப் பொருத்தினபின் அதன் ஆச்சரியம். அவர்களுக்கு உறைக்க கொஞ்ச நேரம் ஆயிற்று. வீடியோவில் ப்ளூ ப்லிம் ஓடிக்கொண்டிருந்தது.

"மைகாட்! ஹூ த ஹெல் இட்!" என்று ஒரு தலை எட்டிப் பார்த்து.

"ராதாகிஷனின் தலை! எழுந்தான். மார்பில் ஏதும் இல்லாமல் அரை டிராயரை அவசரமாகப் போட்டுக் கொண்டிருக்க, ரகுபதி அப்படியே ஸ்தம்பித்துப் பார்த்துக் கொண்டிருக்க, அந்தப் பெண்ணும் மெல்ல எழுந்தாள். வாயில் எதையோ மென்று கொண்டிருந்தாள்.

"ஹனி, யூ டின்ட். டெல் மி இட்ஸ் எ பார்ட்டி!"

ராதாகிஷன் ரகுபதியைப் பார்த்து, "என்னது... எப்ப வந்தீங்க? எங்க மது?"

"ஸ்டோருக்குப் போயிருக்கா."

இதைக் கேட்டவுடன் ராதாகிஷன் உடனே சுறுசுறுப்பாகி, "நெல்லி, அப்! அப்! க்விக்! என்றான்.

"வாட்ஸிட் ராட்?" அவள் மார்பில் பற்பல இடங்களில் சிவந்து கன்னிப் போயிருந்தது. அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கலாம்.

"லேட்டர்! நௌ பீட்இட்!" என்றான். வீடியோவை நிறுத்தி அதன் காஸெட்டை உதறினான்.

அந்தப் பெண் தன் அரை நிர்வாணத்தைப் பற்றிக் கவலைப் படாமல் மெதுவாகக் கீழே கிடந்த தன் உடைகளைப் பொறுக்கிக் கொண்டு, அதைத் தன் மார்பின் மேல் அணிந்து கொண்டு, "கன் ஐ ஹாவ் எ ட்ரிங்க் ராட்?" என்றாள்.

"நோ டைம்! பீட் இட்! பிஃபோர் ஷீ கம்ஸ்' என்று அவள் உடையணிவதில் அவசர அவசரமாக உதவி செய்து மேலுடைகளைத் தாறுமாறாக அவள் மேல் அணிவித்து, அவள் தோளை அணைத்து, அவள் செருப்பைக் கையில் கொடுத்து அவளைத் தள்ளிக்கொண்டே சென்று "கொஞ்சம் இரு ரகு, இவளை அனுப்பிவிட்டு வந்துர்றேன்" என்று வாயிற் பக்கம் மறைந்தான்.

ரகுபதி பிரமை பிடித்தாற்போல நின்று கொண்டிருந்தான். வாசலில் கார் புறப்படுவதும் தெரிந்தது. "பை ஸீ யூ லேட்டர்" குரல்கள் கேட்டன. சற்று நேரத்தில் ராதாகிஷன் வந்தான்.

www.writersujatha.com

"என்னது, நாளைக்குன்னா வரதா இருந்திங்க...? ஒரு நாள் முன்னால் வர்றதா இருந்தா ஒரு போன் பண்ணக்கூடாதா? யூ கேவ் மி எ ஷாக்!"

"யூ ஆல்ஸோ கேவ் மி எ ஷாக். நீங்க யூரோப் போறதான்னா...."

"கான்ஸல் ஆயிருச்சு. ஹௌ வாஸ் யுர் டிரிப்? டிட் ஹேவ் எ நைஸ் டைம்?"

ரகுபதிக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவனால் ஒன்றுமே நடக்கவில்லை போல விசாரிக்க முடிகிறது? எப்படி?

"மது ஸ்டோருக்குப் போயிருக்காளா?"

"ஆமாம்."

"ஃப்யூ" தட்வாஸ் க்ளோஸ் நல்லவேளை!" என்று அவனைப் பார்த்துக் கண்ணடித்தான்.

வாசலில் கார் வந்து நிற்பது கண்ணாடி வழியாகத் தெரிய, அவன் அவசரமாக "ரகு! அவகிட்ட இப்ப சொல்லாத, இதைப் பத்தி முன்னால லெட்ஸ் டாக் இட் ஓவர், மான் டு மான்' இப்ப ஒண்ணும் சொல்லாத. ஓக்கே?" என்று கீழே கிடந்த பிராவைச் சுருட்டிப் பைக்குள் போட்டுக் கொண்டு "ஷி ஃபர்காட் ஹர் ப்ரா!" என்றான்.

மதுமிதா ஒரு பெரிய பிரவுன் பேப்பர் பை நிறைய தண்டுக் கீரை, தக்காளி, தயிர் என்று நிரம்ப முகத்தை மறைக்கும் அளவுக்கு எடுத்துக் கொண்டு வர, ராதா, "ஹலோ ஓ! ஸ்வீட் ஹார்ட்! லுக் **ஹூ** இஸ் ஹியர்?" என்றாள்.

ராதாவைப் பார்த்தும் மதுமிதா சட்டென்று முகம் பிரகாசமாகி, "ராட்! நீ யூரோப் போகலை?"

www.writersujatha.com

"இல்லை கண்ணு, கடைசி நிமிஷத்தில் கான்ஸல் ஆயிருச்சு..."

"லுக் அட் தட்! எனக்கு ஏன் போன் பண்ணலை ராட்? ஐ மிஸ்டு யூ வெரிமச். நீ வந்திருந்தா எவ்வளவு என்ஜாய் பண்ணியிருக்கலாம்! ரகு இதைக் கொஞ்சம் புடிச்சுக்க... என் ஹஸ்பண்டை கிஸ் பண்ணிட்டு வாங்கிக்கறேன்." என்று ரகுபதியின் கையில் அந்த பார்ஸலைக் கொடுத்துவிட்டு, அவன் கன்னத்தில் முத்தமிட்டு காதைக் கடித்தாள்.

ரகுபதி இந்த பக்கம் தெரிந்த ராதாவின் முகத்தையே பார்த்தான். அவன் லேசாகக் கண்ணடித்தான்.

"பாவி! படுபாவி!" என்றான் கண்களால்.

www.writersujatha.com

"என்னோட பர்ஃபூம் எல்லாம் வாரிப் பூசிக்கிட்டு என்ன பண்றே?"

"டி.வி. பார்த்துட்டு இருந்தேன். ஆர்லாண்டோ எப்படி இருந்தது? ஓட்டல்ல போன் பண்ணேன். நோ ரெஸ்பான்ஸ் சொன்னாங்க. எப்படி இருந்தது டிரிப்?"

"ரொம்ப நல்லா இருந்தது ராட். நீ பார்க்கலையேன்னுதான் எனக்கு வருத்தமா இருந்தது. ரகுவை கேளு. உன்னைப் பத்தியே பேசிக்கிட்டு இருந்தேன்!"

"பாரேன் பேதைப் பெண்ணே! ஏன் அந்தக் குள்ள மேஜை மேல் இரண்டு கிளாஸ் இருக்கிறது என்று, ஏன் சோபா கலைந்திருக்கிறது என்று, ஏன் ஆஷ்ட்ரே நிறைய சிகரெட் நிரம்பியிருக்கிறது... அவற்றில் சிலவற்றில் லிப்ஸ்டிக் கறை படிந்திருக்கிறது.... அவற்றில் சிலவற்றில் டாயா? அத்தனை அடி முட்டாளா நீ?"

"நான் போய் உங்க ரெண்டு பேருக்கும் சமையல் பண்றேன். இதோ பதினஞ்சு நிமிஷத்தில..."

"ரகு! உனக்கு ரொம்ப லேட்டாயிருச்சில்லை? உன்னை வேணா ஸ்டாட்டன் ஐலண்டில ட்ராப் பண்ணட்டுமா?"

மதுமிதா "நத்திங் டூயிங்! நான் அவனை சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறேன். சாப்ட்டப்புறம் எல்லாம்."

"ஓகே. ஓகே! யூ கோ அண்ட் குக்!"

அவள் உள்ளே செல்ல, ராதாகிஷன் அந்த ஆஷ்டிரேயையும், காலி கிளாஸையும் எடுத்துக் கொண்டான். "எக்ஸ்க்யூஸ் மி" என்று சொல்லி, பேஸ்மெண்ட் பக்கம் சென்றான். ரகுபதி இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லை.

கொஞ்ச நேரத்தில் விஸிலடித்துக் கொண்டே ராதா வந்ததும்,

"ஸோ? என்றான். "என்ன சொல்லுப்பா?"

"நீங்கதான் சொல்லணும்!"

"உனக்குக் கொஞ்சம் ஷாக்காயிருச்சு, இல்லை?"

"அண்டர் ஸ்டேட்மெண்ட் ஆஃப் தி இயர்."

"என்ன பண்ணப் போறே?"

"என்ன பண்ணப் போறேன்னா?"

"அவகிட்ட சொல்லப் போறியா?"

"யோசிக்கணும்."

"இப்ப சொல்ல மாட்டதானே?"

"யோசிக்கணும்."

"ராட்! ரகுவுக்கு க்ரீன் பெப்பர்னா என்னன்னு சொல்லு?" என்றது கிச்சன்.



www.writersujatha.com

"க்ரீன் பெப்பர்னா காப்ஸிகம்னு சொல்விங்க குட மிளகாய்!"

"குடமிளகாய்" என்று சிரித்தான்.

"இத பாரு! நீ ஓர் ஆண், நான் ஓர் ஆண். நான் உன் கிட்ட நடந்ததைச் சொல்ல முடியும். உங்கிட்ட ஒரே ஒரு வேண்டுகோள். அவகிட்ட சொல்லப்போறியோ, சொல்ல மாட்டியோ அது உன் தீர்மானம். சொல்றதா இருந்தா இன்னிக்கு ராத்திரி வேண்டாம்!"

"ஏன்?"

"எனக்குக் கொஞ்சம் யோசிக்க டயம் வேணும்."

"ராதாகிஷன், எப்படி உங்களால மற்றொரு பெண்ணைப் பத்தி நினைக்கக்கூட முடியுது. மது மாதிரி ஒரு ஜெம் இருக்கறப்ப?"

"ஷ்ஷ்ஷ்...! கொஞ்சம் மெல்லப் பேசு."

"என்ன, என் பேர் வரது?"

"டார்லிங்! உன்னைப் போல ஜெம் யாரும் இல்லைன்னு சொல்றான் ரகு." ராதாகிஷன் டி.வி.யின் சப்தத்தைச் சற்று உயர்த்தினான்.

"ஒரு ராத்திரில சொல்ல முடியாதப்பா. அதுக்குத்தான் டயம் வேணும். நாளைக்கு நான் கார் அனுப்பறேன். என்னை ஆபீஸ்ல வந்து பாரு. அதுவரைக்கும் இதைப்பத்தி பேச வேண்டாம். என்ன, இட்ஸ் எ டீல்?" என்று அவன் கையை வலுக்கட்டாயமாகப் பற்றி, "கம், லெட்ஸ் ஹாவ் எ ட்ரிங்க். பேஸ்மெண்டுக்குப் போகலாம் வா!"

"ராட்! ரகுவுக்கு நம்ம வீட்டைச் சுற்றி காட்டு!"

"அதான் பண்ணப் போறேன் கண்ணு."

"ராட்!" சமையலறையிலிருந்து இனிமையாக அவள் குரல் ஒலித்தது.

"என்ன?"

"ஐ லவ் யூ?"

"ஓக்கே."

"ஓக்கே சொல்லாத. ஐ லவ் யூ டூ சொல்லு."

"ஐ லவ் யூ டூ!"

ராதாகிஷன் அவன் பார்வையைத் தவிர்த்தான். ரகுவுக்கு ஏனோ சிரிப்பு வந்தது.

"வா. கீழ போகலாம்!"–ராதாகிஷன் விரல்கள் நடுங்குவது தெரிந்தது.

மௌனமாக அவன் பின் மரப் படிகளில் இறங்கி பேஸ்மெண்டுக்குச் சென்றான். ரகுபதிக்குத் தான் செய்ய வேண்டியது என்ன என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. ஒருவிதமான அருவருப்பான உணர்ச்சிதான் இருந்தது.

அவசரமாக ஒரு கிளாஸில் விஸ்கி ஊற்றிக் கொண்டான். "யூ வாண்ட் எ ட்ரிங்க்?" என்றான் ராதா,

"நோ! தாங்க்ஸ்" பேஸ்மெண்ட் வசதியாக இருந்தது பெரிசாக டி.வி., அதன் ரிமோட் கண்ட்ரோல், மினி–பார் ஹ்யுமிடி ஃபைபர், அட்டாச்ட் பாத்ரூம் காஸ் ஹீட்டரின் ப்ளான்ட்– இந்த இடத்திலேயே தாராளமாக ஒரு குடும்பம் தங்கலாம் போல இருந்தது.

மளுக் என்று முழுங்கிவிட்டு ராதா. "இத பார். நீ என்ன செய்யறதா இருந்தாலும் நாளைக்குச் செய்!"

"நான் எதும் தீர்மானிக்கவில்லை மிஸ்டர் ராதா கிஷன்"

"நோ மிஸ்டர் ப்ளீஸ்! நானும் நீயும் இப்ப ஃப்ரண்ட்ஸ் ஆயிட்டோம். ரெண்டு பேருக்கும் பொதுவாக ஒரு ரகசியம் இருக்கிறதால ரகு. ஸ்வீப் ஓவர் இட், நீ பார்ப்பதை அப்படியே மனசில் இருத்திக்க. நாளைக்கு முதல் காரியமா என் ஆபீசுக்கு வா. கார் அனுப்பறேன் நான் உன்கூட பேசியே ஆகணும். நான் பேசினப்புறம் நீ என்ன செய்யப் போறேங்கறதைத் தீர்மானம் பண்ணிக்க. ஓக்கே?"

"இதில என் காரியம் அவ்வளவு முக்கியம்னு நினைக்கறிங்களா?"

"முக்கியமோ, முக்கியமில்லையோ– நாளைக்கு செய். அதான் கேட்டுக்கறேன்."

"பயப்படாதிங்க! ஆனா நீங்க செய்யறது துரோகம்ங்கறதாவது உங்களுக்குத் தெரியுதா?"

"துரோகம்ங்கறதுக்கு இந்த ஊர்ல அர்த்தம் வேற." மறுபடி ஒரு முழுக்கு. கண்ணால பார்க்கறது மட்டும்தான் முக்கியம். நியூயார்க் டைம்ஸ் பிரதி ஒன்றை எடுத்தான். "நியூஸ் பேப்பர்ல ஒரு எட்டாம் பக்கத்தில் செய்தி இருக்கு. அதைப் படிச்சப்புறம் தானே உனக்கு அது உண்மையாறது. படிக்காமயே இருந்தா அது உண்மை இல்லைதானே?"

"எதுக்கு இந்த உதாரணம்னு புரியலை."

"இன்னிக்கு நீ பத்து நிமிஷம் லேட்டா வந்திருந்தா என்னுடைய ஒரு பக்கம் உனக்குத் தெரியறதுக்கு வாய்ப்பே இல்லைதானே! நீ பார்த்ததாலே என்னைப் பத்தின உன் அபிப்ராயமே வேற விதமா இருக்கும் இல்லையா?"

"சொல்லுங்க" என்றான்.

"அதுபோல அவளுக்கு இது தெரியாம இருந்தா, அதனால விளையற நன்மைகளைப் பாரு."

"நன்மைகளா?"

"அவளுக்கு அனாவசியமா மனக்கலக்கம் வேண்டாம். வருத்தம் வேண்டாம். ஒரு சின்ன விஷயத்தாலே...

"இதை நீங்க சின்ன விஷயம்னு சொல்றது எனக்கு ஆச்சரியமா இருக்கு."

"டின்னர் இஸ் ரெடி!' என்று மேலேயிருந்து மதுமிதாவின் உற்சாகமான குரல் கேட்க,

"வா சாப்பிடலாம் – நாளைக்கு நான் உனக்கு கார் அனுப்பறேன். அப்ப தொடர்ந்து இதைப் பத்திப் பேசலாம்."

மறுபடி மேலே வந்தபோது, 'என்ன ரெண்டு பேரும் ரொம்ப ஸீரியஸா டிஸ்கஷன்...?" என்றாள்.

"ஒண்ணுமில்லை மது."

"சப்பாத்தி சாம்பார், ரசம், கூட்டு என்று என்னஎன்னவோ வரிசையாக மேஜை மேல் அடுக்கியிருந்தாள்.

"எதுக்கு மது இவ்வளவு செஞ்சிருக்கே?" என்றான் ரகு.

"எல்லாம் சுட வெச்சது! ராதா ராத்திரி ஒண்டிதான் நல்லா சாப்பிடும். என்ன ராதா?"

"ஆமாம்!" என்றான் ராதா, தலை நிமிராமல்.

"இதை மட்டும் ரெண்டு பேரும் சாப்ட்டு முடிக்கலை, எனக்கு அழுகையே வந்துரும். ராட்! படுக்கைல பணம் இறைஞ்சு கிடந்தது. டாலர் பில்லா இருந்தது! இப்படியா பணத்தை இறைப்பா?"

"எடுத்து வெச்சுரு மது."

படுக்கலை வேற எதும் இறைஞ்சிருக்கலையா!" பார்க்கலையா முட்டாள் பெண்ணே?

ராதாகிஷன் அவனை நிமிர்ந்து பார்த்தபோது கண்கள் அவனைக் கெஞ்சின.

"நான் செய்திருக்கிறது நல்லா இருக்கா ரகு? நல்லா சமைக்கிறேனா...?"

"நல்லா சமைக்க மட்டும் தெரிஞ்சிண்டிருக்கே மது."

ராதாகிஷன் அவனை நிமிர்ந்து பார்க்க, "உனக்கு ரொம்ப நேரமாயிட்டுதில்லை மது. நான் ரகுவை ஸ்டாட்டன் ஐலண்டில் கொண்டு விட்டுர்றேன். 'நீ டி.வி. பார்த்திட்டு படுத்துத் தூங்கிப் போயிரு. யூ மஸ்ட் பி டயர்ட்."

"இல்லை. நானும் வர்றனே."

"எதுக்கு மது... ரொம்ப லேட்டாயிருச்சு."

"இல்லை ராட். ராத்திரி தனியா திரும்பி வந்தா ரொம்ப வேகமா ஓட்டுவே. ஏற்கெனவே கொஞ்சம் குடிச்சிருக்கே. எனக்குக் கவலையா இருக்கும், தூக்கம் வராது."

"அவரைப்பத்தி நீ கவலைப்படாத மது! ஹி கன் டேக் கேர் ஆஃப் ஹிம்ஸெஃப்!"

"ரகு, வி மஸ்ட் மீட் டுமாரோ" என்றான் ராதா. சாப்பிட்டவுடன் கணவனுக்கு ஒரு கிளாசில் தண்ணீரும் விட்டமின் மாத்திரைகளும் கொண்டு வந்து கொடுத்தாள். "நான் இல்லாட்டி மாத்திரி கூட சரியா சாப்பிடாது இது' என்று அவன் தலையைக் கலைத்தாள்.

இரவு திரும்பும்போது காரில் மூவரும் மௌனமாகத்தான் இருந்தார்கள். மதுமிதா அவ்வப்போது பாடிக்கொண்டே வந்தாள். பாடாத சமயம் தன் கணவனை சிலாகித்துப் பேசிக் கொண்டு வந்தாள்.

இருட்டில்கூட அவன் முகம் இறுகுவது தெரிந்தது.

"என்ன செய்வது, சொல்வதா? அவர்கள் வாழ்வில் குறுக்கிட்டு அதைப் பாழடிக்க எனக்கு உன்ன உரிமை இருக்கிறது. உரிமை இல்லையா என்ன? நான் மணந்திருக்க வேண்டிய பெண். இவளை அநியாயமா கவர்ந்து சென்று இப்படித் துரோகம் செய்ய இவனுக்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது? இது என்ன நியாயம்?"

"என்ன ரகு. பேசவே இல்லை?"

"யோசிச்சுக்கிட்டு இருக்கேன் மது!"

"என்ன யோசனை!"

"நாளைக்கு என்ன செய்யலாம்னு!"

வீட்டில் இறங்கி, அவர்கள் குட்நைட் சொல்லி, தூக்கத்திலிருந்து மோகன்ராமை எழுப்பி 'ஸாரி' சொல்லி விட்டு, தன் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டபோது ரகுவுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது சட்டென்று தோன்றிவிட்டது.

## 16

**மோ**கன்ராம் பாதித் தூக்கத்தில் விழித்தார். ஃபிரிஜ் வெளிச்சத்தில் தெரிந்தது.

"என்ன எப்படி இருந்தது ட்ரிப்பு?" என்றார் ஓர் ஆப்பிளைக் கடித்துக் கொண்டு.

"ஐ ஓப்பனர் ஸார்" என்றான் ரகு.

"எந்த விதத்தில்?"

"எல்லா விதத்திலயும்தான்."

"பொண்ணு மாட்டேன்னுட்டாளா?"

"இல்லை ஸார் கதையே மாறிருச்சு... அந்தப் பொண்ணு...." வேண்டாம். இவரிடம் சொல்ல வேண்டாம். அவன் தீர்மானித்தது தான் சரி. "என்ன படுத்துக்கலியா?" என்றார்.

"இல்லை ஸார், கொஞ்ச நேரம் ஆகும். நீங்க படுத்துக்குங்க ஸார்! உங்க தூக்கத்தைக் கலைச்சுட்டேன்."

"என்ன எழுதற?"

"அப்பாவுக்கு லெட்டர். ரொம்ப நாளாச்சு..."

அவனை சந்தேகத்துடன் பார்த்துவிட்டு. "குட் நைட்" என்றார்.

அன்புள்ள அப்பாவுக்கு, உங்களிடமிருந்து என்னால் எந்த விஷயத்தையும் அதிக நாள்கள் இந்த அமெரிக்க தூரத்திலும்கூட மறைத்து வைக்க முடியாது. உண்மையாக என் மனத்தில் உள்ளதை எல்லாம் பங்கு கொள்ள எனக்கு உள்ள ஒரே ஒரு நண்பர் நீங்கள்தான்... நான் இங்கு வந்து மதுமிதாவைச் சந்தித்துவிட்டேன்...

பாதியில் நிறுத்திவிட்டு சற்று யோசித்தான். அவனுக்குத் தூக்கம் வந்தது. என்ன செய்ய வேண்டும் என்பதைத் தற்போதைக்கு ஒத்திப்போட்டு விட்டான். அப்பா யோசிக்கட்டும். அப்பா என்ன சொல்கிறாரோ அப்படிச் செய்யலாம். அவர் விட்டு விடு என்றால் விட்டுவிடலாம். விட்டு விடு என்றுதான் சொல்வார்... ராதாகிஷனைச் சந்தித்துவிட்டுக் கடிதத்தைத் தொடரலாம்.

மறுதினம் காலேsக்குச் சென்றபோது இன்று வேறு தினம் என்பது ஒரு ஃபர்லாங் தூரத்திலே தெரிந்து விட்டது. காலேஜ் சதுக்கத்தை அணைத்துக் கொண்டிருக்கும் குட்டி நதிப்பாலத்தில் நிரம்ப மாணவர்கள் மௌன வரிசையாகக் கடந்து கொண்டிருந்தார்கள். மரங்களில் 'ஸ்ட்ரைக் ஸ்ட்ரைக்' என்று எழுத்துகள் அலறின. ஸ்ட்ரைக் எதற்கு என்று புரியவில்லை. ஏதோ விழா போலத்தான் இருந்தது. மாணவ மாணவிகள் கேன் கேனாக கோக் குடித்துக் கொண்டு உற்சாகமாக நடந்து சென்று கொண்டிருக்க, நீல உடை போலீஸ்காரர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மேரி தூரத்திலிருந்து அவனைப் பார்த்துக் கையசைத்தாள். 'இங்கே வா' என்று சைகை செய்தாள். அவளை அடைய முடியாமல் மாணவ வெள்ளம் தடுத்தது. ஸ்ட்ரைக்கைச் சாக்கிட்டு ரிப்போர்ட் கொடுப்பதை இன்னும் தாமதித்து விடலாம். இந்த ஊர் ஸ்ட்ரைக் வேறு தினுசாக இருக்கிறது. சந்தோஷ ஸ்ட்ரைக். போலீஸ்காரர்கள்கூட கூட்டம் கலைவதற்கு முகத்தில் தண்ணீர் தான் அடிக்கிறார்கள். கழிவுகளை உபயோகப்படுத்துவதில்லை நகர மறுக்கும் நாய்க்குட்டிகளைப் போலதான் மாணவர்களை இழுத்துச் சொல்கிறார்கள். ஸ்ட்ரைக் எதற்கு என்பது மரத்தில் ஒட்டியிருந்த சுவரொட்டியிலிருந்து தெளிவாகவில்லை. அதில்–

'போராட்டம். எட்டு கோரிக்கைகளுக்கு போராட்டம். போலீஸ்காரர்களை (காப்ஸ்) நாங்கள் வெறுப்பதால், உன் ரூம்மேட்டை அடித்தால் போராட்டம். உன் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதால் போராட்டம். இன்னும் கொஞ்சம் மனிதத்தன்மை காட்டுவதற்கு, உன் வகுப்பறைகளில் கவிதை இல்லாததற்கு, வகுப்புகள் போரடிப்பதால், அதிகாரம் இல்லாததால் கார்ப்பரேஷனை ஒழித்துக் கட்டுவதற்கு, உன்னை விடுதலை செய்வதற்கு போராட்டம்' என்று எழுதியிருந்தது.

மேரி ஒரு வழியாகக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவனை அடைந்து, "அப்பாடா! உன்னைக் கண்டுபிடிப்பதற்குள் பெரிய பாடு" என்றாள்.

"மேரி, இந்த ஸ்ட்ரைக்கின் அர்த்தமே புரியவில்லை; காரணம் புரியவில்லை. எதற்காக இது?"

"ஸ்ட்ரைக் பண்ண வேண்டும் என்று யாருக்காவது தோன்றியிருக்கும்."

"போஸ்டர் ஒட்டியிருப்பதில் கொடுத்திருக்கும் காரணங்கள் எதும் விளங்கவே இல்லையே?"

"காரணங்கள் புரியவேண்டும் என்கிற கட்டாயமில்லை. நான் உன்னைப் பார்க்க வந்தது அதற்கல்ல. ராதாகிஷன் உன்னுடன் தொடர்பு கொள்ளுவதற்கு அவசரமாக முயற்சி

செய்து கொண்டிருக்கிறார். உடனே போன் செய், கார் அனுப்புகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். என்ன அத்தனை அவசரம்?"

"தெரியவில்லை" என்று பொய் சொன்னான்.
"உனக்கு ஏதாவது வேலை கொடுக்கப்போகிறாரா?"

"கேட்டால் நிச்சயம் கொடுப்பார்."

"இன்னும் முதல் வருஷமே முடிக்கவில்லை நீ."

"பரவாயில்லை. ஆனால், எனக்கு வேலைக்குப் போகும் உத்தேசமில்லை. அதும் ராதாகிஷனுக்கு..."

"உனக்கு உறவா!"

"ஒரு விதத்தில்" என்றான் மேரி அருகிலேயே இருந்த கியாஸ்க்கில் போன் எடுத்துப் பேசிவிட்டு "உடனே கார் அனுப்புகிறார்களாம். பாலத்தின் அருகிலேயே நிற்கும்படி சொன்னார்" என்றாள். "உன்மேல ராதாகிஷன் என்ன இந்த அக்கறை?"

"அப்புறம் சொல்கிறேன்" என்றான் ரகு.

வெண் சீருடை அணிந்த ஷாஃபர் கார் அது. சமீபத்திய மெர்ஸி டிஸ் **ஸூ**ப்பர் சார்ஜர், ட்ரிப் கம்ப்யூட்டர் எல்லாம் கொண்டு பிரமாதமாக இருந்தது. 'பார்க்கக்கூடாத ஒரு காட்சியைப் பார்த்து விட்டதால் திடீர் என்று எனக்கு என்ன மதிப்பு!" எண்ணிக் கொண்டான்.

ஐந்தாவது அவென்யூவில் லாக்ஸ் பக்கத்தில் பிரத்தியேகமான பேட்டையில் நாற்பதாவது மாடியில் இருந்து அந்த அலுவலகம். உச்ச கதி லிஃப்ட்டிலிருந்து வெளிப்பட்டபோது, வெளிர் பச்சைக் கண்ணாடிக்கு வெளியே மேன் ஹாட்டன் பகுதி முழுவதும் தெரிந்தது. 'ஸீனியர் வைஸ் பிரசிடெண்ட்' என்று பித்தளையில் பளபளப்பாக அதிகம் ஆடம்பரம் இல்லாமல் எழுதியிருந்த ஓர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, ராதாகிஷனின் வெளிப்புற ஆபீசில் சற்று நேரம் உட்கார்ந்திருந்தான். மிகத் துல்லியமான ஒரு பெண் அவனைப் பார்த்துச் சிரித்து, 'ப்ளீஸ் வெய்ட், மிஸ்டர் கிஷன் வில் ஸீ யூ ஷார்ட்லி" என்றாள்.

பெண்ணின் நகத்தின் சுத்தத்தையும் பாட்டில் பச்சை சட்டையை மீறித் தெரிந்த மார்பகத்தையும் சற்று நேரம் பார்த்தான்.

"ராதாகிஷன் இவளையும் படுக்க வைத்திருக்க மாட்டான் என்று என்ன நிச்சயம். அப்ப... "ராதாகிஷன் வெளியே வந்து, "அப்பவே வந்துட்டியா? ஸாரி, கொஞ்சம் பிஸியா இருந்துட்டேன். லூயிஸ், நோ கால்ஸ் ஃபர் தர்ட்டி மினிட்ஸ்" என்று செக்ரட்டரியிடம் சொல்லிவிட்டு, அவனைத் தோளோடு அணைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

'இந்த மாதிரியும் ஆபீஸ் இருக்குமா' என்று தோன்றியது. கண்ணாடிக்கு வெளியே மிக மௌனமாக விரிகுடா தெரிந்தது. அபாயமான சரிவில் கான்கார்ட் விமானம் சப்தமில்லாமல் மேலே ஏறுவது தெரிந்தது. போலீஸ் ஹெலிகாப்டர்கள் தெரிந்தன. தூரத்தில் நியூயார்க்கின் அத்தனை பாலங்களும் தெரிந்தன. சமீபத்திய ஒரு கட்டட உச்சி சமயம் பாத்து நாற்பது, உஷ்ணம் எழுபத்தெட்டு என்று காட்டியது.

"இஸன்ட் இட் ப்யூட்டிஃபுல்?" என்றான். 'வாட்'ல் யூ ஹாவ்? என்று எங்கிருந்தோ ஒரு மாயச்சுவரைத் திறந்து அதிலிருந்து ஒரு குட்டியான பாரை விடுவித்தான். "உட்கார்" –

நீள சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு அவசரமாகப் புகைத்துவிட்டு எதிரே அவனைக் கண்கொட்டாமல் பார்த்தான். "என்ன தீர்மானிச்சே?"

"ஒண்ணும் தீர்மானிக்கலை. நீங்க எதுக்கு என்னைக் கூட்டிக்கிட்டு வந்தீங்க?"
"நேத்திக்குப் பார்த்த காட்சி உனக்கு ஆச்சரியம் தந்திருக்கும் இல்லையா?"

"அதிர்ச்சி!"

"ஒக்கே, அதிர்ச்சி. நீ இண்டியாவில இருந்து வர்றதாலே அதிர்ச்சி! இங்க இது காமன்"

"அதே மாதிரி..."

"அதே மாதிரி!"

"ஒண்ணுமில்லை சொல்லுங்கள்."

"சொல்லுப்பா, உன் மனசில ஏதாவது வெச்சிட்டிருந்தா சொல்லு."

"இல்லை ஸார், என் மனசில ஏதாவது ஒண்ணும் இல்லை. ஆஃப்டர் ஆல் இட்ஸ் யூர் லைஃப், ஷி இஸ் யூர் ஒய்ஃப்! இப்ப எதுக்காக எனக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்துக் கூப்ட்டு வந்திருக்கிங்கன்னே தெரியலை."

"மதுமிதாகிட்ட நேத்து நீ பார்த்ததைச் சொல்ல வேண்டாம்னு சொல்லத்தான்."

"அவளுக்கு இது ரொம்ப நாளாகாது ஸார்."

"அவளுக்குத் தெரியாம பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு."

"என்ன நீங்க, எனக்கு இதில என்னவோ ரொம்பக் கவலைங்க மாதிரி சொல்றீங்களே. ஆனா நீங்க பண்றது அக்கிரமம். அவ பாட்டுக்குப் பூ கணக்கா பாபநாசத்தில் பட்டாம்பூச்சி துரத்திக்கிட்டு இருந்தா. அவளைப் புயல்காத்து மாதிரி வந்து கவர்ந்துகிட்டு இங்க நியூயார்க் வந்து அவளோடு படுக்கையிலேயே... சே! ஏன் ஸார்? லெட் மி பி ஃப்ராங்க்? ஒரு மனைவிங்கற தகுதி எதிலயும் அவ குறைஞ்சு போயிட்டாளா? எதுக்காக இப்படி செய்யணும் நீங்க. அவ எதாவது உங்கிட்ட விசுவாசம் இல்லாம..."

"சேச்சே அதெல்லாம் இல்லை, அவளுக்கு எங்கிட்ட ரொம்ப அன்பு, விசுவாசம் எல்லாம். அதில்லை காரணம் ரகு!"

"பின்ன எது!"

"நான் சொன்னா உனக்குப் புரியுமோ புரியாதோ?"

ஜன்னலுக்கு வெளியே தெரியும் நகரமே தனக்குச் சொந்தம் போல அதைப் பார்வையால் உட்கொண்டு ராதாகிஷன் பேசத் துவங்கினான்.

"இண்டியாவுக்கு வந்தபோது எனக்குக் கல்யாணம் பண்ணிக்கிற எண்ணமே இல்லை. மதுமிதாவைப் பார்த்த கணமே தீர்மானிச்சுட்டேன் – இவளை எப்படியாவது, பை ஹூக் ஆர் க்ருக், அடைஞ்சே தீர்றதுன்னு. அவ அப்பா உனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறதா சொன்னார், உன்னைப் பார்த்த உடனே நீ அதிகம் கலாட்டா பண்ண மாட்டேன்னு கணிச்சுட்டேன்..."

"என்னைப் பொறுத்தவரையிலும் ஒரு பொருள் எனக்குப் பிடிச்சுருச்சுன்னா அதை அடைஞ்சே தீரணும், அடையறதில் தான் சவால் இருக்கு. அந்த அடையற கணம் எனக்கு ஒரு க்ளைமாக்ஸ். அமெரிக்கா வர்றப்ப எங்கிட்ட பத்து டாலர்தான் இருந்தது. இப்ப எனக்கு எத்தனை சம்பளங்கறே."

"மதுமிதா சொன்னா."

"மதுமிதாவுக்கே சரியா தெரியாது. நான் எத்தனை சம்பளம் வாங்கறேன். எத்தனை டாக்ஸ் காட்டறேன்னு பணமும் ஒரு காலத்தில் எங்கிட்ட பாச்சா காட்டிக்கிட்டு இருந்தது. இப்ப பணத்திலே போதை இல்லை. பணத்தை அடைஞ்சாச்சு, விரும்பின பெண்ணை அடைஞ்சாச்சு, மனசு ஆனா அந்தத் தாகம் இன்னும் பாக்கியிருக்குது. நான் சொன்ன மாதிரி ஒண்ணை நினைச்சு அதை அடைஞ்சப்புறம் ஒருவிதமான ஆண்ட்டி க்ளைமாக்ஸ்தான். ஒருவித ஏமாற்றம்தான். சமீபத்தில் ஒரு மைனர் கார்ப்பரேஷன், கம்ப்யூட்டர் பெரிஃபரல்ஸ் செய்யறாங்க. அதை எங்க கம்பெனி வாங்கணும்னு தீர்மானிச்சேன். அதைப் போன வாரம்தான் சாப்ட்டோம். அதை இன் டைரக்ட்டா திவால் ஆற நிலைமைக்குக் கொண்டு வந்து வித்தே ஆகணும் கொண்டு வந்து... காட்டில வேட்டையாடற அதே நியாயங்கள்தான் பிஸினஸ்லயும் ஏன் வாழ்க்கைலயும்."

ரகுபதி கொட்டாவியை அடக்கிக் கொண்டான்.

"போர் அடிக்கிறதில்லை? மதுமிதாவைப் பத்திப் பேசினாத்தான் நீ முழிச்சுப்ப. அதுவும் எனக்குத் தெரியும்? நீ எதுக்காக அமெரிக்காவுக்கு வந்திருக்க? அவளைத் துரத்திக்கிட்டுத்தான்! எனக்குத் தெரியாதா என்ன?"

"ஐ அப்ஜெக்ட் டு திஸ்! என்னை உங்களுக்குத் தெரியாது."

"ஷி இஸ் மை லைஃப். யூ காண்ட் டச் ஹர்! யூ வோன்ட் டச் ஹர்? அதுக்கு உனக்குத் தைரியம் கிடையாது. அதும் எனக்கு நல்லாவே தெரியும். என் தொழில்ல மனுசங்களை நல்லா எடை போடத் தெரியணும். அமெரிக்கன் நீக்ரோ எப்படி பிஹேவ் பண்ணுவான். ஜ்யூ எப்படி, ஒரு குஜராத்தி எப்படி, ஒரு திருநெல்வேலி இஞ்சினியர் இளைஞன் எப்படி... எல்லாம் தெரியும் எனக்கு."

"சந்தோஷம்" என்றான் கிளம்புவதற்கு ஆயத்தமாக.

"மிச்சத்தையும் கேட்டுட்டுப் போ. மதுமிதாவை இங்க கூட்டிக்கிட்டு வந்தப்புறம் கொஞ்சம் கொஞ்சமா எனக்கு ஏமாற்றம் ஆரம்பிச்சுது. இந்தப் பொண்ணு எதிர்பார்த்த அளவு புத்திசாலி இல்லை. வேலைக்குப் போக ஆர்வம் இல்லை. அமெரிக்காவில பழக சாமர்த்தியம் இல்லை. இட்லி, சாம்பார், வத்தக்குழம்பு, ரசம் இதை விட்டா வேற எதையும் தொடமாட்டா. புடிச்சது பாக்யராஜ் படம். படிக்கிறது ட்ராஷ், குப்பை நாவல்கள். சுருக்கமா சொன்னா அமெரிக்க சூழ்நிலையில் கொஞ்சம் மங்கிப் போயிட்டா. படிப்பு போதாது. ஷி இஸ் பேஸிக்லி ஸ்டுப்பிட். டெலிவிஷன்ல ஸோப் ஒண்டிதான் பார்ப்பா. நியூஸ் பார்க்க மாட்டா, வெயில்ல உக்காந்துகிட்டு நிட்டிங் போறடது. எப்ப பார்த்தாலும் அப்பா அம்மா சுதா இவங்களைப் பத்தித்தான் பேச்சு, அப்பா இந்நேரம் தூங்கிக்கிட்டு இருப்பாரு... அம்மா இந்நேரம் தையல் மிஷன்ல உக்காந்துகிட்டு எம்பராய்டரி போட்டுக்கிட்டு இருப்பாங்க. 'மெயில்மான், எனி லெட்டர் ஃப்ரம் இண்டியா? ஆரம்பத்தில இப்படித்தான் இருக்கும்னு பார்த்தா ஆரம்பமே இன்னும் ஓயலை. மேலும்..."

ராதாகிஷன் கொஞ்சம் தயங்குவது போல இருந்தது. "ஷி இஸ் வெரி புவர் இன் பெட்!"

ரகுபதிக்கு அதிர்ச்சியாக இருந்தது. "எனக்கு இவ்வளவு விவரம் வேண்டாம் ஸார்."

"இல்லை, வேணும் நீ எல்லாத்தையும் பார்த்தப்புறம், எல்லாத்தையும் கேட்டுத்தான் ஆகணும். ஸெக்ஸைப்பத்தி அவளுக்கு ஒருவிதமான அவர்ஷன்தான் இருக்கு. சைக்கியாட்ரிஸ்ட்கிட்ட கூட்டிப் போனேன். எதோ 'சைல்ட்ஹூட் ரிப்ரஷன்' ராங் இரோட்டிக் இன்டக்ஷன்னு சொல்லி நாநூறு டாலர் வாங்கிட்டுப் போயிட்டான். மதுமிதா அப்படியேதான் இருக்கா..."

"இதெல்லாம் நீங்களா உங்க துரோகத்துக்குக் கொண்டுவர காரணங்கள்."

"இல்லை. ஒண்ணரை வருஷம் பார்த்துட்டேம்பா உனக்குத் தெரியாது."

"சின்னப் பொண்ணு ஸார். பெரிய பெரிய விஷயங்கள்ளாம் அவ தலைமேல் ஏத்தாதீங்க?"

"ஒரு வேளை அப்படியும் இருக்கலாம். நான் வந்து கொஞ்சம் 'லார்ஜர் தன் லைஃப்'னுதான் சொல்லணும். எனக்குள்ள இருக்கற ரெஸ்ட்லஸ்னஸ்ஸும் காரணமா இருக்கலாம். ஒருவேளை உள்ளுக்குள்ள நான், நிஜமாகவே கொஞ்சம் கிஷ்ணனோ என்னவோ?" என்று அவனைப் பார்த்துச் சிரித்து எரிச்சலாக வந்தது.

"எது எப்படியோ, நீ பார்த்துட்ட. அவ யாருங்கறது எல்லாம் சொந்த விஷயம். இதை நீ மதுகிட்ட சொல்லப் போறியாங்கறது எனக்குத் தெரியணும்."

"அதைப்பத்தி நான் யோசிக்கணும்."

"யோசிச்சுகிட்டு எங்கிட்ட சொல்லுவ இல்லை?"

"உங்களுக்குத் தெரியாம போயிருமா?"

"இல்லை சொல்றதா இருந்தா, அவளை ஒரு மாதிரி தயார் படுத்தணும். அதற்குத்தான் சொல்லாம இருந்தா உனக்கு சில நன்மைகள் எல்லாம் ஏற்படுத்தித் தர முடியும்."

"டிவோர்ஸ் பண்ணிருங்களேன்."

"நோ. அவளால அதைச் சமாளிக்க முடியாது" என்றான். தீர்மானமாக, "அவள் ஒரு நல்ல மனைவி. எங்கிட்ட ரொம்ப விசுவாசம். உங்கூட வந்தாளே, ஒருகணமாவது விகல்பமா நடத்துக்கிட்டாளா? உன்னைப் பயத்தில் கட்டிப் பிடிச்சதைக்கூட போன்ல சொல்லிட்டா. எனக்கு உடம்புக்கு வந்தா என்னமா சிசுருஷை பண்ணுவா தெரியுமா? ரொம்ப ஒர்ரி பண்ணிப்பா. இந்த மாதிரி ஸ்திரமா ஒரு மனைவியும் வேணுமில்லையா? பிற்காலத்தில் வயசானப்புறம் ரொம்ப உபயோகமா இருப்பா. அவளுடைய நம்பிக்கையை எதுக்குக் கலைக்கணும்னு பாக்கறேன். அதனால சொல்லாம இருந்தன்னா உனக்கும் நல்லது. அவளுக்கும் நல்லது, சில உண்மைகளை மறைக்கிறதிலயும் நல்லது இருக்கு. தெரியுமில்லை?"

17



www.writersujatha.com

**ச**ற்று நேரம் இருவரும் மௌனமாக இருக்க, அந்த மௌனத்தை உறுத்தாமல் லேசாக டெலிபோனில் பஸ்ஸர் கலைத்தது. ராதாகிஷன் ஆயாசத்துடன் எடுத்து,

"ஹூயிஸ் ஐ ஸெட் நோ கால்ஸ்" என்றான். சற்று நேரம் வெளிப் புறந்தவளின் விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு "ஆல்ரைட்! புட் ஹர் ஆன்" என்றான்.

"ஹலோ மது!"

"ஒண்ணுமில்லை... சொல்லு."

"அப்படியா? லெட் மி ஸீ! பதினெட்டாம் தேதி இல்லை ஐம் இன் டவுன்...! ட்ரு மறந்து போனா மகா பாவம்! ஒக்கே! ஐஸ் கீப் இட் எ சர்ப்ரைஸ் கூப்பிடணுமா என்ன? நமக்குள்ள இருக்கக் கூடாதா... ஒக்கே... ஒக்கே" அஸ் யூ விஷ். ஓ யெஸ் கூப்பிடலாம். இங்கேதான் இருக்காரு" என்று "ஹியர், ஷி வாண்ட்ஸ் டு டாக் டு யூ!" என்று போனை அவனிடம் கொடுத்தான்.

"யாரு? மதுவா?"என்றான் தெரியாதது போல் "ஹலோ!"

"ஹலோ ரகுபடி இருக்கே?"

"எப்பவும் போலத்தான் என்ன விஷயம்?"

"ராட் ஆபீசுக்கு எங்க வந்தே?"

"சும்மாத்தான். காலேஜ் இன்னைக்கு ஸ்ட்ரைக்கு, அதனால பாத்துட்டு போகலாம்னு. என்ன விஷயம் சொல்லு?"

"வர்ற பதினெட்டாம் தேதி எங்க வெடிங் ஆனிவர்ஸரி. அதுக்காக வீட்டில ஒரு சின்ன பார்ட்டி கொடுக்கப் போறேன். நீ கட்டாயம் வந்தாகணும்."

"பதினெட்டாம் தேதியா? லெட்மி ஸி..."

"அதெல்லாம் கிடையாது. வந்தே ஆகணும் அதிகம் பேரைக் கூப்பிடப் போறதில்லை. யூல் மீட் ஸம் இன்டரஸ்டிங் பீப்புள். அதுல ஒரு ஸர்ப்ரைஸ் வெச்சிருக்கேன். சொல்லமாட்டேன் பட்நோ ப்ரெஸன்ட்ஸ் ப்ளீஸ்!"

"அப்ப நான் வரலை."

"சேச்சே அப்படிச் சொல்லாதே! ஒக்கே! எதையாவது கொண்டு வா. ஆனா வந்து சேரு. என்ன உன்னை நிச்சயம் எதிர்ப்பார்பேன். பை!" என்றாள். அவள் குரலில் இருந்த உற்சாகம் ரகுபதிக்கு வலித்தது. எதிரே அவளுக்குத் துரோகம் செய்து கொண்டிருக்கும் கணவன், மற்றொரு நீள சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான்.

"தாங்க்ஸ்" என்றான்.

"எதுக்கு?"

"சமாளிச்சதுக்கு! பிரஸண்ட் என்ன கொடுக்கப் போறே? நீ பார்த்த தகவலை இல்லையே!"

www.writersujatha.com

"சேச்சே! என்னைத் தப்பா எடை போட்டிருக்கிங்க. எனக்கு என்ன சோகம்னா மது அவ்வளவு நம்பிக்கிட்டு இருக்கறப்ப நாம ரெண்டு பேருமே பாசாங்கு பண்ணிக்கிட்டு வேஷம் போட்டுக்கிட்டு இருக்கிறோம்!"
"லைஃப்ல எல்லாருமே வேஷம் போடலியா?"

"இல்லை ஸார். உங்க மனைவியைப் பத்தி நிச்சயம் சொல்ல முடியும். அவ வேஷம் போடலை."

"எக்ஸப்ஷனல் இருந்தாலும் இதைக் கொஞ்சம் நீ தீர யோசிச்சுப் பாரு. அவகிட்ட சொல்றதால மூணு பேருக்கும் டென்ஷன் வரும். என்ன செய்யறதுன்னு தெரியாம முழிப்போம். இதையெல்லாம் உன்னால தவிர்க்க முடியும். மேலும் இப்பதான் மதுமிதாவை போன்ல கேட்டியே, சந்தோஷமா இல்லையா? அவ குரல்ல உற்சாகம் இல்லையா? வேற என்ன வேணும்? அவளைப் பொறுத்தவரையில் நான் ஒரு முழுமையான கணவனாத்தான் இருக்கேன். அவ என் முன்னால இல்லாதபோது நான் என்ன செய்யறேங்கறது. டஸ் இட் ரியலி மாட்டர்?"

"இட் மாட்டர்ஸ் ஸார்!"

“நீ இன்னும் இந்தியப் பண்பாடு, அப்படி இப்படிங்கற கண்ணோட்டத்திலதான் இதைப் பார்க்கறே. எல்லாருக்கும் எல்லாமும் தெரிஞ்சுதான் ஆகணும்னு கட்டாயமில்லை ரகு."

"கணவன் மனைவி உறவுங்கறதை, நீங்க எதோ பிஸினஸ் போல பாக்கறீங்க."

"நீங்க செய்யறது மாரலி ராங்! அவ்வளவுதான் சொல்வேன். அதை உங்க மனைவிகிட்ட சொல்லணுமா வேண்டாமாங்கதைப் பத்தி நான் இன்னும் யோசிக்கவில்லை. யோசிக்க எனக்கு இன்னும் அதிர்ச்சி நீங்கலை. வரேன்" என்று கிளம்பினான்.

"ஒண்ணு மட்டும் கேட்டுட்டுப் போ, இதை வெச்சுட்டு என்னை ப்ளாக்மெயில் பண்ணனும்னு நினைச்சின்னா நடக்காது."

"சேச்சே! அந்த மாதிரி எண்ணமே எனக்குக் கிடையாது. இது என்னுடைய சொந்தத் தீர்மானம். இப்போதைக்கு ஐ கீப் தி ஆப்ஷன் ஓப்பன்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

வெளியே வந்த போது எல்லாமே விரசமாக இருந்தது. ராதாகிஷன் அநியாயமாக கணவன்–மனைவி உறவைக் கொச்சைப்படுத்தி விட்டான். சொல்வதா வேண்டாமா என்கிற கேள்விக்கு எனக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. அப்பா! அதற்காகத்தான் இந்தக் கடிதம். இந்தச் சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? எனக்கு மதுமிதாவின் மேல் எந்தவித துரோகம் கலந்த எண்ணங்களோ விபரீத இச்சைகளோ இல்லை. இருந்தும் ஒரு அறியாத பெண் ஏமாற்றப்படுகிறாள். இந்த ஏமாற்றும் நாடகத்தில் நானும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமா? என்று ஆதாரமான கேள்வி எழுகிறது. மதுமிதாவின் பெற்றோரைப் பார்த்து, அமெரிக்கா அமெரிக்கா என்று மோகித்துக் க்லயாணம் செய்து கொடுத்தீர்கள். உங்கள் மாப்பிள்ளை செய்யும் திருட்டுத்தனத்தைப் பாருங்கள் என்று கேட்க வேண்டும் அப்பா. எந்த இந்தியப் பெண் தன் கணவன் பிற பெண்களுடன் தொடர்ந்து சகவாசம் வைத்துக் கொண்டிருப்பதைச் சகித்துக் கொள்வாள்? இதில் என் பங்கு என்ன? எனக்கு இதில் சம்பந்தமே இல்லை என்று விலகிப் போய் விட வேண்டுமா? இல்லை, பெண்ணே உன் கணவன் இப்படி உன்னை ஏமாற்றுகிறான் பார் என்று உடைத்துச் சொல்லி விட வேண்டுமா? இதில் உள்ள நீதி, நியாயம் சம்பந்தமான விஷயங்கள் எனக்கு மிகவும் குழப்பமாகவே இருக்கின்றன. உங்களைத் தவிர இதை நிர்த்தாட்சண்யமாக அலசிப் பார்த்துச் சொல்லக் கூடியவர்கள் வேறு யாரும் இல்லை. சென்ற கடிதத்தில் என் ரிப்போர்ட்டைப்

பற்றி எழுதியிருந்தேன். அது இந்த வாரம் முடிந்துவிடும். குறுக்கே ஒரு ஸ்ட்ரைக் வந்து விட்டதால், 'ப்ரீதிங் ஸ்பேஸ் எனக்குக் கிடைத்தது. இந்த ரிப்போர்ட்டில் எங்கள் கம்பெனிக்கு நிகர லாபம் ஏராளம். தப்பித்து விடுவேன் என்றுதான் நினைக்கிறேன். எதாவது புதுசாகப் புஸ்தகம் படித்தீர்களா? ஜெயந்தியும் குழந்தையும் சௌக்கியம் என நம்புகிறேன். உங்கள் மகன்.

ரகுபதிக்கு நிம்மதி ஏற்பட்டது. போவதற்கு ஒரு வாரம், வர ஒரு வாரம். சில சமயம் ஆறு நாள்களில் வந்து விடும். மொத்தம் பதினாறு நாள் என்றே வைத்துக் கொள்வேன். இன்று தேதி இரண்டு பதினெட்டாம் தேதி வரை பதிலை எதிர்பார்த்து விட்டுத்தான் அங்கே போக வேண்டும். அது வரை ஒத்திப் போட்டு விட்டுப் படிக்கிற வழியைப் பார்க்கலாம் என்று தீர்மானித்தான்.

மறுதினம் காலேஜ் போனபோது இன்னும் ஸ்ட்ரைக் ஓயவில்லை என்று தெரிந்தது. எதற்காக ஸ்ட்ரைக் என்றே புரியாத வகை இது. ஏகப்பட்ட இளைஞர்கள் புரட்சிக் கரம் வரைந்த டி–ஷர்ட் அணிந்து கொண்டே கோக்கோ கோலாவைப் புரட்சி 'கோலா' என்று உறிஞ்சிக் கொண்டு சந்தோஷமாக ஸ்ட்ரைக் பண்ணிக்கொண்டு இருந்தார்கள். கல்லூரி வாசலில் இருந்த ஸ்தாபகரின் மார்பளவு சிலைக்குக்கூட தலையில் சிவப்புப் பட்டை கட்டியிருந்தார்கள். மைக்ரோபோன்களும் ஆம்ளிஃபயர்களும் நிருபர்களும் டி.வி காமிராக்களுமாக, இவர்கள் எதைச் செய்தாலும் பிரமாண்டமாகச் செய்கிறார்கள். ஸ்ட்ரைக் எத்தனை நாளைக்கு என்று சரியாகத் தெரியவில்லை. ஓட்டு எடுக்க போகிறார்களாம். போலீஸ் சும்மா பார்த்துக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் போலீஸ்காரர்களை அசிங்கமாகத் திட்டுவதை அவர்கள் புன்னகையுடன் பொறுத்துக் கொண்டிருந்தார்கள்? கைகளில் கழிகள் மட்டும் பொறுமையில்லாமல் சுழன்று கொண்டிருந்தன. யூனிவர்ஸிட்டி ஹாலை எஸ்.டி.எஸ். (ஸ்டூடண்ட்ஸ் ஃபர் எ டெமாக்ராட்டிக் சொஸைட்டி) காரர்கள் 'கைப்பற்றி' இடத்தை 'விடுதலை' செய்து விட்டதாகவும், கைத்தடிகள் சுழற்றியதில் ஐம்பது பேருக்குக் காயமாம் (ஐந்து போலீஸ்காரர்கள் உட்பட). இதையெல்லாம் பற்றிக் கவலையே படாமல் ஒரு கோஷ்டி டென்னிஸ் ஆடிக் கொண்டிருந்ததும் விந்தையாக இருந்தது. சற்று தூரத்தில் கல்லூரியின் மற்றொரு பகதியில் அல்பட்ராஸ் என்று ஒரு ராக் குழுவினர் தங்கள் வாத்தியங்களைத் தீட்டிக் கொண்டு அந்த வட்டாரம் முழுவதும் தொம் தொம் என்று சப்தம் பண்ணிக் கொண்டிருந்தனர்.

'என்ன ஸ்ட்ரைக் இது' என்று இன்றைக்கும் ரகுபதிக்குப் புரியவில்லை. எதிர்பாராமல் கிடைத்த விடுமுறையினால் சந்தோஷமாகவே இருந்தது.

பார்ன்ஸ் அண்ட் நோபிள்க்கு நடந்து சென்று ஏறக்குறைய தெருவையே ஆக்ரமித்துக் கொண்டிருந்த அந்தப் புத்தகக் கடையில் மேய்ந்தான். ஒரு டாலருக்கு ஒரு புத்தகம் என்று ஆயிரக்கணக்கில் இறைந்திருந்தன. நேற்று முன் தினம் பதிப்பித்த புத்தகங்கள் எல்லாம் நேற்று விலை போகாததால் இன்று பாதி விலைக்கு வந்து சீப் பட்டன. எல்லாமே அவசரம் இவர்களுக்கு. புத்தகம் வெளியிடுவதில். விற்பதில், விற்கவில்லை என்றால் கொட்டுவதில் கல்யாணம் கட்டுவதில், மனைவியை நிராகரிப்பதில், மற்ற சகவாசம் வைத்துக் கொள்வதில்... தப்பு ராதாகிஷனிடமோ அமெரிக்காவிடமோ என்று ரகுபதிக்குச் சரியாக விளங்கவில்லை. புத்தகங்களுக்குப் பணம் கொடுக்கும்போது கவுண்ட்டரில் வேலை செய்து கொண்டு இருந்தது இந்தியப் பெண் என்பது தெரிந்தது. வாராமல் அகலவிரித்துக் கொண்டு அமெரிக்கர்களைப் போல் ஆங்கிலம் பேச முயன்று கொண்டு சதா மென்று கொண்டு எதற்காக இந்தப் பாசாங்கு! இந்தப் பெண் இங்கேயே பிறந்து வளர்ந்தவளா? அப்படியே இருந்தாலும் எதற்காகத் தன் அடையாளம் அத்தனையும் மாற்றிக் கொள்ள அவசரப்பட வேண்டும்? என்னை மற்றோர் இந்தியனாக ஒருவித போட்டிக்காரனாகத்தான் பார்க்கிறான். கண்களில் வெறுப்புத் தெரிகிறது. இங்கு வந்து சேர்ந்த இந்தியர்கள் மட்டும்தான் இப்படி இருக்கிறார்களா, யூதர்கள் அமெரிக்காவில் இருந்தாலும் தங்கள் பண்டைய பழக்கவழக்கங்களை மாற்றிக்

கொள்ள மாட்டார்கள் என்று மேரி சொல்லக் கேட்டிருக்கிறான். ஏன் நாம் மட்டும் சடுதியில் மாற வேண்டும்?

மூன்று நாளைக்கு ஸ்ட்ரைக் என்று கடைசியில் தீர்மானமாகி விட்டதாம். ரகுபதிக்கு மறுபடி காலேஜ் போக வேண்டுமே என்று தான் இருந்தது. ரிப்போர்ட்டைக் கொஞ்சம் புதுப்பித்து மறுபடி டைப் அடிக்கக் கொடுத்து தயார் செய்தான். வீட்டில் உட்கார்ந்து கொண்டு தினம் முழுவதும் டி.வி. பார்த்தான். "சார்லிஸ் ஏன்ஜல்ஸ்" 'டல்லஸ்' போன்ற கதைகளில் அரைமணிக்குள் இருபது பேர், அந்த மூன்று யுவதிகளைத் தவிர, செத்துப் போனார்கள். டல்லஸில் யார் யாருக்கு வைப்பாட்டி என்று தீர்மானிப்பது சிரமமாக இருந்தது.

"இந்த மாதிரி டி.வி.ல இருந்து இவங்க எப்படி தப்பிச்சு வந்து அபார சாதனைகள் எல்லாம் செய்யறாங்கன்னு ஆச்சரியமா இருக்கு ஸார்."

"உண்மைதான். எல்லாரும் இந்த நாட்டில டி.வி.யை 'இடியட் பாக்ஸு'னு திட்டறாங்க. ஆனா டி.வி. பார்த்துக்கிட்டு தான் இருக்காங்க. 'டல்லஸ்'ல ஒரு ஸ்பாட் ஒரு நிமிஷம் விளம்பரம் கொடுக்க, ஒரு மிலியன் டாலரோ என்னவோ சார்ஜுன்னு சொன்னாங்க. நான் நியூஸ் தவிர வேறு எதும் தொடறதில்லை. இந்தப் பாழாய்ப் போற டி.வியால் தான் எனக்கும் என் மனைவிக்கும் தொடர்பே இல்லாம போயிட்டுது. அவ ஒரு கம்பல்ஸிவ் டி.வி வ்யூவர். ஒரு தடவை குழந்தை தோட்டத்தில் ஊஞ்சல்ல இருந்து கீழ விழுந்துட்டுக் கையை முறிச்சுக்கிட்டு அழுதுகிட்டு இருக்கு. இவ ஷோ முடிஞ்சு, கமர்ஷியல் முடிஞ்சு, அப்புறம்தான் போய்ப் பார்த்திருக்கா."

"ஸார்! உங்க பிரச்னை ஓர் அமெரிக்கப் பெண்ணைக் கல்யாணம் செய்துகிட்டதாலதான்னு சொல்றிங்களா?"

"இந்தியப் பெண்ணைக் கல்யாணம் கட்டிக்கிட்டு அனுபவம் இல்லைப்பா. அமெரிக்காக்காரிங்களைக் கல்யாணம் கட்டிக்கிட்டவங்க எல்லாருமே திண்டாடறாங்கன்னு நான் சொல்ல வரலை. என் ஃப்ரெண்டு ராமசாமின்னு இருக்கான். வெள்ளைக்காரியைத்தான் கட்டிக்கிட்டான். அவ வத்தக் குழம்பெல்லாம் பண்றா. வெள்ளிக்கிழமை மஞ்ச பூசிக் குளிச்சு, சாமி படத்துக்கு முன்னால கோலம் போட்டு, ஸ்லோகம் எல்லாம் இங்கிலீஷில எழுதி வைச்சுக்கிட்டு மனப்பாடம் பண்ணிட்டா...!"

"இது பாசாங்கு ஸார்!"

"ஏன், நாம அவங்க மாதிரி பாசாங்கு பண்ணலையா? ஜீன்ஸ் கட்டிக்கிட்டு 'தி ஹூ" பாட்டெல்லாம் பாடிக் கிட்டு. இது ஒரு விதமான ரிவர்ஸ் ஸின்ட்ரோம்தான்.

“பிட்ஸ்பார்க் போய் பாரு. அங்க இருக்கிற பட்டர் சொல்லுவார். ஒரு நீக்ரோ வந்து தினம் காலட்சேபம் கேக்கறானாம். கல்யாணம் இந்திய முறைப்படி பிட்ஸ்பார்க்ல தான் கட்டிப்பேன்னு ஒத்தைக்கால்ல நின்னானாம். "ஜம்புத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே' எல்லாத்தையும் இவர் ராவோட ராவா மாத்திக் கல்யாணம் பண்ணி வெச்சிருக்கார்! என்ன சொல்றே இதுக்கு?”

"இதெல்லாம் ஒருவிதமான ஃபெட்டிஷ்னுதான் சொல்லணும். ஸார்! உங்களை நான் ஒண்ணு கேக்கணும்."

"சொல்லு."

"வாட் டு யூ திங்க் ஆஃப் அடல்ட்டரி!"

"இட்ஸ் ராங்! இங்ககூட அது தீவிரமான மன்னிக்க முடியாத பாவம்தான்! அடப்பாவி! அந்தப் பொண்ணு மேல கை வெச்சிட்டியா?"

"சேச்சே? என்ன ஸார்! என்னை நீங்க சரியா தெரிஞ்சுக்கலைன்னு தோணுது. நான் இல்லை ஸார்..."

"பின்ன யாரு?"

"எங்கப்பா கிட்ட இருந்து லெட்டர் வரட்டும் சொல்றேன்" என்றான்.

## 18

அப்பாவிடமிருந்து கடிதம் வருவதை பத்தாம் நாளிலிருந்து எதிர்பார்க்கத் தொடங்கினான். மெயில்மான் வரும்வரை காத்திருந்து மோகன்ராமுக்கு வரும் 'ஜங்க் மெயிலை' யெல்லாம் அலசிப்பார்த்து தனக்கு ஒன்றும் இல்லை என்று தினம் தினம் ஏமாந்து வாரம் கடந்து போய்விட்டது. ரிப்போர்ட்டை சமர்ப்பித்ததில் அது வேறு கிணற்றில் கல்லாக இருந்தது. ப்ரொபஸர் இன்றைக்குக் கூப்பிடுவார், நாளைக்குக் கூப்பிடுவார் என்று எதிர்பார்த்தான். எல்லாரும் ஸ்ட்ரைக்கின் அதிர்ச்சியிலிருந்து இன்னும் சுதாரித்துக் கொள்ளவில்லை என்று தெரிந்தது. இடையில் ப்ரொபஸர்களிலேயே மாற்றம் இருக்கும் என்றும் வேறு டிபார்ட்மெண்ட் போகிறார் என்றும் பேசிக்கொண்டார்கள். மேரி ஒரு போர்ட்டோ ரிக்கனுடன் சென்று கொண்டிருப்பதை ஒரு நாள் பார்த்தான்.

நியூயார்க் கொஞ்சம் கொஞ்சமாக குளிர்ந்து கொண்டிருந்தது. தினங்கள் மந்தமாக இருந்தன. சூரியன், 'கொஞ்சம் இரேன், வருகிறேன்' என்று மெல்லத்தான் புறப்பட்டும் சோகையாகத்தான் இருந்தது. நிழல்களில் குளிர் அதிகரித்துக் கொண்டே வந்தது. மழை பெய்தாலோ காற்றில் ஊசி ஏறிக் கொண்டது. ஸ்மோக் கட்டடங்களை மறைந்தது. ரகுபதிக்கு எதும் பிடிக்கவில்லை.

மதுமிதா மறுமுறை போன் பண்ணி பார்ட்டி வரும்படி அழைத்திருந்தாள். அப்பாவிடமிருந்தது பதில் வராமல் போக வேண்டாம் என்றுதான் தீர்மானித்திருந்தான். ஏதாவது சாக்குச் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று யோசித்தான். இந்த நாள்களில் ரகுபதி தன்னுடைய தர்ம சங்கடத்தை அவ்வப்போது யோசித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறான்.

எத்தனை கணவர்கள் எத்னை மனைவிமார்களை ஏமாற்றுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வக்காலத்து வாங்க முடியுமா என்று யோசித்தான். மதுமிதா என்ன பிரத்யேகம்? எப்போதோ முட்டாள்தனமான கணங்களில் அவளைக் காதலிக்கிறேன் என்றதால் அவள் இல்வாழ்க்கையில் என்னைத் துருத்திக் கொள்வதா? அவன் எக்கேடு கெட்டுப் போகட்டும். அப்பாவும் இப்படித்தான் எழுதுவார். எப்படி எழுதினாலும் எதாவது எழுதினால் சரி, பதினெட்டு தினங்கள் ஆகிவிட்டன. ஒருவார்த்தை பதிலைக் காணோம். ஒருவேளை நான் மறுபடி மதுமிதாவைச் சந்தித்ததில் அவருக்கும் கோபமோ? கோபமிருந்தாலும் எழுதாமல் இருக்க மாட்டாரோ, உன் மேல் கோபம். நீ செய்தது நன்றாயில்லை என்று பளிச்சென்று எழுதி விடுவாரோ!

சாயங்காலம் வரை பார்ட்டிக்குப் போவதைப் பற்றித் தீர்மானிக்கவில்லை. கல்லூரியிலிருந்து திரும்பி வந்ததும் மோகன்ராம் தன் குழந்தைகளை அழைத்து வரச் சென்றிருப்பார் என்று தோன்றியது. வெள்ளிக்கிழமை கெடுவாயிற்றே! அதை மட்டும் தவற மாட்டார். காலையில் மெயின்மானை விசாரிக்கத் தவறி விட்டான். மெயின் பாக்ஸின் கொடி, அதனுள் கடிதம் இருக்கிறது என்று அறிவித்தது. அவசரமாகத் திறந்து பார்த்ததில் அப்பா தான் அப்பாடா!

நெஞ்சம் கொஞ்சம் பதற வாயிற் கதவைக் கூடத் திறக்காமல் குளிரை மதிக்காமல் உறையைக் கிழித்துப் படித்தான்.

"அன்புள்ள ரகுவுக்கு,

உன் கடிதம் இன்று கிடைத்தது. நான் டூர் போயிருந்ததால் உன் கடிதம் வந்து நான்கு தினங்கள் கழித்துத்தான் படித்தேன். உன் கடிதம் எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை (தமிழில் நிறையப் பிழைகள் இருந்தன) மோகன்ராம் நீ மதுமிதாவைச் சந்திப்பதைப்பற்றி இதற்கு முன் கடிதம் எழுதியிருந்தார். அப்போதே உனக்குக் கடிதம் எழுதலாம் என்று நினைத்திருந்தேன். இதைப்பற்றி நீயே எனக்குத் தெரிவிக்கிறாயா என்று பார்க்க ஆசையாக இருந்தது. தெரிவித்து விட்டாய். நீ அமெரிக்காவில் என்னவெல்லாம் செய்யக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தேனோ அவையெல்லாம் செய்து வருகிறாய். நன்றாகப் படிப்பாய் என்று எதிர்பார்த்தேன். உன் படிப்பைப் பற்றி நீ கொடுக்கிற அரைகுறைத் தகவல்கள் அவ்வளவு திருப்தி தரும்படியாக இல்லை. சிரமப்படுகிறாய் என்று தெரிகிறது. நீ மதுமிதாவைச் சந்திக்க முயற்சி பண்ணமாட்டாய் என்று நினைத்தேன். சந்தித்து அவளுடன் 'பிக்னிக்' போய் இப்போது அவர் கணவனின் துரோகத்தைத் துப்பறிந்து கண்டுபிடித்து என்ன செய்வது என்று என்னைப் போய் கடல்கடந்து கேட்டிருக்கிறாய். என்னத்தைச் சொல்வேன்? நடப்பது எல்லாமே வருத்தந்தரும் வகையில் இருக்கிறது. அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட உனக்கு என்ன பாத்தியதை என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது. மதுமிதா உனக்கு ஒருவிதமான அப்ஸெஷன்' அவள் உன்னைத் தற்கொலை வரை கொண்டு சென்றிருக்கிறாள். அமெரிக்காவில் தற்கொலைகள் நவீன ரகமானவை. அதற்கான வசதிகள் எல்லாம் நிறைய இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதில் எதையும் நீ முயன்று பார்க்கமாட்டாய் என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

உன் பிரச்னையை, உன் தர்மசங்கடத்தை உன்னால் தீர்த்துக் கொள்ள முடியவில்லை என்பதால் அந்தக் குரங்கை என் தோளில் ஏற்றியிருக்கிறாய். நான் சொல்லி நீ அதைச் செய்யப் போகிறாய் எனபதை நான் நம்ப மறுக்கிறேன். இது என்ன 'ரிமோட் கண்ட்ரோலா?' இருந்தும் நீ கேட்டதற்காக இதில் என் அபிப்பிராயத்தை மட்டும் சொல்கிறேன். அது நீ நினைத்து வைத்துக் கொண்டதோடு ஒத்துப் போயிருந்தால் ஏற்றுக் கொள்வாய், உபதேசம் கேட்கிற வயசெல்லாம் கடந்து விட்டது உனக்கு.

பிரச்னை என்ன? ஒரு கணவன் மனைவியை ஏமாற்றுகிறான். மனைவி நல்ல பெண். தெரியும். அவள் உன்னுடன் சிநேகிதமாக இருந்திருக்கிறாள். வெகுளி என்பதெல்லாம் உனக்குத் தெரியும். கணவன் அவளை ஏமாற்றும் விஷயத்தை நீ அவளிடம் சொல்வதா? வேண்டாமா? இது உன் பிரச்னை. இதை இரண்டு விதமாகப் பார்க்கலாம். உலகத்தில் பற்பல இடங்களில் பற்பல அநியாயங்கள் நடக்கின்றன. ஒவ்வொன்றையும் நம்மால் நிவர்த்தித்துக் கொண்டிருக்க முடியுமா?

இரண்டாவது, ஒரு டாக்டரின் உவமை. ஒரு டாக்டர் ஒரு பேஷண்டுக்கு பரிசோதனை மூலம் கான்ஸர் என்று தெரிந்து கொள்கிறார். இதைச் சொன்னால் பேஷண்டுக்கு வருத்தமும், மிகவும் கவலையும் ஏற்படும். சொல்லாவிட்டால் பேஷண்ட் ஒரு தப்பான பிரமை பிடித்த உலகத்தில் கொஞ்ச காலம் சந்தோஷமாக இருக்கலாம். அது ஒரு



www.writersujatha.com

கோணம். என்னைப் பொறுத்தவரையில் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு நம்முடைய திருக்குறளில் உள்ளது.

*'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்."*

செய்யக்கூடாததைச் செய்தாலும் தப்பு. செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டாலும் தப்பு. நீ மதுமிதாவிடம் விஷயத்தைச் சொல்லிவிடுவது இதில் எந்த வகை?

அதனால் அவர்களுடைய வாழ்க்கை எந்த விதத்தில் பாதிக்கப்படும். எந்த விதத்தில் திசை மாறும் என்று யோசித்துப் பார். அந்த மாற்றத்தின் சுழற்சியில் நீயும் அகப்பட்டுக் கொள்வாய். அதிலிருந்து தப்பிக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பார்.

ஒரு சமயத்தில் மதுமிதாவையும் அவளுடைய இன்னொஸன்ஸையும் யோசிக்கும்போது அவளுக்கு நிகழ்வது அநியாயம்தான் என்று தோன்றும். அதற்குப் பரிகாரம் உன்னிடம் இல்லாத வகையில் சொல்வதில் எந்தவித லாபமும் இல்லை. அதனால் துக்கம்தான் அதிகமாகும்.

பெண்களை அதிக காலம் ஏமாற்ற முடியாது. நீ சொல்லாவிட்டாலும் ஒரு நாளில்லை ஒரு நாள் மதுமிதாவுக்கு தெரியத்தான் போகிறது.

திருக்குறளில் மற்றும் ஓர் அதிகாரம் இருக்கிறது. பிறனில் விழையாமை. அதில் ஒரு குறளை நான் சொல்லியே ஆகவேண்டும்.

*'எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்*
*தேறான் பிறன்இல் புகல்'*

எத்தனை பெருமைப்பட்டவனாக இருந்தாலும் மற்றொருத்தன் மனைவியை விரும்பினால் உருப்பட மாட்டாய் என்கிறார். அதையும் ஞாபகம் வைத்துக் கொண்டு செயல்படு.

ஜெயந்தியையும் குழந்தையையும் நீ விசாரித்திருந்தது எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. இரண்டு பேரும் சௌக்கியம்தான். அக்கம்பக்கத்தில் இந்தப் பெண் எனக்கு மனைவியா, மகளா என்கிறதில் அபிப்ராய பேதம் இருக்கிறது. குழந்தை வளரும் விதம் உலகத்தில் உள்ள மிகப் பெரிய விந்தைகளில் ஒன்று. அதற்கு ஏதாவது பொம்மை வாங்கி அனுப்பு. நான் படித்துக் கொண்டிருக்கும் புத்தகம் 'விவேக சிந்தாமணி'யின் பழைய பிரதிகள். சொன்னால் மலைப்பாய், 1895 டிசம்பர்! பி.ஆர். ராஜமையர் பி.ஏ–யின் சீதை' என்கிற கட்டுரையும் மாட்சிமை தாங்கிய இந்திய சக்ரவர்த்தினியாகிய விக்டோரியா மகராணிக்கு யமுனா கல்யாணி ராகத்தில் மிஸ்ரசாபு தாளத்தில் காப்புச் செய்யுளும் அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பாதே போன்ற பழமொழிகளுக்கு விளக்கமும் கொண்டு தற்போது வெளிவரும் பத்திரிகைகளை விட, எனக்கு சிந்தாமணி சுவாரஸ்யமாகவே இருக்கிறது. உட்ஹவுஸின் 'ஓவர் செவண்டி' கிடைத்தால் வாங்கி அனுப்பு. என்ன தீர்மானித்தாய் என்பதை அடுத்த கடிதத்தில் எழுது.

அன்புள்ள அப்பா.

கடிதத்தைப் படித்துவிட்டு சாவியைப் பொருத்தும் போது வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெண் இறங்கி, "இஸ் திஸ் நம்பர் ட்வெண்டி?" என்றாள்.

"யா!"



www.writersujatha.com

"ஆர் யூ ராகுப்பட்டி"

"யா!"
"கமான் டிரஸ் அப்! ராட் ஆஸக்ட் மி டு பிக் யூ ஆப்ஃபர் தி பார்ட்டி!"

"ஆர் யூ"

"ஐ வொர்க் ஃபர் ஹிம்."

www.writersujatha.com

அவசரமாக டிரஸ் பண்ணிக்கொண்டு அந்தப் பெண்ணுடன் புறப்பட்டு காரில் நியூ ஜெர்ஸிக்குப் போனான். ராதாவின் வீட்டின் முன் சைட் வாக்கில் எல்லாம் கார்கள் இறைந்திருந்தன. உள்ளே திரைக்குப் பின் பலர் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. வாசலில் கதவைத் திறந்ததும் கலகலப்பான இரைச்சல் சிகரெட் புகையுடன் தாக்கியது. ஹால் நிறைந்து விருந்தாளிகள் இருந்தார்கள். ஆளுக்கொரு கிளாஸ் வைத்திருந்தார்கள். வீடியோ காமிரா இயங்கிக் கொண்டிருக்க, திரையில் சிரிப்பெல்லாம் குளோஸப்பில் தெரிந்தது. மதுமிதா பட்டுச்சேலை அணிந்திருந்தாள். கழுத்தில் சேலையின் நிறத்திற்கு ஏற்ப சிவப்புக்கல் நெக்லஸ் போட்டிருந்தாள். அதன் நடுவே தனிப்பட்டு வைரம் பதிந்திருந்தது. மதுமிதா அழகாகவே இருந்தாள். புடவை அவளுக்கு நிரம்ப பொருத்தமாக இருந்தது. லிப்ஸ்டிக் அதிகம் இல்லாமல், தொட்டால் உடைந்து போகக் கூடிய கண்ணாடி தேவதை போல இருந்தாள். ராதா அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டு ஓர் அமெரிக்கனுடன் ஜோக் பண்ணிக் கொண்டிருந்தான். ஒரு வெள்ளைக்காரி மதுமிதாவைக் கன்னத்தில் முத்தமிட்டு அவள் கழுத்து மாலையை ஆராய்ந்தாள். காமிராக்கள் அவ்வப்போது கண்சிமிட்டிக் கொண்டிருக்க, காட்டரர்ஸிலிருந்து வந்திருந்த குஜராத்தி இளைஞன் பேஸ்மெண்டில சூடாகப் போட்டுக்கொண்டு அவர்களிடையே உலவினான். யாரோ பாடிக் கொண்டிருக்க, மதுமிதா ரகுபதியைக் கவனிக்கக் கொஞ்ச நேரமாயிற்று. "ஹாய் ரகு" என்று அங்கிருந்து கையசைத்தாள். "போய்டாதே உனக்கு ரொம்ப முக்கியமா ஒண்ணு இருக்கு." ராதாகிஷன் ரகுவைப் பார்த்து உடனே தன்னைப் பிய்த்துக் கொண்டு அருகில் வந்து "ஹாய் ரகு! க்ளாட் யூ குட் கம்' ரத்னா ரத்னா! மது! ரத்னா எங்கே?"

"அடுத்த ரூம்ல இருக்கா."

"கூப்டேன்."

"நீதான் கூப்டேன். நான் பிஸியா இருக்கேன்."

www.writersujatha.com

நிறைய இந்தியர்கள் இருந்தார்கள். ஆண்கள் பாரிலும் பெண்கள் பெரும்பாலும் ஸாரிகளிலும் இருந்தார்கள். அந்நியர்கள் அந்நியர்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ரகுபதிக்கு அருகில் "யூ ஆர் ராதாஸ் பிரதர்?" என்றவனுக்கு முப்பத்தைந்து இருக்கலாம். குறுந்தாடி வைத்திருந்தான். பைப் புகைத்துக் கொண்டிருந்தான்.

"நோ, ஹிஸ் ஃப்ரண்ட்!"

"யூ வொர்க் ஃபர் அஸ்ட்ரா?"

"நோ, ஐம் எ ஸ்டூடண்ட்."

"ஓ" – அவன் மதிப்பில் கொஞ்சம் மாற்றுக் குறைந்து விட எக்ஸ்யூஸ்மி!" என்று பிரிந்து சென்றான்.



www.writersujatha.com

யாரோ ரகுவின் கையில் ஒரு காட்சைத் திணித்தார்கள். குச்சி குத்தி பக்கோடா எடுத்துக் கொண்டான். பரிசுப் பொருள் எதும் வாங்கி வரவில்லையே என்று வருத்தப்பட்டான். கீழே நிறைய பரிசுகள் இறைந்திருந்தன.
கூட்டத்தை விலக்கிக் கொண்டு மது ரகுவின் அருகில் வந்து, "என் கூடவா" என்றாள். கோட்டைப் பிடித்துத் தர தரவென்று இழுத்துக் கொண்டு சென்றாள். அடுத்த அறையில் நான்கைந்து பெண்கள் வீடியோவில் என்னவோ தரானா என்று படம். இந்திப் படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'ரத்னா! எங்க இந்த ரத்னா?"

www.writersujatha.com

"அவர்களில் ஒரு பெண் "எஸ்மிட்டி" என்றாள்.

"நான் சொல்லலை, தி ஃபேமஸ் ரகு! இதான்! எங்கே உங்கப்பா?"

"கீழே குடிச்சுக்கிட்டு இருப்பாரு!"

"ரகு, திஸ் இஸ் ரத்னா, திஸ் இஸ் ரகு! இண்ட்ரொட்யூஸ் பண்ணியாச்சும்மா – இனிமே உன் பாடு! எனக்கு வேலை நிறைய இருக்கு."

அந்தப் பெண்ணைச் சற்று நிமிர்ந்து பார்த்து தன் கையைப் பார்த்துக் கொண்டான். அவள் கூந்தலைப் பின்னாமல் அலைய விட்டிருந்தாள் என்பதை மட்டும் தான் கவனித்தான்.

"நீங்கதானா அது?"

ரகுபதிக்குப் புரியவில்லை. "என்ன இது என்னைப் பத்தி ஏதாவது புரளியா?" என்றான்.

"இல்லை இல்லை. ஐம் ஸப்போஸ்ட் டு மீட் யூ இன் திஸ் பார்ட்டி."

"எதுக்கு?"

"நமக்குக் கல்யாணம் பண்ணி வெக்கலாமான்னு ஜனங்க யோசிச்சுக்கிட்டிருக்கு."

"ஜனங்கன்னா?"

"நியூயார்க் வாழ் தமிழ்க் குடும்பங்கள்! என்ன பயப்படறீங்க? கல்யாணம் பண்ணிண்டுர மாட்டேன் கவலைப்படாதீங்க."

www.writersujatha.com

"யூ மாஸ்ட் பி ஜோக்கிங்!"

"என்னைப் பார்த்தா கல்யாணம் பண்ணிக்கிறா மாதிரி இல்லையா?"

"அதுக்கில்லை, ஐம் எ ஸ்டூடண்ட்?"

"உங்க சரித்திரமே தெரியும். மதுஸ் ஓல்ட் ஃப்ளேம் அதும் தெரியும்! என்ன சாப்பிடறீங்க? விஸ்கியா? ஆரம்பமே நல்லால்லையே!"

"நான் அதிகம் குடிக்கிறதில்லை. பார்ட்டிக்கு வந்து தான்..."

"எனக்குக் கொடுக்காம தனியா குடிக்கிறீங்களேன்னு கேட்டேன்."

"இந்தாங்க இதையும் எடுத்துக்கங்க... நான் சாப்பிடலை..."



www.writersujatha.com

"சே! எச்சல்" என்று பக்கத்தில் சென்று கொண்டிருந்த ட்ரேயிலிருந்து ஒரு கிளாஸைப் பொறுக்கிக் கொண்டாள்.

அவனைக் கண்ணாடியில் தொட்டு, "சியர்ஸ்; லெட்ஸ் மாரி ஸம் டைம்" என்று உயர்த்தினாள்.

ரகுபதி அவளை இப்போதுதான் நேராகப் பார்த்தான்.

www.writersujatha.com

## 19

பார்ட்டி முழுவதுமே ரகுபதிக்குப் பாசாங்காக இருந்தது. முழுநேரப் பாசாங்கு. ராதாகிஷன் தன் மனைவியுடன் நடத்துவது. அப்டா கழன்று கொண்டு விட்டார் என்றுதான் தெரிந்தது. சொல்லு, சொல்ல வேண்டாம் என்று திட்ட வட்டமாகக் கூறாமல் திருக்குறள் என்ன திருக்குறள்? ரத்னா என்கிற பெண் அவனைப் புறக்கணித்துவிட்டு வெள்ளைக்காரக் கிழவருடன் பேசிக் கொண்டிருந்தாள். ராதாகிஷன் அவ்வப்போது அருமை மனைவியை அணைத்துக் கொண்டு கன்னத்தை முத்தமிடுவதைக் கவனித்தான். வயசானதைப் பரிபூர்ணமாக மறுக்கும் வகையில் டி ஷர்ம் ஜீன்ஸும் அணிந்திருந்த பெரியவர், அவனருகில் வந்து, "ஹாய்! ஐம் வைத்தி. நீதானே ரகுபதி?"

"ஆமா ஸார்.'

சற்றுப் பின்வாங்கி அவனை ஏற இறங்கப் பார்த்தார்; "ஸ்மார்ட்! எம்.பி.ஏ. பண்றியாமே?"

"ஆமா ஸார்."

"ஷல் ஐ கெட் யூ ட்ரிங்க்?"

"வேண்டாம் ஸார். ஆய்டுத்து. நான் அதிகம் சாப்பிடறதில்லை."

"ஏன் ஏதாவது ரிலிஜியன் அப்ஜெக்ஷனா?"

"இல்லை தலைவலி வந்துருது."

"மிட்டி உன்னைப் பத்தி சொன்னா. ரத்னாவை மீட் பண்ண இல்லை? ரத்னா?"

"மீட் பண்ணிட்டேன் ஸார்?"

"வாட் டு யூ திங்க் ஆஃப் ஹர்?"

"இட்ஸ் டூ எர்ளிடு திங்க் ஆஃப் ஹர்! பாத்து ரெண்டு வார்த்தை பேசினேன். அவ்வளவுதான்."

"ஷி இஸ் ஒர்க்கிங் யூ நோ தட்!"

"தெரியாது ஸார்!"

"உங்கப்பா ஜாதகம் எல்லாம் பார்ப்பாரா?"

"எதுக்குக் கேக்றீங்க?"

"கல்யாணத்துக்குத்தான். வேற எதுக்காவது ஜாதகம் பார்ப்பாங்களா?"

"கல்யாணமா? எனக்கா? எனக்கு இன்னும் வேளை வரலை சார்."

"எம்.பி.ஏ. முடிக்கப் போறேன்னா?"

"இல்லை, இன்னும் ஒரு வருஷம் இருக்கு."

"முடிச்சுட்டு என்ன பண்றதா உத்தேசம்?"

"அதை ஒண்ணும் தீர்மானிக்கலை."

"அமெரிக்காவில் கண்டினியூ பண்ணப் போற இல்லை?"

"ஸ்டூடண்ட் விசாவில வந்திருக்கேன். கண்டின்யூ பண்ண முடியாது."

"அதெல்லாம் பார்த்துக்கலாம். இங்கேயே கல்யாணம் பண்ணிக்கிட்டன்னா, யார் உன்னை அசைக்கப் போறாங்க. நாங்க எல்லாருமே ஸிட்டிஸன்தான். நியூயார்க்கில் வந்து பதினெட்டு வருஷம் ஆச்சு."

"சொந்த ஊர் எது உங்களுக்கு?"

"டாஞ்சுர்க்குப் பக்கத்தில. அங்க யாரும் இல்லை. அப்பா அம்மா கூட இங்க வந்துட்டாங்க. வி கான்ட்கோ பேக்! இட்ஸ் இம்பாஸிபிள். மூணு டாட்டர் எனக்கு, மூணு பேரும் இங்கதான் பிறந்து வளர்ந்தவா. ரத்னா முதல் டாட்டர், இஸ்ன்ட் ராவிஷிங்!" தன் மகளைப் பார்த்து, தொலைதூரத்திலிருந்து புகழ்ந்தார். "யூ மஸ்ட் டாக் டு ஹர். டாக்டு ஹர் ஸீரியஸ் லைக்; ஐ மீன் இன்னும் அவ இந்தியப் பெண்தான். நம்ம ட்ரெடிஷன் எல்லாத்திலயும் அவளுக்கு இன்ட்ரஸ்ட். கர்னாடக சங்கீதத்தில ராகம் எல்லாம் கண்டுபிடிப்பா. தமிழ் வாசிப்பா தெரியுமா? விகடன், கல்கி எல்லாம் வாசிக்கிறா, தெரியுமோ?"

"நைஸ்" என்றான்.

"மிட்டி உன்னைப் பத்திச் சொன்னா. ரொம்ப நல்ல பையனாமே நீ. ஐ லைக் பாய்ஸ் லைக் யூ. பாய்ஸ் வித் எ பர்ப்பஸ் இன் லைப்! நம்ம இண்டியன்ஸ் புத்திசாலித்தனத்தில் கொஞ்சம் கூட குறைச்சலில்லை தெரியுமா? கொஞ்சம் லேஸி அவ்வளவ்தான். எல்லா ஃபீல்டிலயும் அவங்களைத் தூக்கிச் சாப்ட்டுரலாம் தெரியுமோ? தேசாய் அதான் சொல்வான்! தேசாயை இன்ட்ரொட்யூஸ் பண்ணி விட்டாளோ உனக்கு?"

"இல்லை ஸார். பரவாயில்லை."

"புவர் சாப், லாஸ்ட் ஹில் டாட்டர்!"

"ஸாரி."

"லாஸ்ட்டுன்னா செத்துகித்துப் போயிரலை! தனியா விலகிப் போயிட்டா பாய் ஃப்ரெண்டுகூட! இது என் மகளுக்கு நிகழக் கூடாதுன்னு விரும்பறேன். ரகு, அதான் இந்த அமெரிக்காவில டேஞ்சர். என்ன இருந்தாலும் நாம் அவங்ககிட்டருந்து மாறுபட்டவங்கதான், அவங்க கூட இண்டர்ஃபியர் பண்ணாம நம்மால இங்க ரொம்ப சுகமா வாழ முடியும். ஆனா, கல்ச்சர் ரொம்ப வேறுபட்டது, நம்ம கல்ச்சர் வேற அவங்க கல்ச்சர் வேற!"

மதுமிதா அருகில் வந்து, "என்ன எல்லாம் பேசிட்டிங்களா மாமா?" என்றாள்.

"இப்பதான் பேச ஆரம்பிச்சிருக்கேன். நான்தான் பேசிட்டிருக்கேன். ரொம்ப ஷையா இருக்கான்."

"அவன் எப்பவுமே அப்படித்தான். மனசில இருக்கிறதைச் சொல்லவே மாட்டான். ரத்னா!"

"ரத்னா அவர்களை நோக்கிவர, "என்ன ரகுகிட்ட பேசினியா?"

"அப்பாதான் பேசிட்டிருக்காரே!"

"என்னப்பா, போர் அடிச்சுட்டிங்களா?"

"சேச்சே! அதெல்லாம் இல்லை" என்றான் ரகு.

"ரத்னா அந்த ட்ரிக் பண்ணிக்காட்டேன்!"

"சேச்சே! அதெல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம்."

"காட்டேன்... ரகு அவகிட்டே ஒரு டாலர் நோட்டு கொடேன்."

ரகு அவளிடத்தில் ஒரு டாலர் நோட்டைக் கொடுத்த போது, ரத்னா அதை வாங்கிக் கொண்டு, "நம்பர் பாத்துக்கங்க" என்றாள்.

ரகு அஸ்வாரஸ்யமாகப் பார்த்துக் கொடுக்க, ரத்னா பக்கத்தில் இருப்பவரிடம் ஒரு லைட்டர் வாங்கி அதை எரித்துச் சாம்பலாக்கி, சாம்பலை ஒரு கிளாஸ் தண்ணீரில் போட்டுக் கலக்கிக் குடித்தாள்.

எல்லோரும் சிரித்துக்கொண்டே பார்த்துக் கொண்டிருக்க, ரத்னா ரகுவை அழைத்து அவன் பாக்கெட்டை நிரடி அதிலிருந்து டாலர் நோட்டை எடுத்துக் கொடுத்து "நம்பர் பாருங்க! என்றாள்.

மதுமிதா கைதட்டி, "பார்த்தியா! எப்படி?" என்றாள்.

ரகுபதி சிரித்தான். நூறு டாலர் நோட்டாயிருந்தாலும் இப்படி பண்ணுவிங்களா?"

"முடியுமே?"

"அப்படின்னா சொந்த நூறு டாலர் நோட்டை எரிகிறதுக்கு நீங்க தயாரா இருக்கிங்கன்னு அர்த்தம்?"

"அதெல்லாம் இல்லை, இது சூ மந்திரக்காளி!" என்றாள்.

மதுமிதா, யாராலயும் கண்டுபிடிக்க முடியாது."

"இந்த மாதிரி பல பேர்கிட்ட ஏமாந்துகிட்டு இருக்கே மது நீ" என்றான்.

"யார்கிட்ட, யார்கிட்ட சொல்லு பார்க்கலாம்."

"சொல்றேன், மது! சமயம் வர்றப்ப சொல்றேன்."

"ஏய் ரத்னா, கண்ல புகை வர்றதைக் காட்டேன்..." இல்லை. அந்த மாட்ச் பாக்ஸ் ட்ரிக் காட்டேன்..."

"இவருக்கு அதிகம் இஷ்டமில்லைன்னு தோணுது என்றாள் ரத்னா."

"சேச்சே! இஷ்டம் தாங்க."

"வித்தை மேலயா வித்தை காட்டறவங்க மேலயா?"

ரகு மௌனமாக இருக்க, "ஏய்... ய்.. வெக்கப் படறான் பாரு. பொண்ணு போல கன்னம் எல்லாம் சிவந்துக்குது பாரு" என்றாள். மதுவை ஆதுரத்துடன் பார்த்தான். பைத்தியக்காரப் பெண்ணே!

ராதாகிஷன் குறுக்கிட்டு. "என்ன இங்க ரகசியம் பேசியாறது! மது, யூ ஆர் வாண்ட்டட். ஐஸ் க்யூப்ஸ் ஆயிருச்சு பாரு. எக்ஸ்யூஸ் மி" என்று அவளை அழைத்துக் கொண்டு செல்ல, சற்று நேரம் ரத்னாவுடன் தனியாக இருப்பதை உணர்ந்தான்.

"உங்களுக்கு ட்ரிக்ஸ் பிடிக்காதா."

"ஏமாத்தறது பிடிக்காது."

"என்ன பிடிக்கும் உங்களுக்கு?"

"தனிமை" என்றான்.

"என்னை விட்டுரு – போர் அடிக்கிறேன்னு சொல்றீங்க."

"சேச்சே! தப்பா எடுத்துக்காதிங்க. எனக்கு பேசத் தெரியாது. எதாவது அசந்தர்ப்பமா சொல்லிருவேன்."

"ஸாரி, நாங்க எங்க நட்பை உங்க மேல திணிச்சுக்கறதா நினைச்சுக்காதீங்க! கல்யாணம் கில்யாணம்னு சொல்லி எங்கப்பா உங்களை பயப்படுத்தி விட்டிருக்கார் போல இருக்கு."

'சேச்சே! அப்படியெல்லாம் இல்லை. இதில பயப்படறதுக்கு என்ன இருக்கு? யூ ஆர் வெரி அட்ராக்டிவ் வெரி ஜாலி, என்னை உங்க குடும்பத்தில் கன்ஸிடர் பண்றதே பெரிய விஷயமாத்தான் நான் எடுத்துக்கணும். ஆனா இந்த மாதிரி பார்ட்டியில கல்யாணத்தைப் பத்திப் பேசறது வினோதமா இருக்கு."

"வீட்டுக்கு வாங்களேன். என் தங்கைகளையும் மீட் பண்ணலாம். நைஸ் கர்ள்ஸ்!"

"வரேன்."

"செஸ் ஆடுவீங்களா?"

"அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. ஐம் ஜஸ்ட் ஆர்டினரி!"

"அப்படி ஒப்புத்துக்கறதே எக்ஸ்ட்ரார்டினரி" என்றாள். "கொஞ்சம் தனியா வாங்க."

ரகு சற்றுத் தயக்கத்துடன் அவள் பின் சென்றான். பேஸ்மெண்டுக்குப் போனால் அங்கே பாதி இருட்டில் பலர் 'பீட்டர் ஓ டூ ல்' படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மாடிப்படியில் உட்கார்ந்து கொண்டாள். "உட்காருங்க, சீரியஸ்" என்றாள். ரகுபதி கொஞ்சம் தயக்கத்துடன் மேல் படியில் உட்கார, “ரகு, நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா ஒண்ணே ஒண்ணு ப்ராமிஸ் பண்ணுவிங்களா? என்னை இண்டியா அழைச்சுட்டுப் போயிருவிங்களா?"

ரகுபதி அவளை நேராகப் பார்த்து, "ஐ திங்க் யூ ஆர் ட்ரங்க்" என்றான்.

"கொஞ்சம்தான். ஆனா நான் சொல்றது குடிச்சதுனால இல்லை. இங்கிருந்து சொல்றேன்" என்று அவன் கையை எடுத்து மார்பைத் தொட்டுக் காட்டினாள். அவன் கை சூடாக இருந்தது. "நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கட்டாயம் இல்லை. பண்ணிக்கிறதா தீர்மானிச்சா இது மட்டும் எனக்கு ப்ராமிஸ் பண்ணிருங்க. என்னை அழைச்சிட்டுப் போயிருங்க?"

"அமெரிக்கா பிடிக்கலையா உங்களுக்கு?"

"இல்லை. அலுத்துப் போச்சு."

"அமெரிக்காவா? இல்லை. அமெரிக்காவில உள்ளவங்களா?"

"எல்லாமே! எல்லாரும் பொய் சொல்றாங்க, கட்டடங்கள் பொய் சொல்லுது, விளம்பரங்கள் பொய் சொல்லுது. அப்பா அம்மா தங்கைங்க எல்லாமே வேற வேற விதத்தில் பொய் சொல்றாங்க."

"உண்மைங்கிறது இருக்கா?"

"இல்லைதான். உண்மைங்கறது 'பெரும்பாலானவர் ஒப்புத்துக்கற பொய்'னு சொல்வாங்க. ஆனா எனக்கென்னவோ இண்டியாவில இவ்வளவு பெயர் சொல்லப் பழகிக்கலைன்னு தோணுது."

"உங்களுக்கு ஏமாற்றம்தான் காத்திருக்கு. அங்கயும், பொய் நிறைய உண்டு. இங்கயாவது பணக்காரப் பொய்?"

"இருக்கட்டும், பரவாயில்லை. நான் சொன்னதை ஞாபகம் வெச்சுக்க. இன் கேஸ் நம்ம ரெண்டு பேருக்குள்ள விஷயம் கொஞ்சம் முன்னேறிச்சுன்னா."

"சரி" என்று சிரித்தான்.

"தாங்க்ஸ்" என்று அவன் கையைப் பிடித்து ஒரு முறை அழுத்தினாள். டெலிவிஷன் திரையின் வெளிச்சத்தில், அவள் செதுக்கப்பட்டிருந்தவள் போலத் தோன்றினாள். மதுவை விட சற்று நிறம் கம்மி என்றுதான் சொல்ல வேண்டும். இருந்தாலும் மதுவிலிருந்து முற்றிலும் வேறுபட்டவள். தலைமயிரை வாராமல் விட்டிருந்தது அவள் முகத்திற்கு ஒருவிதமான 'ஸென்ஷுவாலிட்டி' தந்திருந்தது. உதடுகள் ஈரச்சிவப்பு அப்படியே. நகங்கள் கருநீலத்துக்கு அருகே ஒரு நிறத்தில் சாயம் பூசியிருந்தாள்.

நகங்களைக் கவனமாக வளர்த்திருந்தாள். அவளிடம் தென்பட்ட பர்ஃப்யூம் வாசனை மிக லேசாக இருந்தது. முழங்காலை இறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்ததில் அவள் மார்பு அழுந்தியிருந்தது. உள்ளுடைகள் அணிந்திருந்ததால் மிக சாமர்த்தியமாக அவை மறைந்திருக்க வேண்டும். கண் இரப்பைகளில் நிறைய இடமிருந்தது. மூக்கு முகத்தில் பட்டால் வலிக்கும் போல இருந்தது.

"முழுப்பேரே ரத்னாதானா?" என்றான்.

"ஏன், போதாதா? ரத்னகுமாரின்னு வெச்சுக்கங்களேன்..."

"தமிழ்ப் படிக்கத் தெரியுமாமே உங்களுக்கு!"

"அப்பா அதிகப்படியா சொல்லியிருக்கார். ஏதோ கொஞ்சம் எழுத்துக்கூட்டிப் படிப்பேன். டச்சே இல்லை. நீங்க சொல்லித் தரிங்களா?"

"பார்க்கலாம்."

"பிடி கொடுக்காம பேசறீங்களே! என்னைக் கண்டா பயமா இருக்கா?"

"சேச்சே! அதான் சொன்னே, எனக்குக் கல்யாணத்தைக் கண்டா தான் பயம். நான் பார்த்த கல்யாணங்கள் ஒண்ணும் சிலாகித்துச் சொல்லும்படியா இல்லை. அதனால..."

"நீங்க எங்க வீட்டுக்கு வந்தே ஆகணும். என் தங்கை கூட அட்டாரி ஆடிப்பாருங்க சாப்ட்டுருவா! அப்புறம் எங்கம்மா சமைக்கிறது, எங்க பாட்டி அமெரிக்காவில கந்தரலங்காரம், திருப்புகழ் பஜனை செய்யறது... இங்கேயும் இல்லாம அங்கேயும் இல்லாம ரெண்டு கலாச்சாரத்துக்கு இடையில் நாங்க தவிக்கிறதைப் பார்க்கறதுக்காவது நீங்க எங்க வீட்டுக்கு வரணும். இன்னொரு தங்கை சுரங்களை எல்லாம் இங்கிலீஸ்ல எழுதி வெச்சுக்கிட்டு பாட்டு கத்துக்கறதையும் நீங்க பார்த்துத்தான் ஆகணும்."

"வரேன்" என்றான்.

ராத்திரி எல்லாரும் விடைபெற்றுக்கொண்டு கிளம்புவது என்பது ரொம்ப இழுத்தடிக்கும் சமாசாரமாக இருந்தது. ஒவ்வொருத்தராகக் கிளம்ப, ரகுபதி காருக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. ராதா காரை எடுத்துக் கொண்டு யாரையோ ட்ராப் செய்யப் போயிருந்தான். வைத்தியநாதன் மகளுடன் புறப்பட்டுவிட, ரகுபதியும் மதுமிதாவுக்குப் பீங்கான் தட்டுகளையும் மற்ற பார்ட்டி உற்சாகக் குப்பைகளையும் அப்புறப்படுத்துவதில் உதவி செய்தான்.

"வெச்சுரு" ரகு, டிஷ் வாஷர்ல போட்டுரலாம். நாளைக்கு க்ளீனிக் உமன் வருவா."

"பரவால்லை மது, எல்லாத்தையும் அலம்பி வைக்கிறேன்."

இருவரும் அருகருகே ஸிங்க் அருகில் வெந்நீர்க் குழாயில் அலம்பிக் கொண்டிருக்கையில் மது திடீர் என்று "நீ அப்ப என்ன சொன்னே?"

"என்ன சொன்னே" என்றான்.

"என்னை யாரோ ஏமாத்திக்கிட்டு இருக்கா, சமயம் வர்றப்ப சொல்றேன்னு சொன்னியே, இப்ப ரெண்டு பேரும் தனியாகத் தானே இருக்கோம், சொல்லேன்."

"இல்லை மது, சும்மா சொன்னேன்."

"சே! நீ சும்மா சொல்லலை. உம்முகம் சீரியஸாத் தான் இருந்தது. சொல்லு ரகு. கண்ணோல்லியோ! சொன்னா உனக்குன்னு ராஸ்பரி மில்க் தனியா பண்ணித் தருவேன். சொல்லு... என்ன விஷயம் சொல்லு?" என்றாள்.

www.writersujatha.com

## 20

மதுமிதா திரும்பத் திரும்ப 'சொல்லு சொல்லு' என்று வற்புறுத்தினதில் ரகுபதிக்கு விதியின் விளையாட்டு இருப்பதாகவே தோன்றியது. இரண்டு பேரும் தனியாக இருக்கும் இந்த கிச்சன் சந்தர்ப்பம் சாமியாகவே ஏற்படுத்திக் கொடுத்தது போல இருந்தது. ராதா விருந்தாளிகளைக் கொண்டுவிட வெளியே போயிருக்கிறான். அமைதியான இரவு. அவர்கள் திருமண நாள். திருமண வாழ்க்கை திசை திரும்பப் போகிற நாள். கேட்கிறாள். உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இதில் இருக்கும் குரூரமான நியதியைத் தன்னால் ஒன்றும் செய்துவிட முடியாது. எப்போதாவது அவள் தெரிந்து கொள்ளத் தான் வேண்டும். இப்போது?

"மது, நான் சொல்றது உனக்குக் கொஞ்சம் ஷாக்கிங்கா இருக்கும்?"

"எதைப் பத்திச் சொல்லப் போறே?" என்றாள். அலம்பிய தட்டுகளைக் கவனமாகத் துடைத்துக் கொண்டே.

"நான் பார்த்த ஒரு காட்சி. அன்னிக்கு நாம ஆர்லண்டோவில இருந்து திரும்பி வந்தமில்லையா? நீ ஸ்டோருக்குப் போறேன்னு சொல்லி எங்கிட்ட சாவியைக் கொடுத்துட்டு வீட்டுல இருன்னு சொன்னியே, ஞாபகம் இருக்கா?"

"இருக்கு. வீட்டைத் திறந்து பார்த்தா உள்ளுக்குள்ள ராதா இருக்குது! உனக்கு அப்படியே ஷாக் ஆயிருச்சாக்கும்?"

"ராதா இருந்ததால ஷாக் இல்லை மது... ராதா கூட...'

"ராதா கூட?"

www.writersujatha.com

"மது, நான் இதை உங்கிட்ட சொல்றதுக்கு ரொம்ப வருத்தப் படறேன். உன்னுடைய சந்தோஷத்திலே எனக்கு எப்பவுமே அக்கறைதான். இதைச் சொல்றதனால உன் சந்தோஷம் நிச்சயம் பாதிக்கப்பட்டுடும்னு தெரிஞ்சும் இதை உங்கிட்ட சொல்றது ஒருவிதமான கொடுமைதான். ஆனா, நீயே தெரிஞ்சுக்கறப்ப உனக்கு இன்னும் ஷாக் அதிகமா இருக்கும்னு தோணுது. நீ ஒளிவு மறைவில்லாம இருக்கறப்ப உங்கிட்ட இருந்து எதையும் மறைச்சு வைக்க விரும்பலை நான். எனக்கு இதை உங்கிட்ட சொல்றதில வேறு ஒரு குறிக்கோளும் கிடையாது. இதை நீ முதல்ல தெளிவா தெரிஞ்சுக்கணும்."

"என்ன ரகு போர் அடிக்கிறே! நீ இப்ப சொன்னதில் பாதி புரியலை. சொல்ல வந்ததைச் சுருக்கமா சொல்லிட்டுப் போயேன்."

www.writersujatha.com

"சரி, சுருக்கமா சொல்றேன். அன்னிக்கு நான் திரும்ப வந்து கதவைத் திறந்து பார்த்தபோது உன் கணவன், ஹால்ல, சோபாவில ஒரு வெள்ளைக்காரப் பெண்ணோட..." சட்டென்று ஆங்கிலத்துக்குத் தாவினான். 'ஹி வாஸ் ஹாவிங் ஸெக்ஸ் வித் ஹர்!"
"நீ பாத்தியா?" என்றாள் தட்டு துடைப்பதை நிறுத்தி விட்டு.

"ஆமாம். நல்லவேளை நீ பார்க்கலை! ராதா அவளை அவசர அவசரமாக வீட்டுக்கு அனுப்பிச்சுட்டு, அங்க இருந்து..."

'இதை ஏன் நீ அப்பவே சொல்லலை?"

"ராதாதான் கேட்டுக்கிட்டாரு. உங்கிட்ட சொல்ல வேண்டாம்னு." என்ன இது! அதிர்ச்சி எங்கே?

"இப்ப ஏன் சொல்றே?"

"நீ கேட்டதாலே."

"சரி, மேலே சொல்லு!"

"மேலே சொல்ல என்ன இருக்கு மது? உன் கணவன் கிட்ட, மது மாதிரி, ஓர் அறியாப் பெண்ணை ஏமாத்தறது அக்கிரமம்'னு சொல்லிப் பார்த்தேன்! ராதா ரொம்ப விநோதமான தர்க்க வாதம் பண்ணி, அவ பார்க்காத இருக்கறப்ப என்ன நடக்கிறதுங்கறது அவளை எதுக்குப் பாதிக்கணும்'னு கேட்டார்."

"ராதா எங்கிட்ட கூடச் சொன்னார்!"

"என்னது! இதை ராதா உங்கிட்ட சொல்லிட்டாரா? அதைக் கேட்டுக்கிட்டு நீ..."

"ராதா சொன்னபடியே நடந்துருச்சு."

"என்ன மது சொல்றே? எனக்குப் புரியலை."

"ராதா வரட்டும். அதுங்கிட்ட பேசிறலாம்!" என்றாள். ரகுவுக்குச் சற்று அதிர்ச்சியாகவே இருந்தது.

"மது, இது உங்க ரெண்டு பேருக்குள்ள தீர்மானிக்கப்பட வேண்டிய சொந்த விஷயம்."

"அப்படின்னா ஏன் சொன்னியாம்?" என்றாள்.

"நீ கேட்டதால."

"இத பார் ரகு. இந்த வேலையெல்லாம் எங்கிட்ட நடக்காது. நீ ராதாகிட்ட என்ன பயமுறுத்தினே?"

"பயமுறுத்தினேனா?"

"உனக்கு ராதா கம்பெனியில வேலை கொடுக்கணும். இல்லைன்னா ராதாவைப் பத்தி எங்கிட்ட இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எங்க ரெண்டு பேருக்குள்ளே இருக்கிற ஒற்றுமையைக் கலைப்பேன்னு சொல்லி, ப்ளாக்மெய்ல் பண்ணது எனக்குத் தெரியாதா ரகு? ராதா எல்லாத்தையும் சொல்லியாச்சு! ஏன் ரகு! நான் சந்தோஷமா இருக்கிறதில உனக்கு வயிற்றெரிச்சலா? நாங்க ரெண்டு பேரும் சந்தோஷமா

இருக்கக் கூடாதா? நாங்க என்ன தப்புப் பண்ணோம்! உன்னைக் கல்யாணம் பண்ணிக்க நான் சம்மதிக்கலைங்கிறதுக்காக இந்த மாதிரி சைல்டிஷா பழி தீர்த்துக்கப் பார்க்கறியா? ரகு! எனக்கும் ராதாவுக்கும் இடையில் எந்தவிதமான ரகசியமும் கிடையாது. எதுக்காக எங்க ரெண்டு பேருக்குள்ள சந்தேகத்தை விதைக்கப் பாக்கறே? ராதாகிட்ட நீ என்னைப்பத்தி அவதூறெல்லாம் பேசினன்னு எனக்குத் தெரியாதா? ஆர்லண்டோவில நான் உன்னைப் படுக்கைக்குக் கூப்பிட்டதாகவும் நீதான் என்னவோ சத்தியசந்தன் மாதிரி இன்னொருத்தன் மனைவியைத் தொடமாட்டேன்னு சொன்னியாம். இதையெல்லாம் நாங்க நம்புவம்னு கனவு காண்றியா?"

"ஸ்டாப் இட்! கடவுள் சத்தியா நான் அப்படி எல்லாம் உன் கணவன்கிட்ட பேசவே இல்லை மது."

"ரகு! யூ நோ வாட்ஸ் ராங் வித்யு? இன்னும் என்னையே நினைச்சுட்டு இருக்கே! அதுக்காகத்தான் உன்னை வைத்தியநாதன் ஃபாமிலிக்கு அறிமுகப்படுத்தினேன். சின்னப்பிள்ளைகள் மாதிரி கோள் சொல்றே. என்னை மறந்துரு ரகு! நான் இனிமே உனக்குக் கிடைக்க மாட்டேன். அந்த மாதிரி எண்ணமே வேண்டாம் உனக்கு. இந்த விளையாட்டெல்லாம் விட்டுவிட்டு ஒழுங்கா படிப்பை முடிச்சுட்டு ஊருக்குப் போய்ச் சேரு! என்ன."

"மது! இனிமே நான் எதும் பேச விரும்பலை. உன்னைப் பார்க்க விரும்பலை. உங்க வீட்டுக்கு வர விரும்பலை. இந்த மாதிரி ஒரு ஃபூல்ஸ் பாரடைஸ்ல இருக்க உனக்கு இஷ்டம்னா தாராளமா இருந்துக்க, ஐ டோண்ட் கேர்! நான் வரேன்."

"இரு இரு! இந்தக் குளிர்ல ஸ்டாட்டன் ஐலண்டில யார் உன்னைக் கொண்டு விடுவாங்க? ராதா வரட்டும் ட்ராப் பண்ணச் சொல்றேன்."

"இல்லை, நான் பஸ் பிடிச்சுப் போயிர்றேன்."

மதுமிதா சிரித்தாள்.

"ராதா என்னைத் திட்டும் கொஞ்சம் இரேன். ராதாவையும் பார்த்துப் பேசிட்டுப் போயிரேன். இப்ப வந்துரும். அதுவரைக்கும் வீடியோவைத் திருப்பிப் போட்டுப் பார்த்துக்கிட்டு இருக்கியா? இல்லை. டி.வி.ல லேட் நைட்ஷோ பார்க்கறியா? நீ இதை எங்கிட்ட சொன்னதை நான் உடனே மறந்தாச்சு, பரவாயில்லை! உன்னை செலுத்தறது என்மேல் இன்னும் உள்ள ஆசை தான்! என்னால புரிஞ்சுக்க முடியறது!"

"உன்னைவிட முட்டாளான பெண் உலகத்தில இருக்க முடியுமா! என்ன மனைவி நீ? உன் கணவன் கண்ணுக்கு முன் ஏய்க்கிறான். அதைப் பார்க்க மறுக்கும் மறைப்புக் கட்டின பொட்டைக் குதிரையா நீ?

"இதோ, ராதா வந்தாச்சு."

ரகுபதிக்குக் கொஞ்சம் அச்சமாகவும் அருவருப்பாகவும் இருந்தது.

"ராட், நீ சொன்னபடியே ஆயிருச்சு!" என்று அவன் தோளைக் கட்டிக் கொண்டாள்.

"ஹலோ ரகு, நீ இன்னும் போகலை இல்லையா?"

"ராட், நீ சொன்ன அதே வார்த்தைகளை உபயோகிச்சான். என்ன ரகு? அப்படியே நீ சொன்னபடி ஆச்சு!"

ராதாகிஷன் ரகுபதியை ஒரே ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "இஸ் இட்!" என்றான். "சொல்லியாச்சில்லை ரகு?" என்றான்.
"ராதா, நீங்க ரொம்ப கெட்டிக்காரர்."

"கெட்டிக்காரர் இல்லைன்னா ஸீனியர் வைஸ் ப்ரெஸிடெண்டா இருக்க முடியுமா?" என்றாள் மது.

"ராட்! ரகு உன்னைப் பத்தி என்ன சொன்னாலும் அதைப்பத்திக் கவலைப்படாத. இந்தக் குளிர்ல வீட்டுக்கு நடந்து போவேன்னு சொன்னான். நான்தான் வேண்டாம், நீ ரெண்டு பேரைப் பத்தியும் என்ன அவதூறாச் சொன்னாலும் நாங்க கோவிச்சுக்கப் போறதில்லை'ன்னு சொல்லி நிறுத்தி வெச்சிருக்கேன். கிவ் மி எ கிஸ் மை டியர்!"

"ஹாப்பி ஆனிவர்ஸரி சொல்லவே இல்லையே! யார் வந்தாலும் நம்மைக் கலைக்க முடியுமா?"

"முடியாது மது!"

"லெட்ஸ் ட்ரிங் டு தட்! கிச்சன்ல கொஞ்சம் ஷெர்ரி இருக்கு ரகு, நீயும் சேர்ந்துக்கயேன்!"

ராதா கண்ணாடிக் கோப்பையை உயர்த்தி, "டு மாரேஜ்" என்றான் புன்னகையுடன்.

**கா**ரில் மவுனத்தை ராதாதான் கலைத்தான். "ஸோ! சொல்லிப் பார்த்துட்ட?"

"பிரமாதமா தயார் பண்ணிட்டீங்க, ராதா ஐ கங்கராஜுலேட் யூ !"

"ரகு, இட்ஸ் எ மான்ஸ் வர்ல்ட்! மனைவிகள் விசுவாசமுள்ளவர்கள். மனைவிகள் ஏமாற்றப்படவேண்டியவர்கள்."

"விக்கெட்" என்றான்.

"இந்த மாதிரி இருந்தாத்தான் இங்க பிழைக்க முடியும்?"

"இந்த மாதிரி பிழைக்க விரும்பலை நான்."

"அப்ப பேசாம தின்னவேலி போயிரு."

"நன் ஆஃப் யுர் பிஸினஸ்!"

"ஈஸி ஈஸி. என்னைப் பகைச்சுக்கறதனால உனக்கு ரொம்ப நஷ்டங்கள் ஏற்படும்."

"பரவாயில்லை."

"இத பாரு ரகு! எல்லாத்தையும் மாரலா, எத்திக்கலா பார்க்காதே. நடைமுறையில பாரு. மதுமிதா என்னதான் நவீனமா உடையணிந்தாலும், என்னதான் இங்கிலீஷ் பேசினாலும் அவ உள்ளுக்குள்ள ரத்தத்தில் கொஞ்சம் சாவித்திரி, சீதை சமாச்சாரங்கள் எல்லாம் கலந்திருக்கு! அதை நம்ம அட்வான்டேஜுக்கு உபயோகப்படுத்திக்கிறதில எவ்ரிபடி இஸ் ஹாப்பி! இல்லையா? கொஞ்சம் ஆர அமர இதை யோசிச்சுப் பாரு. ஒரு கணவன், மனைவி இல்லாதபோது என்ன செய்யறாங்கறது அவளுடைய சந்தோஷத்தை எதுக்கு பாதிக்கணும்?"

"இதே ரிவர்ஸா இருந்தா?"

"மை டியர் ரகு! அதுதான் இந்தியப் பெண்ணின் தனித்தன்மை. தேவடியா வீட்டுக்கு கூடைய தூக்கிட்டுப் போவா! இதைப் பாரு. எல்லாத்தையும் மற. எங்கூட ஒருமுறை யூரோப் வா! வாழ்க்கைங்கறது என்னதுன்னு காண்பிக்கறேன்."

"தாங்க்ஸ்! குட் நைட்! இங்கதான் நான் இறங்கிக்கணும்" என்றான் ரகு.

www.writersujatha.com

படுக்கையில் வந்து படுத்தபோது தன் வாழ்க்கையில் மதுமிதா சகாப்தம் முடிந்துவிட்டது என்றே நினைத்தான். இனி அவர்களுடன் பேசுவதிலோ பழகுவதிலோ அர்த்தமில்லை. சுலபமாக ஏமாளியாக்கி விட்டான். பொறாமை பிடித்த பழைய காதலன் பாத்திரத்தைக் கொடுத்து விட்டான். மதுமிதாவைப் போல வெகுளியாக... வெகுளியா! முட்டாள்!

**கா**லேஜில் அவன் ரிப்போர்ட் ஏற்றுக் கொள்ளப்பட்டது கூட அவனுக்கு அவ்வளவு சந்தோஷத்தைத் தரவில்லை. இந்த வருஷம் தப்பித்து விடலாம். இனி கோடை காலத்தில் வரப்போகும் பரீட்சைதான் கெடு. வகுப்புகளுக்கு ஒழுங்காகச் சென்று ஒழுங்காகப் பாஸ் பண்ணி, ஒழுங்காக ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு இப்படியெல்லாம் சம்பிரதாயமாக நினைத்தான். வகுப்புகளில் ஜன்னல்கள் இல்லாதது ஆறுதலாகவே இருந்தது. சீஸன் மாறி காற்று மரங்களில் அலைந்தது. மாணவர்கள் வகுப்புக்குள் ஃப்ரிஸ்பி விளையாடினார்கள். அவர்கள் உற்சாகத்தின் இடையே பரீட்சை பயமை ஊடாடுவதையும் உணர முடிந்தது. ப்ரொபஸர் வரும் வரை அந்தச் சிறிய ப்ளாஸ்டிக் தகட்டைச் சுழற்றிப் பிடித்துக் கொண்டிருக்க, உள்ள வந்த ப்ரொபஸர் மீ ஹன் தன்மேல் அது படாமல் தலையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டியிருந்தது! எல்லாரும் திடீரென்று மவுனமாகிவிட, அவர் கோபித்து வகுப்பை டிஸ்மிஸ் பண்ணி விடுவார் என்று எதிர்பார்த்தான். பதிலாக அவர் அந்த வண்ணத் தகட்டைப் பொறுக்கி மேஜை மேல் வைத்து விட்டு மன்னிக்கும் புன்னகையுடன், 'இந்தக் கல்லூரி ரொம்ப மாறிவிட்டது' என்று பாடத்தைத் தொடங்கினார். மாணவர்கள் செப்டம்பரிலிருந்து ரொம்பத்தான் மாறிவிட்டார்கள். தைரியம் பிறந்து விட்டது. எர்விங்கர் தைரியமாகிப் பாதி வகுப்பில் காப்பி சாப்பிட எழுந்து போகும் புது வழக்கத்தை அறிமுகப்படுத்திவிட்டான். வகுப்பின் ஆரம்பத்தில் பாதிப்பேர் தான் இருப்பார்கள். மற்றப் பேர் அஞ்சு நிமிஷத்திலிருந்து முப்பது நிமிஷம் வரை லேட்டாக வருவார்கள். காரணமே இல்லாமல் திடீர் என்று வகுப்பே 'ஸ்ஸ்ஸ்' என்று சப்தமிடும். விரிவுரையாளர் தப்பித்தவறி ஜோக் அடித்தால், மிகையாகக் கைகொட்டி ஆரவாரித்துச் சிரிப்பார்கள். எதற்காகச் சிரித்தாய் என்றால் யாருக்கும் தெரியாது என்றுதான் தோன்றியது.

www.writersujatha.com

ரகுபதிக்கு இந்தக் கோலாகலங்களில் எல்லாம் ஒரு முழு அமெரிக்க உற்சாகத்துடன் பங்கேற்க முடியவில்லை. சிறுமையாகவே உணர்ந்தான். அடிக்கடி தன்னையே அவர்கள் கேலிப் பேச்சுக்கு உள்ளாக்குவதையும் ஒருவாறு சகித்துக் கொண்டுவிடும் நிலைமைக்கு வந்துவிட்டான். நிஜமான சிநேகிதர்கள் என்று யாரும் இல்லை. மேரி இப்போதெல்லாம் வாரம் ஒருமுறைதான் "ஹாய்" என்கிறாள். அப்பாவுக்குக் கடிதம் எழுதாமல் ஒரு மாதம் போய்விட்டது. அப்பாவிடம் நடந்ததைச் சொல்வதற்கே அவமானமாக இருந்தது.

இடையே அந்த வைத்தியநாதன் இரண்டு முறை போன் பண்ணியிருந்தார். மோகன்ராம் டூர் போயிருந்தார். அவருடைய பெரிய வீட்டில் தனியாக இருப்பது அவன் வெறுமையை அடிக்கோடிட்டுக் காட்டியது. ஒருநாள் வைத்தியநாதன் வீட்டுக்கு முன்னறிவிப்பில்லாமல் சென்றான்.

www.writersujatha.com

எங்கிருந்து குலைத்தது என்று சொல்ல முடியாமல் குட்டி நாய்! அதை நாற்காலிக்கடியிலிருந்தது எடுத்துப் பொட்டலமாக ஓர் இளம்பெண் தூக்கிக் கொண்டு, "நீங்க யார்?" என்று கேட்டாள். ரத்னாவின் தங்கையாக இருக்கும் போலத் தெரிந்தது. "மிஸ்டர் வைத்தியநாதனைப் பார்க்கணும்."

"உங்க பேர்?"

"ரகுபதி?"

"ஓ, நீங்களா அது! வாங்கோ!" என்றாள். உள்ளே நுழைந்ததும் பிடிவாதமாக இந்தியா, நடராஜர் சிலை, ராஜஸ்தான் பெயிண்டிங், சங்கராச்சாரியார் படம் சுவரில், அலங்கார ரத்னக் கம்பளம். "அப்பா பேஸ்மெண்டில யோகாசனம் பண்ணிட்டிருப்பார். அம்மா வந்துருவா. பேப்பர் படிக்கிறிங்களா?" என்று ஹிந்துவின் வாராந்தர வெளிநாட்டுப் பதிப்பை எடுத்துக் கொடுத்தாள். கேஸட்டில் கர்னாடக சங்கீதம் கனவில் போல ஒலித்துக் கொண்டிருக்க, ஊதுவத்தி வாசனை மூக்கைத் தாக்கியது. ரத்னா கையைத் துடைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். "வாங்க!" – ரத்னா அவன் எதிரே உட்கார்ந்து கொள்ள, ரகுபதி அவள் இப்போது வேறு விதமாக இருப்பதைக் கவனித்தான்.

## 21

ரகுபதி அவளைப் பார்த்து, "அன்னிக்கு பார்ட்டிக்கு வந்திருந்தது நீங்கதானா?" என்றான்.

ரத்னா, "ஏன்?" என்றாள்.

"அன்னிக்கு வேற மாதிரி ஸ்டைலா டிரஸ் பண்ணிக்கிட்டு இருந்தீங்க."

"இன்னிக்கு...?"

"கொஞ்சம் மைலாப்பூர் தெரியுது."

"அவ்வளவு தூரத்துக்கு என்னைக் கவனிச்சிருக்கிங்களா, பரவாயில்லையே! இந்த தேசத்தில நிறைய வேஷம் போடணும். நிம்மு! இதுதான் ரகு... சொன்னேனே..."

அந்தத் தங்கை சட்டை பாண்ட் அணிந்து திருத்தப்பட்ட புருவத்தின் கீழ் கறுத்த கண்களால் அவனைப் பார்த்து, "நீங்க அட்டாரி ஆடுவிங்களா?" என்று கேட்டாள்.

"அட்டாரின்னா?"

"வீடியோ கேம்" என்றாள் ரத்னா.

"எனக்கு அதெல்லாம் தெரியாதும்மா."

"செஸ்!"

"நோ சான்ஸ்"

"இப்ப புதுசா ஒரு வீடியோ கேமுக்கு அமெரிக்கப் பெண்கள் இயக்கம் மறுப்பு தெரிவிச்சுக் கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்காங்க, தெரியுமோ? ஒரு ரெட் இண்டியன் பெண்ணை மரத்திலே கட்டி வெச்சிருக்காங்களாம்! இண்டியன்ஸ் எல்லாரையும் கொன்னுட்டுக் கடைசில அந்தப் பெண்ணை ரேப் பண்ணா நூறு பாயிண்டாம்! எப்படி?"

"இவங்க கான்க்ரீட்லகூட செக்ஸ் இருக்குது!"

"நிம்மு பரதநாட்டியம் ஆடுவா தெரியுமா?"

"அப்படியா?"

"அப்பாகிட்ட நிம்மு பரதநாட்டியத்தைப் பத்தி பேச்சே எடுக்காதிங்க. அரங்கேற்றம் வீடியோவில வெச்சிருக்கார். மூணரை மணி நேரம்! போட்டே தீர்த்துடுவார். இது எங்க பாட்டி... பாட்டி. இதுதான் மிஸ்டர் ரகுபதி."

பட்டுப் புடவை உடுத்திக் கொண்டு காது மூக்கில் எல்லாம் வைரம் தொங்க, கையில் 'திருமூலர் தவநெறி' புத்தகத்துடன் கண்ணாடியை மூக்கில் தள்ளிக்கொண்டு பாட்டி ரகுபதியை ஆராய்ந்தாள். "உங்கப்பா பேர் என்ன?"

"கோவிந்தராஜ்."

"தஞ்சாவூரா?"

"இல்லை இல்லை."

"நாங்கள்ளாம் தஞ்சாயூர்."

"பாட்டி இப்படி இருக்காளே, ஒலிவியா நியூட்டன் ஜான் யாருன்னு கேளுங்க, சொல்லிடுவா!"

ரத்னாவின் அம்மா வந்து ஈரக்கையைப் புடவையில் துடைத்துக் கொண்டு, நமஸ்காரம்" என்றாள். அவள் மகாலட்சுமி மாதிரி இருந்தாள். குங்குமம் பெரிசாக இட்டுக் கொண்டு மாமியார் மரியாதையுடன் நாற்காலி விளிம்பில் உட்கார்ந்து கொண்டு, "ரத்னா, இவருக்கு காபி கொடு" என்றாள்.

"வேண்டாம், தாங்க்ஸ்."

"வேண்டாம்னா காபி பிடிக்காதா, இல்லை. இங்க சாப்பிடப் பிடிக்கலையா?"

ரகு சற்று யோசித்து. "ஓகே! காபி குடுங்க?"

"தட்ஸ் தி ஸ்பிரிட்!" அருகில் வந்து "அன்னிக்கு பார்ட்டியில ஜின் சாப்பிட்டதை அம்மாகிட்ட சொல்லாதிங்க... மீனுக்குட்டி!"

"மீனுக்குட்டி" மற்றொரு தங்கை போலும். பதின்மூன்று வயசுக்கு அமெரிக்க சைஸில் இருந்தாள். 'ஹாய்! என்றாள். "திஸ் இஸ் ரகு. மீனு ஸ்கூல்ல வயலின் வாசிப்பா. செஸ் ஆடுவா. அப்புறம் என்னடி, ஸாஃப்ட் பால்கூட ஆடுவே இல்லை? மீனுக் குட்டி! பேரு மீனாட்சி."

பெயருக்கும் காட்டுத்தனமாக வளர்ந்திருந்த அந்தப் பெண்ணுக்கும் பொருத்தம் இல்லாமல் இருக்க, சிரிப்பு வந்தது ரகுபதிக்கு. வைத்தியநாதன் டென்னிஸ்

ராக்கெட்டுடன் அரை டிராயரில் வந்தார். "அட! ரகுபதி! எங்கப்பா... எங்க வீட்டுக்கு வழி தெரிஞ்சுதா? ரத்னா காபி கொடுத்தியா. வா, லெட் மி சேஞ்ச்! ஒரு நிமிஷம்! அப்புறம் பேஸ்பெண்டுக்குப் போயிரலாம். ஐ'ல் ஷோ யு ஸம் இன்டரஸ்டிங் திங்க்ஸ்!" என்றார்.

"எச்சரிக்கை! வீடியோ வருகிறது!" என்று ரத்னா சிரித்தாள்.

"உங்களை எல்லாம் பாக்கிறப்ப அமெரிக்கா அவ்வளவு உங்களை அஃபெக்ட் பண்ணலைன்னு தோணுது" என்றான்.

"இவளுக்கு இண்டியாதான் சொர்க்கம். இண்டியாவுக்குப் போகணும்! இண்டியாவில செட்டில் ஆயிறணும். இதேதான் பேச்சு.

“இந்தியாவில் என்ன இருக்கு? என்னால முடியாதும்மா. நீயே கல்யாணம் பண்ணிண்டு போய்க்கோ! என்னம்மா?"

பாட்டி, "இங்கதான் சகலமும் கிடைக்கிறதே. கோயில் இருக்கு. கணேசர், மீனாட்சி, வெங்கடேச பெருமாள்! தமிழ் பொஸ்தகங்கள் எல்லாம் வந்துர்றது. வத்தல் பாருங்கோ, கொட்டிக் கிடக்கிறது. எனக்கு அமெரிக்கா புடிச்சுருக்குப்பா. ஒண்ணு ரெண்டு குட்டிகளுக்கு பாட்டு சொல்லிக் கொடுத்தா இவளுக்கு ஐநூறு டாலர் வரது தெரியுமா, சொல்லேண்டி" என்று மருமகளைப் பார்த்தாள்."

அம்மா ரகுபதியையே பார்த்துக் கொண்டிருந்தவள், கவனிக்கவில்லை.

"பாட்டி இங்க பண்ற மாட்ச் பாக்ஸ் கூட என்ன அழகா பண்றான் பாருன்னு சிலாகிப்பா."

"உங்க ஒருத்தராலயும் திரும்பிப் போக முடியாதுன்னு நினைக்கிறேன்."

"நான் போகத்தான் போறேன். எனக்கு இந்த மெஷின் வாழ்க்கை போர் அடிச்சுப் போச்சு."

"நீங்க எங்க வேலை பாக்கறீங்க?"

"ஒரு கம்பெனியில. வோர்ட் ப்ராஸஸர் தெரியுமா உங்களுக்கு?"

"கேள்விப்பட்டிருக்கேன். பார்த்ததில்லை."

"ஒரு நாள் வாங்க காட்டறேன். ஆபீஸ் பயங்கர ஆட்டமேஷன்! எங்க ஆபீஸ்ல பாதி வேலைதான் மனுசங்க. பாதி கம்ப்யூட்டர் பண்ணிடறது. எதோ சைன்ஸ் ஃபிக்ஷன் மாதிரி இருக்கும்."

"ஒரு முறை வந்து பாக்கறேன், என்ன ஸார்?"

வைத்தி அவனை பேஸ்மெண்டுக்கு அழைத்துச் சென்றார். பெண்கள் ஏதோ ஒரு ரகசிய ஒப்பந்தம் போல் உடன் வரவில்லை. பேஸ்மெண்டில் ரத்னக் கம்பளம் விரித்து மறுபடி நடராஜர் சிலை. "டான்ஸ் ஸ்கூல், பாட்டு கிளாஸ் இங்கதான் நடக்கிறது. ரெண்டு மூணு அமெரிக்கப் பெண்கள்கூடக் கத்துக்கறா. பத்மினி ராமச்சந்திரன் சிஷ்யை ப்ரேமலதான்னு வந்து கத்துக் கொடுக்கறா. என்ன சாப்பிடறே. விஸ்கி?"

"வேண்டாம். ஸார். பேசத்தான் வந்தேன்."

"இஃப்யூ டோண்ட் மைண்ட் ஐ'ல் ஹாவ் ஒன்."
"கோ அஹேட்"

"ரத்னாவுக்கு சொன்னா, எதுக்காகப்பா நம்ம சிநேகிதத்தை அவர் மேல திணிச்சுக்கணும்னு கோபப்பட்டா. ரத்னா இஸ் எ ஸென்ஸிட்டிவ் கர்ள். நிறைய சம்பாதிக்கிறா. வெரி குட் இன் ஹெர் ஒர்க். அவளுக்கு இந்த வருஷம் எப்படியாவது கல்யாணம் பண்ணி வெச்சுரணும்னு பார்க்கறேன். எனக்கு திருவிடை மருதூர், தஞ்சாவூர், மெட்ராஸ், பரோணின்னு எல்லாம் ஏகப்பட்ட ஜாதகம் வரது. எல்லாம் தயிர் வடைகள். எனக்கு ரத்னா கல்யாணத்தைப் பத்தி ரெண்டு பிரின்ஸிப்பிள். முதல்ல இண்டியனாகத்தான் இருக்கணும். அப்புறம் அமெரிக்காவில கண்டின்யூ பண்ண வாய்ப்புள்ளவனா இருக்கணும். ரெண்டு விதத்திலயும் நீ பொருந்தியிருக்கே என்ன சொல்றே? ஐம் எ ப்ளெய்ன் மேன்!"

"ரத்னாவுக்கு அமெரிக்காவில தொடர்ந்து இருக்க இஷ்டமில்லை போல இருக்கு."

"நான்சென்ஸ்! அவ அப்படித்தான் சொல்லுவா. இங்க விட்டா எங்களுக்கு வேற வாழ்வு கிடையாது. அங்கல்லாம் போய் இருக்க முடியாது."

"என்ன ஸார்?"

ஸ்காட்சை விழுங்கிக் கொண்டு, "அங்கே போனா முதல்ல ஒரு டெலிபோன் கிடைக்குமா சொல்லு?"

"கொஞ்சம் நாளாகும். டெலிபோன்ங்கறது அவ்வளவு முக்கியமா?"

"மை காட்! போன் இல்லாம என்ன பண்ண முடியும். உங்க டி.வி. பாரு. பூவைக் காட்டிண்டு அரை மணி தில்ருபா வாசிச்சுண்டு இருக்கான்."

ரத்னா ஒரு தட்டில் பகோடா போல ஏதோ கொண்டு வந்து கொடுத்தாள். "பார்த்திங்களா? குடிக்க ஆரம்பிச்சாச்சா இப்பவே?" என்றாள்.

"ஒன்லி ஒன் ட்ரிங்க் டார்லிங்! என் டாட்டரைப் பாருங்கோ. லுக் ஹௌ ப்யூட்டிஃபுல் ஷி இஸ்!"

"அவரை எம்பராஸ் பண்ணாதப்பா! மதுவையே பார்த்திருக்கிறவர் அவர்."

"மிட் டி! ஷி இஸ் ஜஸ்ட் எ ப்ரெட்டி டால்! என் டாட்டர் இன்டெலிஜண்ட் தெரியுமில்லையா?"

"ஓ யெஸ்! டாலர் நோட்டை மாயமா மறைய வெச்சுட்டாங்க."

'கேலி பண்றிங்க இல்லை? எங்கப்பா குடிச்சிருக்கிறதில கண்டுக்காம இருக்கார்."

"சேச்சே ரத்னா! கம் மை சைல்ட்!" என்று தன் புத்திரியைத் தோளோடு அணைத்துக் கொண்டு "டூ யூ லைக் திஸ் யங்ஸ்டர்?" என்றார்.

"அவரை முதல்ல கேளுங்கப்பா. இப்பவே கன்னம் சிவந்து வெட்கப்பட்டுக்கிட்டு இருக்கார்."

"ரகு, ப்ளெயினா சொல்லு, டு யூ லைக் மை டாட்டர்?"



www.writersujatha.com

ரகுபதி தயக்கத்துடன், "ஷி இஸ் ஓகே" என்றான்.
"இந்த ஓகே கீகே எல்லாம் வேண்டாம். டு யூ லைக் ஹர், ஆர் நாட்? ஐ வாண்ட் ப்ளெயின் யெஸ் ஆர் நோ."

"யெஸ்" என்றான்.

"உட் யூ மாரி ஹர்?"

"நோ!" என்றான்.

ரத்னா வசீகரமாகச் சிரித்தாள். "அப்பா யூ ஆர் ஸங்க்!"

"ஏன் கல்யாணம் பண்ணிக்கமாட்டே?"

"இன்னும் இரண்டு வருஷத்துக்கு கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை."

"தேர் யூ ஆர்!" என்றாள் ரத்னா.

"எம்.பி.ஏ. முடிக்கணும், அதானே?"

"அதில்லை. எம்.பி.ஏ. முடிச்சுட்டு எனக்குன்னு ஸ்திரமா வேலை கிடைக்கணும்."

"வேலைதானே, நாளைக்கே வேலை வேணுமா வாங்கித் தரேன்."

"அவரை ஏம்ப்பா போட்டுத் தொந்தரவு பண்றிங்க! அவர்தான் க்ளியரா சொல்றாரே?"

"லுக் யங்மேன். நான் உன்னை ஃபோர்ஸ் பண்றதா நினைச்சுக்காதே. நான் உன்னைப் ப்ரோப் பண்றனா?"

"இல்லை ஸார், சொல்லுங்க."

"இத பாரு. நீ எங்க சாதிகூட இல்லை! இஃப் யூ டோண்ட் மண்ட் யூ ஆர் நாட் எ ப்ராமின். அம் ஐ ரைட்?"

"யூ ஆர் ரைட்."

"ஸோ வாட்? ஸோ ப்ளடி வாட்? யூ ஆர் என் இண்டியன்! யூஆர் நாட் எ பிள்ளே, யூ ஆர் நாட்ட எ முதலியார், நாட் எ செட்டியார். யூ ஆர் இண்டியன்! ரைட்!"

"ரைட்!"

"ஐ வாண்ட்டு மாரி என் இண்டியன்."

"அப்பா, எங்கயோ உங்க வாக்கியம் உதைக்குது. கல்யாணம் செய்துக்க வேண்டியது நான்!"

"அதான் சொன்னேன். ஸோ மிஸ்ட்டர் ரகுபதி! நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க. ஐ டோண்ட் வாண்ட் என் ஓவர் நைட் ஆன்ஸர், யோசிச்சுப் பாரு. எம்.பி.ஏ. எங்க வீட்டில இருந்து படிக்கலாம். எங்க வீட்டில இருந்து அப்ளை பண்ணலாம். ஜாப் கிடைக்கும்.

எதுக்கும் யோசிச்சு சொல்லு. ஐம் நாட் ரஷ்ஷிங் யூ. ஆனா ஒண்ணு மட்டும் சொல்லுவேன். உனக்கு என் டாட்டர் கிடைச்சா நீ ரொம்பவும் லக்கி."

"அப்பா இப்பதான் நல்லா குடிச்சிருக்காருன்னு அர்த்தம்! டாட். போதும். சாப்பாடு எல்லாம் தயார். அம்மா கூப்பிடறா?"

"என் மத்த டாட்டர்ஸ் பாத்தல்ல! அர்ண்ட் தே எஞ்சல்ஸ்? தேசாய் பத்தி சொன்னனோ உங்கிட்ட? தேசாய்க்கு ஒரு டீன் ஏஜ் டாட்டர் இருந்தா. ஒரு அமெரிக்களை டேட் பண்ணனும்னு கேட்டா தேசாய் பர்மிஸன் தர மாட்டேன்னுட்டான். அப்பாகிட்ட சொல்லாம வீக் எண்ட் டேட் பண்ணிட்டு ராத்திரி பன்னண்டு மணிக்கு வந்தா! தேசாய் என்ன பண்ணான் தெரியுமா? அவ வந்த உடனே ப்ளீர்னு கன்னத்தில் அறைஞ்சான்!"

"அதுக்கு அந்தப் பொண்ணு என்னா பண்ணா அதையும் சொல்லிடு."

"அந்தப் பொண்ணு என்ன பண்ணித்து தெரியுமா? பெட்ரூமுக்குள்ள கதவைச் சாத்திண்டு போலீஸுக்கு இந்த மாதிரி எங்கப்பன் என்னை அடிக்கிறான்னு போன் பண்ணிடுச்சு! தி ஃபாதர் வாஸ் அர்ரெஸ்டட்! ஃபார் இல் ட்ரீட்மெண்ட்! அரெஸ்டட் அண்ட ஸெண்ட் டு ஜெயில்! கான் யூ பிலீவ் தட்?" என்று உச்சரித்துக் கேட்டார்.

'அமெரிக்காவில நம்ப முடியும் ஸார்."

"என் பொண்ணு அப்படி இல்லை! ஜெம்"– மாடிப்படிகளில் ரத்னாவின் தலையை வருடிக் கொண்டே சென்றார்.

சரியான ஐயர் சாப்பாடு. ஸ்வீட் இவனுக்காகவே வைத்திருந்தார்கள் போல இருந்தது. என்ன என்னவோ பருப்புப்பொடி, சட்னி எல்லாம் இருந்தது. பாயசம், வாழைப்பழம், ரத்னா அவன் எதிரில் உட்கார்ந்து கொள்வதற்குள் அழகாகப் பரிமாறினாள்.

வைத்தி கவனமில்லாமல் சாப்பிட்டுக் கொண்டே "இத பாருப்பா, உன்னை வீட்டு மாப்பிள்ளையா வெச்சுக்கறதில உனக்கு எத்தனை அட்வான்டேஜ் பாரு! வீட்டைப் பார்த்த இல்லை?"

"டாட், ஷட் அப்! ஈட்" என்றாள் ரத்னா.

"சாப்ட்ட உடனே அட்டாரி ஆடறிங்களா என்னோட?" என்றாள் நிம்மு.

"என்னைத் தோக்கடிக்கணும்னு வைராக்கியம் போல இருக்கு உங்களுக்கெல்லாம்!" என்றான்.

ரத்னா ஒருமுறை அவனை நிமிர்ந்து பார்த்தாள். விரல் நுனியை அவள் உதடுகளுக்குள் வைத்திருந்தது. ரகுபதிக்கு ஒருவிதமான கிறக்கத்தை ஏற்படுத்தியது. சரியென்றால் இவள் உன்னுடையவள்! ஒருகணம் அவர்கள் பார்வைகள் கோத்துக் கொண்டபோது மேம்போக்கான சகஜத்தை மீறிக் கொஞ்சம் புதிதாக ஒன்று இருந்தது. ரத்னா சட்டென்று பார்வையைத் தணித்துக் கொண்டாள்.

“உங்களுக்கு எங்க வீட்டுச் சமையல் பிடிச்சிருக்கா?" என்றாள் அம்மா.

"ஓ யெஸ்! டிவைன்!"

"பர்மனண்டாவே வந்துருங்களேன்ங்கறா" என்றார் வைத்தி.

"டாட், டோன்ட் ரப் இட் இன்!" அந்தப் பெண்களையும் பாட்டியையும் மாமியையும் வைத்தியையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தபோது ரகுபதிக்கு, "ஏன் கூடாதா?" என்று தோன்றியது.

## 22

முதல் வருஷ மாணவர்களுக்கு,

மார்க்கெட்டிங் கற்பிக்கும் பகுதியிலிருந்து மே 21 பரீட்சைக்கு உபயோகிக்கும் உதாரணம் கொஞ்சம் பெரிதாக இருப்பதால் (22 பக்கங்கள் வர்ணனை, 11 பக்கங்கள் சார்ட்கள்) பரீட்சை நேரம் நாலு மணியிலிருந்து நாலரை மணியாக நீடிக்கப்பட்டிருக்கிறது. சனிக்கிழமை பரீட்சை காலை ஒன்பது மணிக்கே தொடங்கும். பிற்பகல் ஒன்றரை மணிவரை பரீட்சை எழுத அனுமதிக்கப்படும். 'க்ருகர் ஹால்' மதிய உணவுக்காகப் பரீட்சை முடியும் வரை திறந்து வைத்திருக்கப்படும். நோட்டீஸ் போர்டில் அறிவிப்பைப் பார்த்ததும் ரகுபதிக்கு நிஜமாகவே முதல் வருஷப் பரிட்சை வந்து விட்டதை உணர்ந்ததில் உடம்பில் ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. ஒரு வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக, ஸ்ப்ரிங் தளரும் பொம்மைபோல தீர்ந்துவிட்டது. இனி கொஞ்சம் நாள் பரீட்சை ஜுரம். எல்லார் இயக்கத்திலும் பரீட்சை பயம் இருந்தது. வகுப்புகள் முடிந்துவிட்டன என்பதை நம்ப முடியவில்லை. கொஞ்சம் சுரத்தாகப் படித்தால் போதும். கொஞ்சம் கஷ்டப்பட்டால் போதும். அதன் பின் கோடை விடுமுறை. அதன்பின் மற்றொரு வருஷம்.

ஒவ்வொரு தினமாக, என்றைக்கு எந்தப் பரீட்சை எழுதினோம் என்பது மறந்துபோய் பேனாவைப் பிடித்ததில் விரல்கள் கன்னிப் போக கடைசிப் பரீட்சை (ஃபைனான்ஸ்) முடிந்ததும் யாரும் விழா நடத்தக் காணோம். அவர்கள் குரல்கள் ஆல்ட்ரிக் ஹாலில் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து போனபோது எல்லாரும் பரீட்சை நன்றாக எழுதியிருப்பார்கள் என்று தோன்றியது! என்னைத் தவிர! இருந்தும் என்னை நிறுத்த மாட்டார்கள் நான் அவ்வளவு மோசமில்லை என்பதும் புரிந்தது. எதிர் நோக்கிய ஸம்மர் இனித்தது. பாஸோ பெயிலோ செப்டம்பர் வரை இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எங்கே போவது? தெரியவில்லை. மோகன்ராம் பார்ட் டைமாக ஒரு லைப்ரரியில் வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நானூறு ஐநூறு டாலர் கிடைத்தால் போதும் உயிர் வாழ்வதில் பிரச்னை இல்லை.

ஸ்டாட்டன் ஐலண்டில் பெட்ரோல் பங்க்கில் ஒரு வேலை இருக்கிறது என்றார்கள். கண்ணாடிக்குள்ளிருந்து பம்ப்பின் ஹோஸை இயக்க வேண்டும். சுலபமான வேலை. அல்லது வேறு யாராவது எதாவது வேலை தருகிறார்கள் என்றால்...

வேறு யாராவது என்றால்?

வைத்தியநாதனைப் பற்றித்தான் நினைத்தான். சந்தர்ப்பம் வைத்துக் கொண்டு ரத்னாவைப் பார்க்கப் போகலாம் என்று தோன்றியது. அதே சமயம் தயக்கமும் இருந்தது. அதிகம் அவர்களுடன் ஒட்டிக்கொள்ளக் கூடாது என்று தோன்றியது. இருந்தும் ரத்னாவுக்கு போன் பண்ணினான்.

"ஹாய்! எப்படி எழுதினிங்க பரீட்சை?"

"பரவாயில்லை, அதைப்பத்தி செப்டம்பர் வரைக்கும் நினைக்க வேண்டாம்."

"அப்போ செப்டம்பர் வரைக்குமா லீவு? யூ ஆர் லக்கி!"

"என்ன லக்கி? மூணு மாசம் என்ன செய்யறது?"

"எங்க ஆபீசுக்கு வாங்களேன்."

"வந்து"
"வேலை கீலை வாங்கித் தர முடியாது. அப்பாகிட்ட வேணா சொல்லி வைக்கிறேன். எங்க ஆபீஸ்ல எப்படி இருக்கும்னு பார்க்க வாருங்களேன்."

மிக நவீனமாக இருந்தது. அங்கங்கே பல வர்ணத்தடுப்புகள். அவற்றின் அருகில் பொம்மை பொம்மையாகப் பெண்கள். ஒவ்வொருத்தரிடமும் ஒரு கம்ப்யூட்டர் டெர்மினல்.

"பேப்பர்லஸ் சொஸைட்டி?" என்றாள் ரத்னா, மெலிய ரோஜா நிறச் சட்டையும் கருநீல பாண்ட்டும் அணிந்திருந்தாள். கோட்டைக் கழற்றி வைத்திருந்தாள். கழுத்தில் பிடிப்பாக டை கட்டியிருந்தாள், இடுப்பும் மார்பும் பெண்ணென்று காட்டிக் கொடுத்தாலும் அமைப்பில் உடை ஆண்களுக்கு அருகில் இருந்தது. நீண்ட விரல்களால் டெர்மினலின் கீபோர்டை க்ளிக், க்ளிக்' என்று கொத்தினாள். அது ஒரு இனிமையாகச் சத்தம் செய்துவிட்டுத் திரையில் என்னவோ எழுதிக் காட்டியது.

"இது என்ன?"

"மெனுன்னு சொல்லுவாங்க. எடிட் பண்ணணும்னா 'இ'யை அடிச்சாப் போதும்" என்று ஆங்கில 'இ'யைத் தொட்டாள்.

"டாக்குமெண்ட் நேம்?" என்றது கம்ப்யூட்டர்.

"கான்ட்ரா 23" என்று அடித்தாள்.

கம்ப்யூட்டர் உறுத்தாமல் 'கிர்ரக் கிர்ரக்' என்றது. "ஃப்ளாப்பி டிஸ்க்ல முதல்ல தேடும் இங்கேயே டாக்குமெண்ட் இருந்தா, அதைக் கொண்டு வந்து காட்டும் இல்லைன்னா உள்ள போய் பெரிசா கம்ப்யூட்டர் இருக்குது. அதுக்கு ஒரு டிஸ்க் இருக்குது. அதிலிருந்து எடுத்துக்கிட்டு வரும்." கம்ப்யூட்டர் திரையில் அந்த காண்ட்ராக்ட் ஃபாரத்தை விரித்தது. ரத்னா கர்ஸரை அங்கங்கே நகர்த்தி அதில் சில மாறுதல்கள் செய்தாள். "இதிலிருந்து எனக்கு காப்பி எடுக்க பிரிண்ட் ஃபேஸ் போகணும்னா..."

ரகு புரியாமல் விழிக்க...

"என்ன அப்படிப் பார்க்கறீங்க?"

"நீ சொல்றதைக் கவனிக்கவே இல்லை. நம்மூர்க்காரப் பொண்ணு நியூயார்க்குல பார்க் அவென்யூவில நாப்பதாவது மாடியில ஒரு கம்ப்யூட்டர்கூட சம்பாஷிக்கறாங்கறது... எனக்கு ஆச்சரியமாத்தான் இருக்கு ரத்னா."

"முதல் நம்மூருக்காரி இல்லை நானு. இதெல்லாம் முதல் தடவை பார்க்கறதுக்குத்தான் பிரமாதமா இருக்கும். கொஞ்ச நாளில போர் அடிச்சுரும்."

பக்கத்தில் இருக்கும் ப்ரிண்டர் 'கிர்ரக் கிர்ரக்' என்று அதிவேகமாக டைப் அடித்துக் கொண்டிருக்க, "டெய்ஸி வீல் ப்ரிண்டர்" என்றாள்.

"ஐம் வெரி மச் இம்ப்ரஸ்டு, ஆபீஸ் பூரா இந்த மாதிரிதானா?"

"ஆமா, இது அடிச்சு முடிக்கிற வரைக்கும் நான் ஜன்னல் வழியா நியூயார்க்கைப் பார்த்துக்கிட்டே இருக்கணும்."

"உனக்கு நியூயார்க் பிடிச்சிருக்கா?"

"பிடிச்சுத்தானே ஆகணும். தாய்நாடு இதானே? நான் ஓர் அமெரிக்கன் சிட்டிஸன் தெரியுமா?"

இரண்டு பேரும் மான்ஹாட்டனில் நடந்து செல்கையில் கடைக் கண்ணாடிகளில் மற்றொரு ரத்னா மற்றொரு ரகு அவ்வப்போது அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். "எனக்கு ஸிட்டிஸன் மாதிரியே தோணலை இங்க. இங்க பிறந்து, இங்க படிச்சு, இங்க பாஸ் பண்ணி, இங்க வேலை செஞ்சுக்கிட்டு இருந்தாலும் என் மனசு ஒரு கற்பனை இந்தியாவில்தான் இருக்கு. எல்லாமே ஸுப்பர் ஃபிஷியல். எல்லாருமே ஹாய் ஹாய்! எல்லாருமே, இந்தியர்கள்னா 'உனக்குப் பல்வரிசை எவ்வளவு அழகா இருக்கு பாரு! நீ ஒரு டார்க் ப்யூட்டி, பிரவுன் ப்யூட்டி'ம்பாங்க. இந்த சொஸைட்டியே மிகைப்படுத்தற சொஸைட்டி. எதை எடுத்தாலும் பெரிசு, பெஸ்ட்! எல்லாமே இவங்களுக்கு உச்சம்தான். புகழ்ச்சி இகழ்ச்சி எல்லாம். எந்தப் புஸ்தகத்தை வேணா எடுத்துப் பாருங்க. இந்த மாதிரி புஸ்தகம் உலக இலக்கியத்திலேயே இதுவரை வெளி வந்ததில்லைன்னு புஸ்தகம், சினிமா, சோப்புத்தூள் எல்லாமே ஸுப்பர்லேட்டிவ்! எங்கயோ படிச்சேன். எதிர்காலத்தில எல்லாரும் ஒரு செகண்ட் உலகப் பிரசித்தியா இருப்பாங்கன்னு. எதிர்காலத்தில இல்லை நிகழ்காலத்திலேயே அப்படி நடந்துகிட்டு வர்றது. இங்க, ஹார்ப்பர் லீன்னு ஒருத்தர் அருமையான நாவல் ஒண்ணு எழுதினாரு 'டு கில் எ மாக்கிங் பர்டு'ன்னு அதுக்கு புலிட்ஸர் ப்ரைஸ், லிட்டரரி கில்டுனு எத்தனையோ பரிசுகள் கிடைச்சுது. திரைப்படமாக்கினாங்க ஹார்ட்டர் லீயைப் போல எழுத்தாளர் கிடையாதுன்னு ஓஹோன்னு எல்லாப் பத்திரிகைகளிலும் பாராட்டினாங்க... 'அடுத்த வருஷம் ஹாப்பர் லீ அட்ரஸ்ஸே இல்லை. அவரு போய்..."

"ப்ரூஸ்லீயா இப்ப? இது நாகரிகத்தோட சாபக்கேடு. வளர்ச்சியோட சாபக்கேடுன்னு தோணுது. எல்லாமே அவசரம். எல்லாத்திலயும் இவங்களுக்கு ஓர் அவசரம் வந்துட்டு இருக்கு."

"நான் ஆப்பரேட் பண்ணறனே கம்ப்யூட்டர், அதை இன்னும் கொஞ்சம் மாடர்னைஸ் பண்ணா லெட்டர் எழுதற தேவையே இல்லாம பண்ணிருவாங்க. லெட்டர் எழுதி போஸ்ட் பண்றதை விட இந்த ஆபீஸ் கம்ப்யூட்டர் அந்த ஆபீஸ் கம்ப்யூட்டரைக் கூப்ட்டுத் தகவலைக் காட்டிறலாமில்லை? அது மாதிரி நெட்வொர்க்கிங்னு என்னவோ விந்தைகள்லாம் செய்துகிட்டு இருக்காங்க. ஸாட்டிலைட் பிஸினஸ் ஸிஸ்டம்ஸ்னு ஒரு வீட்டு மாடியிலேயே ஸாட்டிலைட் ஆன்டென்னா வெச்சிறப் போறாங்களாம். இங்கிருந்து யூரோப்புக்கு நேராவே ப்ரைவேட்டா கம்ப்யூட்டர் தொடர்பு வெச்சுக்கலாம். ஒரு காலத்தில் பேப்பர்ங்கிறதே போயிரப்போவுது அமெரிக்காவில். அதே போல பேப்பர் மணி! பேப்பர் இல்லாட்டா புத்தகம் இல்லை. புத்தகம் இல்லாட்டி எழுத்தாளர்கள் இல்லை..."

"அதான் அவர்களைப் புகழறதுக்கு அவசரம்!"

"இதெல்லாம் இண்டியாவில கிடையாது?"

"அங்க வர கொஞ்ச நாளாகும்."

"அதுக்குள்ள நாம செத்துப் போயிரலாம்" என்றாள் 'வாட்ல் யூ ஹாவ்?"

"சாக்லெட் மில்க்."

'ஹாய்யோ, அதையா சாப்பிடறீங்க?"

'எனக்குப் பிடிச்சிருக்கு. இந்த ஊர் காபி நல்லால்லை."

"வெயில் தாராளமாக அடிக்க, வட்டமாக மேசையின் அருகில் உட்கார்ந்து கண்ணாடிக்கு வெளியே மத்யான அமெரிக்கா இயங்குவதைச் சம்பந்தமில்லாமல் வேடிக்கை பார்த்தார்கள்.

"ஆபீசுக்குப் போக வேண்டாமா?"

"மத்தியானம் லீவு போட்டுட்டேன். என் பாஸ்கிட்ட சொன்னனே, கவனிக்கலையா?"

"அவன்தான் உன் பாஸா! நீங்க பேசறதே புரிஞ்சாத்தானே?"

"என்ன, ஏதாவது தீர்மானம் பண்ணிங்களா?"

"கல்யாணத்தைப் பத்தியா?"

"கல்யாணத்தைப் பத்தின்னா சொன்னேன்? நீங்களா கற்பனை பண்ணிக்கிறீங்களே."

"ரொம்ப மடக்கறிங்க. நான் வேலையைப் பத்தி யோசிச்சுக்கிட்டு இருக்கேன்."

"ஆர் யூ சீரியஸ்? அப்பாகிட்ட சொல்லட்டுமா? கவலைப்படாதீங்க, கண்டிஷன் எதும் போடமாட்டேன். வேலை வாங்கித் தரேன். என் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறியான்னு அப்பா பிளண்ட்டா கேட்டா எப்பவும் போல சிரிச்சு மழுப்பிருங்க" என்றாள். "நோ ட்ரிங்க்ஸ்."

"எனக்கு வெக்கேஷன்லதான் வேலை வேணும்."

"ஊருக்குப் போகலியா?"

"ஆசையா இருக்கு. எங்கப்பாவைப் பார்க்கணும். எங்கப்பா ரொம்ப பெரிய ஆளு தெரியுமா?"

"எல்லா அப்பாவும் அப்படித்தான். ஆயிரம் டாலர் தானே, போகலாமா?"

"எங்க?"

"இண்டியாவுக்குத்தான்."

"சேச்சே! என்ன, விளையாடறிங்களா?"

"அப்ப ஒண்ணு செய்யுங்க, என்கூட லாஸ்விகாஸ், வரிங்களா?"

"அது எங்க இருக்கு?"

நெவாடா வெஸ்ட் கோஸ்ட் எங்க பாஸ் போறார். எங்க கம்பெனிக்கு அங்கு ஒரு ஃபினான்ஸிங் பிராஞ்சு இருக்குது. அட்லாண்டிக் ஸிட்டியிலயும் இருக்குது. அங்க ஒரு கான்பரன்ஸ். நான் போய்த்தான் ஆகணும். கூட ஒருத்தரை அழைச்சுட்டுப் போகலாம். அது ஒரு நனவு லோகம்."

"வந்து... வந்து..."

"என்னது? மதுகூட டிஸ்னிவர்ல்ட் போயிட்டு வந்திங்க, என்கூட வரமாட்டீங்களா? இல்லை, மதுதான் முக்கியமா உங்களுக்கு? அவளையும் வேணும்னா கூட்டிப் போகலாம், வருவா."

"வேண்டாம்."

"வேண்டாம்னா? மதுவா? லாஸ்விகாஸா?"

"நான் வரேன். எங்க சொல்லுங்க, போகலாம் ஓசிதானே?"

"ஓசி இல்லை. செலவழிச்சதை எல்லாம் திருப்பி வாங்கிடுவேன்."

"எப்ப?"

"கல்யாணம் ஆனதும்."

**எ**ல்லா ஏர்போர்ட்களும் ஒரே சௌந்தர்யத்துடன் இருக்கிறதாக ரகுபதி கண்டுகொண்டான். லாஸ்விகாஸ் போய்ச் சேருவதற்குள் அமெரிக்கா இத்தனை பெரிசு என்பது புரிய வந்தது. இரண்டு மணி நேரம் கடிகாரத்தை அட்ஜஸ்ட் பண்ணும் அளவுக்கு உள்ள பிரயாண விமானத்தில் திரைப்படம் காட்டும் அளவுக்கு அமெரிக்கா பெரிசு. பாலைவனப் பிரதேசம் என்பது விமானத்தை விட்டு வெளியே வந்ததும் தெரிந்தது. அனல் காற்று அடித்தது தார்ச்சாலைகளில் மரங்கள் இல்லை. வானம் துல்லிய நீலமாக இருந்தது.

"ஸ்ட்ரிப்லயே ஓர் ஓட்டல்ல ஏற்பாடு பண்ணியிருக்காங்க. ஓட்டல்ல இருந்தே பஸ் வந்திருக்கும் கொஞ்சம் இருங்க, பார்க்கலாம்" என்றாள். 'டெஸர்ட் ரோஸ் பேர் எல்லாம் பிரமாதமாத்தான் இருக்கும்" என்றாள். ஓட்டல் மினி பஸ்ஸில் எப்போதும் போல ரேடியோ இருந்தது. எப்போதும் போல வம்பளக்கும் டிரைவர். "இந்தப் பொட்டைக் காட்டிலா ஊரு?"

"பொட்டைக் காடா பாருங்க. இந்தப் பிரதேசத்தில் ஒரு நாளக்கு மில்லியன் கணக்கில டாலர் புரளும்."

"வியாபாரமா?"

"இல்லை... சூதாட்டம் ஆடறிங்களா?"

"ஊ**ஹூ**ம்... எனக்கு அதில எல்லாம் ஈடுபாடில்லை."

"அப்படித்தான் சொல்லுவாங்க. பட்டுப் புடவை மாமியெல்லாம் வெறி பிடிச்சாப்பல ஆடியிருக்காங்க. நான் அழைச்சுட்டுப் போயிருக்கேன். அந்த டெம்ப்டேஷனைத் தவிர்க்கவே முடியாது."

"பார்க்கலாம்" என்றான்.

"மத்தியான வேளையில என்ன டல்லா இருக்குது. ராத்திரி பாருங்க. அட்லாண்டிக் வந்தப்புறம் இதுக்குக் கொஞ்சம் மவுசு குறைஞ்சுடுத்து."

ரகு பெரிய பெரிய போர்டுகளைப் படித்துக்கொண்டே வந்தான்.

"ஃப்ராங்க் ஸினாட்ரா இங்க வந்து பாடறானா என்ன?"
'ஆமாம், டீன் மார்ட்டின், பிரபலமான பாடகர்கள் எல்லாரும் வருவாங்க. பணம் எத்தனை தெரியுமா? உங்களுக்கு மயக்கம் வந்துரும். ஏற்கனவே டயர்டா இருக்கிங்க."

தாழ்வான கட்டடங்களில் பரந்து விரிந்திருந்தது ஓட்டல். நடுவே கோபால்ட் நீலத்தில் ஸ்டாம்ப் ஒட்டினது போல் நீச்சல் குளம் தெரிந்தது. அறைக்குள் நுழைந்ததும் "ஊருக்கு ஊர் உங்க ஓட்டல்களில் வித்தியாசமே இல்லை. ஒரே மாதிரி படுக்கை. ஃபர்னிச்சர், கலர் டி.வி... பாத்ரூம் அமைப்பு."

"எங்க பாத்திங்க?"

"ஆர்லாண்டோவில் மதுகூடப் போயிருந்தபோது."

"மதுவை நீங்க இன்னும் காதலிக்கிறிங்களா?"

"இல்லை. ஏன்?"

"கேட்டேன் சும்மா. கேட்கக் கூடாதோ? உங்களைப் பார்த்தா அந்த மாதிரி டைப்போன்னு சந்தேகம் வந்தது."

"அந்த மாதிரி டைப்புன்னா?"

'எங்கிருந்தாலும் வாழ்க' டைப்பு. அதாவது என்னுடைய காதல் மட்டும் மாறாது. அது நூறு பர்ஸன்ட் அமரத்துவக் காதல். இந்த மாதிரி இல்லையா? ஸாரி, கோவிச்சுக்காதிங்க."

"கோவிச்சுக்கணும், கோவிச்சுக்க முடியலை."

"நான் ஒர்க்குக்குப் போகணும். சாயங்காலம் வந்ததும், சுத்திப் பார்க்கலாம். அதுவரைக்கும் சமத்தா டி.வி. பார்த்துக்கிட்டு இருங்க."

## 23

அவன் ரத்னா சென்றதும் கொஞ்சநேரம் செய்வதறியாது திகைத்துப் படுக்கைமேல் படுத்துக் கொண்டிருந்தான். ஜன்னல் திரைகளைத் திறந்ததும் பாலைவன வானம் மிகத் துல்லியமாகப் பிரகாசித்தது. நீச்சல் குளத்தில் ரப்பர் வாத்துகளில் குழந்தைகள் மிதந்து கொண்டிருந்தனர். கண்ணாடி ஆவிபோல உஷ்ணம் தவழ்ந்து கொண்டிருக்க, காற்று வண்ணக் கொடிகளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தன. ரத்னா வருவதற்குச் சாயங்காலமாகிவிடும். கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று யோசித்தான். ஏதோ நினைத்துக் கொண்டு, அறையைப் பூட்டிக் கொண்டு சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டான்.

ரிஸப்ஷனில் ஓட்டல் சொந்தக்காரர் ஏகப்பட்ட பூனைகள் வளர்க்கிறார் என்று தெரிந்தது. கறுப்பும் வெளுப்புமாகப் பல சைஸ்களில் டூரிஸ்ட் விளம்பரப் பலகைகள் மேல் முதுகைத் தேய்த்துக் கொண்டு சிலிர்த்துக் கொண்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தன. அந்த இளைஞன் ரகுபதியை கிராண்ட் கான்யன் அழைத்துச் செல்ல ரொம்ப வற்புறுத்திப் பார்த்தான். சௌகரியமாக பஸ்ஸில் போகலாம் என்றான். அதற்கெல்லாம் நேரம் இல்லை என்றான் ரகு. அப்படியெனில் சின்ன சின்ன

விமானத்தில் செல்லலாம். கிராண்ட் கான்யனை விமானத்திலிருந்து பார்ப்பது கொள்ளையழகு. நீயும் உன் மனைவியும் இதை ரொம்ப ரசிப்பீர்கள் என்றான்.

"மனைவியா!' என்று வியந்து கொண்டு மெல்ல வெளி வந்து தார்ச்சாலையில் நடந்தான். காற்று அவனைத் தள்ளியது. எம்.ஜி.எம். அலாவுதீன் விளக்கு என்றெல்லாம் பற்பல கஸினோக்கள் தென்பட்டன எங்கு பார்த்தாலும் 'கஸினோ கஸினோ' என்று எழுதியிருந்தது. வேடிக்கை பார்க்கலாமே என்று ஒன்றில் நுழைந்தான். உடனே நூற்றுக்கணக்காக ஸ்லாட் மெஷின்கள் தெரிந்தன. செயற்கை ஒளியில் தாழ்வான மெஸ்ஸனைன் ஹால் அது. கார்ப்பெட் விரிந்து, பணிப்பெண்கள் பஸ் கண்டக்டர்கள் போல சுருள் சுருளாகச் சில்லறை வைத்திருந்தார்கள். ஏராளமாக இலவச காபி உள்ளே எல்லாருக்கும் ஒருத்தி கொடுத்துக் கொண்டே இருந்தாள். சிகரெட், சுருட்டுப் புகை உலவிக் கொண்டிருந்தது. அந்த இயந்திரங்கள் பளபளப்பாக இருந்தன. அஞ்சு செண்ட், பத்து செண்ட், இருபத்தைந்து செண்ட் என்று வகை வகையான, டாலர் மெஷின் வரை இருந்தது. காசு போட வேண்டாம். ஒரு பக்கத்தில் இருக்கும் பிடியைத் தள்ள வேண்டும். உள்ளே மூன்று சக்கரங்கள் சுழன்று நிற்கும்போது அவற்றின் விளம்பில் ஒட்டப்பட்டிருக்கும் பொம்மைகள் ஒன்று சேர்ந்தால் "தொர தொர" என்று காசு கொட்டும்.

ரகுபதிக்கு அதிகம் புரியவில்லை என்றாலும் வேடிக்கை பார்த்தான். ஒரு குவளை நிறைய ஒரு டாலர் நாணயங்களாக மாற்றிக் கொண்டு, அந்தக் கிழவி கடமை போல் ஒன்று ஒன்றாக மெஷினுக்குள் போட்டுக் கொண்டு கைப்பிடியை ஏதோ மெட்ராஸில் பம்ப் அடிப்பவள் போல் அவ்வப்போது அசைத்துக் கொண்டிருந்தாள். பத்துப் பதினைந்து தடவைக்கு ஒருமுறை காசு போட்டும், ஒரு டாலருக்கு ஐந்து டாலர், அல்லது பத்து டாலர் கொட்டின. காசுகளை மறுபடி சேகரித்துக் கொண்டு விடாமல் மெஷினுக்கு அர்ப்பணம் செய்து கொண்டிருந்தாள். ரகுபதிக்கு மிக வசீகரமாக இருந்தது. ஆடுபவர்கள் எல்லாரும் பிறந்ததிலிருந்தே பழக்கப்பட்டவர்கள் போலத் தோற்றமளித்தார்கள். ரகுபதி ஓர் ஓசி காபி சாப்பிட்டான். நடுவே பச்சை மேஜையில் சீட்டுகளைக் கலைத்து பிளாஸ்டிக் தகடுகளைக் குச்சியால் வாரி வாரி என்னவோ செய்து கொண்டிருந்தார்கள். அவ்வப்போது வெற்றி ஆரவாரம் கேட்டுக் கொண்டிருந்தது. வீடியோ போல இருந்த ஒன்றில் பட்டனை அழுத்தினால் ஐந்து சீட்டுக்குக் காட்டியது. போக்கர் விளையாட்டு ரகுபதி ஆஸ்டலில் ஆடியிருக்கிறான். ஒருமுறை மெஷினைத் திரும்பக் கலைத்துப் போடச் சொல்லலாம். ஜோடி வந்தால் இரட்டிப்பு. மூணு சீட்டாக வந்தால் அஞ்சு மடங்கு, நான்கு வந்தால், ரன் வந்தால், எல்லாவற்றிற்கும் வசீகரமான காசு, மெஷின் காசைக் கொட்டும் போது என்னவோ அள்ளிக் கொடுப்பது போல அவ்வளவு கலகல சப்தம்.

ரகுபதி காபி சாப்பிட்டதற்காக ஒரு பத்து செண்ட் ஸ்லாட் மெஷினில் ஆடிப் பார்த்தான். எடுத்த எடுப்பிலேயே அஞ்சு நாணயங்களை அம்பது செண்ட் கொட்டியது. ரகுபதிக்குப் பிரமிப்பாக இருந்தது. அந்த அம்பதையும் ஒவ்வொன்றாகப் போட்டான். மெஷின் அத்தனைக்கும் பதில் சொல்லாமல் சிரித்தது. மற்றொரு நாணயம் போட்டான் கூட ஒன்று சேர்த்து இரண்டு விழுந்தது. அதை எடுத்துப்போட்டதில் மறுபடி இரண்டு விழுந்தது. அந்த நாலையும் போட்டான். எதுவும் வரவில்லை. பத்து நிமிஷத்துக்குப்பின் ஆரம்பித்த பத்து செண்ட்டுடன் அந்த மெஷினைவிட்டு விலகினான். 'சே! அம்பது கொட்டிய போதே விலகியிருக்க வேண்டும் என்று தன்னை நொந்து கொண்டான். அந்த இடத்தை விட்டு விலகத்தான் நினைத்தான். சட்டென்று ஒரு டாலர் வரை ஆடிப்பார்க்கலாம் என்று பத்து செண்ட்களாக மாற்றிக் கொண்டான்.

அழகாகப் பத்து செண்ட் சுருள் ஒன்று ஏதோ வாத்தியார் தட்சிணைக்கு மாதிரி தயாராக வைத்திருக்கிறார்கள்.

அந்த நாணயங்களை ஒரு டாலர் போனால் போகிறது என்று ஆரம்பத்திலேயே தீர்மானித்து ஒவ்வொன்றாகப் போட்டான். எட்டாவது தடவை பத்து செண்ட் ஒரு டாலர் கொட்டியது. பை நிறைய சில்லறை அதைத் தனியாக வைத்துக் கொண்டு மற்ற நாணயங்களை ஆடினான்.

அரைமணி நேரத்தில் அவனிடம் ஏகப்பட்ட சில்லறை சேர்ந்து போய் விட்டது. பதினோரு டாலரும் எழுபது செண்ட்டும் சேர்ந்து கொண்டு விட்டன. ரகுபதிக்கு ரொம்ப குதூகலமாக இருந்தது. நம்ப முடியவில்லை. கையில் இருக்கும் மொத்தப் பணத்தைப் பார்த்தான். டிராவலர்ஸ் செக்குகளாக முன்னூற்றைம்பது டாலர் இருந்தது. சில்லறையாகச் சம்பாதித்தது போக, நோட்டுகளாக பத்துப் பன்னிரண்டு டாலர்கள இருந்தன.

முதலில் நோட்டுகளை மாற்றிக்கொண்டு ஒரு பேச்சுக்கு டாலர் மெஷினில் ஆடிப்பார்த்தான். இப்போது டாலரையும் வாரிக் கொண்டு விட்டது. இப்போது போட்ட காசை எடுத்தே ஆக வேண்டும் என்ற வெறி ஏற்பட்டு விட்டது.

உள்ளே செயற்கை வெளிச்சத்தினால் நேரம் பொழுது சரியாகத் தெரியவில்லை. 'காபி காபி' என்று காபியே குடித்துக் கொண்டு, ஏதோ ஓர் ஆட்டமாட்டிக் மெஷின் போல அவ்வப்போது காசு போட்டுக் காசு போட்டுக் கைப்பிடியைத் தள்ளித் தள்ளி ஒருகணம் தானும் அந்த மெஷினில் ஓர் அங்கமாகி விட்டோம் என்று யோசித்தான். என்னைப் போல பைத்தியக்காரன் யாரும் இருக்க முடியாது. எதற்காக இந்த முட்டாள் மெஷினுடன் உறவாடுகிறேன். கஸினோக்காரன் என்ன முட்டாளா? போட்ட காசுக்கு ஐந்து மடங்கைத் தருவதற்கு? இருந்தும் அந்த மெஷினின் காந்த சக்தியை அவனால் மீற முடியவில்லை. புறப்பட்டவன், வாசர் ஓரத்தில் இருக்கும் மெஷினில் கொஞ்சம் மிச்சக் காசையும் போட்டு விட்டு, மறுபடி அதன் அருகில் உட்கார்ந்து கொண்டு போட்ட காசை எடுத்துவிட வேண்டும் என்று வெறி வந்து, கடைசியில் வெறுப்பு உடம்பு முழுவதும் பரவியிருக்க வெளியே வந்தபோது ஆச்சரியப்பட்டான். இருட்டியிருந்தது. சரியாக ஆறுமணிநேரம் அந்த மெஷின்களுடன் ஆடியிருக்கிறான். வெளியே தெரிந்த இரவு வெளிச்ச உற்சாகத்தில் அவனால் பங்கு கொள்ள முடியவில்லை. நியூயார்க்கின் டைம்ஸ் ஸ்கொயரை விழுங்கும் அளவுக்குக் கீழ்வானம் பூராவும் வண்ண விளக்குகளிடம் தோற்று விட்டு, சூரியன் வீட்டுக்குப் போயிருந்தான். வண்ணச் சரங்கள் வித்தையாக ஓடின. தம்மைத் தாமே துடைத்துக் கொண்டன. மௌனமாக வெடித்துக் கொண்டன. அந்த மாயத் தெருவில் கார்களின் தொடர்ந்த நேர்த்தியான வெளிச்சத்தில் கீற்றுகளைக் கடந்து எதிரே இருக்கும் ஓட்டலுக்குத் திரும்பி வருவதற்கு அரைமணி நேரமாயிற்று.

ரத்னா கையில் கோக் டின்னை உறிஞ்சிக் கொண்டு டி.வி பார்த்துக் கொண்டிருந்தாள். "எங்க போயிட்டீங்க? இன்னும் கொஞ்ச நேரத்திலே... போலீசுக்கு போன் பண்ணியிருப்பேன்..."

ரகுபதி படுக்கையில் விழுந்து தன் ஷூக்களை அயர்வுடன் கழற்றினான். "இப்படி சுத்திப் பார்க்கலாம்னு போயிருந்தேன்."

"எத்தனை தோத்தீங்க?" என்றாள் டி.வி.யிலிருந்து கண்ணை எடுக்காமல்,

"எப்படித் தெரியும்?"

"உங்க மூஞ்சில நியான்ஸைன் மாதிரி தோல்வி எழுதியிருக்கு. எத்தனை தோத்திங்க?"

"கொண்டு போயிருந்த காசெல்லாம் அவுட். பாழாப் போற மெஷின் குடுத்துக் குடுத்து உயிரை வாங்கறது."

"எத்தனை விட்டிங்க?"

"சுமார் இருநூறு டாலர் இருக்கும்" என்று பொய் சொன்னான்.

"இவ்வளவுதானா? பரவாயில்லை எங்க பாட்டியே இருநூத்தம்பது டாலர் விட்டா! பேசாம ஒரு செண்ட்டா மாத்தி, திரும்பிப் போறவரைக்கும் வெறி பிடிச்சாப்பல ஆடுன்னு உக்காத்தி வெச்சுட்டோம்!"

"ரொம்ப மோசம் பணம் தரது, அதான் சோகம்!"

"அங்க போய் மாட்டிக்கிட்டம்னா போச்சு வெளியே வரமுடியாது. பணம் வேணுமா உங்களுக்கு?"

"கடனா வாங்கிக்கறேன். அப்புறம் திருப்பிக் கொடுத்துர்றேன்."

"அப்புறம்னா எப்ப?"

"நான் லீவு நாள்ல சம்பாதிக்க ஆரம்பிச்சதுக்கப்புறம்."

"வேற பதில் வராதே?" என்றாள். "எதாவது ஷோவுக்குப் போகலாமா? ஒயஸிஸ் எம்.ஜி.எம் மாதிரி எடத்தில் எல்லாம் நல்ல ஷோ இருக்கும்."

"ஐம் டயர்ட் ரத்னா! பசி–வேற."

"காலைல இருந்து ஒண்ணுமே சாப்பிடலையா, இந்தாங்க" என்று ஒரு சாக்லேட் பட்டையை எடுத்துக் கொடுத்தாள்.

"உன் வேலை என்ன ஆச்சு?"

"வேலை என்ன வேலை? மூணு மணிநேரம்தான் அப்புறம் அவங்கவங்க கஸினோ பக்கம் போயிட்டாங்க. நான்தான் "நீங்க வருவிங்க"ன்னு காத்துகிட்டு இருந்தேன்."

"ஸாரி! நான் இனிமே கஸினோ பக்கம் தலைவெச்சுப் படுக்கப் போறதில்லை."

"அதெல்லாம் இங்க முடியாது. இந்த ஊர்ல இருக்கிற வரைக்கும் சூதாடிக்கிட்டுதான் இருக்கணும். பொட்டைக்காடா, பாலைவனமா இருந்த இடத்தை தெய்வலோகம் மாதிரி ஆக்கி வெச்சிருக்காங்க. பாருங்க நெவாடாக்காரங்க."

"இல்லை, இங்க **ஹூ**லர்டாம் கிராண்ட் கான்யன்னு எதாவது பார்த்துட்டு வீட்டைப் பார்க்கப் போக வேண்டியதுதான்."

"நான் ஆட வேண்டாமா?"

"நீ கூட ஆடுவியா. என்ன?"

"பணம் நம்முதில்லைன்னு ஆடுவேன். ஒரு ஸ்டேஜ்ல நிறுத்திண்டிடுவேன்."

"அதற்கு மனதிடம் வேணும்."

"முதல்ல காசு வேணும்! இந்தத் தேசத்தில காசில்லைன்னா ரொம்ப சோகம். இந்தியா மாதிரி இடத்தில காசில்லாம இருக்கிறதனால ஆதங்கம் குறைச்சல். அதுக்குத்தான் என்னை இந்தியாவுக்கு கூட்டிட்டுப் போயிருங்கன்னு சொல்றேன்."

"உங்கப்பா நீ வரமாட்டேன்னு சொல்றாரு."

"அதெல்லாம் இல்லை. எப்ப வேணா வரத் தயார் நான். என்னால அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியும் உங்களுக்கு?"

"இங்க அமெரிக்க வந்ததுக்கு ஒண்ணு ரெண்டு வருஷமாவது கொஞ்சம் சம்பாதிச்சுட்டு."

"அகப்பட்டதைச் சுருட்டிக்கிட்டு கிளம்பிடலாம்னு உத்தேசம். ஏன்? அங்கிருந்து வர்ற எல்லாரும் இதே எண்ணத்தை வெளிப்படுத்தறாங்க!"

"இங்க இவங்களோட இழையறது ரொம்பக் கஷ்டம்னு நீதானே சொன்னே?"

"மதுமிதாவைக் கல்யாணத்துக்கப்புறம் சந்திச்சிங்களே, அவ மாறியிருக்காளா?" என்றாள் திடீரென்று பேச்சை மாற்றி.

"அவளைப் பத்தி என்ன இப்ப?"

"ஒரு க்யூரியாஸிட்டிதான் அவ ரொம்ப அழகு இல்லையா?"

"உங்களுக்கு ரொம்ப ஏமாற்றமா இருந்திருக்கும். அதுக்குத்தான் நீங்க அமெரிக்காவுக்கு வந்தீங்க?"

"சேச்சே! படிக்க வந்தேன்."

"அதெல்லாம் ரெண்டாம் பட்சம். உன் புருஷன் மட்டும் தானா அமெரிக்கா நான் மட்டும் அமெரிக்கா இல்லையான்னு காட்டறதுக்குத்தான் வந்திருக்கிங்க இல்லையா?"

"அப்படி யார் சொன்னது?"

"அவ ஒரு விதத்தில் இன்னும் உங்க எண்ணங்களை டாமினேட் பண்றா இல்லையா?"

"சேச்சே? அவளைப் பத்தி நினைக்கிறதை எப்பவோ விட்டாச்சு!"

"பின்ன ஏன் எங்களுக்குப் பிடி கொடுத்துப் பேச மாட்டேங்கறீங்க?"

"ரத்னா, நான் கல்யாணம் செய்துக்கறதுக்காக அமெரிக்காவுக்கு வரலை படிக்கிறதுக்காக!"

"உங்களை யார் படிக்க வேணாம்னு சொன்னா?"

"கல்யாணம் பண்ணுக்கிட்டன்னா அப்புறம் உன்னைத்தான் படிச்சுக்கிட்டு இருப்பேன். கல்யாணம்ங்கறது ரொம்பப் பெரிய டிஸ்ட்ராக்ஷன். பெரிய பொறுப்பு."

"அதெல்லாம் சும்மா. என்னைப் பத்தி நீங்க இன்னும் தீர்மானிக்கலை. எத்தனையோ பையங்க டாக்டரோட, என்.எம்.எஸ். பண்ணிக்கிட்டு இருக்கறப்பயே ஊருக்கு போய்க்

கல்யாணம் பண்ணிக்கிட்டு வராங்க. உங்களுக்கு இன்னும் என்னைப்பத்தி தீர்மானமா எதும் நினைக்கத் தெரியலை. அதனாலதான் தட்டிக் கழிக்கிறீங்க அதானே?"

"அவள் சொல்வது உண்மைதான் என்று தோன்றியது. அதை அவள் சொன்னது ஒரு விதத்தில் எரிச்சலா இருந்தது. படுக்கை மேல் உட்கார்ந்திருக்கும் அவளை முழுசாகப் பார்த்தான். சப்பணம் கட்டிக்கொண்டு தலையணையைத் துடையில் அழுத்திக்கொண்டு, மெலிதாகச் சட்டை அணிந்து கொண்டு தனக்காகவே இப்படி ஒரு மாதிரியாக உடையணிந்திருக்கிறாள் என்று தோன்றியது. பெண்களிடம் எத்தனை சக்திகள். எத்தனை ஆயுதங்கள் இருக்கின்றன! இவளுக்கு என்னைப் பிடித்துவிட்டது; எனக்கு இவளை இன்னம் பிடிக்க ஆரம்பிக்கவில்லை அதற்குப் பற்பல வெளிப்புறக் காரணங்கள் சொல்லிக் கொண்டாலும் உள்ளுக்குள் இன்னும் மதுமிதாவின் நினைவுகள் என்னைவிட்டு அழியவில்லை. மதுமிதா!"

'நான் சந்தோஷமா இருக்கிறதில உனக்கு வயிற்றெரிச்சலா? நாங்க ரெண்டு பேரம் சந்தோஷமா இருக்கக் கூடாதா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கலைங்கறதுக்காக இந்த மாதிரி சைல்டிஷா பழி தீர்த்துக்கப் பாக்கறியா ரகு? எதுக்காக எங்க ரெண்டு பேருக்குள்ள சந்தேகத்தை விதைக்கப் பாக்கறே!"

"ரத்னா, உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கிறேன்!"

ரத்னா ஆச்சரியம். அதிர்ச்சி எதும் காட்டாது 'என்ன இது திடீர்னு தீர்மானம்? நான் ஏதோ உங்களை அவசரப்படுத்தறதா நினைச்சுக்கிட்டிங்களா?"

"அதில்லை ரத்னா! எனக்கும், மதுமிதாவுக்கும் திருநெல்வேலில என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியுமா?"

"மேம்போக்காகத் தெரியும். துருவிக் கேக்கற ஆசாமி இல்லை நான்."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதா விருப்பம் இருந்தா, அதை நீ தெரிஞ்சிக்கணும்."

"திருநெல்வேலியில லவ் பண்ணியிருந்திங்கன்னா சும்மா தமிழ்ப் படத்தில மாதிரித்தான் பண்ணியிருப்பிங்க!"

"கலாட்டா பண்ணாத, சீரியஸா சொல்றேன்."

"சரி, சீரியஸ். சொல்லுங்க."

"நீ இந்த மாதிரி உட்கார்ந்திருக்கிறது எனக்கு டிஸ்ட்ராஷ்ஷனா இருக்குது."

"ஏன்?" என்று தன் மார்பைப் பார்த்துக் கொண்டாள்.

"அதான் டிஸ்ட்ராக்ஷன்!"

"இப்ப..."

"இப்ப பரவாயில்லை. என்ன சொல்ல வந்தேன்."

"என்ன சொல்றதா இருந்தாலும் இதுக்கப்புறம் தான்" என்று அவன் அருகில் வந்து அவன் கன்னத்தைத் தொட்டு மெதுவாக முத்தமிட்டாள். "இருநூறு டாலர் தோத்துட்டிங்க. காதல்லே தோத்துட்டிங்க. ஏதாவது ஆறுதல் வேண்டாமா?" என்றாள்.

## 24

ரகு பிரமிப்புடன், "இதுக்காவே நிறைய தோற்கலாம் போல இருக்கே" என்றான்.

ரத்னாவின் அருகில் வந்தபோது அவளிடம் கொஞ்சம் அமெரிக்க வாசனையும் கொஞ்சம் குழந்தை வாசனையும் இருந்தது. தைரியமாக அவளைத் தொட்டுப் பார்த்தான். நிச்சயமாக இருந்தாள். "மதுவையும் இந்த மாதிரி தொட்டிருக்கிங்களா...?" என்றாள்.

முள் குத்தினது போல விலகிக் கொண்டான்.

"கோவிச்சிக்காதிங்க. நான் பொறாமையிலக் கேக்கலை. க்யூரியாஸிடிலதான்..."

"நான் அந்த பொண்ணை மறக்கப் பிரயத்தனப்பட்டுக்கிட்டு இருக்கிறது ஏன் உனக்குப் புரியலை?"

"அவளை மறக்கறதுக்கு சுலபமான ஒரு வழி இதுதான்" என்றாள். படுக்கையில் சாய்க்கப்பட்டு எதிர்பாராமல் தடுமாறினான். "நத்திங் சீரியஸ் ரத்னா! ஓர் எல்லைக்கு மேல உணர்ச்சி வசப்படறது ரெண்டு பேருக்குமே நல்லதில்லை" என்று அவள் அவனை முழுவதும் சொல்ல விடாமல் முகத்தால் மழுப்பினாள்.

"மூச்சு முட்டறது" என்றான்.

"முட்டட்டும், பரவாயில்லை!"

டெலிவிஷனின் வெளிச்ச சலனத்தில் ரத்னாவின் உடல் விளம்புகள் கோடி காட்டப்பட்டன.

"ரத்னா! வேண்டாம் ரத்னா" என்றான்.

"என்ன வேண்டாம்? ரொம்ப வெக்கப்படறீங்களே..."

"வெக்கம் இல்லை. கவலை."

"ஒண்ணும் ஆகாது... கவலைப்படாதீங்க."

"ப்ளீஸ், வேண்டாம். அப்புறம் வெச்சுக்கலாம்."

ரத்னா சட்டென்று எழுந்து தன் உடைகளைத் திருத்திக் கொண்டு "நான் உங்களைக் கொஞ்ச விரும்பலை."

"அப்படியில்லை ரத்னா! எனக்கு இதில் ஆசையில்லைன்னு நினைச்சுக்காத. என்னமோ ஓர் இந்தியத்தனம் ஒருவிதமான கட்டுப்பெட்டித்தனம்னு வெச்சுக்கயேன். அது எச்சரிக்கை செய்யுது. நேரம் சரியில்லைன்னு, "புரியுது, மதுமிதா நிச்சயம் இனிமே கிடைக்கமாட்டாள்னு ஊர்ஜிதமா தெரிஞ்சுக்க விரும்புறீங்க..."

"சேச்சே! தப்பா எடுத்துக்கற, மதுமிதா ஒரு முடிஞ்சு போன கதை. உன் மாதிரி வசதியுள்ள பொண்ணுகூட சுதந்திரம் எடுத்துக்கறதுக்கு எனக்கு இன்னும் அந்தஸ்து வரலை. கல்யாணம் செய்துக்க சம்மதம் மட்டும்தான் எங்கிட்ட இருக்குது. இப்ப அதற்கு உண்டான தகுதி இன்னும் எனக்கு ஏற்படவில்லை. இந்த நிலையில் நாம்

ரெண்டு பேரும் உணர்ச்சி வசப்பட்டு எதாவது விபரீதம் ஆயிருச்சுன்னா ரெண்டு பேருக்கும் லைஃப் பூரா வருத்தம் ஏற்படும் இல்லையா?"

"விபரீதங்களைச் சமாளிக்கிறது இந்த தேசத்தில் ரொம்ப சுலபம்."

"முதல்ல கல்யாணம் ஆகட்டும் ரத்னா."

ரத்னா அவனை நிதானமாகப் பார்த்து "அன்பிலீவபள்" என்றாள். "உங்களை நான் கட்டாயப்படுத்த விரும்பலை."

"நான் இப்ப தவறவிட்ட சந்தர்ப்பத்துக்காக வருத்தப்படப் போறது என்னவோ நிசம்தான் ரத்னா! இட்ஸ் நத்திங் எகய்ன்ஸ்ட் யூ. நீ ரொம்ப விரும்பக் கூடிய, கவர்ச்சிகரமான பெண்தான், சந்தேகமே இல்லை."

"மதுவைவிட...?"

"மதுவைப் பத்தின பேச்சு இன்னைய தேதில இருந்து தடை!"

"சரி தடை! வாங்க சாப்பிடலாம்."

லாஸ்விகாஸ் போய்த் திரும்பி வந்த தினத்திலேயே ரத்னா தன் தந்தையிடம் சொல்லியிருக்க வேண்டும். அவர் மோகன்ராமை வந்து பார்த்தார். ரகுவிடம், "கங்கரா**ஜு**லேஷன்ஸ் நீ புத்திசாலித்தனமா முடிவெடுத்துட்டே... என்றார்.

மோகன்ராம் நிமிர்ந்து பார்த்து, "என்னப்பா முடிவு?"

"உங்களுக்குத் தெரியாது? உங்ககிட்ட சொல்லலை?"

"எங்கிட்ட எதும் சொல்ல மாட்டானே இந்தப் பையன்."

"ரகுபதி ஸார். அதுக்கு இன்னும் நிறைய சமயமிருக்கு."

"ஒரு வருஷம் ஓடியே போயிடாதா? என்ன ராம்...?"

"எனக்கு நீங்க என்ன பேசிக்கிறிங்கன்னே தெரியலை."

"ரகுவுக்குக் கல்யாணம்பா."

"வாட்!"

"ஸாரி! ஸார். அவ்வளவு தூரம் மற்றவங்ககிட்ட சொல்லிக் கொள்கிற நிலைமைக்கு இன்னும் இந்த மேட்டர் வரலை. வைத்தியநாதன் ஸார் டாட்டர் ரத்னா இருக்கா தெரியுமில்லை? அவ விஷயமா கொஞ்சம் பேச்சு வார்த்தை வந்தது. ஸார் கேட்டார் சம்மதமான்னு ஸ்டடிஸ் முடியட்டும்னு சொன்னேன். எனக்கு ஆட்சேபணை எதும் இல்லைன்னு சொல்லியிருக்கேன்."

"ஸ்டடிஸ் என்ன ஸ்டடிஸ்! அது பாட்டுக்கு அது, இது பாட்டுக்கு இது.'

"ரகு உங்கப்பாவுக்கு இது தெரியுமோ?" என்றார் மோகன்ராம்."

"இனிமேத்தான் ஸார் எழுதணும். இந்த செய்தி ரொம்ப லேட்டஸ்ட், சரின்னு சொல்லி இன்னும் நாற்பது மணி நேரம் கூட ஆகலை."

'ஏன் உங்கப்பா மாட்டேன்னு சொல்லுவாரா?"

"இல்லை. அவன் கார்டியன்கிற முறையில நான் இதெல்லாம் கொஞ்சம் பார்க்க வேண்டியிருக்கு."

"அதுக்கெல்லாம் நிறையவே டயம் இருக்கு ஸார். நீங்க என்னவோ நாளைக்குக் கல்யாணம் மாதிரின்னா பேசிக்கிட்டு இருக்கிங்க..."

“சரி, நீயே சொல்லு, எப்ப ரெடியாயிருவ?"

ரகுபதிக்குக் கொஞ்சம் வைத்தியநாதன் மேல் எரிச்சலாகக்கூட இருந்தது.

"யோசிச்சு சொல்றேன். அவசரப்பட வேண்டாம்னு தோணுது."

"என்ன வயது உனக்கு?"

"இது வயசுப் பிரச்னை இல்லை."

"ரகு, கல்யாணம்ங்கிறது ரொம்ப யோசிச்சுச் செய்ய வேண்டிய முடிவு. உங்கப்பாகிட்ட ஒரு வார்த்தை கேட்டு முடிவு பண்ணு."

"ஓய், உம்ம கல்யாணத்தை வெச்சுக்கிட்டு ஜட்ஜ் பண்ணாதேயும். வெள்ளைக்காரிய அவசரமாக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அவ போயிட்டான்னா, எங்க ரத்னா எப்பேர்ப்பட்ட பொண்ணு. சொல்லுய்யா மாப்பிள்ளை ரத்னா எப்படிப்பட்ட பொண்ணு?"

"நான் கல்யாணம் செய்துக்க மாட்டேங்கலை ஸார். கொஞ்சம் கால் ஊனிக்கறேன்னுதான் சொல்ல வரேன்."

"ஊனிக்க ஊனிக்க. வில் வெயிட் மோகன்ராம்! இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி மாப்பிள்ளை மனசைக் கெடுத்துராதேயும். வரட்டுமா... பார்ட் டைமா ஒரு ஜாப் உனக்கு அரேஞ்ச் பண்ணி வெச்சிருக்கேன். திங்கக்கிழமை போன் பண்ணு."

அவர் போனதும் "என்னப்பா கழுத்தில கத்தி வெச்சுன்னா கேக்கறார்...?" என்றார்.

"கொஞ்சம் அவசரப்படுத்துகிறார்."

"சரின்னு சொல்லிட்டியா?"

"அதான் சொன்னேனே" என்றான்.

"எதாவது அந்தப் பெண்ணோட விபரீதம் நிகழ்ந்துடுத்தா...?"

"சேச்சே, அதெல்லாம் இல்லை."

"அந்தப் பொண்ணு என்னவோ நல்ல பொண்ணுதான், மாமனார்தான் போர்."

"எனக்குக் கொஞ்சம் குழப்பமா இருக்கு."

"உங்கப்பாவுக்கு நான் எழுதட்டுமா?"

"இல்லை, நானே எழுதறேன். எப்படியும் நான் அவசரப்படப் போறதில்லை."

"அந்தாளு உன்னை விடப் போறதில்லை. மாமனார் வீட்டு மருமகனா ஆயிடாதே! வைத்தியநாதன் ரொம்ப இன்ஃப்ளுயன்ஸ் உள்ளவர். வீட்டோட ஒரு மாப்பிள்ளை தேவைப்படறது அவருக்கு. நீ படிச்சாலும் படிக்காவிட்டாலும் அவருக்குப் பரவாயில்லை. அமெரிக்காவில் சின்னச் சின்ன வேலை கிடைக்கிறது ரொம்ப சுலபம். உன்னை எப்படியாவது வளைச்சுப் போட்டுருவார். உங்கப்பா மனம் கோணாம நடந்துக்க அதான் முக்கியம்."

"அவருக்கு எழுதத்தான் போறேன்."

**தி**ங்கள்கிழமை வைத்தியநாதன் அவனை போனில் துரத்திப் பிடித்து ஒரு விலாசம் கொடுத்து அங்கே போய் அவசியம் பார்க்கச் சொன்னார்.

பொழுது போகாமல் கிளம்பினான். மான்ஹாட்டன் பகுதியில் ஒருசிறிய அறையில் அமெரிக்கர் ஒரே ஒரு டெர்மினல் வைத்திருந்தார். அதனருகில் ஒரு 'மோடெம்' இருந்தது. எங்கேயோ இருக்கும் ஒரு கம்ப்யூட்டருடன் செய்தித் தொடர்பு கொள்வதற்கு, எதோ ஒரு ஹாஸ்பிட்டல் இன்ஸ்ஃபர்மேஷன் ஸிஸ்டத்திற்கு அப்ளிகேஷன் ப்ரொக்ராம்கள் எழுதும் வேலை. "பேஸிக் தெரியுமா?" என்று கேட்டார்.

ரகு பள்ளியில் பேஸிக் கோர்ஸ் எடுத்திருந்தான். "தெரியும்" என்றான்.

படக்கென்று ஓர் அப்ளிகேஷன் ப்ரொக்ராமை எடுத்து "இதை எழுதிக்காட்டு என பேப்பர் பென்சிலைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். ரகுபதி ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மெல்ல எழுதிப் பார்த்தான். எந்த வகை பேஸிக் என்பது தெரியவில்லை. மான்யுவல் இருந்தது அதில் சொல்லியிருந்த ஆணைகளை வகைப்படுத்திக் கொண்டான். அது கொஞ்சம் வினோதமான 'பேஸிக்' கோபால், பாஸ்கல் வகை ஆணைகளுமிருந்தன. எழுதுவது சுலபமாகவே இருந்தது. ஒரு பெயரைக் குறிப்பிட்டு அந்தப் பெயர் கொண்டவர் போன தடவை வந்தபோது அவருக்கு என்ன உபதேசம் கொடுக்கப்பட்டது. அவர் கொடுக்க வேண்டிய பாக்கி ஏதாவது இருக்கிறதா என்று ஒரு ஸ்டேட்மெண்ட் தயாரித்து அளிக்க வேண்டிய எளிய ப்ரொக்ராம்.

"என்ன பாதியாவது எழுத முடிகிறதா? சும்மா இருக்கிறாயே?"

"முடித்து விட்டேன்."

"முடித்து விட்டாயா...?" என்று அந்தக் காகிதங்களைப் பார்த்தார். அமெரிக்கன் விஸிலடித்துவிட்டு "வேலை செய்யும் போலத்தான் இருக்கிறது. வித்தி சொல்லுவான். தென்னிந்தியர்களுக்கே. மூளை அதிகம் என்று" ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு டெர்மினல் அருகில் உட்கார்ந்து கொண்டு அவன் எழுதிய ப்ரொக்ராம் ஆணைகளை விஸிலடித்துக் கொண்டே இன்டர்ப்ரெட்டரை வரவழைத்து வரி வரியாக அடிக்க மொத்தம், மூன்று ஸ்டேட்மெண்ட்களில்தான் சின்ன தப்புகள் இருந்தன. பரவாயில்லை என்று வரிகளைத் திருத்தி 'ரன்' என்று தட்டினார்.

கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு திரையில் அழகாகக் கேட்டுவிட்டு "பெயர்" என்று கேட்டது.

ஒரு பேப்பரை அடிக்க,

உடனே தீர்மானித்தபடி அழகாக, வந்த விவரம் பணம் பாக்கி எல்லாம் எழுதிக் காட்ட, "ஸுப்பர்ப்! நாளைக்கு உனக்கு இன்னும் கொஞ்சம் கடினமான ப்ரொக்ராம் தருகிறேன். இந்த மாதம் முழுக்க உன்னை என்னால் உபயோகித்துக் கொள்ள முடியும். வழக்கம் போல வரும் ப்ரொக்ராமர் லீவில் போயிருக்கிறான், அவனும் இந்தியன்தான். எத்தனை பணம் வேணும்?"

"எனக்குக் கேட்கத் தெரியவில்லை" என்றான்.

ஐம்பது டாலர் கொடுத்தார். "உன் வேலையின் திறத்தைப் பார்த்து மேலும் கொடுக்கிறேன். ஹேவ் எ நைஸ் டைம்!"

ரகுபதி பிரமிப்புடன் வெளியே வந்தான். சொந்தமாக அமெரிக்காவில் தன் திறமையை வைத்துக் கொண்டு சம்பாதித்த முதல் டாலர்கள். ரொம்பச் சந்தோஷமாக இருந்தது. ஒருமணி நேரம் கூட இல்லை. இத்தனை பணமா! வைத்தியநாதனுக்கு நன்றி சொல்ல வேண்டும் போல இருந்தது. போன் செய்தான்.

"நான் ப்ரேடியைக் கேட்டுட்டனே. நல்லா எழுதறன்னு சொன்னான். எத்தனை கொடுத்தான்?

"அம்பது டாலர் ஸார்."

"ரொம்ப குறைச்சல், அந்த ப்ரொக்ராமை கஸ்டமருக்கு ஐநூறு டாலருக்கு வித்துருவான்"

"எனக்கு இது போதும் ஸார். ரொம்ப தாங்க்ஸ்."

"உங்கப்பாவுக்குக் கடிதம் எழுதிட்டியா."

"இனிமேதான் ஸார்" என்றான். சற்று உற்சாகம் குறைந்தது. விடமாட்டார்! சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் நினைவு படுத்துகிறார்.

"ரத்னாகிட்ட பேசு."

"எப்படி இருக்கிங்க ரகு? இந்தப் பக்கமே காணமே ரொம்ப பிஸியா?"

"இல்லை ரத்னா! ரத்னா உனக்கு என்ன வேணும் சொல்லு?

"கேட்டா குடுக்க மாட்டிங்க."

"இல்லை. என் முதல் சம்பாத்தியத்தில உனக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம்னுட்டு..."

"அதுவா! இந்த மாதிரி கேட்டதே பெரிசு, பணத்தைக் கண்டபடி செலவழிக்காதிங்க. அப்புறம் தேவைப்படும். வேலை பிடிச்சிருக்கா?"

"சுலபமா இருக்கு. பேஸிக்ல எழுதச் சொன்னாங்க. ரொம்ப சுலபம் எழுதறது."

"இதனால என்ன தெரியுது? அமெரிக்காவில் சம்பாதிக்கிறது ஒண்ணும் அவ்வளவு கஷ்டமில்லை."

"பார்க்கலாம்."

"அதனால அதைக் காரணமா வெச்சுக்கிட்டு போஸ்ட் போன் பண்ணாதங்கறா" என்று வைத்தியநாதன் குரல் கேட்டது.

"இது யாரு, அசரீரீ...?"

"சிரித்து, "அப்பாதான் இன்னொரு போன்ல கேட்டுக்கிட்டே இருக்கார்."

"என் டாட்டர்கூட எதாவது காதல் வசனம் பேசறியான்னு கட்டுப்படுத்தறதுக்குத்தான்!"

"லாஸ்விகாஸில் தோத்த பணத்தை எடுத்து உங்க கடனைத் திருப்பிக் கொடுக்கணும்!"

"திருப்பிக் கொடுக்க வேண்டியது நிறையவே இருக்கு. வெள்ளிக்கிழமை சாப்பிட வரிங்களா? பயப்படாதீங்க. வீடியோ கிடையாது. சனி, ஞாயிறு ரெண்டு நாள் இருந்துட்டு போகலாம் என்ன?"

“சொல்றேன். மறுபடி போன் பண்றேன்" என்றான்.

"கழண்டுக்கறீங்க."

டெலிபோனை வைத்ததும் மறுபடி அது ஒலித்தது. எடுத்துக் கேட்டதில்.

"எத்தனை நாழி போன் பேசிக்கிட்டு இருப்பே ரகு?"

"யாரு?"

"நான்தான் மதுமிதா பேசறேன். விஷயம் கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம்."

"என்ன விஷயம்...?"

"என்ன விஷயம்! கேக்கறதைப் பாரு. உங்க கல்யாண விஷயம்தான்.... ரத்னா சொன்னா."

"சொல்லியாச்சா? அதுக்கு இன்னும் நிறைய நாள் இருக்கு மது?"

"நிச்சயதார்த்தம் வெச்சுக்கப் போறதா வைத்தி சொன்னார்!"

"நிச்சயதார்த்தம் இது என்ன!" ரகுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எனவே ரகு, உனக்காக நான் ரொம்ப சந்தோஷப் படறேன். நீ என்னதான் என் கணவனைப் பத்தி அவதூறு சொன்னாலும் அதனோட நோக்கம் என்மேல இருந்த ஒருவிதமான ஆசைங்கிறதனால நானும் ராதாவும் உன்னை மன்னிக்கிறதா தீர்மானிச்சுட்டோம். இதையெல்லாம் பெரிசு பண்ண வேண்டாம்னு ராதாவே சொல்லிடுத்து."

அவள் பேச்சில் லேசாகக் குழறல் இருந்தது.

## 25

மதுமிதா தொடர்ந்து, "ரகு ரகு! வீ ஆர் ஸ்டில் ஃப்ரெண்ட்ஸ் தெரியுமோ? உனக்கு நல்லதுக்குத்தான் நான் வைத்தி ஃபாமிலியை இண்ட்ரொட்டியூஸ் பண்ணி விட்டேன்.



www.writersujatha.com

என்னையே நினைச்சுக்கிட்டு இருக்கிறது உனக்கு நல்லதில்லை. ராதாவும் அதைத்தான் சொல்லித்து. அதனால்தான்."

"மது. ஏன் நீ ஒரு மாதிரி பேசறே?"

"என்ன மாதிரிப் பேசறேன்?"

"என்னமோ குழந்தை மாதிரி குரல்ல ஒருவிதமான குழறல் இருக்கே?"

"ஒண்ணுமில்லை... கொஞ்சம் ஜின் சாப்பிட்டேன்."

"ரகு யோசித்து, "மது! நீ தனியா இருக்கியா?"

"ஆமாம் ஏன்?"

"இது நல்லதில்லை மது..."

"போர் அடிக்கிறது டி.வி. பார்த்துப் போர் அடிக்கிறது. பொருள்கள் வாங்கிப் போர் அடிக்கிறது. சாப்ட்டு சாப்ட்டு பெருத்துக்கிட்டே இருக்கேன். ஜின் அதிகம் சாப்பிட மாட்டேன். கொஞ்சம் போர் அடிச்சதுன்னா. திடீர்னு சுதா, அப்பா அம்மா ஞாபகம் வந்திருச்சுன்னா சாப்பிடுவேன். தூக்கம் வரலைன்னா அப்றம் வந்து தெரியுமோ உனக்கு? சுதா ரொம்ப உயரமாயிட்டான். போட்டோ அனுப்பிச்சிருந்தாங்க."

"மது நீ இப்படித் தனியா இருக்கறப்ப ட்ரிங்க் பண்றது அப்புறம் இதுவே பழக்கமாயிடும்..."

"சேச்சே அதெல்லாம் கண்ட்ரோல்லதான் வெச்சிருக்கேன். ஸ்மோக்கிங்கூட கண்ட்ரோல்லதான் வெச்சிருக்கேன்."

'ச்ச்ச்ச்! அமெரிக்கா வந்து ரொம்ப மாத்திரிச்சு மது உன்னை!"

"அமெரிக்கா இல்லை... ராதா தான் மாத்திச்சு! ராதாதான் எனக்கு சுதந்திரம் தந்திருக்கு. என்ன வேணா பண்ணிக்க, என்ன வேணா வாங்கிக்க..."

"இது ஒரு சுதந்திரமா மது?"

"இல்லாம பின்ன? ராதா மாதிரி ஒரு ஹஸ்பண்டு..." என்று ஆரம்பித்தவளை ரகு சுருக்கி, "அப்புறம் பேசலாம் மது உடம்பைப் பார்த்துக்க" என்றான்.

"குட் பை" என்றாள். டெலிபோனை வைத்தவன் 'இன்னும் நீ தெரிந்து கொள்ளவில்லையா? பேதையே, முட்டாளே' என்று எண்ணிக் கொண்டான்.

அன்புள்ள ரகு.

உன் கடிதம் கிடைத்தது. என்னைக் கேட்காமல் நீ நிறைய ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பது பற்றி ரொம்ப சந்தோஷம். இந்தக் கட்டத்திலாவது தகவல் சொன்னதைப் பற்றியும் சந்தோஷம்தான். என்னை அபிப்பிராயம் கேட்டிருப்பது விந்தையாக இருந்தது. நல்லவேளை! இங்கு மணிமுத்தாறில் உட்கார்ந்து கொண்டு, கத்தை கத்தையாக பெண்கள் பற்றி விவரங்கள் சேகரித்துக் கொண்டு உனக்கு போட்டோக்கள் பார்ஸலில் அனுப்ப ஏற்பாடு பண்ணிக் கொண்டிருக்கிறோம். நானும் ஜெயந்தியும். இப்போது அந்தக் காசு மிச்சம்தான். ரத்னா கலர் போட்டோவைப்

பார்த்தேன். அழகாக இருக்கிறாள். ஜெயந்தி, அவள் ஜெயப்ரதாவைப் போல் இருப்பதாகச் சொன்னாள். ஜெயப்ரதாவை எனக்குத் தெரியாததால் அபிப்ராயம் சொல்ல முடியவில்லை. ரத்னா எனக்கு எழுதிய கடிதமும் பார்த்தேன். தமிழில் எழுதியிருக்கலாம் என்று தோன்றியது. குறைப்பட்ட தமிழாக இருப்பினும் வசீகரமாக இருந்திருக்கும்.

உனக்கு இந்தக் கட்டத்தில் கல்யாணம் தேவையா என்பதைப் பற்றி நான் யோசித்தேன். படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷம் இருக்கும்போது வேலை ஸ்திரமில்லாமல் இருக்கும்போது எதற்கு கல்யாணம்? ஆனால் உனக்கு இந்தக் கட்டத்தில் கல்யாணம் தேவை என்றுதான் எனக்குப் படுகிறது. வயசுப் பிரச்னை இல்லை இது. உனக்கு கல்யாண வயசாகிவிட்டது. மதுமிதா அங்கே இருப்பதால் உனக்குச் சில சபலங்களும் தைரியங்களும் ஏற்படலாம். அதுவும் நீ கடிதத்தில் எழுதியிருந்தபடி ஏதாவது சிக்கல் ஏற்படலாம். இந்த நிலையில் கல்யாணம் என்று ஒன்று ஏற்பட்டு, பதில் சொல்ல மனைவி என்று ஏற்பட்டு, மாமனார் வீடு என்று, சுற்றிலும் உன்னைக் கேள்வி கேட்க, பார்த்துக் கொள்ள ஜனங்கள் அமெரிக்காவிலேயே அமைவது உனக்கு நல்லதுதான்!

என் அபிப்ராயத்தைக் கேட்டால் கல்யாணத்தை வருகிற ஜனவரியில் வைத்துக் கொள்ளலாம். என்னால் அங்கெல்லாம் வர முடியாது. இங்கேயே நீங்கள் வர முடிந்தால் சரி. இல்லையேல் என் ஆசிகள் எப்போதும் உனக்கு இருக்கும். போட்டோக்கள் இருக்கவே இருக்கிறது. விடுமுறையில் வரும்போது வீடியோ அல்லது திரைப்படம் முதலியவை காட்டி விட்டால் போகிறது.

– இப்படிக்கு உன் அன்புள்ள அப்பா.

ரத்னா அதைப் படித்து முடித்து விட்டு "உங்கப்பாவுக்கு கோபம்" என்றாள்.

"கோபமில்லாம இருக்குமா?"

"ஒரே பையன்தானே நீங்க? இந்த மாதிரி தன்னிச்சைப்படி..."

"சேச்சே, அதுக்கெல்லாம் கவலைப்பட மாட்டார். வேற எதுக்கோ கோபம்."

"ஒண்ணு செய்துரலாம். கல்யாணத்தை இந்தியாவிலேயே வெச்சுக்கலாம்."

"செலவு அதிகமாகும் ரத்னா."

"செலவைப் பத்தி கவலைப்படாதிங்க. அப்பாகிட்ட, எங்கிட்ட பணம் இருக்கு! பத்தாயிரம் டாலர்ங்கிறது ஒரு லட்சம் அங்கே, உங்கப்பாவுக்கு நானே கடிதம் எழுதறேன். தமிழ்ல எழுதிப் பார்க்கிறேன். அங்க கல்யாணம் வெச்சுக்கறதா சொல்லிட்டா சந்தோஷப்படுவார்."

"நாட் ஷ்யூர்"

"ரகு, எனக்கும் அங்கதான் கல்யாணம் பண்ணிக்க விருப்பம். சின்னதா கிராமத்தில் ஒரு கோயில்ல அபசுரமில்லாம நாயனம் வாசிச்சு நிறையப் பேருக்கு சாப்பாடு போட்டு எங்க பழைய கிராமத்திலேயே வெச்சுக்கலாம். டெண்ட்டில சினிமாப் போகலாம். டீ வாங்கிச் சாப்பிடலாம். செருப்பில்லாம நடக்கலாம். நான் சுத்தி சுத்திப் புடவையைக் கட்டிக்கிட்டு அப்பா மடியில உட்கார்ந்துட்டு..."

"ஓகே... ஓகே...! உங்கப்பாவை கன்ஸல்ட் பண்ணிக்கிட்டு எழுது என்ன?"

"மது போன் பண்ணியிருந்தா."

"எனக்கும் போன் பண்ணியிருந்தா. ரொம்ப சந்தோஷம்னு சொன்னா, ரத்னா ஒண்ணு கவனிச்சியே?"

"ஒரு மாதிரி பேசினா இல்லையா?"

"ஆமாம், காலைல ஜின்னு! வாட்ஸ் ஹாப்பனிங் டு ஹர்?"

"கொஞ்சம் சாப்பிட்டா என்ன... பொழுது போகாம இருக்கும்."

"இருந்தாலும் அவ பேசற தினுசைப் பார்த்தா கொஞ்சம் அதிகமாகவே சாப்பிடாப்பலதான் தோணிச்சு எனக்குக் கொஞ்சம் கவலையாகவே இருந்தது."

"உம். பாத்திங்களா! இன்னொருத்தன் மனைவியைப் பத்தி நினைக்கிறது கூடத் தப்பு! உங்களுக்கு கல்யாணம் ஆகப் போறது, ஞாபகம் வெச்சுக்கங்க..."

"இல்லை ரத்னா. நீ வேணா அவளைப் போய் விசாரிச்சுப் பாரு. இட்ஸ் நாட் ரைட்."

"இத பாருங்க, அமெரிக்காவில அவங்கவங்க துர்சொப்பனங்களை அவங்கவங்களுக்கு விட்டுருங்க. மற்றவங்க வாழ்க்கைல குறுக்கிட்டு பன்னீரும் சந்தனமும் தெளிக்கிற தேவையெல்லாம் இந்த தேசத்தில் முடியாது. நீங்க கவலைப்பட வேண்டியது என்னைப் பற்றி... நான் ஜின் சாப்பிட்டன்னா அதட்டுங்க. மதுமிதாவுக்கு கணவன் இருக்கான். அவன் பார்த்துக்கறான் என்ன?" என்றாள்.

ரத்னா விளையாட்டாக அதைச் சொல்லவில்லை என்பது அவள் நெற்றிச் சுருக்கத்திலிருந்து தெரிந்தது.

"அதுக்குச் சொல்லலை ரத்னா..."

"லெட்ஸ் லீவ் தி டாட்பிக்."

"ஆமா, இது என்ன நிச்சயதார்த்தம்."

"அப்பாவோட ஐடியா. பிட்ஸ்பர்க் கோயில்ல வெச்சுக்கலாம்னு சொன்னார். சும்மா ஒரு பிக்னிக் மாதிரி போய்ட்டு வந்துரலாம். அப்பா எல்லாமே சம்பிரதாயமா பண்ணணும்னு பார்க்கறார்."

"இல்லை. என்னை எப்படியாவது வளைச்சுப் போடணும்னு பார்க்கறார். ஏதாவது ஒருவிதத்தில் கமிட் பண்ணி வைக்கப் பார்க்கிறார்.

"சேச்சே.... ரகு! லெட்ஸ் ஹானஸ்ட். கல்யாணத்தில் கட்டாயம் எதும் இல்லை. உங்களுக்கு இஷ்டமில்லைன்னா பளிச்சுன்னு சொல்லிரலாம்."

"சொல்லிரட்டுமா" என்றான்.

"சொல்லுங்க."

"எனக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க..." என்று நிறுத்தினான்.



www.writersujatha.com

அவள் கண்களில் லேசாகக் கவலை தோன்றுவதைப் பார்த்தான். அப்பா சொன்னா ராமகிருஷ்ணர் கதை ஞாபகம் வந்தது. இல்லற வாழ்க்கையில் ஒருவன் இருந்த போதிலும் பற்றற்று இருக்க முடியுமா? என்பதற்காக அவர் சொன்ன எளிய கதை. அப்படிப்பட்டவன் கோவலன் பெண்டாட்டி தாசனாகத்தான் இருக்க முடியும். பிச்சைக்காரனுக்கு இரண்டனா கொடுக்கக்கூட பெண்டாட்டியிடம் கேட்க வேண்டிய நிலையில் இருப்பான்.

"சொல்லுங்க" என்றாள்.

"எனக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறதில ஒரே ஒரு தயக்கம்தான்."

"என்ன?"

"என்னை உங்க வீட்டுத் தொழுவத்தில கட்டிப் போட்டுருவிங்களோன்னு."

"ஓ! அந்தப் பயமா? மாமியார் வீட்டு மாப்பிள்ளையா ஆயிருவிங்க. பையைக் கொடுத்து உங்களை டிபார்ட்மெண்ட் ஸ்டோருக்கு அனுப்பிருவோம்னு பயப்படறீங்க, அப்படித்தானே...?"

"ஆமாம்."

"அந்த மாதிரி நான் அனுமதிப்பேன்னு நினைக்கறீங்களா? என்னையும் நீங்க சரியாப் புரிஞ்சுக்கலை. நீங்க எம்.பி.ஏ. படிச்சு முடிக்கிறதுக்கு முன்னாலேயே உங்களுக்கு ப்ளான் எல்லாம் போட்டு வெச்சுட்டன். என் கணவர் எனக்கு சம்பாதிச்சுப் போடறதைத்தான் பெருமையா நினைக்கிறவ நான். அந்த விதத்தில கவலையேபடாதிங்க. அப்படியெல்லாம் ஆகாது... மேலும் கல்யாணத்துக்கு இன்னும் அவசரமில்லை."

"நிச்சயதார்த்தத்துக்குத்தான் இல்லையா?"

"அப்பா உங்ககூட என்னை அனுப்பறதை விரும்பலை. அதுதான் காரணம். நம்ம ரெண்டு பேரும் இளைஞர்கள். சுதந்திரமான பிரதேசம். இது ஏதாவது விபரீதமா ஆயிடக்கூடாதுன்னுட்டுத்தான் ஒருவிதத்தில் நாம சந்திக்கிறதையும், பழகறதையும் ஸாங்ட்டிஃபை பண்றார்னு வெச்சுக்கங்களேன்."

"புரியுது. ஆனா இது மாதிரி ஏறக்குறைய நிச்சயதார்த்தம் எனக்கு ஒருமுறை ஆயிருச்சு. அதனால நிச்சயதார்த்தத்தைப் பற்றி எனக்கு ஒரு ஸுப்பர்ஸ்டிஷன் உண்டு."

"இதை ஏன் நிச்சயதார்த்தம்னு வெச்சுக்கறீங்க?" பிட்ஸ் பார்க்குக்கு பிக்னிக் போறதா வெச்சுக்குங்களேன். அங்க சில முக்கியமான நண்பர்கள்ளாம் வரப்போறாங்க. ஓர் அர்ச்சனை பண்ணிட்டு அந்த இடத்தில நம்ம இரண்டு பேருக்கும் கல்யாணம் ஆக போறதை அறிவிக்கப்போறார். அவ்வளவுதான்! என்ன சொல்றிங்க?"

"சரி" என்றான்.

"சரியா சொல்லுங்க."

"சரி" என்றான் சந்தோஷத்துடன்.

"இப்ப என்னைத் தொடலாம் நீங்க."

"தொட்டாச்சே!"

"நிசம்மாவே தொடலாம்."

"ஜனவரி மாசத்துக்கு அப்புறம் வெச்சுக்கலாம்!"

"ஜனவரி மாசம் என்ன?"

'அப்பதானே நாம் இண்டியா போய் கல்யாணம் பண்ணிக்க போறோம். குக்கிராமத்தில்?"

"அட" என்றாள் வியப்புடன்.

இருந்தும் பிட்ஸ்பார்க் போவதை எப்படியோ தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான். வைத்தி வெளியூர் போயிருந்தார். ஆகஸ்ட் மாசம் போவதாக இருந்தது. உடம்பு சரியில்லை. ஒரு முறை ரத்னாவின் பாட்டிக்கு ஜுரம். செப்டம்பர் பன்னிரண்டாம் தேதி காலேஜ் திறந்து விட்டது. இரண்டாம் வருஷம். கோடை ஒரு காற்றுப் போல் கடந்து விட்டது. பேப்பர் முழுவதும் ஃபுட் பாலாக இருந்தது. ஜனங்கள் வீடு மாற்றுகிறார்கள். வீட்டு வாசலில் சாமான்கள் இறங்கிக் கொண்டிருந்தன. அல்லது ஏற்றுமதி செய்யப்பட்டன. பள்ளிக்கூடத்துக்குச் சென்றால், "இரண்டாவது வருஷமா? அதைப் போல சுலபமில்லை. ஆடுகூட பாஸ் பண்ணும்" என்றனர். சிலர், நேர் எதிராக, "இரண்டாவது வருஷம்தான் கஷ்டம்" என்றார்கள். சில மாணவிகள் பிள்ளை பெற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிந்தது. சிலர் கல்யாணம் செய்து கொண்டு விடடதாகச் சொன்னார்கள். (மேரி) சிலர் விடுமுறையின்போது மலையேறினார்களாம். 'ஹாங் கிளைடிங்' என்று காற்றில் பறந்தார்களாம்... என்ன என்னவோ வதந்திகள். "ப்ரொபஸர் எட்மண்ட்ஸனிடமா பதிவு செய்து கொண்டாய்? கிராதகனல்லவா அவன். ஆணியடித்து மாட்டி விடுவானே?"

காலேஜுக்குப் போக வேண்டுமே என்று வயிற்றில் கொஞ்சம் பிடிப்பாகத்தான் இருந்தது. ஆல்ட்சிச்ஹாலில் ரிஜிஸ்ட்ரேஷன் தினத்தின்போது திருவிழாபோலக் கூட்டமாக இருந்தது. கும்பல் கும்பலாக இருந்த நண்பர்களின் குழுவினர். 'ஹலோ' என்று அவனை ஆரவாரமாக வரவேற்றது மனத்துக்கு இதமாக இருந்தாலும், ரகுபதிக்கு ஏதோ ஒரு விதத்தில் குறையாக இருந்தது. இதெல்லாம் எதற்கு? நமக்குத்தான் கல்யாணம் ஆகிவிடப் போகிறதே! எனக்குத்தான் வைத்தி வேலை ஏற்பாடு செய்யப் போகிறாரே!"

ஆனால், தன் கவலை ரத்னாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது பற்றி கவலை.

யோசித்துப் பார்த்ததில், கவலை மதுமிதாவைப் பற்றியது என்று தோன்றியது. பிட்ஸ்பர்க்குப் போகும்முன் ஒருமுறை அவளைப் போய்ப் பார்க்கத் தீர்மானித்தான்.

## 26

"வா ரகு" என்றால் மதுமிதா. "கல்யாணம் பண்ணிக்கப் போற. இன்னும் கொஞ்சம் பளபளப்பா ஆயிட்டியே!"

மதுமிதாவைப் பார்த்து ஏறக்குறைய ஆறு மாதம் ஆகியிருந்தது. அவள் ஏதோ ஒருவிதத்தில் மாறிப் போயிருந்தாள். எந்த விதத்தில் என்று சொல்ல முடியவில்லை.

கொஞ்சம் பெருத்திருந்தாள். அதை முன்பே கவனித்திருக்கிறான். அதில்லை வேறு எதோ, சிரிக்கிற போது அவளுக்கு முன்போல் கண் ஒத்துழைப்பதில்லை. குழந்தைத்தனம் முழுவதும் மறைந்து போய்விட்டது. சிரிக்க வேண்டுமே என்று சிரிப்பது போல.

"எப்படி இருக்கே மது?"

"பார்க்கறியே தெரியலை?"

"ராதா சௌக்கியமா இருக்காரா?"

"ராதாவுக்கு என்ன, ஹி இஸ் ஆல்ரைட்."

"வெக்கேஷனுக்கு எங்கே போயிருந்தே?"

"இண்டியா போகலாம்னு புக்கெல்லாம் பண்ணியிருந்தேன். ராதாகூட வர்றதா இருந்தது. கடைசி நிமிஷத்தில வர முடியலை. சரி, ரகு கல்யாணத்துக்கு இருந்துரலாம்னு கான்ஸல் பண்ணத் தீர்மானிச்சுட்டோம்."

"கல்யாணம் இப்ப இல்ல மது."

"கல்யாண நிச்சயதார்த்தம் ரகு, யூல் பி ஹாப்பி வித் ரத்னா. ஷி இஸ் எ நைஸ் கர்ள்."

"உனக்கு 'நைஸ்' இல்லாத யாராவது இருக்காளா சொல்லு?"

"நான் யாரையும் கெட்டவர்னு சொல்றது இல்லை" என்றாள். "இல்லை ரகு! அப்படி இருக்கக்கூடாதுன்னு தோணுது. என் லைஃப்ல எல்லாமே மத்தவங்க தீர்மானிச்சுத்தான் நடந்திருக்கு. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கன்னு அப்பா அம்மா சொன்னாங்க, சரின்னேன். இடையில் ராட் வந்த பிறகு ராடைக் கல்யாணம் செய்துக்கோன்னாங்க. சரின்னேன். அமெரிக்கா வந்தப்பிறம் ராட் சொல்றதைக் கேட்டுக்கிட்டு இருக்கேன். ஆர்லாண்டோ போன்னா போகணும். இண்டியா போக வேண்டாம்னா வேண்டாம். எனக்கா ஒரு டிஸிஷனும் செய்ய இதுவரை சந்தர்ப்பமே வரலை ரகு" என்று சிரித்தாள்.

"இதுக்காக வருத்தப்படறியா மது?"

"வருத்தப்படறதுகூட யாராவது சொன்னாத்தான் வருத்தப்படுவேன்" என்று சிரித்தாள்.

"அப்ப சிரி பரவாயில்லை."

"எனிவே ஐம் ஹாப்பி ஃபார் யூ! எதையாவது நினைச்சுக்கிட்டு எதையாவது சொல்லமாட்டா. ரத்னா உன்னை நல்லாவே கண்ட்ரோல் பண்ணிருவா. வைத்தி மாமா ரொம்ப க்ளெவர். பயப்படாதே, அவங்கள்ளாம் உனக்கு நல்லதே செய்வாங்க" மௌனமாக இருந்தாள்.

"எப்ப நிச்சயதார்த்தம்?"

"இன்னும் நிச்சயமாகலை. வைத்தியநாதன்தான் ஏற்பாடு செய்துகிட்டு இருக்கார். எனக்கு இந்த ஃபங்ஷனே அனாவசியமாப் படுது."

"சேச்சே! நிச்சயம் அவசியம். இல்லாட்டா நான் ஏமாத்தினாப்பலே நீ ரத்னாவை ஏமாத்திறலாம் இல்லையா? என்றாள்.

"அவளை நிமிர்ந்து பார்த்தான். சிரிப்பு மாறாமல் "வாட் வில் யூ ஹாவ்" என்றாள்.

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்."

"இஃப் யூ டோண்ட் மைண்ட் ஐ'ல் ஹாவ் ஸம் ஜின்!"

"மது, நீ தனியா குடிக்க ஆரம்பிச்சுட்ட" என்றான். அலமாரியிலிருந்து அவள் கண்ணாடித் தம்ளரை எடுத்து வந்தாள்.

"என்ன செய்வேன்?"

"ஏதாவது கவலையா மது?"

"சேச்சே! பொழுது போகலை, அவ்ளதான். நான் ஜாஸ்தி குடிக்கிறதா நினைச்சுக்காதே. எப்பவாவது கம்பெனி இந்த மாதிரி கிடைச்சாத்தான். உனக்கு என்ன வேணும்?"

"கோக் எதாவது கொடு."

கோக் சாப்பிட்டு முடிப்பதற்குள் அவள் முடித்து விட்டாள்.

"போதும் மது."

"போதும்ங்கறியா? சரி, நீ போனப்புறம் சாப்ட்டா போச்சு."

"பழக்கமாயிடும் மது."

"கவலைப்படாத" என்றாள் "எதுக்காகக் குடிக்கிறேன் தெரியுமோ? நான் சந்தோஷமா இருக்கேன். வெரி ஹாப்பி! எனக்கு இங்க என்ன குறைச்சல்? எத்தனை சத்பாத்யம், காரு, எத்தனை சௌகரியங்கள், எத்தனை சாதனங்கள்! வெரி வெரி ஹாப்பி" என்றாள் அவள். கண்களின் ஓரத்தில் மட்டும் லேசாகக் கண்ணீர் இருந்தது. மற்றொரு டம்ளர் ஊற்றிக் கொள்ள முற்பட்டவளைத் தடுத்து நிறுத்தி கிளாஸைப் பிடுங்கிக் கொண்டான்.

"ம்ஹூம்... எனக்கு வேணும் எனக்கு வேணும்."

"போதும்."

"அப்ப நீ சாப்பிடு, வேஸ்ட் ஆறது பாரு!"

"வேஸ்ட் ஆறதுன்னு சாப்பிட்டு சாப்பிட்டுத்தான் நீ பெருத்துக்கிட்டு இருக்கே மது!"

"நீ போ வீட்டுக்கு."

"ராதாவைப் பார்த்துட்டுப் போறேன்."

"அதுவரைக்கும் எதாவது பாட்டுப்போடு!"

ஸ்டிரியோவைத் தட்டினான்.



www.writersujatha.com

ஜோன் பேயஸ்ஸின் ஃபோக் அவளுக்குப் பிடித்திருக்கிறது போதும். ஒரே திசையில பார்த்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்க, வாசலில் கார் வந்து கராஜ் தானாகத் திறந்து கொள்ள, "ராதா வந்தாச்சு" என்று உற்சாகத்துடன் வெளியே ஓடினாள்.

சற்று நேரத்தில் ராதா பேசிக்கொண்டே கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டே பேசிக் கொண்டே வந்தவன் ரகுபதியைப் பார்த்து, "ஹாய்! எப்படி இருக்கப்பா? கல்யாணமாமே!" மேசை மேல வைத்திருந்த கிளாஸைப் பார்த்து, "என்ன கண்ணு, நான் இல்லாம இருக்கிற ஜின்னையெல்லாம் சாப்ட்டுறதா? இது உனக்கே நல்லாயிருக்கா? எனக்குக் கொஞ்சம் வெச்சு வெக்கக் கூடாதா?"

பின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனைப் படிக்க விடாமல் தொந்தரவு பண்ணி, "பாரு ராட், இந்த ரகு ரொம்ப பயமுறுத்தறான். பழக்கமாயிடுமாம்."

"நீ சாப்ட்டா அவனுக்கென்ன?"

"அதானே..."

"அதிகம் சாப்பிட வேண்டாம்னு சொன்னேன்."

"பரவாயில்லை. சாப்பிடும்மா, உன்னை எப்படி ரெகுலேட் பண்றதுன்னு எனக்குத் தெரியும். உன் இஷ்டம். நீ சாப்பிடறதை யாரும் தடை செய்ய மாட்டாங்க! எனக்கு ரகு, கல்யாணம் ஆனதுக்கப்புறமாவது அசட்டுப் பிசட்டுன்னு எதாவது பேசறதை நிறுத்தினா சரி. ரத்னா உனக்குச் சரியான ஜோடியில்லைதான். ஷி இஸ் டூ இனிடெலிஜெண்ட். வேலைல இருக்கியாமே!

"எப்படி ஸார் தெரியும்!"

"நீ ஸான்விகாஸ் போனது, பிட்ஸ்பார்க் போகப் போறது எல்லாமே எனக்குத் தெரிஞ்சுரும். உன்னுடைய நலன்ற அக்கறையுள்ளவன்கிற ரீதியில."
"பாவி" என்றான் மனதுக்குள். மதுமிதா அவனையே உபாசனையுடன் பார்த்துக் கொண்டிருக்க, காபி கொண்டு தரும் போது, அவன் அதை வாங்கிக் கொள்ளும்போது, கோப்பைக் கீழே வைக்கும் போதெல்லாம் அவர்கள் முத்தமிட்டுக் கொள்வதும்... "நான் எதற்காக இங்கே வந்தேன் என்று வருத்தப்பட்டான். ஏதோ ஒரு விதத்தில் மதுமிதாவைப் பற்றிய கவலை ஒன்று அன்று டெலிபோனில் பேசினதிலிருந்து இருந்தது. நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும், ஒரு கணவன் இருக்கும்போது?"

"எப்ப பிட்ராத்தல்?"

"தெரியலை."

"என்னால வர முடியாது. எனக்கு ஒரு மாதிரி சின்ன விஷயங்களுக்கெல்லாம் நேரமில்லை. மது வருவா. மது நீ போறியா?"

"முடிஞ்சா பார்க்கலாம் ராட்."

"முதல்ல பிட்ஸ்பார்க் எப்போன்னு தீர்மானமாகட்டும், அதுக்கப்புறம்னா இதெல்லாம்" என்றான்.

"ஏன் கான்ஸ்லாயிடுமா?"

"இல்லை ஸார். தேதியே இன்னும் தீர்மானிக்கலை. அப்படி ஒண்ணும் பெரிய ஃபங்ஷனும் இல்லை. வைத்திய நாதனுக்குத் தான் ஒரு செண்டிமெண்ட்."

"கல்யாணம் பண்ணிக்கப்பா, கல்யாணம் உடம்புக்கு நல்லது. இவ பாரு என்னமா என்னை வெச்சுக்கறா பாரு."

"வரட்டுமா?"

**தி**டீர் என்று தீர்மானித்து விட்டார் வைத்தி. வீக் எண்டில் எல்லாருமாக பிக்னிக் போகிறது போல இரண்டு கார்கள் ஏற்பாடு பண்ணியிருந்தார். காரின் பின் ஏகப்பட்ட கலந்த சாதங்களும், தின்பண்டங்களும் ஏறக்குறைய இருபது பேர் சாப்பிடுவதற்கு எடுத்துக் கொண்டு வந்தார்கள். காருக்கு வெளியே அமெரிக்காவும் உள்ளே மயிலாப்பூராகவும் இருந்தது. ரத்னா பட்டுப் புடவையை அணிந்திருந்தாள். எழுபது மைல் க்ரூய்ஸில் போட்டு விட்டு பம்பரம் போல கார் சென்று கொண்டிருக்க, ஹைவேகோடை. ரத்னாவின் தங்கை படித்துக் கொண்டு வர, வைத்தி சேஷகோபாலனுடன் பாடிக் கொண்டே மிக உற்சாகமாக கார் ஓட்டினார். "எனக்கு எல்லாமே பிட்ஸ்பர்க் சீனிவாசர்தான்! ஒரு பெரிய காண்ட்ராக்ட் ஆகணும்னா அவருக்கு வேண்டிப்பேன். நிச்சயம் ஆயிடும். அவர்தான் எங்க குலதெய்வம். இண்டியாவில மாதிரி இல்லாம பக்தி சிரத்தையா எல்லாம் பண்றதால இவருக்கு இன்னும் பவர் ஜாஸ்தி. கோயிலைத்தான் பாரு. அருமையா கட்டியிருக்கா! பாத்துட்டுச் சொல்லு. இதுக்கு முந்திப் போனது இல்லையா?"

"இல்லை ஸார்."

"யூ என்ஜாய் இட்."

"ஏன் ஒரு மாதிரி இருக்கே ரகு?"

"மதுமிதா வராளா?"

"ரெண்டு நாளைக்கு முன்னாலே போன் பண்ணேன். ராதாதான் ஆன்ஸர் பண்ணார். ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்குப் போயிருக்காளாம். காலைதான் வருவான்னு சொன்னார் தகவல் சொல்றேன்னு சொன்னார். ராதா வரமாட்டார். அவளும் கொஞ்சம் சந்தேகம்தான் தனியா எப்படி வருவா பிட்ஸ்பர்க்?"

"பிட்ஸ்பார்க்குக்கு ஃப்ளைட் இருக்கே வரலாமே! ஆமா! மாப்பிள்ளை என்ன மதுமிதா மேல இத்தனை அக்கறை?"

"இல்லை ஸார். அவளைச் சமீபத்திலே போய்ப் பார்த்தேன். கொஞ்சம் கவலையா இருந்தது."

"இனிமே நீங்க கவலைப்பட வேண்டிய ஆசாமி வேற..."

"சேச்சே! ஏன் விபரீதமா எடுத்துக்கறிங்க."

"விபரீதமா எடுத்துக்கலைப்பா. மதுமிதா ராதா ஃபாமிலிங்கறது வேற கிளாஸ். அப்பர் கிளாஸ். அவா எல்லாம் நம்மோட சேர்த்தியில்லை. அது வேற உலகம்."

"இங்ககூட அந்த மாதிரி இருக்கா என்ன?"

"இல்லாம? வருஷத்துக்கு ஹண்ட்ரட் 'கே'க்கு மேல பண்றவங்க எல்லாம் அந்த ஜாதி. இதோ பார்."

மெயின் ரோடிலிருந்து சற்றே மலைப்பாங்காக இருந்த பாதையில் வண்டி மேற்செல்ல, தூரத்தில் கோயில் தெரிந்தது. வெண்மையாக ஒருமுத்துப் போல் இருந்தது. பின்னால் கரும்பச்சையில் காட்டின் அடர்த்தி கோயிலின் வெண்மையை இன்னும் தூக்கிக் காட்டியது. கோயில்னா இதான் கோயில். இது ஓர் ஆச்சரியம் இல்லையா! ஆழ்வார் யாராவது இருந்தா ஆயிரம் பாட்டுப் பாடியிருப்பார்! பெருமாள்தான் என்ன அழகு! என்ன சுத்தம் தெரியுமா? ஆச்சரியம் இல்லையா கடல் கடந்து வந்து..."

"இந்த இடத்தில இவ்வளவு பிரம்மாண்டமா ஓர் இந்துக் கோயில் இருக்கிறது ஆச்சரியம்தான் ஸார்."

"அப்பா 'இஸ்கான்' கட்டியிருக்கிற கோயில் இதை விட பெரிசு" என்றாள் ரத்னாவின் தங்கை.

"சே! அவங்க வேறம்மா. அதெல்லாம் கோயிலோட சேர்த்தியில்லை. இதைப்பாரு ரகு! அங்க நடக்கறது எல்லாமே இங்கே விசேஷமா நடக்கும். எல்லா உற்சவமும் நடக்கும். டோலோத்சவம்... ரதம்... பங்குனி உத்திரம்."

கார் கோயிலை நெருங்கிவிட, புற மண்டபத்தைக் கண்ணாடி மூடியிருந்தது. பார்க் செய்யும் இடத்தில் நான்கைந்து கார்கள் இருந்தன. ஒவ்வொருத்தர் கலிபோர்னியாவிலிருந்து எல்லாம் கார் ஓட்டிண்டு வரா தெரியுமா? முடியெடுக்கறது. காது குத்தறது எல்லாம் பிரபலமாயமிண்டு வரது. சுத்தமாக இருந்தது. அர்ச்சனை டிக்கெட் கொடுத்தவர் காஷ் ரிஜிஸ்டரில் ரசீது எடுத்துக் கொடுத்தார். பக்கத்தில் கோக்கோ கோலா மிஷின் இருந்தது. மௌனக் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற போது சால்வை போர்த்திக் கொண்டு அய்யங்காரும் அவர் மனைவியும் தரையில் உட்கார்ந்திருந்தார்கள்.

"நமஸ்காரம் சுவாமி!"

"வாங்கோ, வாங்கோ வைத்தியநாதன் ஸார்! என்ன ரொம்ப நாளா காணோம். உங்க தெய்வம் வேங்கடாசலபதியை மறந்துட்டேளா?"

மண்டபத்தின் நடுவே உத்சவர் தன் நாயகிகளுடன் ஊஞ்சலில் வீற்றிருந்தார். ரகுபதி பிரமித்துப் போய்ப் பார்த்தான். திடீர் என்று ஒரு சில சதுர அடித் தீவுபோல அமெரிக்க சீதோஷ்ணத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வளைந்து கொடுத்தாலும் உள்ளுணர்வில் மிகவும் தென்னிந்தியத்தனமான கோயில்.

"ஒண்ணுமில்லை. இவர் ரகுபதின்னு, எங்க ரத்னா இல்லை அவளுக்கு மாப்பிள்ளையா வரப் போறவர், ரெண்டு பேர் பேர்லயும் ஓர் அர்ச்சனையை பண்ணிப்பிட்டு, சின்னதா பழம், பாக்கு, வெத்தலை கொடுக்கற மாதிரி ஒரு ஃபங்ஷன் வெச்சுக்கலாம்னு..."

"பேஷா! தாராளமா. கொஞ்சம் அவகாசம் கொடுக்கறீங்களா? இதோ, ரெண்டு மூணு லட்டர் எழுதிப்ட்டு வந்துர்றேன்."

"சரி இதுவரை பெருமாளிச் சேவிச்சுட்டு உட்கார்ந்திருக்கோம்."

ரகுபதி கண்ணாடி வழியாக வெளியே பார்த்தான். பிட்ஸ்பர்க் நகரம் தெரியவில்லை. தூரத்தில் கார்கள் விரைந்து கொண்டிருந்தன. கோயில் அடிவாரத்தில் ஒரு கார் வந்து

நிற்க, கதவைத் திறந்து மதுமிதா வெளிப்படுவதைக் கவனித்தான். காரைப் பூட்டாமல் சற்று வேகமாகப் படி ஏறி அவர்களை நோக்கி வந்தாள்.

## 27

www.writersujatha.com

"ரத்னா! மது வரா" என்றான் ரகு."

ரத்னா ஆச்சரியப்பட்டு அவனுடன் வந்து எட்டிப் பார்த்தாள். "தனியா வந்திருக்கா, அட!"

வைத்தியநாதன், "வாங்கோ எல்லாரும் சுவாமி தயாராகி விட்டார்."

"கொஞ்சம் இருப்பா. மது வரா; விசாரிச்சுட்டு வாரோம்" என்றாள் ரத்னா.

"மதுவா! இது என்ன குழப்பம்?"

"என்னப்பா குழப்பம்! திடீர்னு நினைச்சுண்டு நம்ப ஃபங்ஷனுக்கு வரலாம்னு தீர்மானிச்சுருப்பா" என்றாள் ரத்னா. அவள் குரலில் கவலை இருந்ததை ரகு கவனித்தான்.

"ஹலோ எவ்ரிபடி!" என்று உற்சாகத்துடன்தான் உள்ளே நுழைந்தாள். இந்தக் கோயிலுக்கு மூணாம் தடவை வரேன். என்ன ரத்னா? டயத்துக்கு வந்துட்டேன் பார்த்தியா... என்ன ரகு! என்னை விட்டுட்டு அவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்க முடியுமா?"

"சேச்சே... மது? நீ வந்ததில ரொம்ப சந்தோஷம், உனக்காகத் தான் காத்திருந்தோம்னு வெச்சுக்கயேன்."

"பொய், பொய்!" என்றாள். சற்று கலைந்திருந்தாள். தூக்கக் குறைவினால் இருக்கலாம். சமீபத்தில் அழுததை மேக்கப்பால் மறைக்கும் முயற்சி தெரிந்தது. அந்த இடத்தில் சற்று நேரம் மௌனம் நிலவியது. "வா உட்காரு!"

"ரகு, உங்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்" என்றாள்.

www.writersujatha.com

"பேசலாம் பேசலாம், எல்லாம் முடியட்டும்" என்றாள் ரத்னா.

"இல்லை ரத்னா... இது கொஞ்சம் அவசரம்."

அவர்கள் இப்போது மதுவை விரோதமாகப் பார்த்துக் கொண்டிருக்க, ரகு என்ன தீர்மானிப்பது என்று கஷ்டப்படுவதை ரத்னா உணர்ந்து, "போய்ட்டு வாங்க... ரொம்ப நேரம் ஆக்காதிங்க" என்றாள்.

"ரகு மதுமிதாவுடன் நடந்தான். படி இறங்கி தன் கார் அருகே அழைத்துச் சென்றாள். "ஸாரி ரகு... உங்க எல்லாரையும் கொஞ்சம் ரஷ் பண்றேன்! அவா எல்லாம் ஒரு மாதிரி பாக்கறா, இல்லை...?"

www.writersujatha.com

"பரவாயில்லை, சொல்லு..."

"ரகு, நான் இண்டியா போகணும்."

"போய்ட்டு வாயேன்" என்றான். அவள் கண்களில் கண்ணீர் கரையிடுவதைக் கவனித்தான்.

"ரகு, நான் வந்து... வந்து... இண்டியா திரும்பிப் போகணும்."

"திரும்பின்னா?"

மது சட்டென்று காருக்குள் புகுந்து உட்கார்ந்து கொண்டாள். டாஷ் போர்ட்டிலிருந்து காகிதக் கைக் குட்டைகளை எடுத்து பிரவாகமாக வருகிற கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மேலும் அழுதாள்.

"என்ன மது, என்ன ஆச்சு...? எதுக்கு அழறே? சேச்சே... நீ தைர்யமுள்ள பெண்ணில்லையா? எதுக்காக அழறே?"

"ரகு, என்னை இண்டியாவுக்கு அழைச்சுட்டுப் போயிரு!"

"எப்ப...?"

"இன்னிக்கே! இப்பவே!"

"என்ன ஆச்சு மது? சொல்லு!"

"..... "

"சொல்லு மது... சொல்லு!"

"நீ அன்னிக்கு சொன்ன பாரு. ராதாவைப் பத்தி அது எல்லாம் நிசம்!"

"என்ன சொல்வது! அப்பவே சொன்னேன். நீதான் அசடு மாதிரி அதெல்லாம் பொய், என் பொறாமையால் கட்டின கதையென்றெல்லாம் சொன்னாய்..." சேச்சே வெறுப்பேத்துவதற்கு இது நேரமில்லை. மிகவும் அழுகிறாள்.

"என் கண்ணால பார்த்துட்டேன் ரகு. முதல்லயே சிலதைக் கவனிச்சேன். ஆனா நம்பலை. பர்ஃப்யூம்ல எல்லாம் பார்த்தேன். ஒரு தடவை யூரோப் போறப்ப மிஸ்டர் அண்ட் மிஸஸ்னு ரெண்டு டிக்கெட் புக் பண்ணியிருந்ததைக் கவனிச்சேன். ஒரு ப்ராவைக் கவனிச்சேன். சிகரெட்டில லிப்ஸ்டிக்கெல்லாம் பார்த்தேன். அப்பகூட நான்தான் எப்பவாவது கவனக்குறைவா இருந்திருப்பேன். எல்லாம் என்னோட அடையாளம்தான்னு நினைச்சுக்கிட்டு சமாதானப்படுத்திக்கிட்டேன். ஊருக்குப் போயிருந்தவ ஒரு நாள் முன்னே வந்துட்டேன். என்கீயை வெச்சுக்கிட்டு திறக்கறேன். உள்ளப் போறேன் எங்க பெட்ரூம்ல, எங்க படுக்கையில, ரெண்டு பேரும்... சே! கன்னங்கரேல்னு இருந்தா. எழுந்தவ உடம்பைக்கூட மறைச்சுக்காம என்னைப் பார்த்து போட்டிக்காரி மாதிரி சிரிக்கிறா! அந்தச் சிரிப்பு போதும் எனக்கு! ச்சே... நான் போறேன். ரகு, எனக்கு வேண்டாம். எனக்கு அமெரிக்கா வேண்டாம். எனக்கு ஒண்ணும் வேண்டாம்."

"வெயிட் வெயிட். நீ ராதாகிட்ட இதைப்பத்தி கேட்டியா!"

www.writersujatha.com

"கேட்டேனா... அப்படியே கீறி குடலைக் கீறிப்பிடலாம்னு வந்தது. சத்தம் போட்டேன். ராதா என்ன சொல்றது தெரியுமா? கன்னத்தைத் துடைத்துக் கொண்டு, "என்ன சொல்றது தெரியுமா? "டேக் இட் ஈஸி. இதில என்ன தப்பு? நீ ரகு கூடப் படுத்துக்கலியா, அது மாதிரித்தான்!"

"பாஸ்டர்ட்!"

"அப்படியே அப்படியே கிழிச்சுப் போட்டுரலாம்னு தோணித்து, ரகு, எனக்கு ஒண்ணும் வேண்டாம். என்னை மெட்ராஸ் கூட்டிண்டு போயிடு. எங்கப்பா அம்மாகிட்ட கொண்டுபோய் விட்டுரு...."

இப்போது அவள் அழுத கண்ணீர் சீட்டை நனைத்தது.

"இத பாரு அழக்கூடாது. இதை தைரியமா சமாளிக்கலாம்."

"என்னை இண்டியாவுக்குக் கொண்டு விட்டிரு. நேத்தைக்கே அப்பாவுக்கு கால் போட்டேன். சரியா பேச முடியலை. உடனே இங்க வான்னேன். அப்பாவால இப்ப வர முடியாதாம். நான் போயிடறேன். எனக்கு அமெரிக்கா வேண்டாம். தயவு செஞ்சு என்னைக் கூட்டிண்டு போயிடு!"

ரத்னா வருவதைப் பார்த்து அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"என்ன மது, எதுக்கு அழறே?"

"ஒண்ணுமில்லை ரத்னா! இதோ வந்துர்றம்."

"என்ன ரகு. சொல்லுங்க... என்ன விஷயம்?"

ரகு தர்மசங்கடத்துடன் மதுவைப் பார்க்க, அவள் அவசரப்பட்டு, "ரத்னா, இது கொஞ்சம் பர்ஸனல் விஷயம்."

ரத்னாவுக்கு இது பிடிக்கலை என்பது தெரிந்தது. சமாளித்துக் கொண்டு, "ரகு! எல்லாரும் காத்துண்டு இருக்கா..."

"கொஞ்சம் இரு ரத்னா."

"ராகுகாலம் வரப்போறது. அப்பாவுக்கு அதிலெல்லாம் நம்பிக்கை உண்டு. கொஞ்சம் வரிங்களா...?

"மது, நீயும் வாயேன்!"

"இல்லை. நான் வந்து எல்லார் மூடையும் ஸ்பாயில் பண்ண விரும்பலை. நீ போ ரகு. ஃபங்ஷன் முடிஞ்சப்புறம் வாயேன். நான் காத்திருக்கேன்..."

தலையைத் திருப்பிக் கொண்டு கையைக் கவ்விக்கொண்டு அழுகையை அடக்கிக் கொள்ள முயன்றாள்.

ரத்னா, "வாங்க அப்புறம் அதெல்லாம் விசாரிக்கலாம்" என்றாள்.

ரகு அவள் அதட்டியதை விரும்பவில்லை. "ரத்னா இவளை இந்த, நிலையில் விட்டுட்டு வர எனக்கு இஷ்டமில்லை."

"சரி, அவளையும் அழைச்சுட்டு வாங்க. நேரமாறதில்லையா?"

"அவ வர மாட்டாங்கறா"

"நீ போய்ட்டு வா ரகு. நான் காத்திருக்கிறேன்."

"இல்லை மது... உன்னை இந்த மாதிரி நிலையில் விட்டுட்டுப் போறதில..."

ரத்னா பொறுமையின்றி "ஏதாவது டிஸைட் பண்ணுங்க. வரீங்களா, வரலையா?"

"வந்துர்றேன். நான் வந்து சேந்துக்கறேன். அய்யரை மந்திரம் எல்லாம் ஆரம்பிக்கச் சொல்லு. ரத்னா. வந்துர்றேன்."

“உங்க கல்யாணத்தை விட இது முக்கியமா போயிடுத்தா உங்களுக்கு? என்றாள் கோபத்துடன். "இப்ப வரப்போறிங்களா, இல்லையா? மது, என்ன இது? ஒரு நல்ல காரியத்தைக் கெடுக்கவே வந்திருக்கியா?"

"அவளை வீணே பழி சொல்லாதே. நான்தான் அவ கூட இருக்க விருப்பபடறேன்!"

ரத்னாவின் முகம் சிவந்தது. உதடுகள் துடிக்க சட்டென்று கோபம் பீரிட்டவள் போல, "அப்ப எப்பவுமே அவளை வெச்சுக்கங்க போதும்!”–சட்டென்று விலகி கோயில் படிகளில் ஏறிச் சென்றாள். மறைந்தாள்.'

"ஸாரி ரகு" என்றாள் மதுமிதா. சரிவாக உட்கார்ந்திருந்தாள். ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருந்தாள். பெருமூச்சுடன் மார்பும் ஏறி இறங்குவதைக் கவனித்தான். அவள் பக்கத்தில் காரின் முன் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டான். "என்ன, சொல்லு?"

"டேக் இட் ஈஸி! இதான் சொன்னது ரகு. எவ்வளவு பெரிய விஷயம். எல்லாம் டேக் இட் ஈஸிதானாம். கொளுத்தணும் எல்லாரையும் கொளுத்தணும்! ரகு, நீ அன்னிக்கு பாத்தியே அவ நீக்ரோவா?"

"இல்லை."

"அப்ப இவ வேறயா! ரகு. என்னைப் பாரு ரகு. எனக்கு என்ன குறை? நான் அழகா இல்லையா? அவகிட்ட இருக்கிறது எங்கிட்ட இல்லையா?"

"அப்படியெல்லாம் பேசாதே மது."

"எதுக்காக இன்னொரு பொண்ணை... அக்ரமம்! என் வீட்டிலேயே என் படுக்கையிலேயே! என்கிட்ட என்ன குறை? குறையிருந்தா சொல்லலாமே... நான் திருத்திக்கமாட்டேனா ரகு... செய்யறது சரிதானே..."

மேலே மண்டபத்திலிருந்து வைத்தியநாதன் குடும்பத்தினர் ஒவ்வொருத்தராக அவர்களை எட்டிப் பார்ப்பதைக் கவனித்தாள். மது பயந்த முயல் போல இருந்தாள். ரகுவின் கையைப் பற்றிக் கொண்டாள். "என்ன செய்வேன் ரகு? எனக்கு உன்னை விட்டா யாரும் இல்லையே!"

என்ன சொல்வான்? விவகாரத்துப் பண்ணி விடு என்றா? ரத்துப் பண்ணி என்ன செய்வாள்? எங்கே போவாள்? அதெல்லாம் அவளுடைய பெற்றோரைக் கேட்க வேண்டாமா?

முதலில் அவள் அப்பா அம்மாவை இங்கே வரவழைக்க வேண்டும்.

"அவசரப்படாத மது. இது கொஞ்சம் நிதானமா யோசிச்சு செய்ய வேண்டிய காரியம்."

"இல்லை ரகு, அன்னிக்கு எங்கிட்ட நீ வந்து சொன்னியே ராதா சரியில்லை, இப்படி கர்ள்ஸ்கூட எல்லாம் வெச்சுக்கிட்டு இருக்குன்னு சொல்ல வந்தியே... அப்ப நான் நம்பியிருந்தன்னா என்ன செஞ்சிருப்ப?"

"என்ன செய்திருப்பேன்?"

"உங்கப்பா கூட டெலிபோன் பேசினியா?"

"முதல்ல அதான் செஞ்சேன். சரியா கேக்கலை. அப்பாவை உடனே வரச் சொன்னேன்."

"என்ன சொன்னார்?"

"என்ன விஷயம்னார். விஷயம் ரொம்ப தீவிரம்; நீ உடனே வந்தாகணும், என்ன செலவானாலும் சரின்னேன். அவர் மறுபடி போன் பண்றதா சொன்னார் ரகு. என்னை எப்படியாவது அங்க கொண்டு விட்டுரு. அது போதும். வேற எதும் உங்கிட்ட கேக்கலை. நான் இந்த க்ஷணம் இண்டியாவுக்குப் போகணும்..."

"இரு இரு. இது கொஞ்சம் யோசிச்சு பண்ண வேண்டிய விஷயம். எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடு. நானே உங்கப்பாவுக்கு போன் பண்ணி அவரை வரவழைக்கிறேன். அவர் வரட்டும் ராதா கூட பேசட்டும்."

"ராதாகூடப் பேசினா என்ன சொல்லும்.. டேக் இட் ஈஸி. அவளைப் பார்த்தன்னா நீ நம்ப மாட்ட. கன்னங்கரேல்னு ராதாவைவிட ஒண்ணரைப் பங்கு உயரமா இருக்கா! பிட்ச்! அப்றம் பாரு.. நானும் நீயும் ஆர்லண்டோ போயிருந்தோமில்லை? ராதாதானே போய்ட்டுவான்னு சொல்லித்து? இப்ப என்ன சொல்றது... நான்தான் உன்கூட தனியே போகணும்னு பிடிவாதம் பிடிச்சு, உன்னை அழைச்சிண்டு போனனாம். நாம ரெண்டு பேரும் சேர்ந்துண்டு ராதாவுக்கு துரோகம் பண்ணினமாம்... என்ன பொய் சொல்றது பார்த்தியா? ரொம்ப பொய் ரகு! ம்ஹூம் நான் வரலை. நான் அங்க இனிமே போக மாட்டேன். ரகு, நான் உன்கூட இருந்துர்றேன்!"

வைத்தியநாதன் ஜன்னலில் தெரிவித்தார். "என்ன ரகு, எல்லாரும் காத்திண்டிருக்கோம். ஹாய், மது! மது, இஃப் யூ ஹாவ் ஸம் ப்ராப்ளம். எங்கிட்டச் சொல்லு. ரகுவுக்காக நாங்கள்லாம் காத்திண்டிருக்கோமில்லையா... தேர் இஸ் எ ஃபங்ஷன்!"

"கொஞ்சம் இருக்கியா மது... நான் அந்த ஃபங்ஷனை முடிச்சுட்டு ஓடியே வந்துர்றேன்."

"என்னம்மா ப்ராப்ளம் உனக்கு? எங்கிட்டச் சொல்லக் கூடாதா?" என்றார் வைத்தி.

"உங்ககிட்டல்லாம் சொல்லமாட்டேன் மாமா. ரகுதான் என் ஃப்ரெண்ட். அவன்கிட்டதான் சொல்வேன்..."

வைத்தி ரகுவை வினோதமாகப் பார்த்தார். "வாட்ஸ் த மாட்டர் வித் ஹர்?" என்று கேட்டார்.

ரகு அவருக்குப் பதில் சொல்லாமல், "மது இருக்கியா வந்துர்றேன்" என்றான்.

"நீ போன் பண்ணி அப்பாவை வரவழைக்கிற வரைக்கும் நான் உங்கூட தங்கலாமா?" என்றாள்.

"அதுக்கெல்லாம் நான் ஏற்பாடு பண்றேன். இரு வந்துர்றேன்" என்றான் ரகு.

காரிலிருந்து வெளிப்பட்டவனை மதுமிதா புஜத்தைப் பிடித்து, "என்னை விட்டுறாதே ரகு" என்று கெஞ்சினாள்.

"இல்லை மது, கவலைப்படாதே!" என்றான்.

மேலே வந்து சந்நிதிக்குள் நுழையுமுன் வைத்தி அவனுடன் மௌனமாகவே நடந்து வந்து கொண்டிருந்தவர், "ரகு, ராகுகாலம் ஆரம்பிச்சாச்சு. அதனால இன்னும் ஒண்ணரை மணி நேரம் காத்துக்கிட்டு இருக்கணும்" என்றார்.

"இதை அப்பவே சொல்லக் கூடாதா ஸார்?"

"இரு ரகு, ரத்னா இஸ் வெரி மச் அப்ஸெட்!"

"ஏன்?"

"ஏன்னு கேக்கறது ஆச்சரியமா இருக்கப்பா! இதையே ரிவர்ஸா நினைச்சுப் பாரு... உனக்கும் ரத்னாவுக்கும் நிச்சயதார்த்தம் ஆகப்போறது; அதுக்காக இங்க வந்திருக்கே. வந்த கையோட யாரோ ஒருத்தர் ரத்னாவை காரில வந்து அழைச்சுட்டுப் போய் மணிக்கணக்கா பேசறான்னா உனக்கு என்னமா இருக்கும்?'

"யாரோ இல்லை மதுமிதா. ரத்னா நோஸ் எபவுட் ஹர்."

"ரத்னா, இங்க வாம்மா!" ஓரத்தில், வெயில் கண்ணாடியால் கண்களில் கோபத்தை மறைத்துக் கொண்டு பிடிவாதமாக நின்று கொண்டிருந்தவளை விளித்தார்.

"என்ன ரத்னா, கோபமா?"

"இல்லை. ரொம்ப பெருமை! சந்தோஷம்! லுக் ரகு, நமக்கு கல்யாணம் ஆனப்புறம் இந்த மாதிரி நான்ஸென்ஸ் எதும் கூடாது."

"மதுமிதாவுக்குப் பெரிய ப்ராப்ளம் ஒண்ணு ஏற்பட்டிருக்கு ரத்னா."

"என்ன பெரிய ப்ராப்ளம்...?"

"உங்ககிட்டல்லாம் சொல்ல வேண்டாம்னு சொல்லியிருக்கா."

வைத்தி, "தெரியாதா என்ன... ராதாகிஷன் பரஸ்திரிகளோடு சகவாசம் வெச்சிண்டிருக்கான்? அதானே?" என்றார். "இது எல்லாருக்கும் தெரிஞ்ச ரகசியம்... இதுல என்ன ப்ராப்ளம்? பேசாம கண்டுக்காம இருக்கச் சொல்லு! இவளுக்குப் பணம் கொடுத்துண்டு இருக்கானோல்லியோ?"

"என்ன ஸார் உளர்றிங்க! அங்க பெண்ணோட கோணத்தில் இருந்து பாருங்க, முதல்ல அதைக் கண்டுபிடிக்கிறபோது எவ்வளவு பெரிய ஷாக்கா இருக்கும்?"

"இதெல்லாம் சகஜம்பா இந்த ஊர்ல?"

ரத்னா ரகுவை நேராகப் பார்த்து, "ரகு, நீங்க எனக்கு ஒரு வாக்குக் கொடுத்தாகணும். நிச்சயதார்த்தம் முடிஞ்சப்புறம் மதுமிதாவோட எந்தவிதமான சகவாசமும் வெச்சுக்கக் கூடாது."

"இல்லை ரத்னா, இல்லை... நான் அவ பிரச்னையைத் தீர்த்து வெச்சுத்தான் ஆகணும், ஸார்!"

"அப்ப அதுக்கப்புறம் வெச்சுக்கலாம்பா இந்த நிச்சயதார்த்தத்தை" என்றாள் ரத்னா.

www.writersujatha.com

## 28

மதுமிதா காரில் உட்கார்ந்திருக்க, வைத்தியநாதன் குடும்பத்தினர் சற்றுத் தள்ளி ஒரு சிறிய கூட்டமாக நின்று கொண்டிருக்க, ரகுபதி இடையில் தர்மசங்கடத்தில் தடுமாறினான்.

"பாருப்பா. இந்தப் பொண்ணு கல்யாணம் ஆன பொண்ணு. எப்படி நீ இவளைத் தனியா வெச்சுக்க முடியும்? யோசிச்சுப் பாரு..."

"உங்க வீட்டில கொஞ்ச நாள் வெச்சுக்க முடியாதா? என்ன ரத்னா?"

ரத்னா தயக்கத்துடன், "எங்க வீட்டிலயா, எப்படி முடியும்? ராதாகிஷன் கோவிச்சுக்க மாட்டாரா? அவ பிரச்னை என்னன்னே சரியாத் தெரியலையே ரகு?"

"அதை நிதானமா சொல்றேன் ரத்னா! தி யூஷுவல்."

"இடிஸ் நாட் யூஷ்வல்" என்றான் ரகு. சற்றுப் பதற்றத்துடன்.

"ஏன்யா போட்டுக் குழப்பறே?"

"அப்பா, இந்த ஃபங்ஷனையே போஸ்ட்போன் பண்ணிடலாம் அதான் சரி!"

"இரும்மா இரு. இன்னம் கொஞ்சம் நேரம் இருக்கு. அதுக்குள்ள இதை ஒண்ணு இல்லை ஒண்ணுண்ணு முடிச்சுட்டு..."

www.writersujatha.com

"ரகு, கொஞ்சம் இங்க வாயேன்!" என்று மதுமிதா அழைத்தாள். வைத்தியநாதன் உடன் வர, "நீ மட்டும் வாயேன்" என்றாள்.

ரகு, "ஒரு நிமிஷம்" என்று அவள்பால் சென்றான். "நல்ல வேளையில சனியன் மாதிரி வந்து கழுத்தறுக்கிறது பாரு இந்தப் பொண்ணு" என்று வைத்தியநாதன் அலுத்துக் கொண்டது கேட்டது.

ரகுபதி அதை மதிக்காமல் அவளருகில் போய், "என்ன மது?" என்றான்.

"எனக்கு ஒரு ஐடியா தோணுது."

"என்ன?"



www.writersujatha.com

"கார்ல ஏறிக்க ரகு. நாம ரெண்டு பேருமே ஓடிப் போயிரலாம். ரகு என்கூட யாருக்கும் சொல்லாம மெட்ராஸ் வந்துருவியா?"

"மெட்ராஸ்?"

"ஆமா, இப்பவே கிளம்பிடலாம். அங்கே போய் நானும் நீயும் கல்யாணம் பண்ணிக்கிடலாம்!"

ரகுபதிக்கு மின்சார அதிர்ச்சி போல அந்த வாக்கியங்கள் பட்டன. சரித்திரம் திரும்புகிறது. அதே கேள்வியைப் பாவநாசத்தில் ரகுபதி மதுமிதாவைக் கேட்டிருக்கிறான்.

"ராதா வேற பொண்ணுங்ககூட சுவாசம் வெச்சுக்கறப்ப நான் மட்டும் வேற ஆள்கூட சிநேகிதம் வெச்சுக்கக் கூடாதுன்னு சாஸ்திரமா, எதாவது?"

ரகு மௌனமாக இருந்தான்.

"சொல்லு ரகு. நாங்கள் மட்டும் ஏமாந்த ஜனங்களா? நீக்ரோ பொண்ணு, வெள்ளைக்காரப் பொண்ணுன்னு, தினத்துக்குத் தினம் நீ மாத்திக்கலாம். நான் பார்த்துக்கிட்டே இருக்கணுமா? ரகு, நீ என்னை காதலிச்சே, என்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பினே, வா ரகு. நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாம். பாவநாசத்தில பிரிஞ்சதிலே இருந்து இன்னிக்கு வரைக்கும் நடந்ததை ஒரு சொப்பனமா நினைச்சுக்கிட்டு, ரெண்டு பேருமே இன்னொஸன்ட்டா இருந்த அந்த நாள்களுக்குத் திரும்பிப் போகலாம். ரத்னா வேண்டாம். நான்தானே அவளை அறிமுகப்படுத்தி வெச்சேன். நானே சொல்றேன் வேண்டாம்! வா ரகு. ராதா மூஞ்சில கரியைப் பூசிட்டு ரெண்டு பேரும் இண்டியா போயிரலாம்!"

"மது, அது அவ்வளவு சுலபமில்லை!"

"ஏன்! ராதா அப்படித் துரோகம் பண்ணிட்டப்புறம் நாம நம்ம சிநேகிதத்தை தொடர்றதிலேயோ கல்யாணம் பண்ணிக்கிறதிலயோ எதும் தப்பு கிடையாது, ஒப்புத்துக்கறியா?"

"தப்பில்லைதான் மது. ஆனா சட்டப்படி நீ ராதாவுடைய மனைவி!"

"ராதாவைப் பத்திப் பேசாதே. அது ஒரு புழு..."

"ராதாவைப் பழிவாங்கணும்கிற ஒரே ஓர் எண்ணத்தோட இந்த மாதிரி செய்யணும்னு ஒருவிதமான 'கட்' ரியாக்ஷன் மாதிரி வெறுப்பினால், கோபத்தினால் விரும்பறே. இது கொஞ்சம் யோசிச்சு செய்ய வேண்டியது."

"போ ரகு! உனக்குத் தைரியமில்லை!"

"தைரியத்துக்குக் குறைச்சலில்லை மது! ஒரு காலத்தில் உனக்காகத் தற்கொலை பண்ணிக்கக்கூட தயாரா இருந்தேன்!"

"இப்ப என் மேல இஷ்டம் இல்லை. அப்படித் தானே?"

"நீ இன்னொருத்தன் மனைவி மது!"

மதுமிதா சட்டென்று தீர்மானித்தவள் போல "நான் போறேன்" என்றாள்.

"எங்க...?"

"எங்க போவேன்? என் ஹஸ்பண்டு கிட்டதான்... வேற விதி?"

"இரு மது."

"இருந்தா என்ன பிரயோசனம்? என்னை இண்டியா கூட்டிக்கிட்டுப் போய்க் கல்யாணம் பண்ணிப்பியா? அந்த ராட்சசன் கிட்ட இருந்து விடுதலை வாங்கித் தருவியா சொல்லு, இருக்கேன்!" என்றாள்.

"நீயே யோசிச்சுப் பாரு. அவ்வளவு ஏற்பாடு பண்ணிட்டு..."

"கான்ஸல் பண்ணிடச் சொல்லு."

"சேச்சே! அவங்க மனசு எவ்வளவு புண்படும்?"

"எதுக்கு மறைக்கிறே? இஷ்டம் இல்லை. அப்படித்தானே?"

"அப்படி இல்லை மது. தீர யோசிக்காம செய்யறதிலதான் இஷ்டமில்லை. லைஃப்ல சிக்கல்கள் எல்லாம் அத்தனை எளிதில் தீர்ந்து போறதில்ல மது..."

"ஓகே... ஓகே... இட்ஸ் ஓகே! நான் வரேன்" என்று காரின் சாவியைப் பொருத்தினாள்.

"என் நிலைமையை யோசிச்சுப் பாரு. எல்லா ஏற்பாடுகளையும் கலைச்சா அவங்க எவ்வளவு வருத்தப்படுவாங்க! எனக்கு இந்த மாதிரி ஒருமுறை ஆயிருக்கு. சொந்தமா அனுபவிச்சவன்! அதனாலதான் சொல்றேன். ரத்னா ரொம்ப வருத்தப்படுவா. ரத்னா கிட்ட எல்லாத்தையும் விவரமா சொல்லி விளக்க வேண்டியதுதான் நாகரிகம். அப்பிடிச் செய்யாம எல்லாத்தையும் கான்ஸல்னு சொல்லிட்டு உங்ககூட கிளம்பிர்றது. ரொம்ப தப்பு. இல்லையா? நீ உன் கணவன்கிட்ட திரும்பிப் போ. ரெண்டுநாள் கண்டுக்காமலே இரு. நான் வந்து எல்லாத்தையும் தீர்த்து வைக்கிறேன்."

"சரி இட்ஸ் ஓகே" என்று காரைக் கிளப்பினாள்.

"கோவிச்சுக்காத மது, இந்தச் சூழ்நிலையில."

"இஸ்ட் ஓகேன்னு சொல்லிட்டேனே! உன்னை நான் அந்த மாதிரி கேட்டிருக்கவேகூடாது. அதுக்கு எனக்கு உரிமை கிடையாதுதான். இருந்தாலும் ரகு, என்னை நீ ஏமாத்திட்டே!"

"நீ கூட என்னை ஏமாத்தின மது. ஞாபகம் வெச்சுக்க!"

"இட்ஸ் ஓகே!" அன்று அகலமான காரை முரட்டுத்தனமாகச் சுழற்றி ஒரு சீறு சீறி, ஏறக்குறைய பக்கவாட்டுச் சுவரில் இடிப்பது போலப் புறப்பட்டு, முதல் திருப்பத்தில் ஹாலிவுட் ஸ்டண்ட் படம் போலப் பக்கவாட்டில் தேய்த்துக் கொண்டே வேகம் பிடித்து சடுதியில் மறைந்தாள்.

ரகு புன்னகை பூத்தான். "கோபம்!"

"ஒழிஞ்சா" என்று வைத்தி அருகே வந்தார்.

ரத்னா கொஞ்சம் சிந்தனையுடன் அவள் போன புழுதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



www.writersujatha.com

"ஸாரி ஸார். உங்களுக்கெல்லாம் கொஞ்சம் கவலை ஏற்பட்டிருக்கும்!"

"ஆமாம்பா ஃபங்ஷனுக்கு இல்லாம உன்னைக் கூட்டிட்டுப் போயிருவாளோன்னு நினைச்சேன்."

"நான் அப்படிச் செய்ய மாட்டேன். என்னை நீங்க தப்பா எடை போட்டிருக்கிங்க..."

"என்ன செய்ய? அவள் ப்ராப்ளம் என்ன? ஹஸ்பண்டு ட்ரபிள்தானே?"

"ஆமாம்!"

"இது பாவம் பூச்சி! கல்யாணம் ஆறதுக்கு முந்தியே ராதாகிஷனுடைய பழக்கம் எங்களுக்கெல்லாம் தெரியும்... எந்தப் பொம்பளையும் விட்டு வைக்க மாட்டான்! என் டாட்டர்ஸ் மேல எல்லாம் கண்ணு. வயசு, ரேஸ் எதும் அவனுக்கு முக்கியமில்லை. அது ஒருமாதிரி ஹாபிட்! ஒரு மதுமிதாவால அவனைத் திருப்திப் படுத்த முடியுமா?"

அதைப்பத்தி அப்புறம் பேசிக்கலாம். ஃபங்ஷனைக் கவனிக்கலாம்" என்றான்.

"ராகுகாலம் முடியறதுக்கு இன்னும் அரைமணியிருக்கு. லெட்ஸ் வெயிட். ரத்னா. பேசிண்டு இரு. "நான் பாக்கிக் காரியத்தைப் பார்த்துட்டு வரேன்."

இருவரும் தனியாக இருந்தார்கள்.

"அடிச்சாப்பல வந்துட்டுப் போயிட்டா" என்றாள்.

"ம்..."

"என்னவாம்?"

"ராதா அவளை ஏமாத்தறதைக் கண்டுபிடிச்சுட்டா. ரொம்ப குழப்பத்தில இருக்கா."

"உங்களை என்ன கேட்டா?"

"இண்டியாவுக்கு அழைச்சுண்டு போயிடு. எங்க அப்பா அம்மாகிட்ட அழைச்சுண்டு போயிடு..."

"நீங்க என்ன சொன்னீங்க"

ரகு யோசித்தான்; தீர்மானித்தான். "ரத்னா நீயும் நானும் கல்யாணம் பண்ணிக்க நிச்சயம் ஆற இந்த சமயத்தில இரண்டு பேருக்குள் அபிப்ராய பேதமோ, சந்தேகமோ இருக்கக் கூடாது இல்லையா?"

"சொல்லுங்க..."

"உனக்கு தெரியுமில்லை. மதுவும் நானும் பாவநாசத்தில் கல்யாணம் பண்ணிக்க இருந்தது. நிச்சயதார்த்தம் வரைக்கும் வந்தது?"

"தெரியும்."

"ராதாவை அவளுடைய பெற்றோர்கள் தேர்ந்தெடுத்தாங்க. மதுமிதா வெகுளியான பொண்ணு. ரொம்ப இன்னொஸன்ட். அப்பா அம்மா அழுத்தமா வற்புறுத்த ராதாவைக்

கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சுட்டா... அமெரிக்கா ஆசை, பணம் எல்லாம அவளுடைய சொந்த ஜட்ஜ்மெண்ட் மறைச்சுருச்சுன்னு சொல்லலாம். அவளை நான் காதலிச்சேன் நிராகரிக்கப்பட்டது, தெரிஞ்சதும் என்னை ரொம்ப பாதிச்சுருச்சு, அதனால தற்கொலை பண்ணிக்க முயற்சி செய்தேன்."

"இஸ் இட்!" என்றாள் ஆச்சரியத்துடன்.

"அப்பாதான் ஒரு வழியா என்னை ஸ்திரப்படுத்தி எனக்கு லைப்ல ஓர் பர்ப்பஸைக் கொடுக்க பிடிவாதமா அமெரிக்காவுக்கு அப்ளை பண்ணச் சொல்லி... அதுக்கப்புறம் தான் உனக்குத் தெரியும்... இங்க வந்ததும் நானும் மதுவும் ஒரு தடவை ஆர்லண்டோ போயிருந்தோம். மது, தன் கணவன் மேல உயிரா இருந்ததைப் பார்த்து அவகிட்ட எனக்கு எந்தவிதமான துரோக எண்ணமும் எழலை. ஒரு தடவை ராதா மற்ற பெண்களோடு சிநேகம் வச்சிருக்கிறதை நான் கண்ணால பார்த்தேன். அவகிட்ட சொன்னேன். சொல்லிக்கூட அவ நம்பலை. அத்தனை நம்பிக்கை! இப்ப அவளா கணவன் செய்யற துரோகத்தைக் கண்டு பிடிச்சிருக்கா. இவளை ஊருக்கு அனுப்பிச்சுட்டு பெட்ரூம்ல ஒரு கறுப்புப் பெண்ணோட இருக்கிறதைப் பார்த்துட்டா... மனசு நொந்துபோய் என்கிட்ட அட்வைஸ் கேக்கறதுக்கு வந்தா. இந்த துரோகம் அவளை ரொம்ப பாதிச்சுருச்சு. அத்தனை விசுவாசமா இருந்தோம். கணவன் இப்படி ஏமாத்தறான். 'டேக் இட் ஈஸி, இதெல்லாம் சகஜம்ங்'கிறான். என்னதான் அமெரிக்கா நாகரிகமா இருந்தாலும், மது இன்னும் ஒரு தமிழ்நாட்டுப் பெண்ணுதான். இன்னும் ஒரு மனைவிதான். எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சுட்டுத் திரும்பிப் போயிரணும்னு முதல் ரியாக்ஷன் அடுத்த ரியாக்ஷன்தான் என்னை ஆச்சரியப்படுத்திருச்சு."

"சொல்லுங்க."

"என்னைக் காதலிச்சியே... இப்ப நாம் ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாம் வா, இண்டியா போயிரலாம்'னா. இதை நான் உன்கிட்ட சொல்லித்தான் ஆகணும்!"

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"இட்ஸ் நாட் பாஸிபிள்! அவ இன்னொருத்தன் மனைவி. சட்டப்படி தப்பு. அது மட்டும் இல்லாம..."

"மழுப்பாதிங்க. உங்களை நேரா ஒரு கேள்வி கேக்கறேன். சட்டம் எல்லாம் ரெண்டாம் பட்சம்! மதுவைக் கல்யாணம் பண்ணிக்க உங்களுக்குத் தைரியம் இருக்கா?"

"தைரியம்னு இல்லை... இது..."

"தைரியம் இல்லை! ஏன்? உங்களுக்கு அவ இளம் பெண்ணா, கன்னியா வேணும்! மற்றொருத்தன் மனைவியா, தொட்ட மனைவியா வேண்டாம்! அதானே காரணம்?"

"என்ன ரத்னா சொல்றே?"

"இத பாருங்க. ஆண்பிள்ளைங்க எல்லாருமே ஒரு மாதிரிதான்."

"எப்படி ரத்னா? உங்களுக்கெல்லாம் வாக்குக் கொடுத்துட்டு..."

"இதெல்லாம் சால்ஜாப்பு. நீங்க எனக்கு வாக்குக் கொடுத்ததைக் காரணமா வெச்சுக்காட்டி உங்களுடைய புரட்சிகரமான காரியத்தை ரத்து செய்ய வேண்டாம். இப்ப நம்ம ரெண்டு பேருக்குள்ள என்ன ஆயிடுத்து? நிச்சயதார்த்தம் இன்னும் நடந்தபாடில்லை. அப்பா ஏதோ சென்டிமெண்டுக்காகப் பண்ற வெறும் சடங்கு இது!



www.writersujatha.com

இதனால உங்களை சங்கிலி போட்டு எங்க குடும்பத்தில கட்டிப் போட்டுட்டதா நினைச்சுக்க வேண்டாம். ரகு நான் உங்களைப் போல இல்லை. நிச்சயதார்த்தத்தில் ஏமாந்தா தற்கொலை பண்ணிக்கற அளவுக்கு நான் பைத்தியம் இல்லை. எத்தனையோ சத்தியம் பண்றோம்... எத்தனையோ மீறறோம். உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கறதால நீங்க அந்தப் பெண்ணை இழந்த சந்தர்ப்பத்தை மறுபடி மறுபடி நினைச்சு ஏங்க மாட்டிங்கன்னு என்ன நிச்சயம்? வாழ்க்கை பூரா மதுமிதாவின் நிழலைக்கூட வெச்சுக்க விரும்பலை. இத பாருங்க... இந்தக் கணம் உங்களது. உங்களுக்கு எங்க ஃபாமிலியைப் பத்தியோ, இந்த தற்காலிக தர்ம சங்கடத்தைப் பத்தியோ, எதும் குற்ற உணர்ச்சி வேண்டாம். இது உங்க தீர்மானம். உங்களுக்கு அந்தப் பெண்ணைக் காப்பாத்த இஷ்டம் இருந்தா தாராளமா செய்யுங்க! அப்படிக் காப்பாத்தறதால மதுமிதாவும் நீங்களும் நடந்ததை எல்லாம் மறந்து சந்தோஷமா இருப்பிங்கன்னு உங்களுக்குத் தீர்மானமா தெரிஞ்சா, கோ அஹெட்! என்னைக் காரணமா வெச்சுக்கிட்டு உங்க தயக்கத்துக்கு சப்பைக் கட்டு கட்டாதிங்க, நீங்க நிசமாவே அவகிட்ட பிரியமுள்ளவரா இருந்தா அவளை முழுசா, வாட்ச்ஸ் அண்ட் ஆல், ஏத்துப்பிங்க. உடனே என்கிட்ட வந்து "ரத்னா, ஸாரி இட்ஸ் ஆஃப் நான் புரட்சி ஒண்ணு பண்ணணும். அதனால உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாத நிலையில இருக்கேன்'னு சொல்லியிருப்பீங்க. அதை விட்டுவிட்டு, நிச்சயம் ஆயிடுத்து, உங்களை எல்லாம் ஏமாத்த விரும்பலைன்னு சால்ஜாப்பு சொல்லாதிங்க. எதையாவது ஒண்ணைத் தீர்மானிச்சுருங்க" என்றாள்.

ரகு சற்று நேரம் பிரமித்துப் போய் நின்றான். அமெரிக்கச் சூழ்நிலையில் வளர்ந்த இந்தப் பெண் நிச்சயம் வேறு ஜாதி! வலிக்க வலிக்க உண்மை பேசுகிறாள்! இவள் சொல்வதுபோல தைரியம் இல்லை ரகுவுக்கு! அப்பா என்ன சொல்லுவார்? அப்பாவை எதற்குக் கேட்க வேண்டும்.... இல்லை இல்லை...

அப்பா அங்கே திருநெல்வேலி புரட்சி செய்தார்! ஜெயந்தியை அவள் கணவன் கொடுமைப்படுத்துகிறான் என்று தன்னிடம் ஏற்றுக் கொண்டார்! அவர் திருநெல்வேலியில் செய்வதைத்தான் நான் அமெரிக்காவில் செய்யப் போகிறேன் இது ஒன்றும் புதிதல்ல!

நான் வருகிறேன் மது! நாம் காதலித்தோம். விதியால் நாம் பிரிந்தோம். இடைப்பட்ட நாள்களில் இரண்டு பேரும் வேறு வேஷம் போட்டுக்கொண்டே வேறு பாத்திரங்களில் இருந்தோம். இப்போது மறுபடி சந்திப்போம்.

சந்தித்து இடைப்பட்ட நாள்களை ஒரே இரவில் இருட்டாக மறந்து...

சே! அவள் கேட்டபோதே "நான் தயார் மது!" என்று சொல்லியிருக்க வேண்டும். அப்பாவாக இருந்தால் சொல்லியிருப்பார். அப்பா இதை நிச்சயம் அங்கீகரிப்பார்!

"ரத்னா, இஃப் யூ டோன்ட் மைண்ட் நான் அவளைப் போய்..."

"போங்க" என்றாள் ரத்னா.

## 29

ரகுபதி ரத்னாவை சற்று நேரம் ஆச்சரியத்துடன் பார்த்தான். "ரத்னா ஐம் ஸாரி. எல்லாரையும் ரொம்ப குழப்பத்தில..."



www.writersujatha.com

"ஸாரியெல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம் ரகு! போங்க" என்றாள். அவள் கண்களில் நீர் தென்பட்டது."

"உங்க அப்பாகிட்டச் சொல்லி."

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க முதல்ல கிளம்பிப் போங்க. அப்புறம் வந்து சொல்லுங்க, என்ன ஆச்சுன்னு. ஆனா மறுபடி மனசை மாத்திக்காதிங்க."

"இந்த நிலையில் விட்டுட்டுப் போறது எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு."

"பரவாயில்லை. சரியாப் போயிடும். எந்தக் காரியத்திலும் யாரையாவது மனம் புண்படுத்தித்தான் ஆகணும். கொஞ்சமேனும் யாராவது நொந்து போய்த்தான் ஆகணும். எல்லாருக்கும் எல்லா விதத்திலும் சந்தோஷம் கொடுக்கிற செய்கைன்னு உலகத்தில ஒண்ணுமே கிடையாது. நீங்க கிளம்புங்க... நான் அப்பாகிட்டச் சொல்லிக்கிறேன்."

ரகுபதிக்கு வைத்தியநாதனிடம் சொல்லாமல் கிளம்புவதில் இஷ்டமில்லை. அவரே வந்து கொண்டிருந்தார்.

"என்ன, எல்லாம் பேசியாச்சா? ரெடியா?"

"அப்பா நிச்சயதார்த்தம் வேண்டாம்ப்பா."

"என்னது" என்றார் பதறிப் போய்.

"ரகுபதிக்கு மனசு சரியில்லை. அவரை இப்பத் தொந்தரவு செய்து, கட்டாயமா நிச்சயதார்த்தத்துக்கு சம்மதிக்க வைக்கிறது நல்லதில்லை."

"ஏன் என்ன ஆச்சு திடீர்னு...."

"மதுமிதாவை அவர் காப்பாத்த விரும்பறார்!"

"காப்பாத்தன்னா...?"

"அவ கணவன்கிட்டருந்து காப்பாத்த விரும்பறார். அந்த விவகாரத்தைத் தீர்த்து வைக்காம இவரால வேற எதிலயும் முழுமனசா ஈடுபட முடியாது. அந்தப் பொண்ணு காப்பாற்றப்பட வேண்டியவள்தான்."

"காப்பாத்தறதுன்னா... என்னம்மா சொல்றே? அவளைக் கூட்டி வெச்சுக்கிறதா!"

"கூட்டி வெச்சுக்கறது. முடிஞ்சா அவளைக் கல்யாணம் செய்துக்கறது!"

"மை காட்! வாட்ஸ் இட் ரகு?"

"ஏம்பா இது அமெரிக்கா! இதெல்லாம் இங்க சகஜம் இல்லையா?"

"தேசம்தான் அமெரிக்காவே தவிர, ஜனங்க அமெரிக்கன் இல்லையே! என்ன ரகு?"

"ஸார்! நான் ஒருவித குழப்ப நிலையில இருக்கேன். அந்தப் பொண்ணு ரொம்ப அறியாத பொண்ணு. கணவன் அநியாயமா அவளுக்குத் துரோகம் பண்றான். அவ என்னைப் பளிச்சின்னு ஒரு கேள்வி கேட்டா; என் கணவனை விட்டுட்டு வர்றேன்; என்னைக் கல்யாணம் பண்ணிப்பியா'ன்னு...'

"சரின்னுட்டியா...?"

"அப்பா இதில என்ன தப்பு! ராதா அவனை ஏமாத்தலாம் அவ கண் முன்னாலேயே பரஸ்திரீகளோட சிநேகம் வெச்சுக்கலாம். மதுவுக்கு அந்த மாதிரி அசிங்கமான கணவனை நிராகரிக்க உரிமையில்லையா? இதில் ரகு தயாரா இருக்கிறப்ப, கல்யாணம் ஆன பொண்ணா இருந்தாலும் மறுவாழ்வு தர இவர் தயாரா இருக்கும்போது அந்த மாதிரி ஒரு நல்ல காரியத்தில நாம் ஏன் குறுக்க நிக்கணும்? வேண்டாம்ப்பா.... இவரை நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா ரெண்டு பேரும் மிஸரபிளா இருப்போம். இவர் மதுமிதாவைக் காதலிச்சு தற்கொலை வரைக்கும் வந்தவர். நான் உன் கணவனுக்குத் தாழ்ந்தவனில்லைன்னு நிரூபிக்கறதுக்குன்னே அமெரிக்கா வந்தவர். என்னதான் அவ பேர்ல இப்ப பாசம் இல்லைன்னு சொன்னாலும் என்னால சந்தேகப்படாம இருக்க முடியாது. இவரை விட்டுரலாம்பா! எனக்கு ஒண்ணும் கல்யாணத்துக்கு அவசரம் இல்லை."

"என்னய்யா இது. இதை முன்னமே சொல்லியிருக்கக் கூடாதோ?"

"அவரைக் குறை சொல்லாதிங்கப்பா! நமக்கு ஒரு மாதிரி எல்லாம் தெரிஞ்ச விஷயம்தான்."

"ச்சே, இப்ப எல்லாரையும் கூட்டி வெச்சுக்கிட்டு..."

"என்ன போச்சு? சாமி கும்பிட்டுட்டு கிளம்பிட்டாப் போச்சு. அமெரிக்காவில இதையெல்லாம் மழுப்பறது ரொம்ப சுலபம். அவசரமா ப்ரெஸிடண்ட் கூப்ட்டு அனுப்பிச்சிருக்கான்னு சொல்லிருங்களேன்! ரகு. உங்களை நாங்க எந்த விதத்திலும் கட்டாயப்படுத்த விரும்பலை நீங்க போகலாம்."

"ரத்னா, உனக்கு எந்த விதத்தில நன்றியா என்ன சொல்றதுன்னு தெரியலை. ரத்னா யூ ஆர் கிரேட்!"

"இதனால அந்தப் பொண்ணுக்கு எதாவது நிம்மதி கிடைச்சா சரி! ஐ கன் ஸிம்பத்தைஸ் வித் ஹெர்?"

"ரத்னா, நான் வரேன். ஸார் நான் வரேன். உங்க மனம் புண்பட நடந்ததற்கும் பிராயச்சித்தம் மாதிரி ஏதாவது செய்துட்டுத்தான் நான் அமெரிக்காவை விட்டுப் போகணும்."

வைத்தியநாதன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க ரகுபதி மெல்ல இறங்கி பாதையில் சரிந்து அந்தக் கோயிலை விட்டு விலகினான்.

கரடு முரடாக இருந்த பாதையில் சற்று அவசரமாக இறங்கினான். எப்படி மறுபடி நியூயார்க் திரும்பப் போகிறோம் என்று மலைப்பாக இருந்தது. காரில் வந்தபோது எல்லாமே சுலபம்தான். இப்போது ஹைவேயில் நடக்கக்கூட முடியாது. பிட்ஸ்பார்க் விமான நிலையத்துக்கு எப்படியாவது போய்ச் சேர வேண்டும். விமான நிலையம் எந்த திசையில் இருக்கிறது என்று கூடத் தெரியாது. பேசாமல் அவர்களிடம் திரும்பிப் போய், நியூயார்க் போகும்போது என்னையும் அழைத்துக்கொண்டு போங்கள் என்று கேட்கலாம். பிராயணம் முழுவதும் விரோத மௌனத்துடன் வரவேண்டும். வேண்டாம். யாராவது கைகாட்டினால் நிறுத்துகிறார்களா பார்க்கலாம்...

"விஷ் விஷ்" என்று கார்கள் தத்தமது ஏர்கண்டிஷன் சுகத்தில் பறந்து கொண்டிருக்க, ஒருவரும் நிறுத்தவில்லை. நியூயார்க் போய் என்ன செய்யப் போகிறான்? அதுவும் தெளிவாகத் தெரியவில்லை. மதுமிதா போய்ச் சேருவதற்கு முன்னாலேயே

போய்விடலாம். அவள் வீட்டுக்குப் போய் வாசலில் காத்திருந்து, இல்லை, தெருமுனையில் காத்திருந்து....

ஒரு குட்டி கார் சற்று தூரம் போய் பிரேக் போட்டு நின்றது. ரகுபதிக்கு மனசுக்குள் ஆனந்தம் பிரவகித்தது. காரை நோக்கி ஓடினான். கதவு திறந்து ஒரு இந்திய முகம், "ஹாய்! வேர்ட்டு" என்றது.

"கன் யூ டிராப் மி அட் தி ஏர்போர்ட்?"

"ஐம் கோயிங் டவுன்டவுன்! ஐ'ல் டிராப் யூ ஸம் ப்ளேஸ் வேர் யூ கன் கெட் எ பஸ்."

"தாங்க்ஸ்!" என்றான். உள்ளே ஏறிக் கொண்டான். பின் ஸீட்டில் ஒரு நாய் உட்கார்ந்திருந்தது. சின்னக் கார் அது.

"மை நேம் இஸ் தேசாய். ஐம் இன் பிஸினஸ்."

"ரகுபதி, ஸ்டூடண்ட் நியூயார்க்" என்றான்.

"இந்தியர்களுக்குத்தான் நிறுத்துவது என் வழக்கம். மற்றவர்களை நம்ப முடியாது. நான் என் மாணவ தினங்களில் ரொம்ப இந்த மாதிரி ஹிட்ச்ஹைக் பண்ணியிருக்கிறேன். இந்தியர்களுக்கு மாத்திரம் நிறுத்துவேன். கல்யாணம் ஆகிவிட்டதா?"

"இல்லை."

"ஊருக்குப் போய் கல்யாணம் செய்து கொள். இந்தியப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள். அமெரிக்கப் பெண் வேண்டாம்" என்றான். பஸ் ஸ்டாண்டு போவதற்குள் தன் சரித்திரத்தையே விரித்து விட்டான். வெள்ளைக்காரியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு மூணு வருஷத்துக்குமேல் தாக்குப் பிடிக்க முடியவில்லையாம். அவர்கள் மனப்பாங்கே வேறு, குணம் வேறு, மதம் வேறு... ஏன் அவர்கள் வாசனையே வேறு! டிவேர்ஸ் என்பது அமெரிக்காவில் ரொம்ப செலவாகும் காரியம், வீட்டை விற்று ஒற்றை ரூம் அப்பார்ட்மெண்ட்டுக்கு மாறி, காரை விற்று சின்ன காரை வாங்கிக் கொண்டு "சில்வெஸ்டரும் நானும்தான் பாக்கி..."

"சில்வெஸ்டர்!" என்று பெயர் சொன்னதும் நாய் ஒருமுறை சந்தோஷமாகக் குரைத்தது.

கார் மூட்டைப் பூச்சிபோல் இருந்ததால் சந்துக்குச் சந்து மாறி மாறிக்கொண்டே சென்றான். மற்ற கார்காரர்கள் அவனை ஹாரனால் திட்டினார்கள். "இவர்களுக்கெல்லாம் விவஸ்தை கிடையாது. எப்போது பார்த்தாலும் பணம் பணம் பணம்தான். பணத்தைத் தவிர மற்ற எதும் முக்கியமில்லை. பிரதர்! அமெரிக்காவில் பணம் நிறைய பண்ணு. ஆனால் இங்கே கல்யாணம் பண்ணிக்காதே; வீடு வாங்காதே; பிள்ளை பெற்றுக் கொள்ளாதே; எந்தவிதமான ரத்த சம்பந்தமும் வைத்துக் கொள்ளாதே! உன் ஊர் எது!"

"என் அப்பா இருக்கும் ஊர் மணிமுத்தாறு."

"மணிமுத்தாறுக்குப் போய் விடு. தம் இந்தியாவைப் போல இல்லை இந்த தேசம். பெற்ற தாயை விற்கும் தேசம்". சில்வெஸ்டர் ஆமோதித்தது.

"உன்னை எனக்குப் பிடித்துப் போய்விட்டது. ஏர்ப்போர்ட்டிலேயே கொண்டு விட்டுடுறேன். ஜின் இருக்கு. சாப்பிடு!"

ஜின் என்றதும் மதுமிதாவின் ஞாபகம் வந்தது.

பாவநாசத்தில் அவன் சொன்னது வார்த்தை வார்த்தையாக ஞாபகத்தில் ததும்பியது. 'எனக்கு உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு. நீ நேத்திக்கு அழுதியாமே? ஏன் அழுதே? நான் கிடைக்கலைன்னா? ஹௌ ஸ்வீட்! ரகு! எனக்குப் புரியலை செக்ஸ் பத்தி நிறைய நாவல்கள் படிச்சாச்சு. ஆனா, இன்னும் அது என்னன்னு சரியாத் தெரியாது! லவ்னாலும் என்னன்னு சரியாத் தெரியாது. உனக்கு லெட்டர் எல்லாம் அம்மாதான் எழுதச் சொன்னாங்க உன்னைத் தொட்டது, கிஸ் பண்ணது எல்லாம் தப்பா? இருக்கலாம். எனக்கு அது தப்பாத் தெரியலை. பூனைக் குட்டியைக் கிஸ் பண்றது இல்லையா? எனக்கு எல்லாமே கன்ஃப்யூஸ்டாதான் இருக்கு. அமெரிக்கா பார்க்கணும் போல இருக்கு. ஆனா பத்தொம்பது வயசில கல்யாணம் செய்துக்கறது கொஞ்சம் எர்ளி இல்லை?"

"உனக்கு யாரைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம்? அவனையா, என்னையா?"

"சரியாத் தெரியலையே ரகு!"

"என்ன யோசனை? உன்னுடைய கர்ள் ஃப்ரெண்டைப் பற்றியா."

ரகு சற்றுத் தயங்கி, "ஆம்!" என்றான்.

"அமெரிக்கன்..."

"இல்லை, இண்டியன்?"

"பிழைத்தாய், புத்திசாலி! ஊரில் இருக்கிறாளா?"

"இல்லை, இங்கே நியூயார்க்கில்!"

"சபாஷ்! கல்யாணம் செய்து கொண்டு ரெண்டு பேரும் சேர்ந்து இந்த தேசத்தைச் சூறையாடுங்கள்! வாழ்த்துங்கள்! பணம் படைத்த முட்டாள்கள் ரத்தம் உறிஞ்சுவதுதான் இந்த யுகத்துக்கு ஏற்றது. இதோ ஏர்போர்ட்! இதோ என் கார்டு! கல்யாணத்துக்கு என்னை கூப்பிடு, நிச்சயம் வருகிறேன்."

"நிச்சயம் கூப்பிடுகிறேன்! பை" என்று கையாட்டினான். 'என் கர்ள் ஃப்ரெண்டு ஏற்கெனவே கல்யாணம் ஆனவள். அதுதான் ஒரே ஒரு சிக்கல்' என்று சொல்ல விரும்பினான். அதற்குள் தேசாய் கிளம்பிவிட்டான். வீக் எண்டாக இருந்ததால் நியூயார்க் ஃப்ளைட் கொஞ்சம் கூட்டமாகத்தான் இருந்தது. காத்திருந்ததில் கொட்டுவாயில் டிக்கெட்டு கிடைத்தது. ட்ராவலர்ஸ் செக் கொடுத்துவிட்டு ஏறி உட்கார்ந்து கொண்டான். அவனருகில் உட்கார்ந்திருந்த வெள்ளைக்காரர் போஸ்டன் பிராமணர் போல இருந்தார். கையில் 'வால்ஸ்ட்ரீ ஜர்னல் வைத்திருந்து ரகுபதியை வெறுப்புடன் பார்த்தார். இவர்கள் எல்லாருமே பாசாங்குக்காரர்கள் தேசாய் சொல்வது சரிதான். இவர்களுடைய 'ஹாய் **ஹூ**ய்" எல்லாம் உதட்டளவில்தான். பேசாமல் மதுமிதாவை அழைத்துக் கொண்டு அடுத்த ஃப்ளைட்டில் ஊருக்குப் போய்...

கோபிநாத் என்ன சொல்வார்? அப்பா என்ன சொல்வார்? ரகுபதிக்கு திகீர் என்றது?

"அப்பா நீங்கள் புரட்சி பண்ணவில்லையா?"

"ஜெயந்தி ஆதரவற்ற பெண். இந்தப் பெண்ணின் அப்பா அம்மாவைக் கலந்தாலோசிக்காமல் நீ எப்படி இவளை அழைத்து கொண்டு வருவாய்? நீ செய்வது தப்பு."

முதல் காரியமாக டெலிபோனில் கோபிநாத்துடன் பேச வேண்டும். அழைத்து வா என்றுதான் சொல்வார். அழைத்துச் சென்று மெல்ல மெல்ல...

இந்தியாவில் யாரும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கல்லானாலும் கணவர்களின் ஊர் அது. பதி விரதா தர்மத்தின் ஆதிக்கத்தில் நெருப்பில் எரிவார்களே! கணவர்களைப் பரத்தையர் பால் தாங்கிச் செல்வார்கள். அடித்தால் வாங்கிக் கொண்டு விதியை நொந்து கொள்வார்கள். இல்லை. இல்லை... இந்தியா மாறிவிட்டது. அங்கங்கே எதிர்ப்புக் குரல்கள் தெரிவிக்கத் தொடங்கி விட்டார்கள்.

பார்லிமெண்டில் பெண்ணுரிமைகளைப் பேசுகிறார்கள். ஊர்வலங்கள் எடுக்கிறார்கள்...

ஹிந்துவில் ஒரு கடிதம் எழுதலாம். 'டியர் ஸார், நான் செய்தது சரியா?" என்று கடைசி வாக்கியம்! ரகுபதி தன் டிக்கெட் நம்பரைக் கூட்டி ஒன்பது வந்தால் தான் செய்யப்போவது சரி என்று எண்ணிக் கொண்டான்.

ஏ 6336107ஏ என்றால் என்ன? ஒன்றுதானே... அதையும் கூட்டிக் கொண்டால் ஒன்பது. விதிகளைத் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் சமயம் வந்து விட்டது.

நியூயார்க்கில் இறங்கினபோது மாலை மங்கத் துவங்கி விட்டது. இன்னும் வந்து சேர்ந்திருக்க மாட்டாள். முதல் காரியமாக அவள் வீட்டுக்குப் போகலாம். வீட்டில் ராதா இருந்தால்...? இருக்கமாட்டான். பெண்டாட்டி இல்லாத சந்தர்ப்பத்தை நழுவ விடுபவனா? டேக் இட் ஈஸி!

நியூயார்க்கின் வீதிகளில் வெளிச்சப் புழுக்கள் போல கார்கள் நெளிந்து கொண்டிருக்க, போலீஸ் கார் ஒன்று ஆம்புலன்ஸ் தொடர, ஊளையிட்டுக் கொண்டே செல்ல, மற்ற கார்கள் பிரமித்துப் போய் வழிவிட, பட்ரோல் கார்கள் வென்ச்ச விர்ராக அவன் பஸ்ஸைக் கடந்து சென்றன. நதியைத் தாண்டி, சிம்னிகள் கரும்புகையை உமிழ்ந்து கொண்டிருக்க, நதியில் சோம்பேறித்தனமாக ஒரு குட்டிக் கப்பல் பெரிய கப்பலை இழுத்துக் கொண்டு நகர்ந்து கொண்டிருந்தது. சுதந்திர தேவியின் முகவெளிச்சமும் தெரிந்தது. இடப் பக்கம் முகம் பூரா வைர ஊசிகளுடன் மன்ஹட்டன்.

ஸப்வே பிடித்து பஸ் பிடித்து அவர்கள் வீட்டுக்குப் போகலாம். ராதா நிச்சயம் இருக்க மாட்டான். காத்திருக்கலாம். எங்கே காத்திருப்பது? வீட்டு வாசலிலா? இல்லை தெருமுனையிலா? ஏதாவது சினிமா பார்த்து விட்டு மூன்று மணிநேரம் கழித்துப் போகலாமா? வேண்டாம் இப்பொழுதே போய்க் காத்திருக்கலாம். மதுமிதா காரில் வரும்போது அந்தக் கணத்தைத் தவற விடவிரும்பவில்லை.

"ஹலோ... மது!"

"ரகு, என்னது? அதுக்குள்ள எப்படித் திரும்பி வந்து விட்ட?"

"வந்துட்டன் பாரு. உனக்கு முந்தி! மது நீ சொன்னதை யோசிச்சுப் பார்த்தேன். உன்னை ஏத்துக்க எனக்கு சம்மதம் தான். அதை சொல்லத்தான் ஓடோடி வந்திருக்கேன் மது. மது, எனக்கு எதும் முக்கியமில்லை. உனக்கு எப்படியாவது சந்தோஷமும் மறுவாழ்வும் அளிக்கிறதுதான் முக்கியம். அதுக்காகத்தான் ப்ளேன் புடிச்சு ஓடி வந்துட்டேன் பாரு."

மதுமிதாவின் வீட்டிற்குச் சென்றபோது உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. டெலிவிஷன் சலனம் தெரிந்தது. யாரோ இருக்கிறார்கள். மது கிளம்பி வந்துவிட்டாளா? மணிப் பொத்தானை அழுத்தினாள். சற்று நேரம் கழித்து, "ஹூ இஸ் இட்?" என்று குரல் கதவின் பிளவில் கேட்டது.

"ஐம் ரகு. மதுஸ் ஃப்ரெண்ட்!"

"தே ஆர் நாட் ஹோம்."

"ஐ நோ! ஐ மெட் ஹர் இன் கிட்ஸ் பர்க். ஐம் மதுஸ் ஃப்ரெண்ட், கன் ஐ வெய்ட் டில் ஷி ல் ஹோம்?"

கதவு திறந்து ஒரு பயந்த முகம் எட்டிப் பார்த்தது. 'ஓ! ஐ்வ் ஸீ ன் யூ" என்றாள். அந்த யூகோஸ்லாவியப் பெண் சில தினங்கள் வந்து வீட்டு வேலை செய்பவள்.

"கம் இன் அண்ட் ஸிட்டவுன். ஐ ஹாவ் டு பி கேர் ஃபுல், யூ நோ?"

"வேர்ஸ் ராதா?"

"ஹி ஸெட் ஹி வோண்ட் பி ஹோம் டில் லேட் இன் தி நைட்."

சௌகரியம்தான் என்று மேஜையிலிருந்த பத்திரிகையை எடுத்து வைத்துக் கொண்டான்.

"லைக் ஸைம் காஃபி?"

"ஒய் நாட்?"

டெலிவிஷனிலிருந்து கண் மாறாமல் விலகி அவள் காபி போடச் சென்றாள். ரகு சுதாரித்து கொண்டான்.

அலமாரியில் அழகான வண்ணத்தில் ராதாவும் மதுவும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருந்தனர். ஒரு கணம் ராதா இடம் பெயர்ந்தான்.

மது திரும்பி வருகிற நேரம்தான்...

டெலிபோன் ஒலித்தது.

## 30

டெலிபோன் அமெரிக்கத்தனமாக கிணுகிணு என்று தொடர்ந்து ஒலிக்க ரகுபதி அதைத் தயக்கத்துடன் எடுத்துக் கேட்டான்.

"இஸ் தட் தி ரெஸிடன்ஸ் ஆஃப் ராட்கிஷன்? என்றது ஓர் அதிகாரக் குரல்.

"யா...!"

"இஸ் இட் மிஸ்டர் ராட்கிஷன்?"

"நோ... ஹி அஸ் நாட் ஹோம்? ஹூ இஸ் காலிங்?"

"லூட்டனண்ட் மக்லாஸ்கி; நியூயார்க் ஸ்டேட் போலீஸ்!"

"போலீஸ்! இஸ் எனிதிங் ராங்?"

"லுக்! யூ காட்ட கேட் டவுன் ஹியர்!"

"வேர்...?"

"மிட்டவுன் ப்ரிஸிங்க்ட் இன் வெஸ்ட் தர்ட்டி ப்ஃப்த் ஸ்ட்ரீட்."

"இஸ் எனிதிங் ராங் லூட்டனண்ட்?"

"கம்! ஐ'ல் டேக் யூ டு தி சீஃப் மெடிக்கல் எக்ஸாமினர்!"

ரகுபதிக்குப் பதற்றமாக இருந்தது. புரியவில்லை போலீஸ்... ப்ரிஸிங்க்ட் மெடிக்கல் எக்ஸாமினர்... இதெல்லாம் என்ன? ஒரு வேளை... "லூட்டனண்ட் இஸ் எ கர்ள்?"

"யா, மது மடு, மடு..."

"மதுமிதா...!"

"யா?"

"இஸ் ஷி ஆல்ரைட்?"

"நோ! கம் டவுன் ஹியர், ஐ'ல் ஷோ யா!"

"டெலிபோன் சட்டென்று வைக்கப்பட்டது. என்ன செய்வதென்று தெளிவாகத் தெரியவில்லை.

"எங்கே இந்த ராதா? அவனுக்குத் தகவல் சொல்ல வேண்டாமா? பணிப்பெண்ணைக் கேட்டதில் அவளுக்குத் தெரியவில்லை. ராதாவின் ஆபீஸ் நம்பரைத் தேடி அதைச் சுழற்றியதில் "திஸ் இஸ் எரிக்கார்ட்ட சர்வீஸ்! 'பீப்' கேட்டதும் ராதாகிஷனுக்கு உங்கள் செய்தியைத் தெரிவிக்கவும்...." என்றது ஓர் இயந்திரக்குரல்.

ராதா! எங்கிருந்தாலும் உடனே போலீஸ் மிட்டவுன் ப்ரிஸிங்க்ட் அல்லது சீஃப் மெடிக்கல் எக்ஸாமினருடன் தொடர்பு கொள்ளவும். அவசரம்..." என்று சொல்லிவிட்டு வெளியே வந்து தெருமுனையில் டாக்ஸி தெரிய அதை நிறுத்தி உள்ளே பாய்ந்தான்.

அந்த அதிகாரி பேப்பர் கப்பில் காப்பி உறிஞ்சிக் கொண்டிருந்தார். எதிரே காலண்டரில் ஒரு தேதி சிவப்பில் வட்டமிடப்பட்டிருந்தது. அருகே ஒரு சிறிய அடுப்பில் கண்ணாடி கப்புக்குள் மேலும் காபி தவித்துக் கொண்டிருந்தது. ஜன்னல்களில் பெகோனியா அஸாலியா மலர்கள் சின்னச் சின்ன தொட்டிகளில் நீருக்கு ஏங்கிக் கொண்டிருந்தன. ஆபீஸ் முழுவதும் களேபரமாக இருந்தது. மேசை மேல் ஏகப்பட்ட டிஸ்யூ ஸ்லைடுகள், ஃபார்மலினில் மிதந்து கொண்டிருக்கும் மூளை! ரகுபதிக்கு சுற்றி நிகழ்ந்தது எதுவுமே புரியவில்லை. போலீஸ் நிலையம் சென்றது. மக்லாஸ்கி என்பவரைச் சந்தித்தது, "ஆர் யூ தி ஹஸ்பண்ட்?" அவர் அவனை பட்ரோல் காரில் உடனே வேறு இடத்துக்கு அழைத்துச் சென்றது. இதெல்லாம் எதற்காக, ஆஸ்பத்திரியா இது? மதுவுக்கு உடம்பு சரியில்லையா? ஏதாவது விபத்தா? எது கேட்டாலும் "யூல் ஸீ?"

"அப் ஆன் தி த்ருவே! எ மைல் ஸௌ ஆஃப் எக்ஸிட் இன் புஷஸ்! எபவுட் தர்ட்டி ஃபீட் ஃப்ரம் தி ரோட்! வாட் ராஸ் ஷி டுயிங் தேர்?"

"பார்டன்!"

"திஸ் கர்ள் மது மது..."

"மதுமிதா! அவளுக்கு என்ன ஆயிற்று? சொல்லுங்களேன்... ஏன் எல்லாரும் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்?"

"யூல் ஸீ!"

போலீஸ் அதிகாரி அவன்பால் ஒரு காபி கோப்பையை நீட்ட, "நோ தாங்க்ஸ்" என்றான்.

மருத்துவ அதிகாரி தன் சுருட்டுச் சாம்பலை உதிர்த்து விட்டு "வா" என்றார்.

ரகுபதியின் இதயம் மார்பெலும்பில் முட்டியது. இது என்ன இடம்? ஆஸ்பத்திரியாகத்தான் இருக்க வேண்டும். மதுவுக்கு ஏதோ விபத்து நடந்திருக்கிறது. ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். அவளுடைய விலாசம் கண்டுபிடித்து போன் செய்திருக்கிறார்கள். "மது பார்! உன் கணவனுக்கு முன்பே வந்துவிட்டேன். உன்னை அழைத்துப் போக வந்துவிட்டேன்! மது..." மெதுவாக அவர்கள் அந்த அறையை விட்டு விலகி ஒருவிதமாக வரவேற்புப் பகுதியைக் கடந்து அந்தக் கட்டடத்தை அடுத்து, பின் பக்கத்தில் இருந்த சிறிய கட்டடத்தை அணுகினார்கள். இது என்ன? அதன் வாயிலைக் கடந்ததும் நீண்ட வலுவான கண்ணாடி ஜன்னல் தெரிந்தது. இது கண்ணாடிக்குள் ஒருவிதமான ஷாப்ட் போல எதோ தெரிந்தது. என்ன இது ஆஸ்பத்திரி போலவே இல்லையே? டாக்டர் கண்ணாடிக்கு அருகிலுள்ள ஒரு பட்டனைத் தேர்ந்தெடுத்து அதை அழுத்தினார். உடனே ஒரு மோட்டார் இயங்கும் சப்தம் கேட்டது. கண்ணாடிக்குப்பின் தெரிந்த இரும்பு கேபிள்கள் இயங்கத் தொடங்கின. அவர்களுக்குக் கீழே எங்கேயோ இருந்த ப்ளாட்பாரம் போல ஒன்று நா**ஸு**க்காக மேலே வந்தது. அதன் மேல் சற்றே மஞ்சளாக மெழுகு தடவினாற் போல ஓர் உடல் தெரிந்தது.

"மை காட்! மது!" என்று அலறினான்.

"இஸ் ஷி தி ஒன்!"

"இறந்து விட்டாளா...?"

"அப்போதே! அந்தக் கணத்திலேயே! கார் இரண்டாக உடைந்து விட்டது. எங்களுக்கு ஹெலிகாப்டர் வைத்துத் தூக்குவது சிரமமாக இருந்தது. த்ருவே அவரை மணிக்குத் தடைபட்டுப் போய் ஒரே குழப்பம்."

"டாக்டர்! யூ ஹாவ் தி ரிப்போர்ட்?"

"யா! யா! குடித்துவிட்டு ஓட்டியிருக்கிறாள்! ரத்தத்தில் ஆல்கஹால் மிக அதிகமாக இருந்தது..."

"இட்ஸ் எ பிட்டி! வெரி ப்ரட்டி கர்ள்?" என்று கண்ணாடிக்குள் பார்த்துக் கொண்டே சொன்னார்.

"இல்லை! அது பொய்! அது மெழுகு பொம்மை மதுமிதா செத்துப் போகவில்லை! இது பொய்! மாயம்! இது மதுமிதா இல்லை?"

மதுமிதாவின் கண்கள் மூடியிருந்தன. மெல்ல மெல்ல அந்த டாக்டர் விலகிப் போய் வாசலில் நின்று கொண்டு "எதற்காக அவளைத் தனியாக கார் ஓட்ட அனுமதித்தீர்கள்? எதற்காக அவளுக்கு ஜின் கொடுத்தீர்கள்!" என்றார்.

இல்லை. அவள் செத்துப் போகவில்லை. இது பொய் என்று தரையில் உட்கார்ந்தான் ரகுபதி. மதுமிதாவைப் போய் அணைத்துக் கொண்டு கதறி அழ வேண்டும்போல இருந்தது. கண்ணாடி கெட்டியாக இருந்தது. அந்த வெளிச்சம். அந்தப் போர்வை எல்லாமே செயற்கையாக இருந்தது. இது ஏதோ ஒரு நாடகம், இதோ திரை போட்டு விடுவார்கள்! மற்றொரு பட்டனைத் தொட, அந்த பிளாட்பாரம் கிழே போய் ஒளிந்து கொண்டது.

"கம்! வி'ல் டாக்" என்றார் போலீஸ் அதிகாரி.

"இது என்ன இடம்?"

"சீஃப் மெடிக்கல் எக்ஸாமினரின் அலுவலகம். ஆட்டாப்ஸிக்கு இங்குதான் அனுப்புவோம். யூ'ஆர் ராதா கிஷன்?"

"இல்லை, நான் டெலிபோனில் உங்களுக்குப் பதிலளித்தவன்!"

"அந்தப் பெண், உறவா..."

"ஆம்!" என்றான்.

"குடிப்பாளா?"

"புதிதாகக் கற்றுக் கொண்டிருந்தாள்!"

"குடிக்கவா, கார் ஓட்டவா! ஸ்பீட் லிமிட்டையெல்லாம் கடந்து அதிவேகமாகச் சென்று கொண்டிருந்தாள். ரேடாரில கண்டு பிடித்துத் தொடர்ந்தார்கள். இன்னும் வேகம்! ஏன் அந்த அவசரம்? ஏதாவது ஃப்ளைட்டைப் பிடிக்க வேண்டும் என்றிருந்ததா?"

"இல்லை!"

"கோபமா? மன வருத்தமா?"

"ஆம்."

"பரிதாபம் சாலையிலிருந்து முப்பதடி தூக்கி எறியப்பட்டு விழுந்திருந்தாள். எடுத்தபோதே உயிர் போய்விட்டது. அதிகம் துன்பப்படாமல் இறந்து போயிருக்க வேண்டும்! கணவனுக்குத் தகவல் சொல்லியிருக்கிறீர்களா?"

"ம்"

"உட்காருங்கள், லைக் டு ஹேவ் ஸம் காஃபி?"

"தாங்க்ஸ்!"

ரகுபதி பொம்மை போல உட்கார்ந்தான். அவன் கன்னங்களில் கண்ணீர் உலர்ந்திருந்தது. உதட்டோரத்தில் உப்புக் கரித்தது. 'மது அவசரப்பட்டு விட்டாய்! மது நான் வந்து உன்னை... அவள் அவசரப்படவில்லை. நான்தான் தாமதித்துவிட்டேன்.

மது செத்துப் போயிட்டாளா! சிரிப்பாக வந்தது. எப்படிச் செத்துப் போக முடியும்! அவள் பேச்சு ஒவ்வொன்றும் என் மூச்சில் கலந்திருக்கும்போது எப்படிச் செத்துப் போய்விட்டாள்...? அபத்தம்?"

"ஸாரி ஸார் விழுந்திட்டிங்களா?"

"என்னைப் பார்த்தா விழுந்த மாதிரி தெரியலியா."

"சிரிச்சா கோவிச்சுக்கவீங்களோன்னு பயமா இருக்கு."

"முதல்ல நேரா என் கண்ணைப் பார்த்து பேசுங்க."

"எங்கே! எங்கே அவள்' என்று இரைச்சல் கேட்க நிமிர்ந்தான் –ராதாகிஷன்! "டேய் நீ இங்கயும் வந்துட்டியா, என்னடா ஆச்சு படுபாவிப் பசங்களா! எங்கே அவ?"

"போய்ப் பாருடா!" என்றான்.

"ஆஃபீஸர்! வேர் இஸ் ஷி?"

".இவனை முதலில் துரத்துங்கள். இவன்தான் எல்லாவற்றுக்கும் காரணம்! மது, மது....!" என்று கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். ராதாகிஷனை அழைத்துக் கொண்டு அவர்கள் அந்தக் கண்ணாடிக் கதவை நோக்கிச் செல்வதை ரகுபதி சுவாரஸ்யமில்லாமல் பார்த்தான்.

'மது மது என் கண்ணே' என்று காரிடார் ஒலித்தது. "ரகு! நீ என்னைக் காதலிச்சே... கல்யாணம் பண்ணிக்க விரும்பினே. வா ரகு, நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாம். பாவநாசத்தில பிரிஞ்சதில இருந்து இன்னிக்கு வரைக்கும் நடந்ததை ஒரு சொப்பனமா நினைச்சுக்கிட்டு ரெண்டுபேருமே இன்னோஸெண்ட்டா இருந்த அந்த நாள்களுக்குத் திரும்பிப் போகலாம்..."

"மது அது அவ்வளவு சுலபமில்லை!"

"போ ரகு. உனக்குத் தைரியமில்லை."

"ஓகே ஓகே இட்ஸ் ஓகே! நான் வரேன்!"

மறுபடி காரிடாரில் இரைச்சல் கேட்க, ராதாகிஷன் புலம்பிக் கொண்டே வந்தான். "பாஸ்டர்ட் பாஸ்டர்ட் இவன்தான் எல்லாவற்றுக்கும் காரணம். அவன் பிட்ஸ்பர்க்கிலிருந்து வந்திருக்கிறான் பாருங்கள் படுபாவி! உன்னால்தான் அவள் மனம் மாறினாள். தெய்வமே! நான் எப்படி உயிர் வாழ்வேன் மது இல்லாமல் நான் எப்படி ஜீவித்திருப்பேன்? நான் என்ன செய்வேன்! என் இனிய மனைவியே போய்விட்டாள் நான் எதற்காக இன்னும் உயிர் வாழ வேண்டும்? எதற்காக?"

"மிஸ்டர் ராதாகிஷன் காம் யூ'ர் ஸெல்ஃப்... ஹாப்பன்ஸ் டு ஆல் ஆஃப் அஸ்!"

"நோ நோ" என்று தலையை ஆட்டி ஆகாத்தியம் செய்தான்.

போலீஸ் அதிகாரி ராதாகிஷனைச் செல்லமாக அணைத்துக் கொண்டு "மிஸ்டர் கிஷன்! உங்களுக்கு எத்தனை வருத்தமாக இருக்கும் என்பதை என்னால் உணரமுடிகிறது. நானும்தான் மனைவியை இழந்திருக்கிறேன்... கான்ஸர்" என்றார்.

"'ஐயா! உங்களுக்குத் தெரியாது ஓர் இந்தியக் கல்யாணம் என்பது மிகவும் பவித்திரமானது. அந்த பந்தம் ஜென்ம ஜென்மமாக வருவதாகப் பெரியவர்கள் எண்ணுகிறார்கள். மதுமிதா! அவளைப் போன்ற மனைவி எங்கே கிடைப்பாள்? இருவரும் ஒருவரை ஒருவர் அப்படி உள்ளன்புடன் நேசித்தோம், ஒருவருக்காகவே ஒருவர் உயிர் வாழ்ந்தோம். ஒருவரை ஒருவர் பரிபூரணமமாகப் புரிந்து கொண்டோம். எங்கள் இல்வாழ்க்கை ஓர் அழகான, இனிமையான கனவு போல இருந்தது. மற்ற பேர் பொறாமை கொண்டார்கள். ஓ ஓ! மது, உன்னை விட்டு எப்படி வாழ்வேன்?" என்று தலையை ஆபீஸரின் தோளில் புதைத்துக் கொண்டான். அவர், "மிஸ்டர் கிஷன்! மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள் வயது வந்தவர் நீங்கள். கண் கலங்கலாமா? குழந்தைகளை யார் கவனித்துக் கொள்வார்கள்?"

"குழந்தைகள் இல்லை" என்று தலையசைத்தான்.

"வேறு நல்ல பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விடுங்கள், துக்கத்தை மறக்க."

"வேறு பெண்ணா?" என்றான் விரக்தியுடன்... 'மதுவின் இடத்திலா?"

"மிஸ்டர் கிஷன்! உங்கள் அன்பான மனைவி அமெரிக்க வேக நாகரிகத்துக்கு பலியானதற்கு நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். எங்கள் விதிமுறைகளுக்கென சில கட்டாயங்கள், சம்பிரதாயங்கள் உள்ளன. அவற்றை சீக்கிரமே நிறைவேற்றிவிட்டு உங்களுக்கு உங்கள் அருமை மனைவியின் உடலைத் திரும்பக் கொடுத்துவிடுகிறோம். இந்தக் காகிதங்களில் கையெழுத்திட்டுவிட்டு ஒரு சில கேள்விகளுக்குப் பதிலளித்தால் போதும்...?"

"அவள் ஞாபகார்த்தமாக எதையாவது செய்ய விரும்புகிறேன்! எதாவது ஓர் அறக்கட்டளை போல, ஒரு பள்ளி அல்லது சாலை விபத்துகளைத் தவிர்க்கிற முறையில் எதாவது ஒரு நிறுவனத்துக்குப் பண உதவி...!"

ரகுபதி மெல்ல எழுந்து ராதாகிஷனை அணுகினான். யாரும் சற்றும் எதிர்பாராத விதத்தில் ராதாவின் தலைமுடியைக் கொத்தாக அள்ளிப் பிடித்துக் கொண்டு அவனைப் பின்புறம் தள்ளி, மேசை மேல் மோதி, தன் பத்து விரல்களையும் அவன் கழுத்தில் அழுத்தினான்.

www.writersujatha.com

## 31

**இ**ன்னும் ஒரு நிமிஷம் அவகாசம் இருந்திருந்தால் கழுத்துப் பிடியின் அழுத்தலில் ராதா செத்துப் போயிருப்பான். மூச்சுக்குத் திணறி, இருமி, கை கால்களைப் பதற்றத்துடன் உதைத்துக் கொண்டு இருந்த ராதாவை போலீஸ் அதிகாரி விடுவித்தார். ரகுபதியை வலுவான அமெரிக்கக் கரங்கள் பிடித்து இழுத்து. ஏறக்குறைய தூக்கி சுவரின் பால் அழுத்தி, "உங்கள் சண்டையெல்லாம் உங்கள் தேசத்தில் போய்ப் போட்டுக் கொள்ளுங்கள். நான் இருக்கும்போது பலாத்காரம் கூடாது."

ரகுபதி உணர்ச்சி வசப்பட்டு, "இவன்தான், இவன்தான் அவளைக் கொன்றவன்! ஒன்றும் அறியாது புஷ்பம் போல இருந்தவளை உங்கள் நாகரிகத்தை வைத்து ஆசை காட்டி புயல் போல வந்து கல்யாணம் செய்து கொண்டு, அழைத்து வந்து, குடிக்கக் கற்றுக்



www.writersujatha.com

கொடுத்து, தங்கக் கூண்டில் சிறை வைத்து, கொஞ்ச நாளில் அலுத்துப் போய் இவன் கண்ணெதிரே மற்ற பெண்களுடன் உறவு கொண்டு, இவள் மெல்லிய உணர்ச்சிகள் அத்தனையும் கிழித்துப் போட்டு நெஞ்சத்தைப் பற்ற வைத்து, காரைக் கொடுத்து, வேகம் கொடுத்து பலியாக்கின கிராதகன், பாதகன்! லுட்டனண்ட், இவனைக் கைது செய்யுங்கள். ஏன் தாமதிக்கிறீர்கள்? அரெஸ்ட் ஹிம்... அரெஸ்ட் ஹிம்" என்றான்.

"வில் டு தட்... வில் டு தட். டேக் இட் ஈஸி!"

"டேக் இட் ஈஸி! உங்கள் தேசத்தையே நாச வாசலில் செலுத்தும் டேக் இட் ஈஸி!"

"ஈஸி ஐ ஸெட்! ஐ டோட்ன் வாண்ட் எனி டாண்ட் ரம்ஸ் ஹியர். சீஃப் எனிதிங் எல்ஸ் பி டன்?"

"மிஸ்டர் கிஷன், நீங்கள் காலை வந்து உடலை எடுத்துப் போகலாம். வில் யூ ப்ளீஸ் ஸைன் ஹியர்?"

ராதாகிஷன், "நான் வீடு செல்லும்வரை போலீஸ் பாதுகாப்பு வேண்டும்" என்றான்.

"பட்ரோல் காரில் அழைத்துச் செல்கிறேன் கவலைப்படாதீங்க யார் இந்தக் கோபக்கார இளைஞன்?"

"என் அன்பு மனைவியின் மேல் இச்சை வைத்திருந்தவன்."

"ஓ... பழைய கதை! கணவன், காதலன்! இந்தியர்களில்கூட இப்படியெல்லாம உண்டா? லைக் யூர் மூவிஸ்!"

"ராதா, நீ புழுப் போலத் துடித்து ஒருநாள் செத்துப் போகப் போறே” என்றான்.

"வாட்ஸ் ஹி ஸேயிங்?"

'ஹி ஸேஸ் ஹி வில் கில் மி."

"யா" என்றான். "ஒன்டே ஃபர் ஷ்யூர்!"

"மிஸ்டர்! லெட் மி ஸீ யுர் பாஸ்போர்ட்."

"பாஸ்போர்ட் இருக்காது" என்றான் ராதா.

"ய்யூ!" என்று மறுபடி அவன்மேல பாய, மக்லாஸ்கி ரகுபதியைப் பற்றிப் பிடித்து, "இனஃப்!" என்று சிறு குழந்தையைப் போல அவனை அள்ளி எடுத்துத் தரதரவென்று போலீஸ் காரில் கொண்டு சென்று திணித்தார். "உன் வீடு எங்கே இருக்கிறது சொல்லு? அங்கே பத்திரமாகக் கொண்டு சேர்க்கிறோம்."

**மோ**கன்ராம் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தார். "என்ன, ஒரு கிராதகன் பாருங்க ஸார். அவளுக்கு நினைவுச் சின்னம் அமைப்பானாம்! அறக்கட்டளையாம் இவன் எப்படி உயிரோட இருக்கலாம்? அவனைத் துண்டமா வெட்ட வேண்டாமா! என்ன ஸார் கடவுள்னு ஒருத்தர் இருந்தா அவனை அந்த இடத்திலேயே கொளுத்தியிருக்க மாட்டாரா?"

"மாட்டார்ப்பா."

"அப்ப கடவுளே கிடையாது." ரகு தன் கோப்பையை மறுபடி நிரப்பிக்கொண்டான்.

"ரகு! இந்த மாதிரி விஷயங்களை நாம எத்தனை சீரியஸா எடுத்துக்கறோம். ராதாகிஷன் இங்கேயே வருஷக்கணக்கில் ஸெட்டில் ஆகி இருக்கிறவன். அவன் இந்தியனே இல்லை. அமெரிக்கக் குடிமகன்! இவங்களுக்கு அடல்ட்டரிங்கிறது ரொம்ப சாதாரணம். ஒண்ணும் தலைபோற சமாசாரமில்லை. கல்யாணம்ங்கிறதுக்குப் புனிதம் எல்லாம் கிடையாது. ஒருவிதமான ஒப்பந்தம். நீயும் நானும் கொஞ்ச நாள் சேர்ந்தாற் போல இருந்து பார்க்கலாம். சரியாயிருந்தா நல்லது. இல்லை இரண்டு பேரும் வெவ்வேறு வழியில் போக வேண்டியதுதான். டிவோர்ஸ்ங்கிறது கொஞ்சம் விலை உயர்ந்த, ஆனால் சுலபமா... கிடைக்கக் கூடிய பண்டம், முன்னேற்றங்கல்லாம் கொண்டு வந்துட்டாங்க. எவ்வளவோ பணம் சம்பாதிக்கிறாங்க. எல்லாத்தையும் வெச்சுக்கிட்டு என்ன செய்யறதுன்னு திணர்றபோது மாறுதல் மாறுதல்னு நிமிஷத்துக்கு நிமிஷம் பதர்றபோது இந்த மாதிரி கணவன் மனைவி, கல்யாணம் விசுவாசம் எல்லாம் அடிபட்டுப் போயிருக்கு. குருட்டுச் சொர்க்கத்தைத் தேடிட்டு. கிடைக்கிற கொஞ்ச நஞ்சம் நிம்மதியையும் இழக்கத் தயாரா இருக்கிற சமூகத்திலே உன்னை மாதிரியோ, மதுமிதாவை மாதிரியோ இவன்கள் எல்லாம் தாக்குப் பிடிக்க முடியாது. இதே மதுமிதா பத்து வருஷம் அமெரிக்காவில பழகினவளா இருந்திருந்தா என்ன செய்திருப்பா தெரியுமா? ஒரு மோட்டலுக்கோ, ஓட்டலுக்கோ போன் பண்ணிட்டு குஜராத்தி லாயர் யாரையாவது பார்த்து, உடனே விவகாரத்துக்கு ஏற்பாடு பண்ணியிருப்பா. அவளுக்குக் கணவன் இல்லாத தனிப்பட்ட வாழ்க்கை இங்க தாராளமா உண்டு. அவங்களுக்கு ஓர் இக்னாமிக் இன்டிபெண்டன்ஸ் உண்டு. அவ அதைத்தான் செய்திருக்கணும், மாசம் ஆயிரம் டாலர் சம்பாதிக்கிறது அத்தனை ஒண்ணும் பெரிசில்லை. அவளால தனக்குன்னு தனிப்பட்ட வாழ்க்கை அமைச்சிண்டிருக்க முடியும். ஏன் உன்னையே கல்யாணம் செய்து கொண்டிருக்கவும் முடியும்."

"கேட்டா ஸார் கேட்டா. நான்தான் தயங்கிட்டேன்."

"எப்படி ஸார்? சரின்னு அவகூடப் புறப்பட்டிருந்தா?"

"ரெண்டு பேரும் த்ரூவேல ஆக்ஸிடெண்ட் ஆகி செத்திருப்பீங்க!"

"அது பரவாயில்லையே! தனியா விட்டுட்டனே!"

"இந்த ஆக்ஸிடெண்ட்டைப் பாரு. மற்றோர் அமெரிக்க பலி! எக்ஸ்ப்ரஸ்வே, த்ருவே, பார்க்வேன்னு எங்க பார்த்தாலும் வேகம் வேகம். சில ரோடுகளில் இவ்வளவு மைலுக்குக் குறைஞ்சு போனா ஆக்ஸிடெண்ட் ஆயிரும். எல்லாருக்கும் வேகம் ஒரு சூன்யத்தைச் சந்திக்கிற வேகம்! வேகம்! அப்புறம் தாகம்! குடி... நம்ம மாதிரி ரெண்டுங் கெட்டான் இந்திய ஜீவன்களுக்கு நாசூக்கா குடிக்கவும் தெரியாது."

"அவளுக்கு ஜின் பழகிக் கொடுத்து, கார் தனியா ஓட்டக் கொடுத்து..."

"இல்லைப்பா, அமெரிக்காவில எல்லா மாமிங்களும் கார் ஓட்டறா! ராதாகிஷன் செய்தது ஒருவிதமான மாரல் வால்யூஸ்படி பாதகம், மகா பாவம்! அதையே அமெரிக்கக் கோணத்தில் பார்த்தா எத்தனை அமெரிக்க மனைவிங்க குடிக்கிறாங்க, எத்தனை பேர் எத்தனை வேகமா கார் ஓட்டறாங்க, தெரியுமா? எத்தனை கணவன்கள்... ஏமாத்தறாங்க? எத்தனை பேர் ஏமாத்தப்படறாங்க... மதுவைப் பொறுத்தவரையிலும் அவ இன்னும் திருநெல்வேலிப் பெண். அமெரிக்காவுக்கு அவ இன்னும் தயாராகலை. அமெரிக்கா அவளைச் சாப்பிட்டுடுச்சு அவ்வளவ்தான் சொல்லலாம்."

"ராதாகிஷன் மாதிரி ஆசாமிங்க தப்பிச்சுக்கறாங்க."

"தப்பிக்க மட்டுமில்லை. பார்த்துக்கிட்டே இரு! ஒரு வருஷத்துக்குள்ள இன்னொரு தடவை இந்தியா போயி இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தாலும் ஆச்சரியப்படக்கூடாது."

"எப்படி ஸார்? அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் ஆதாரமாக ஒரு தர்ம நியாயம் கிடையவே கிடையாதா?"

"இருக்கிறதா தெரியலை! ஆனா ராதாகிஷன் மாதிரி ஆளுங்களை இதே அமெரிக்கா வேற விதத்தில என்னிக்காவது பழிவாங்கி விடும்! கவலைப்படாதே. எத்தனையோ இருக்கு. ஹார்ட் அட்டாக் இல்லையா? கான்ஸர் இல்லையா? ஒவ்வொரு தடவையும் இன்னொரு பெண்ணை வீழ்த்தற போதும், ஒவ்வொரு தடவை அடைஞ்சது போதாதுன்னு இன்னும் கொஞ்சம் விஸ்தாரமாக அடைய முயலும்போதும் அந்த ஹார்ட் பழுதடைகிறதில்லையா? அவன் விதியை அவன் நிச்சயம் சந்திக்கவே செய்வான்."

"எனக்கு அமெரிக்கா வேண்டாம் ஸார். நான் திரும்பிப் போயிர்றேன்."

"அது தோல்வி மனப்பான்மை."

"வேற நான் என்ன செய்ய முடியும்?"

"வந்த காரியத்தை முடிக்கிறது...?"

"இந்த ராட்சத ராஜ்யத்தில் டிகிரி வாங்கிண்டு போய் என்ன எழவைச் சாதிக்கப் போகிறேன்? மோகன்ராம் ஸார், எனக்கு ஒண்ணுமே பிடிக்கலை. எதிலயும் பர்ப்பஸ் இருக்கிறதாகவே தெரியலை. மது மாதிரி ஒரு பாவமும் அறியாத பொண்ணு செத்து வைக்கிறா. ராதா மாதிரி ஆளு இன்னும் பணம் பண்ணிக்கிட்டு சுகமா இருக்கான். நான்தான் பைத்தியம்! காதல் குறிக்கோள் அது இதுன்னு. என்னை உசுப்பி விட்டுட்டு வெட்டிக்கு அனுப்பிச்சார்... பேசாம மெட்ராஸ்லயே இருந்து யாரையாவது பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தைகளைப் பெற்றுக்கிட்டு, செத்துக்கிட்டு இருக்கலாம். இதுக்கெல்லாம் அர்த்தமே புரியலை?"

"அர்த்தம் கேக்காதே... வாழ்க்கையில காரண காரியங்கள் எல்லாமே ஆதாரமா அபத்தமானவை போதும்பா. குடிச்சது போதும்!"

"இல்லை ஸார், ராத்திரியை நினைச்சா பயமா இருக்குது. ஒண்ணு செய்யறேனே, இங்கிருந்து ஹைவேத்ருவே எதாவது பக்கத்தில இருக்குதா?"

"எதுக்கு?"

"நியரஸ்ட் ஹெட்லைட்டைப் பார்த்து நேரே நடந்துர்றேனே!"

"இரண்டாவது தற்கொலை முயற்சியா? பேஷ்? நல்ல யோசனை."

"வாங்க. போகலாம்."

"யோசிச்சுப்பாரு... நீ சம்மதம்னு சொல்லி மதுமிதாவைக் கூட்டி வந்திர்றே. இரண்டாவது கல்யாணம் எங்க நடந்திருக்கும்? அமெரிக்காவிலா? இண்டியாவிலா? இங்கதான் நடந்திருக்கணும். அதுவும் ரொம்ப கஷ்டம் அவங்கிட்ட இருந்து ரிலீஸ் வராம கல்யாணம் நடந்திருக்க முடியாது. கோர்ட்டில போட்டா ரெண்டு பேரையுமே டீ போர் பண்ணி, உங்க ஊர்ல போய்த் தீர்மானம் பண்ணிருங்கன்னு துரத்திருவான்! சாத்தியம்னுதான் வெச்சுக்க. மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு புரட்சி

தியாகம் எத்தனை நாளைக்குத் தாங்கும்? ஒவ்வொரு தடவை அவளைக் கட்டி அணைக்கிற போதும் இன்னொருத்தன் தொட்டவள் தானேன்னு நினைவு உனக்கு உறுத்தாம இருக்கும்ங்கறியா? அதுக்கு உண்டான மனப்பக்குவம் இருக்கா உனக்கு? சந்தேகம் தான்! அவளாலயும் பரிபூர்ணமா உனக்கு மனைவியா வாழ்ந்திருக்க முடியுமா?"

"எங்கப்பா இருந்திருக்கார் ஸார்."

"அவர் கேஸ் வேற, அவர் கல்யாணம் செய்து கொண்டது இளமையில் இல்லை. பெண் தேவைக்கு இல்லை. ஒரு பெண்ணுக்கு சமூகத்தில் அந்தஸ்து கொடுக்கிறதுக்காகச் செய்து கொண்ட காரியக் கல்யாணம் அது. இது வேற."

"அதெல்லாம் இப்ப வெட்டிப் பேச்சு. மது போயிட்டா ஸார்!"

'வேற ஒருத்தி இருக்கா. இல்லையா?" வாசல் மணி ஒலிக்க சென்று பார்த்தார். ரத்னாவும் வைத்தியநாதனும் அவசரமாக உள்ளே நுழைந்தார்கள்.

"ரகு, எப்படி இருக்கிங்க. பிட்ஸ்பார்க்கில் இருந்து வந்ததும் கேள்விப்பட்டு உடனே பார்க்க வந்தோம். ரகு, ரகு! ஆர் யூ ஆல்ரைட்?"

"எனக்கென்ன ரத்னா?"

"ஸாரி; பாடி டெர்ரிபிள்! எப்படி ஆச்சாம்?"

"ஜின், வேகம். மன வருத்தம்!"

"ரகு, நீங்க எப்படி ஃபீல் பண்றிங்கன்னு என்னால உணர முடியறது ரகு. இப்ப உங்க மனசில தோணறதை எதையும் மதிக்காதிங்க. தோணறது தோணட்டும். ஆனா எதுக்கும் முக்கியத்துவம் கொடுக்காதிங்க. என்ன முடிவெடுத்தாலும் ஒரு வாரம் கழிச்சு முடிவெடுங்க! அதான் என் வேண்டுகோள்."

"மோகன்ராம், "தட்ஸ் வெரி குட்! ரத்னா சொல்றதில நிறைய விஷயம் இருக்குது ரகு. ஒப்புத்துக்க."

"ஒரு வாரத்தில என்ன நடக்கும்?"

"எவ்வளவோ நடக்கலாம். உங்களுக்கு இந்தச் சம்பவத்தைப் பற்றி வேறு விதமா பர்ஸ்பக்டிவ் கிடைக்கலாம். எப்படியும் ஒரு வாரம், ஒரே ஒரு வாரம் எனக்காகக் காத்திருங்க."

"அப்பாவை வரவழைப்பீர்களா?"

"அதெல்லாம் உங்க தீர்மானம். ஒரு வாரம் காலேஜ் போக வேண்டாம். எங்ககூட இருங்க. தனியா இருக்காதீங்க."

"இல்லை ரத்னா, தற்கொலை பண்ணிக்க மாட்டேன். அதில எதும் அர்த்தம் இருக்கிறதா தெரியலை."

"தற்கொலையைப் பற்றி யாரும் பேசலை."

"நீங்க வரதுக்கு முன்னால பேசிக்கிட்டு இருந்தான்."

"பேசாதீங்க! பேச வேண்டாம்"–ரத்னா அதட்டலாகச் சொன்னாள். "ரகு, யூ ஆர் கமிங் வித் மி? இப்ப இந்தக் கணத்தில எங்ககூட வந்துர்றிங்க! மோகன்ராம் ஸார், நாங்க ஒரு வாரம் கழிச்சு இவரைக் கொண்டு விடறோம்? என்ன?"

"செய்யுங்க."

"ரத்னா! ராதாகிஷன் பிரமாதமா மதுவுக்கு ஃப்யூனரல் எல்லாம் ஏற்பாடு பண்ணப் போறான் தெரியுமா."

"சரி."

"அதுக்கு நாம போக வேண்டாமா. கறுப்பு **ஸூ**ட் எல்லாம் போட்டுகிட்டு? இவளைப் புதைக்கத்தான் போறான்னு நினைக்கிறேன். அந்த இடத்திலே ஒரு நினைவுச் சின்னம். கோயில்! பாஸ்டர்ட்" என்று தன் கண்ணாடிக் கோப்பையை உடைத்தான். கையில் ரத்தம் வழிந்தது.

"மோகன்ராம் ஸார், கொஞ்சம் டிங்க்சர் இருக்கா?" என்றாள் ரத்னா."

"வாங்க ரகு! மெதுவா பார்த்து வாங்க."

“ரத்னா, என்னை அந்த ஃப்யூனரலுக்கு அழைச்சுட்டு போகணும்."

"சரி, ரகு. நிச்சயம் அழைச்சுட்டுப் போறேன்."

"அமெரிக்காவில் எவ்வளவு சுத்தமா வெச்சிருக்காங்க பாரு. பட்டனைத் தட்டறான். ஒரு பிளாட்பாரம் வருது. சுத்தமா, தூங்கறாப்பல மதுமிதா! ரத்னா, நான் நிச்சயம் போயே ஆகணும். என்னுடைய கடைசி அஞ்சலியை அவளுக்குச் செலுத்த வேண்டாமா?"

"சரி ரகு, வாங்க, இப்ப வீட்டுக்குப் போகலாம்" என்றாள் ரத்னா.

அவளுடன் செல்லும்போது ரகுபதி 'அமெரிக்காவில் துப்பாக்கி வாங்குவது ரொம்ப சுலபம். ஒன்று வாங்கிக் கொள்ள வேண்டும்' என்று தீர்மானித்தான்.

## 32

ராத்திரி ரத்னாவின் வீட்டுக்குச் சென்று அங்கேயே தங்கினான். எங்கு தங்கினான், என்ன சாப்பிட்டான் என்பதெல்லாம் ரகுபதிக்கு ஒரு பொருட்டாக இல்லை. மிதந்து மிதந்து மதுமிதாவின் நினைவுகள் மனத்தில் மோதின. நடுராத்திரியில் எழுப்பப்பட்டான். "ரத்னா என்ன?"

"உங்கப்பாகூடப் பேசுங்க ரகு" என்று படுக்கைக்கு அருகில் டெலிபோனை வைத்தாள்.

"அப்பாவுக்கு யார் டெலிபோன் செய்தா?"

"நான்தான்!"

"இந்த ராத்திரியிலா?" என்று கடிகாரத்தைப் பார்த்தான்.

"இண்டியாவிலே இப்ப. ராத்திரியில்லை. கொஞ்சம் இருங்க ஸார்?"

"ரகு!" எங்கேயோ மேல் லோகத்தில் போல ஒலித்தது குரல்.

"என்னப்பா...?"

"ரகு எல்லாம் கேள்விப்பட்டேன். ரத்னா சொன்னா..." ஸாட்டிலைட் மூலமாகக் கேட்ட குரலின் தாமதம் சற்றுப் பழக வேண்டியிருந்தது.

"ரகு, நடந்ததில் உன் குற்றம் என் குற்றம்னு ஏதும் இல்லை. விதின்னு சொல்லிக்கலாம்; தற்செயல்னு சொல்லிக்கலாம். ஆனா போனவங்களுக்காக இருக்கிறவங்க தன் வாழ்க்கையை மிஸரபிளா பண்ணிக்கிறதில அர்த்தமில்லை ரகு. உன்னைப் பார்க்கணும் போல இருக்கு. உடனே புறப்பட்டு வரட்டுமா? காசு போனாலும் போறது கடன் வாங்கிக்கறேன்!"

"எதுக்கப்பா நீங்க வரவேண்டாம். நான் பார்த்துக்கறேன்."

"ரகு எதும் தீவிரமா செய்துராதே!"

"தீவிரமான்னா...?"

"எனக்கு சொல்லத் தெரியலைப்பா. ஆனா எனக்கு அடிவயித்தில பயமா இருக்குது. கோபிநாத்தும் அவர் மனைவியும் தகவல் தெரிஞ்ச உடனே புறப்பட்டுட்டாங்க. அவங்ககிட்ட ஒரு லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கிறேன். அதையும் பாரு."

"அவங்களை நீங்க எப்பப்பா பாத்திங்க? பாவநாசம் போயிருந்திங்களா?"

"இல்லை அவர் எனக்குத் தகவல் சொல்லி வரவழைச்சார்."

"என்னவாம்?"

"தி மேன் இஸ் ஷேக்கன் அப்! ஹி ஃபீல்ஸ் கில்ட்டி. மது எல்லா விவரத்தையும் அவருக்கு லெட்டர் எழுதியிருந்தா. அவருக்கு ஆறுதல் சொல்ல வேண்டியது உன் பொறுப்பு."

"சரி சொல்றேன்."

"அவர் வந்தா ராதாகிஷன்கூட இருக்கமாட்டார். ரத்னா வீட்டு அட்ரஸ்தான் கொடுத்திருக்கேன்."

"சரி."

"ரகு, நான் அங்க வரட்டுமா?"

"வேண்டாம்ப்பா."

"நீ சரி சரின்னு இப்படிச் சொல்ற தொனியே எனக்கு வயித்தைக் கலக்குது."

"கவலைப்படாதிங்கப்பா. சமத்தா படிச்சு பாஸ் பண்ணிட்டுத் திரும்பி வந்துர்றேன்."



www.writersujatha.com

"இப்படி எல்லாம் பேசமாட்டியே ரகு! இத பாரு, ரத்னாகூடப் பேசிக்கிட்டு இருந்தபோது அவ சொன்ன யோசனைதான் சரி. ஒரு வாரத்துக்கு எந்தத் தீர்மானத்தையும் ஒத்திப்போடு, ஒரு வாரம் சும்மா இரு. கொஞ்சம் எல்லாமே தெளிவாகும்!"

"ஒகே!"

"எனக்கு பாஸிட்டிவ்வா பதில் சொல்லு."

"என்ன சொல்லணும்...?"

"ரகு! நான் அமெரிக்கா வரத்தான் போறேன். எனக்கு உன்னைப் பத்திக் கவலையா இருக்கு?"

"தற்கொலை பண்ணிப்பேனோன்னு கவலையா இருந்தா மறந்துருங்க. அதுக்காக நீங்க பணம் செலவழிச்சுக்கிட்டு வர வேண்டாம். ஏற்கெனவே எனக்கு நிறைய பணம் செலவழிச்சிருக்கிங்க. தற்கொலை எண்ணம் எதும் எனக்குக் கிடையாது... அதில் அர்த்தமில்லை... அதனுடைய மதிப்பை உணர்ந்துக்கிறதுக்கு மதுமிதா உயிரோட இல்லை!"

"நான் மறுபடி நாளைக்கு உன்கூடப் பேசறேன். ரத்னாகிட்டே கொடு."

"ரத்னா உங்கூட எங்கப்பா பேசணுமாம்!"

இத்தனை நேரமும் ரகுவைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த ரத்னா, 'ரகு, நீங்க அவரோட பேசினது நல்லா இருந்ததா?" என்றாள்.

"காண்ட் ஹெல்ப் இட்!"

"ஸார், சொல்லுங்க. ரத்னா பேசறேன்."

ரகுபதி அவர்கள் பேச்சில் கவனமின்றி மெல்ல நடந்து ஜன்னல் கண்ணாடி வழியாக வெளியே பார்த்தான். இந்த ராத்திரியில்கூட கார்களின் பணி குறையவில்லை. நியூஜெர்ஸி போன்ற அமைதியான பிரதேசத்தில் கூட இப்படி எல்லாரும் எங்கே இத்தனை ராத்திரியில் பறக்கிறார்கள்?"

அப் ஆன் தி த்ரூவே எ மைல் ஸௌத் ஆப் தி எக்ஸிட்!

எல்லாரும் அங்கேதான் போகிறார்கள். தத்தமது மரணங்களைச் சந்திக்க. துப்பாக்கி எங்கே கிடைக்கும்? கடையில் வாங்க வேண்டுமென்றால் ஐடெண்டிட்டி கார்டு கேட்பார்கள். இந்தியன் என்று தெரிந்ததும் கொடுக்க மறுப்பார்களோ? கல்லூரியில் நண்பர்கள் யாரையாவது கேட்கலாம். என்ன பொய் சொல்ல வேண்டும்? எதற்கு பொய் சொல்ல வேண்டும், இதோ பார் ஓர் ஆளைக் கொல்ல வேண்டும். நேராக அவன் மார்பை நோக்கிச்சுட வேண்டும். துப்பாக்கி தருகிறாயா என்று கேட்டால்கூட சிலர், அப்படியா?" என்று கொடுத்து விடுவார்கள். கவலைப்படாத தேசம் இது. இல்லை கொடுக்க மாட்டார்கள்! பொய் சொல்லித்தான் ஆக வேண்டும். தற்காப்புக்கு என்று சொல்லலாம். "இதோ ராதாகிஷன் என்னைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தியிருக்கிறான் என்று நுட்பமானக் கதை கட்டி விடலாம். துப்பாக்கி கிடைப்பதில் சிரமம் இருக்காது. மதுவின் பெற்றோர் வருகிறார்களா, வரட்டும் வரட்டும்; நன்றாகக் கேட்கலாம். 'ஏன் ஸார் அன்னிக்கு உங்க முன்னாடி கண்ல தண்ணி விட்டு அழுது கெஞ்சினேனே. நினைவு இருக்கா? அப்ப என்ன சொன்னீங்க.

ஞாபகம் இருக்குது. என் பெண்ணுடைய சந்தோஷத்தையும் நல்வாழ்வையும் மட்டும் குறிக்கோளா வெச்சுக்கிட்டுப் பார்த்தேன். இந்த மாதிரி வயசில அமெரிக்கா போயி, அங்க சுகமா வாழற ஒரு பெரிய சந்தர்ப்பத்தை அவளுக்கு இப்ப டிளே பண்ணிட்டம்னா... என்ன ஆகும்... யோசிச்சுப் பாரு. ஷி வில் பி மிஸரபிள்...!"

"இ ஷி ஹாப்பி நௌ? யூ பாஸ்டர்ட்! எங்கே அவ? எங்கேய்யா அவ?"

"யாரைக் கேக்கறிங்க என்னையா?" என்றாள் ரத்னா.

"மதுமிதாவோட அப்பா கோபிநாத் வரப்போறார் நான் கேக்கத்தான் போறேன் ரத்னா."

"என்னன்னு?"

"என்னை நிராகரிச்சிங்களே என்ன ஆச்சு பாத்திங்களான்னு."

'ரகு, வாட்ஸ் ஹாப்பனிங்? இந்த மாதிரி கேக்கறது. அநாகரிகம். அசந்தர்ப்பம்! கேட்டதினால என்ன சாதிக்கப் போறிங்க?"

"அந்த ஆளுக்கு உறுத்தணும், குத்தணும், வருத்தப்பட்டுக் கதறணும்!"

"பொண்ணைப் பறி கொடுத்தது, போதாதா ரகு?"

ரகுவுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"யோசிச்சுப் பாருங்க எல்லாத்தையும்! வாங்க, படுத்துக்கங்க, ஸெக்கொனால் ஒண்ணு தரட்டுமா?"

"கொடு ரத்னா!"

விளக்கை அணைக்கப் போகும் முன் “ரத்னா!" என்றான்.

"என்ன...?"

"அப்பா என்ன சொன்னார் அப்புறம்?"

"உங்களைப் பத்தி ரொம்ப கவலை இருக்கிறதாகவும் உடனே வரட்டுமா என்றும் கேட்டார். தேவையில்லை ரகுவுக்கு ஒண்ணுமில்லை? நான் பார்த்துக்கறேன்னேன் குட் நைட்?"

இருட்டில் யோசித்தான். குறி பார்க்கப் பழக வேண்டாமா? கையில் திருப்பி அடித்து வேறு யார் மேலேயாவது பட்டுவிட்டால்? இப்போது மது எங்கே இருப்பாள்? இன்னும் அந்த ஆபீஸ்லதான் இருப்பாள். இயந்திரம் மூலம் இயங்கும் குளிர் பரவின பிளாட்பாரத்தில் துயில் செய்து கொண்டு... நீ நிசமாகவே செத்துவிட்டாயா?

ஸெக்கொனாலின் அணைப்பில் பாதித் தூக்கத்தில் திரும்பத் திரும்ப அந்த பட்டனை இயக்குவது மாதிரி கனவு கண்டான். ஒரு முறை மதுவே எழுந்து, "அப்படி அமுக்கக் கூடாது. இப்படி என்று காட்ட, அட! நீ எப்படி?" என்று கேட்க...

'என் கண்ணை நேராப் பார்த்துச் சொல்லு, என்னை மறக்க மாட்டியே... வேற பெண்களை ஸைட் அடிக்க மாட்டியே?"

இப்போது அவள் மாறுதலாக ரயிலில் உட்கார்ந்திருக்க, அது புறப்பட, அதன் கூடவே அதன் வேகத்திலேயே ஓடினான். அந்தக் களைப்பில் தூங்கிப் போனான்.

**கா**லை எழுந்ததும் சுறுசுறுப்பாக குளித்து விட்டு, கல்லூரிக்குக் கிளம்பிப் போவதாகச் சொல்ல ரத்னா சற்று வினோதமாகப் பார்த்தாள்.

"நேத்தைக்குப் பார்த்தா ஒரு மாசம் காலேஜ் போகிற ஜாதியாத் தெரியலை."

"என்ன செய்யறது ரத்னா. மறக்கறதுக்கு எதாவது மார்க்கம் வேண்டாமா?"

"வாஸ்தவம்தான். காலேஜ் போறது நல்லதுதான். அங்க உங்களை எந்த நம்பர்ல கான்டாக்ட் பண்ண முடியும்?"

"வேற எங்கயாவது போயிருவேன்னு பயப்படறியா? அதெல்லாம் செய்யமாட்டேன்."

"நம்பர் சொல்லுங்களேன்?"

"தெரியாது. ஆல்ட்ரிச் ஹால்னு கேளு, என்னைக் கூப்பிட்டாலும் கூப்பிடுவாங்க."

வெளியே வந்ததும் யாரைக் கேட்பது என்று யோசித்தான். துப்பாக்கி கேட்கும் அளவுக்கு அத்தனை அந்நியோன்யமாக யாரும் இல்லையே...

ஐந்தாவது அவென்யூவில் கடைகளின் கண்ணாடி ஜன்னல்களின் வழியே வேடிக்கை பார்த்தான். 'கன்ஸ்' என்று ஒரு கடையில் பகலிலும் நியான் ஒளிர, அதனுள் செல்ல விரும்பினான். யாராவது பார்த்தால், பார்த்தால் என்ன? அதன் பின் நடப்பதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லையே. ஒரு துப்பாக்கி எத்தனை விலை இருக்கும்? பணம் கொண்டு வரவில்லையே. முதலில் கல்லூரியில் விசாரித்துப் பார்க்கலாம்.

கல்லூரிக்குச் சென்றபோது மேரியை ரொம்பநாள் கழித்துப் பார்த்தான். இன்னும் கொஞ்சம் அகலமாகி, இன்னும் கொஞ்சம் பெரிய பெண்பிள்ளை போல காணப்பட்டாள்.

"மேரி, என்ன உடம்புக்கு?"

"ஒண்ணுமில்லை. கர்ப்பமாக இருக்கிறேன். எதைக் கண்டாலும் நாஸியா. இன்னும் ஓயவில்லை. அவன் பிறந்தால் இடது கைக்காரனாக இருப்பான். அவன் அப்பா இடது கைக்காரர். இடது கைக்காரர்களுக்காகத் தனிப்பட்ட கடை இருக்கிறது. தெரியுமோ?"

"என்ன சொல்கிறாய் மேரி?. உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதாகச் சொன்னார்களே?"

"ஏறக்குறைய ஆனது போலத்தான். படிப்பு முடியட்டும் என்று காத்திருக்கிறேன். குழந்தையைக் கலைக்க வேண்டாம் என்று நான்தான் விரும்பினேன்."

"மேரி, உன்னிடம் ஒரு துப்பாக்கி இருக்குமா?"

"இருக்கிறதே! வேண்டுமா?"

"ஆம், எதற்கென்றால்...?"



www.writersujatha.com

"நாளைக் காலை எடுத்து வருகிறேன். சாயங்காலம், ஞாபகப்படுத்து. இன்னும் இரண்டு மாதம்தான் காலேஜுக்கு வரமுடியும்."

மேரி புறப்பட்டுச் செல்ல... எத்தனை சுலபம் தயாரித்து வைத்த பொய்களுக்கெல்லாம் அவசியமே இல்லாமல், பேனா கேட்டது போல கொடுக்கறேன் என்றாளே!

ராதா? விதிதான் விளையாடுகிறது. உன் விதி!"

வீட்டுக்கு, வேளையில் நல்ல பிள்ளை போலத் திரும்பியபோது ரத்னா விசாரித்தாள்.

"என்ன ரகு கொஞ்சம் சுறுசுறுப்பா இருக்கிங்க?"

"என்ன பண்றது ரத்னா, செத்துப் போறவங்க செத்துப் போயிர்றாங்க. இருக்கிறவங்க அவங்க அவங்க காரியத்தைப் பார்த்துக்க வேண்டாமா."

"பரவாயில்லையே! எதாவது சாப்பிடறிங்களா, காபி?"

"ஓ யெஸ். ரத்னா கொடுத்தா காபி நல்லாவே இருக்கும்!"

"ரகு! இஸ் ஸம்திங் ராங்?"

"ஏன்!"

"நீங்க பேசற தொனி ஒரு மாதிரியா இருக்குது. இந்த உற்சாகம் கொஞ்சம் அசம்பாவிதமா இருக்கு."

"சே! அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே. நீ சொன்னதை யோசித்துப் பார்த்தேன். சும்மா ஒரு மூலைல உட்கார்ந்துகிட்டு ஸல்க் பண்றதிலே அர்த்தம் இல்லை."

'சரி ரகு, நீங்க கோபிநாத்தைச் சந்திக்கிற மூடுல இருக்கிங்களா?"

"வந்தாச்சா?"

"இப்பதான் வந்தார். நான்தான் கென்னடிக்குப் போயி பிக்கப் பண்ணிக்கிட்டு வந்தேன்."

"ரெண்டு பேரும் வந்திருக்காங்களா?"

"ஆமாம். அந்தம்மா ரொம்ப அழறாங்க."

"போய்ப் பார்த்துட்டாங்களா?"

"பார்த்தாச்சு. பாடியை இண்டியா எடுத்துக்கிட்டு போகப் போறாங்களாம்."

"அப்படியா! ராதா என்ன சொன்னானாம்?"

"சரின்னுட்டானாம்."

"பாவி...! என்னவோ ஃப்யூனரல் பிரமாதமா வைக்கப் போறேன்னு சொன்னானே! எல்லாம் பொய்யா? நான் ராதாவை மறுபடி சந்திக்க முடியாதா?"

"ஏன்?"

"மறுபடி சந்திக்கணும்! இப்ப அவங்களை முதல்ல பார்க்கறேன். எங்க மாடியில் இருக்காரா?"

"ஆமாம்."

ரகுபதி கோபிநாத்தைப் பார்க்கச் சென்றான்.

www.writersujatha.com

## 33

**கோ**பிநாத் தலைமேல் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் அவர் மனைவி கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டிருக்க, அவள் உடல் குலுங்குவது தெரிந்தது. ரகுபதி வாயிற்படியில் கொஞ்சம் தயங்கினான். கோபிநாத் அவனைப் பார்த்ததும், "வாப்பா" என்றார். மனைவி எழுந்து கட்டிலின் பின் ஓரத்துக்குச் சென்று சுவர்ப்பக்கம் முழந்தாளிட்டு உட்கார்ந்துகொண்டு தன் துயரத்தைத் தொடர்ந்தாள். சற்றுநேரம் யாரும் பேசவில்லை.

கோபிநாத் அவனைப் பளபளக்கும் கண்களால் நிமிர்ந்து பார்த்தார்.

"அவகூட பேசினியா ரகு?"

"ஆமா ஸார், பிட்ஸ்பர்க்கை விட்டுக் கிளம்பறப்ப."

"என்ன சொன்னா?"

"சொன்னா வருத்தப்படுவீங்க."

"கிட்டவா" என்றார். தயக்கத்துடன் அருகில் சென்றான். அவனைப் பற்றி இழுத்துச் சட்டைமேல் தேம்பி அழுதார்.

"ஸார்! என்ன இது? தைரியமா இருக்கணும்" என்று அசம்பவமாகச் சொன்னான். "மது மது! என் கண்ணே ஏ" என்று அம்மா வேறு எதுவும் சொல்லாமல் ரகுவை நிமிர்ந்து பார்த்துப் பிரமித்தாள். அவள் தலைமுடி அவிழ்ந்திருந்தது.

"எதுக்கப்பா அவ செத்துப் போகணும்? என்ன குற்றம் செய்தா? இல்லை, நான் பண்ணது தப்பா? சந்தோஷமா இருப்பான்னு எதிர்பார்த்து கல்யாணம் பண்ணி அனுப்பிச்சது தப்பா? சொல்லுப்பா! நான் செய்தது தப்பா?"

"ஆம்" என்று சொல்லவில்லை.

"நல்லது நினைச்சுத்தானே எல்லாம் செய்தோம்? ராதாகிஷன் உயிரோட முழுசா இருக்கான் பாரு? என்ன அநியாயம் ரகு? உங்கிட்ட என்னல்லாம் சொன்னா? என்ன கஷ்டப்பட்டா என் பெண், சொல்லு?"

"அதெல்லாம் இப்ப காலங்கடந்து போச்சு ஸார்!" என்றான்.

கோபிநாத் கீழே உட்கார்ந்து அவன் காலைத் தொடுவதற்கு முன் துணுக்குற்று விலகிக் கொண்டான். "என்ன ஸார் இது! சேச்சே...

"உன் மனத்தை நோகடிச்சதுக்கு எனக்கு இத்தனை தண்டனையா?"

"சே! விபரீதமா எதாவது சொல்லாதிங்க!"

"எங்கிட்ட வந்து கெஞ்சிக் கேட்டியே, பேசாம உனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கலாமில்லை? உன்னை நிராகரிச்சதுக்கு இத்தனை பெரிய தண்டனையா?"

ரத்னா இப்போது அவர்களுடன் மௌனமாகச் சேர்ந்து கொண்டாள்.

"ஸார், உலகத்தில காரண காரியங்கள்ளாம் இதனால இதுன்னு ஏற்படறதில்லை. ஒண்ணுக்கு ஒண்ணு சம்பந்தமில்லாத நிகழ்ச்சிகள் எல்லாம்! எல்லாமே அபத்தம்தான். உங்க மாப்பிள்ளை ராதாகிஷன் இத்தனை செய்திருக்கான். அதுக்காகக் கடவுள் தண்டனை கொடுப்பாரா? மாட்டார். அதெல்லாம் அப்படியே கிடையாது. யாராவது ஒரு மனுசன் அவனுக்குத் தண்டனை கொடுத்தாத்தான் சரி."

"அந்த தண்டனையைச் சட்டம் அனுமதிக்காது" என்றாள் ரத்னா.

"ராதா மாதிரி ஆள்கள் உயிரோட இருக்கணுங்கறியா ரத்னா?"

"அது நம் கையில இல்லைங்கறேன். ஸார் மது போனது பெரிய இழப்பு. அதுக்கு ஆறுதல் எதும் கிடையாது. ஆனா மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பார்க்கிற ஒரு பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கு இல்லையா? அம்மா! ஏன் ஒரு மாதிரி இருக்கிங்க? ரகு. கொஞ்சம் வாட்டார்!" மயக்கம் போல் சாய்ந்த அவளை ரத்னா பிடித்துக் கொண்டாள்.

தண்ணீருக்கு ஓடும்போது ரகுபதிக்குத் துப்பாக்கி ஞாபகம் வந்தது. நெஞ்சில் உறுத்தியது. திரும்ப மாடிக்குச் சென்றபோது கோபிநாத் மனைவியை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தார். "நீங்க போங்க, நான் பார்த்துக்கறேன்" என்றாள் ரத்னா. ரகுவை அழைத்துக் கொண்டு அறைக்கு வெளியே வந்து அவனிடம் சிகரெட் பாக்கெட்டை நீட்டினார். ரகுபதி ஒன்று உருவிக் கொண்டான். "உங்கப்பா, வரப்ப என்னைச் சந்தித்தார்! நல்லா அட்வைஸ் பண்ணார். உனக்கு ஒரு லெட்டர் கொடுத்திருக்கார், இந்தா."

அதை மேலாகப் பிரித்து, "அட்வைஸுக்குக் குறைவே இல்லை! உலகத்தில் எல்லாரும் பண்றாங்க."

"ரகு! நான் மதுவுக்கு மட்டும் இல்லை, உனக்கும் பெரிய தவறு செஞ்சுட்டேன். மாயைதான் கண்ணை மறைச்சுருச்சு! நீ சந்தோஷமா வாழணும். ரகு, அதைத் தெரிஞ்சா எனக்கு ஒரு சமாதானமாகும்."

"ராதா என்ன சொன்னான்?"

"எனக்கு எதுவுமே தெரியாத மாதிரி, மதுவைப் போல பெண்ணில்லை தெய்வம் மாதிரி. ரெண்டு பேரும் சந்தோஷமா! இருந்தோம். பாதகன்?"

"அவனை என்ன செய்யலாம்?" என்றான்.

"என்ன செய்ய முடியும்? முடியைப் பிடிச்சு உலுக்கலாம். நகத்தால கீறலாம். என்ன பிரயோசனம்? மது திரும்பிக் கிடைப்பாளா? கொஞ்ச நேரமாவது சிரிச்சாளா ரகு?"

"நிறையவே சிரிச்சா ஸார்!"

"எனக்கு புரியவே இல்லை."

"போலீஸ் ஆபீஸர் சொன்னான். அமெரிக்க வேக நாகரிகத்துக்கு அநாவசிய பலி; ஸாரி!"

"ரகு, அவ உன்னை என்ன கேட்டான்னு எனக்குத் தெரியும்."

மவுனமாக இருந்தான்.

"எல்லாமே லெட்டர்ல எழுதியிருந்தா. பாக்கறியா?"

"வேண்டாம்."

"உனக்குத் தயக்கமில்லாம இருந்தா அவளை உனக்கு மறுகல்யாணம் செய்து வைக்கறதுக்குச் சம்மதிச்சிருப்பேன் ரகு."

ரகு சிரித்து, "ஹூம்! கொஞ்சம் லேட் ஸார்! எல்லாமே லேட்டா தான் ஞானோதயங்கள் உண்டாறது. பிட்ஸ்பர்க்ல அவ வந்து என்னைக் கேட்டப்ப சம்மதம் சொல்லியிருக்கணும்; நானும் லேட்."

"உங்கப்பா நீ எதாவது விபரீதமா செய்துருவியோன்னு ரொம்ப கவலைப்பட்டுகிட்டு இருக்கார்."

"அப்படி எதும் விபரீதமா செய்யறதா இல்லை ஸார் எல்லாத்தையும் திட்டம் போட்டுத்தான் செய்யப் போறேன்."

"ராதாகிஷனை நீங்க நாளைக்கு எப்ப பார்க்கப் போறீங்க? நானும் வரேன்" என்றான்.

"சரி."

"அவளை எடுத்துட்டுப் போறிங்களா?"

"ஆமா?"

"ரொம்ப செலவு."

"பரவால்ல, இந்தப் பாழாப்போற தேசத்தில் அவளைப் புதைக்க விரும்பலை. தாமிரபரணி ஆற்றுக்குப் பக்கத்தில் அவளுக்குப் பிடிச்ச இடம் ஒண்ணு இருக்கு. பாறைல பேர் வெட்டி வெச்சிருக்கா. அங்கே போய் நிம்மதியா எம் பொண்ணு தூங்கட்டும்..."

"கார் சப்தம் இல்லாம" என்றான் ரகு.

ரத்னா தோன்றி "வாங்க ரகு. நீங்களும் சாப்ட்டுட்டுப் படுத்துருங்க. பேசிப் பேசி இன்னும் துக்கம் அதிகமாகும் காலைல எல்லாம் பார்த்துக்கலாம்."

"ரத்னா, ஏர்லைன்ஸ் புக்கிங் என்ன ஆச்சுன்னு பார்க்கணும்."

"எல்லாம் நான் பார்த்துக்றேன். அமெரிக்காவில் அதெல்லாம் சுலபம். எம்பாம் பண்றதுக்கு சர்வீஸ் இருக்கு."

"எல்லாம் இருபத்துநாலு மணி நேரம் திறந்திருக்கும்."

சாப்பிடும்போது அப்பாவின் கடிதத்தை மேலாகப் பார்த்தான்.

"என்ன வேண்டுமானாலும் தீர்மானி. திரும்பி வா; தனியாக வா. ரத்னாவைக் கல்யாணம் செய்து கொண்டு வா. அல்லது அங்கேயே இரு. எப்படி வேண்டுமானாலும் செய் ஆனால், ஒன்று மட்டும் எனக்கு வேண்டும். ரகு, நீ எனக்கு வேண்டும். எங்கேயாவது வாழ வேண்டும். அவ்வளவுதான்..."

ராத்திரி விளக்கை அணைத்துப் படுத்துக்கொண்ட பின், பிம்பங்கள் மௌனத்தில் நடமாட, விழித்துக் கொண்டே இருந்தான். சட்டென்று விளக்கு எரிய ரத்னா!

"இன்னம் தூங்கலியா ரகு? மாத்திரை தரட்டுமா?"

"சாப்டாச்சு!"

ரத்னா விளிம்பில் உட்கார்ந்தாள்.

"உங்ககிட்ட பேச, தனியா சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. டிஸ்டர்ப் பண்றனா?"

"இல்லை. என் மனம் ரொம்பத் தெளிவா இருக்கு."

"ரகு, உங்க காதலை நான் காதலிக்கிறேன்?"

"புரியலை..."

"இவ்வளவு தூரம் ஒரு  பெண்ணையே அவளையே நினைச்சு, கல்யாணம் வரைக்கும் வந்து, கல்யாணம் இல்லைன்னு தெரிஞ்சதும் வருத்தப்பட்டு, தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்சு, வைராக்கியம் வந்து அமெரிக்கா வந்து அவளைச் சந்திச்சு, அவளை மறக்க முடியாம அவளால ஆகர்ஷிக்கப்பட்டு, அதே சமயம் அவகிட்ட தப்பா நடந்துக்காம, அவளுடைய அறியாமையையும் நெருக்கத்தையும் பயன்படுத்திக்காம, அவ செத்தப்போ அதுக்காக உள்ளத்தில இருந்து கண்ணீர் விட்டு... ரகு, யூ ஆர் க்ரேட்! இவ்வளவு தூரம் மனசில தூய்மையான அன்பு உள்ளவங்க ஒருத்தரைக் காதலிக்கிறதில நான் பெருமைப்படறேன். உங்களை இந்த க்ரைஸிஸ்ல இருந்து காப்பாத்தறது என் கடமை மாதிரி. அது என்னால முடியும்னு தன்னம்பிக்கை இருக்கு எனக்கு."

"குட்" என்றான். "நாளைக்குப் பேசலாமா?"

"ரகு மனசில என்ன இருந்தாலும் எங்கிட்ட சொல்லுங்க. உங்கப்பாவுக்கு வாக்குக் கொடுத்திருக்கேன். மகனைப் பற்றி எதுவும் கவலைப்படாதிங்க. நான் பாத்துக்கறேன்'னு."

"சந்தோஷம். ரத்னா, நாம கல்யாணம் செய்துக்கலாம் தேனிலவுக்கு எங்க போகலாம்? நயாகாரா? இல்லை இல்லை பிட்ஸ்பர்க்?"



www.writersujatha.com

ரத்னா அவனைப் பெரிய விழிகளால் கடிந்து கொண்டாள்.

"படுத்துக்கங்க. குட் நைட்!" விளக்கை அணைத்துவிட்டுச் சென்றாள்.

மேரியைக் காலையிலேயே சந்தித்து அதைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று தீர்மானித்து கொண்டான். அவளிடம் தவறாமல் துப்பாக்கியை எப்படி உபயோகப்படுத்துவது என்று கேட்டுக் கொண்டுவிட வேண்டும். ராதா விமான நிலையத்துக்கு வராவிட்டால் அவன் அலுவலகத்துக்குப் போகலாம். அல்லது வீட்டுக்குப் போகலாம். காத்திருக்கலாம். அவசரமில்லை. நேராக அவன் மார்பைக் குறி வைத்து, 'டுமில்!"

ராதாவின் நெஞ்சில் நாய்க்குடை போல ரத்தம் பொங்குவதைப் பார்த்ததும் ரகுபதிக்கு நிம்மதியாகத் தூக்கம் வந்தது.

**கெ**ன்னடி விமான நிலையத்தில் ரத்னா, கார் பார்க்கில் ஐந்தாவது தளத்தில் நிறுத்தினாள். ரகு மார்பு பெல்ட்டைக் கழற்றிக் கொண்டு பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பத்திரமாக இருந்தது. ஒருமுறை பைக்குள் கைவிட்டு அதன் குதிரையை அன்புடன் வருடிப் பார்த்துக் கொண்டான். "ராதா வருவான்" என்றான்.

"வந்தா வரட்டும். அவன்கிட்ட எதுவும் பேச வேண்டாம் ரகு."

"பேசப் போறதில்லை" என்றான். பார்க்கிங் டிக்கெட் வாங்கிக் கொண்டு ரத்னாவுடன் உல்லாசமாக நடந்தான். டெர்மினலுக்கு பஸ்கள் விரைந்து கொண்டிருந்தன. சாயங்கால வெளிச்சத்தில் அநாவசிய ஸோடியம் மஞ்சளில் அவசரச மனிதர்கள் வண்ண வண்ணக் கார்களில் ஆளுக்கொரு மதுமிதாவுக்காக விரைந்து கொண்டிருந்தனர்.

"இடுப்பில் சின்ன ரேடியோக்களை அவ்வப்போது எடுத்து, அதனுடன் ரகசியம் பேசியவாறே நீலச்சட்டைக் காவலர்கள் சுறுசுறுப்பாக நடந்து சென்று கொண்டிருந்தனர். ஷட்டில் பஸ் பிடித்து 'கார்க்கோ' பகுதிக்கு ஒரு மைல் தூரம் தள்ளிச் செல்ல வேண்டியிருந்தது. விதம்விதமான அட்டைப் பெட்டிகள் அயல்நாட்டு வியாபாரத்தை நோக்கி கன்வேயரில் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன. கோபிநாத்தும் அவர் மனைவியும் ஓரத்தில் ப்ளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்க, ராதாகிஷன் கவுண்டரில் பேசிக் கொண்டிருந்தான். ரகுபதியின் உள்ளம் துள்ளியது.

"ரத்னா, அதோ பார் வந்திருக்கான்" என்றான்.

"இங்க பாருங்க" என்றாள்.

"என்ன?"

"மதுமிதா! என்றாள். முன்னே செல்ல நினைத்தவனைப் புஜத்தைப் பிடித்துத் தடுத்தாள்.

அழகான பளபளப்பான பெட்டி ஒன்று கன்வேயரில் பத்திரமாக அவசரமில்லாமல் நகர்ந்து கொண்டிருக்க, ரகுபதி அதை வசீகரமாகப் பார்த்தான். மஹகனியோ, தேக்கோ நல்ல பளபளப்பான பெட்டி, அதன் பாலிஷில் ஜனங்கள் தலைகீழாக நடந்தார்கள். மேல் மூடியில் ஜொலிக்கும் பித்தளை மலர்.

மெல்ல மெல்ல அவசரப்படாமல் அந்தப் பெட்டி நீக்ரோவை அணுகியபோது, அவன் அதன் அடையாளச் சீட்டைப் பார்த்துப் பொத்தானைத் தேர்ந்தெடுக்க, பொட்டி கன்வேயிலிருந்து திரை மாறி தானாகவே மற்றொரு கன்வேயருக்கு மாற்றிக் கொண்டு

கண்ணாடிக்கு வெளியே காத்திருக்கும் விமானத்தின் பிரமாண்டமான வயிற்றை நோக்கி ஊர்ந்தது.

"வாட்ஸிட் மாக்? எ ஸ்டிஃப்?"

ராதா, கோபிநாத்திடம் வந்து, "ஹியர் யூ ஆர் கோபி ஆல் தி பேப்பர்ஸ்! எல்லா கிளியரன்ஸும் வாங்கியாச்சு. பாம்பேல ஹெல்த் அத்தாரிட்டிஸ்கிட்ட காட்டிருங்க நோ ப்ராப்ளம்!"

அவனையே உற்றும் பார்த்துக் கொண்டு காகிதங்களை வாங்கிக் கொண்டே கோபிநாத், "உயிரோட என் டாட்டரை உன் கையில கொடுத்தேன். எப்படித் திருப்பிக் கொடுக்கறே, பாரு?"

ராதா தன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டே, "ஐம் ஸாரி கோபி. ஐ ஃபீல் ஹர். மதுவும் நானும்..."

"இத பார், மது எல்லாத்தையும் எழுதிட்டா. உனக்கும் தெருவில திரியற நாய்க்கும் வித்தியாசம் கிடையாது. போடா, என் கண் முன்னால நிற்காதே!"

"ஸ்ட்ராங் வோர்ட்ஸ் கோபி! நான் என்ன செய்வேன்? அவ்வளவு வேகமா ஓட்டி..."

"போடான்னா! என்று மார்பைப் பிடித்து உந்தித் தள்ளினார் கோபி. ரகுபதி அவர்களுக்கு இடையே வந்து "ராதா, நீங்க எங்கூட வந்துருங்க. அவர் ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்கார்."

ராதா தன் முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு, "வாட் பீப்பிள்! ஆக்ஸிடெண்டுக்கு நான் பொறுப்பா? ரகு சொல்லு. வேகமா ஓட்டினதுக்கு நான் பொறுப்பா? எவ்வளவு பேர் கார் ஓட்டறா?"

"நீங்க வாங்களேன், தனியாப் போகலாம்!"

பேசிக் கொண்டே நடந்தான். "ஒரு சின்ன சமாச்சாரத்துக்கு ஓவர் ரியாக்ட் பண்ணிட்டா. ஆல்ரைட்! என்னை மற்றொரு பொண்ணுகூட பார்த்துட்டா ஸோ வாட்? என்ன ஆச்சுன்னு இப்படி ரியாக்ட் பண்ணணும். நான் மன்னிப்பு கேக்கலையா? ஸாரி சொல்லலியா? இனிமே அந்த மாதிரி செய்யமாட்டேன்னு சொல்லலியா? சரி, என்னைப் பிடிக்கலை. என்னோட கூட இருக்க விருப்பமில்லைன்னா கேட்டிருக்கலாமே டிவோர்ஸ் கொடுக்கத் தயங்கியிருப்பேனா?"

"வாஸ்தவம் ராதா" – ரகுபதி பைக்குள் கை செலுத்தினான்.

"டிவோர்ஸ் மி பை ஆல்மீன்ஸ்! அதுக்காக இப்படியா ரியாக்ட் பண்ணுறது? குடிச்சுட்டு வேகமா கார் ஓட்டி ரகளை பண்ணி..."

துப்பாக்கியை ஜாக்கிரதையாக எடுத்தான்.

"நான் சொல்றது யோசிச்சுப் பாரு. நியாயமா இல்லையா? என்ன தப்பு நடந்து போச்சு?" ரகுபதி வலக்கைக்கு இடக்கையால் முட்டுக் கொடுத்து நீட்டி அவன் மேல் குறி வைத்தான். "ஓ மை காட்! என்னய்யாது! என்ன பண்றே! தட்ஸ் எ கன்! டோண்ட் டோண்ட்...!"

ராதாகிஷன் இரண்டு கைகளையும் முன்னுக்கு, நீட்டி அவனைத் தடுப்பதற்கு முன் ரகுபதி ஆள்காட்டி விரலை கொக்கிக்குள் செலுத்தி துப்பாக்கியின் விசையை அழுத்தினான்.

## 34

ஒரு கணத்தின் பிரிவில் ராதாகிஷனுக்கு உடம்பு பூராவும் வியர்த்து, எதிர்நோக்கிய துப்பாக்கி முனையின் அவசரத்திலும் அபாயத்திலும் முகம் ரத்தமிழந்து, இரண்டு கைகளும் ஒரு கடைசி முயற்சியாக ரகுபதியை நோக்கிப் பரிதாபத்துடன், 'வேண்டாம்பா... வேண்டாம்' என்று எதோ சொல்வதற்குள் ரகுபதி துப்பாக்கியின் விசையைத் தட்டிவிட்டாலும்–

துப்பாக்கி வெடிக்கவில்லை!

அதன் ரத்தத் துளைப்புக்குத் தயாராக இருந்த ராதாகிஷன் ஒரு கணம் இருக்கிறோமே– இருக்கிறோமா என்று புரியாமல் தன் மார்பைப் பார்த்துக் கொண்டு நிமிர்ந்து ரகுவைப் பார்க்க, ரகுபதி மறுபடி துப்பாக்கியின் விசையைக் 'கிளிக் கிளிக்' என்று முயற்சி செய்து கொண்டிருக்க, ராதாகிஷன் நேராக வந்து ரகுபதியின் கால்களைப் பற்றிக்கொண்டு நடுக்கத்துடன், "வேண்டாம்!" என்னை விட்டுரு! சுடாதே, சுடாதே! என்று சொல்ல, ரகுபதி தன் துப்பாக்கி ஏன் வெடிக்கவில்லை என்று ஆச்சரியத்துடன் அந்த வினோத ஆயுதத்தைப் பார்த்துக்கொண்டிருக்க, ராதாகிஷன் அபாயம் இப்போது விலகிவிட்டது என்று புரிந்து கொண்டு சட்டென்று எழுந்து வாயிலை நோக்கி ஓடத் தொடங்கினான். அவனை நோக்கி அபத்தமாகத் துப்பாக்கியைக் காட்டிக்கொண்டே ரகுபதியும் ஓட, "ஏய்! இந்தத் தடவை வெடிக்கலை. அடுத்த தடவை பாரு நிச்சயம்! என்னவோ வேலை செய்யலை இது. அடுத்த தடவை பாரு! பாரு" என்று அவன் பின் சப்தம் போட்டுக் கொண்டே ஓட, ராதாகிஷன் எதிர்ப்பட்ட காவல் அதிகாரியிடம் ஏறக்குறைய முட்டிக் கொண்டு அவரிடம், "ஆபீஸர்! ஆபீஸர்!" அவன் என்னைக் கொல்ல வருகிறான். காப்பாற்றுங்கள்" என்றான்.

அந்த அதிகாரி இந்த விஷயம் எல்லாம் ரொம்ப சகஜம்போல ஓடிவந்த ரகுபதியைத் தடுத்து நிறுத்தி – ராதாகிஷன் முதுகுப்பின் மறைந்து கொள்ள.... "வாட்ஸ் த மாட்டர்? லெட் மி ஸீ யுர் கன்" என்று அவன் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு, அதன் அறையைத் திறந்து.

"காலி! எதற்குப் பயப்படுகிறாய்? அவன் சும்மா பாசாங்குக்குத் தான் பயமுறுத்தியிருக்கிறான் இல்லையா!" என்று ரகுபதியைப் பார்த்துச் சிரித்து, "ரன் ஆன். ரன் ஆன்! நோ ஃபயர் வொர்க்ஸ் ஹியர்" என்றார்.

ராதாகிஷன் வெலவெலப்பு அடங்கிப் போய் தன் கண்ணீரையும் வியர்வை வெள்ளத்தையும் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு, இங்கிருந்து விலகி தலையைக் கவிழ்த்துக் கொண்டு விலகி நடக்க, ரத்னா இப்போது ரகுபதியுடன் சேர்ந்து கொண்டாள்.

"என்ன ரகு!"

"வேலை செய்யலை!" என்று தன் துப்பாக்கியைப் பார்த்துப் பிரமித்தபடி" குண்டு இல்லை. காலைல மேரி லோட் பண்ணி ஸேஃப்ட்டி காட்ச் எல்லாம் சொல்லித் தான் கொடுத்தா! யாரோ குண்டை எல்லாம் எடுத்துக் காலி பண்ணியிருக்கா."

"அப்படியா! யாராயிருக்கும்?"

"தெரியலையே? ஒரு நிமிஷம்! ரத்னா என்ன நேராப் பாரு!"

"ஏன், என்ன ரகு?"

"நீதானே...?!"

ரத்னா சிரிப்பை அடக்கிக்கொள்வது எரிச்சலாக வந்தது. கைப்பையைத் திறந்து காட்டினாள். குண்டுகள் அத்தனையும் பத்திரமாக இருந்தன.

"பாவி" என்று அவளை அடிக்கக் கையை ஓங்க, போலீஸ் அதிகாரி, "ஈஸி! ஈஸி? நோ ஒய்ஃப் பீட்டிங் அய்தர்! ரன் ஆன்! டோன்ட் ப்ளே வித்யூர் கன்" என்று ரகுபதியை முதுகில பிடித்துத் தள்ளிவிட்டு. தன்வழியே நடந்து போனார். ரகுபதி சோர்ந்துபோய், "ரத்னா! நீ இப்படித் துரோகம் பண்ணுவேன்னு நான் எதிர்பார்க்கலை."

"இல்லை ரகு, கொஞ்சம் நிதானமா யோசித்துப் பார்த்திங்கன்னா யாருக்கும் நஷ்டமோ சேதமோ ரத்தமோ இல்லாம எல்லாக் காரியமும் முடிஞ்சு போயிடுத்துங்கறது தெரியவரும்."

"என்ன முடிஞ்சு போச்சு?"

"நீங்க ராதாவைப் பழிவாங்க நினைச்சிங்க. அந்தக் கணத்தில் பழிவாங்கிட்டிங்க!"

"எந்தக் கணத்தில...?"

"மதுமிதாவுக்காக உங்களுடைய எதிர்காலத்தைப் பத்தி கொஞ்சம் கூடக் கவலைப்படாம அவனுக்கு முன்னால துப்பாக்கிய நீட்டி அதன் ட்ரிக்கரைத் தட்டி விட்டிங்க பாருங்க. அந்தக் கணத்தில நீங்க உங்களை நிரூபிச்சுட்டிங்க! உங்க சின்ஸியரிட்டியை, உணர்ச்சிகளை, எல்லாத்தையும் அந்த ஒரு கணத்தில நிரூபிச்சுட்டிங்க 'என் வாழ்க்கையைப் பத்திக் கவலை இல்லை'ன்னு காட்டிட்டிங்க. அது போதும் துப்பாக்கி வெடிச்சா என்ன, வெடிக்காட்டா என்ன?"

"வெடிச்சா அவன் செத்துப்போறான் ரத்னா, அந்த விளைவைத் தான் எதிர்பார்த்துக் குறி வெச்சேன்! அது நிறைவேறலியே?"

"ராதா செத்துப் போகலைங்கறிங்களா? அவனும் அந்தக் கணத்திலே ஒருமுறை செத்துப் போயிட்டான். நான் பார்த்துக்கிட்டுதானே இருந்தேன். வியர்த்து விறுவிறுத்து, உங்க கால்ல விழுந்து, மூஞ்சி எல்லாம் வெளிறிப் போய், அந்த ஒரு கணத்தில் நிச்சயம் செத்துப் போயிட்டான்! சுட்டாச்சு, செத்தும் போயாச்சு! வாங்க போகலாம்!"

"இன்னொரு தடவை, இன்னொரு தடவை!"

"நோ! வாழ்க்கைல இன்னொரு தடவையே கிடையாது. யோசிச்சுப் பாருங்க. நீங்க, கோபிநாத் எல்லாரும்தான் இன்னொரு தடவை கேக்கறிங்க. இல்லையா? வாங்க போகலாம்.

"என்னப்பா ஆச்சு?" என்றார் கோபிநாத், "அங்க புக்கிங்கில பிஸியா இருந்துட்டேன."

"ரகுபதி, ராதாகிஷனைச் சுட்டுத் தள்ளிரலாம்னு பார்த்தார். துப்பாக்கி வேலை செய்யலை.'

"அய்யோ! அவ்வளவு தூரத்துக்குப் போயிட்டியா? ரகு, அதனால என்ன பிரயோசனம்? யோசிச்சுப் பாரு. பிரயோசனமிருந்தா நானே அவனைத் தீர்த்துக் கட்டியிருக்க மாட்டேன்னா? பழி வாங்கறதால எந்தவிதமான பலனும் ஏற்படறதில்லை. அவன் வழியில அவனுக்குப் பழிங்கறது வேறு எதையாவது நிச்சயம் இருக்கும்!

"பொயட்டிக் ஜஸ்டிஸ்!"

"அப்படி நடக்கலைன்னாலும் அதுக்காக நம்ம வாழ்க்கையைச் சிக்கலாக்கிட்டு, ஜெயில்லயும் கோர்ட்டிலயும் செலவழிக்கிறது எந்தவிதத்தில பழிவாங்கறதுன்னு புரியலை! ஒரு வேளை இத்தாலியிலோ அல்லது கிங் ஆர்தர் காலத்திலயோ ரகுபதி நிஜமாகவே சுட்டிருந்தா கைது பண்ணாம மாலை போட்டு நேஷனல் ஹீரோவா ஆயிருக்கலாம்" என்றாள் ரத்னா.

"ரகு நாங்க வர்றோம். மதுமிதா செத்துப் போகலை. தாமிர பரணிக்கரையில் தூங்கப் போறா; அவ்வளவுதான்! அவ செத்துட்டாளா என்ன? உன் ஞாபகத்தை விட்டு விலகுவாளா? எங்க கனாவில எல்லாம் வராம இருப்பாளா? அவள் எழுதின லெட்டர் இல்லையா? அவ வரைஞ்ச குழந்தைப்படம் எல்லாம் இல்லையா. ஏராளமா? துணிகள், போட்டோவில் இன்னும் உயிர் இல்லையா? மூவிஸ் எடுத்தமே? டேப் ரிக்கார்டரில் அவ குரல் இல்லையா?"

கோபிநாத் தன் கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டார்.

மாயாஜால கம்ப்யூட்டர் எழுத்துகள் பிரமாண்டமான போர்டில் மாறின.

"ஸார், இட்ஸ் டைம்" என்றாள் ரத்னா சன்னமாக.

புறப்பட்டு டெர்மினலுக்கு வந்து கோபிநாத் தன் மனைவியுடன் செக்யூரிட்டி ஆர்ச்சைக் கடந்து மறைகிறவரை பார்த்துக் கொண்டிருந்தான். ரத்னாவுடன் கார் பார்க்குக்கு நடக்கிறபோது மௌனமாகவே வந்தான் ரத்னாவும் பேசவில்லை.

அமெரிக்கா! அமெரிக்கா! நியூயார்க்! நியூயார்க்! சுற்றுலாக்காரர்களின் சொர்க்கம்! நகரத்தை மேலேயிருந்து பார்க்கலாம். டைம்ஸ் ஸ்கொயர். ப்ரூக்லின் பிரிட்ஜ். ராக் ஃபெல்லர் பிளாஸாவில் எழுபதாவது மாடியில் ஏறி டைம்ஸ் ஸ்கொயரைத் தரிசிக்கலாம்.

சுதந்திரதேவியின் சிலையிலிருந்து உள்ளே ஏறி அவள் முடியிலிருந்து வெரஸேனா பாலத்தையும் மன்ஹாட்டனையும் ரசிக்கலாம்.

எத்தனை தியேட்டர்கள் உள்ளன! எத்தனை நாடகங்கள்! எத்தனை இரவுக் கேளிக்கைகள்! வண்ண நடனங்கள்! நியான் பின்னல்கள் எத்தனை! விழாக்கள் எத்தனை! புத்தகங்கள் எத்தனை! கலைக் கண்காட்சிகள், சரித்திர நியூயாக்; ப்ராங்க்ஸ், ப்ரூக்லின், மன்ஹாட்டன், க்வீன்ஸ் ஸ்டாட்டன் ஐலண்ட் பார்க்குகள், தோட்டங்கள், சென்ட்ரல் பார்க் ஆயிரம் ஏக்கர் பரப்பு! இரண்டரை மைல் நீளம்! விம்மித் தணியும் பசும்புல் வெளிகள், வெள்ளி தெரியும் ஏரிகள், குளங்கள், பறவைகள் சரணாலயம், ஒற்றையடிப் பாதை, மட்டக்குதிரை சவாரி, ஐஸ் க்ரீம்! தூக்கமில்லாத டிவி. எவ்வளவோ இல்லையா மதுமிதாவை மறக்க முயற்சி பண்ணிப் பார்ப்பதற்கு!

கார் வெளியே வந்தபோது வானத்தில் கர்ப்பப் பறவை போல சிரமப்பட்டு அந்த போயிங் மேலே ஏறிக் கொண்டிருந்தது தெரிந்தது.

"மதுமிதா போறா" என்றான் ரகு.

விமானம் மேகத்துக்குள் மறைந்துவிட, ரகுபதி கார் ஓட்டிக்கொண்டிருந்த ரத்னாவின் புஜத்தைப் பிடித்து ஒருமுறை அழுத்தினான். அவள் சட்டென்று ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள்.

*(முற்றும்)*

அன்பான வாசகர்களுக்கு

"எதற்காக அந்த அறியாத பெண்ணைக் கொல்ல வேண்டும்?" என்று, அதட்டலும் கண்ணீரும் கலந்த அந்த இளம் பெண்ணின் குரல் டெலிபோனில் ஒலித்த போது, சற்று நேரம் ஒரு காகிதப் பெண்ணான மதுமிதாவுக்கு ஒரு நிஜமான பெண் விசும்பி அழுவதைக் கேட்ட போது எனக்குத் திகைப்பாகி விட்டது.

இந்தக் கதையால் எனக்கு நிறைய கடிதங்களும் டெலிபோன்களும் வந்தவண்ணம் இருந்தன. ஒரு அக்கவுண்ட்டண்ட், எப்படியாவது, "அடுத்த வாரம் மதுவைப் பிழைக்க வைத்துவிடுங்கள்" என்றார். "டூ ஸம்திங்!" திருவண்ணாமலை பிரகாஷும் பாண்டியனும் "மதுமிதாவின் இந்த முடிவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மிகவும் துயரமடைந்த எங்களுக்கு இனியாவது நடந்தவற்றை ரகுபதியின் கனவாக்க வேண்டுகிறோம்" என்று யோசனையும் கூறியிருந்தார்கள்.

இந்த முடிவுரையின் நோக்கம், இந்த மாதிரி வந்த கடிதங்களை விவாதிப்பது அல்ல, வேறு!

ராதாகிஷனின் துரோகம் வெளிப்பட்ட அந்த அத்தியாயம் வெளிவந்தபோது, கல்ஃபிலிருந்து அந்தக் கடிதம் எனக்கு வந்தது. எழுதியவர் ஓர் அன்புச் சகோதரி. அந்தக் கடிதம் என்னையும் என் மனைவியையும் மிகவும் கலக்கி விட்டது.

சில பகுதிகள்:–

"என் ஹாப்பி உங்களுடைய க்ரேட் ஃபான். அதனாலதான் உங்களுடைய ஹெல்ப்பை நாடி இந்த லெட்டரை எழுதுகிறேன்...

இவர் என்னை லவ் பண்ணி மேரி பண்ணிக் கொண்டோம். ரொம்பவும் ஹாப்பியாக இருந்தோம் 80 வரை. 80–ல் எனக்குப் பிடித்தது சனியன்.

இவர் கம்பெனியிலிருந்து ஒரு ஸ்டெனோவுடன் சிநேகிதம் பரிசுகள், அவள் வீட்டில் சாப்பாடு. அவள் ஃபாதர் பிரதர் எல்லாரும் ஸ்டெனோதான். அவர்களுக்கு நன்றாகத் தெரியும் இவர் கல்யாணம் ஆனவர் என்று நான் முதலில் சந்தேகிக்கவில்லை.

81–மே–யில் அவள் இவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஸ்ட்ரெஸ் பண்ண ஆரம்பித்தாள். இவர் முதலில் மாட்டேன் என்று சொல்லிட்டார் போல இருக்கு. பின்பு அவள், 'என்னை விட்டுவிடு' என்று சொல்லி விட்டாள் போலிருக்கிறது. ட்ரிங்க் பண்ணிவிட்டு விரக்தியாகப் பேசினார். ஒன்றும் புரியவில்லை. பின்புதான் எல்லாம் சொன்னார்.

டிடெக்டிவ் ஏஜன்ஸி மூலமாக அவளை வாட்ச் பண்ணச் சொல்லி, அவளுக்கு ஒரு பாய் ஃப்ரெண்ட் இருப்பதாகக் கண்டுபிடித்த பின்புதான் அவளை விட்டார். மனது ரொம்ப உடைந்து போய்விட்டதாம். ஸோ, அவருக்கு உள்ள சினிமா கும்பல் ஃப்ரெண்ட்ஸிடம் சொல்லி, ஓர் எக்ஸ்ட்ராவுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார் 81 அக்டோபரிலிருந்து!

இது எனக்கு 82 மேயில் தெரிய வந்ததும் ரொம்ப அதிர்ச்சிக்கு உள்ளானேன். இதற்கெல்லாம் அவர் சகோதரர் உடந்தை! அதிர்ச்சியில் பைத்தியம் பிடித்துவிட்ட நிலையில் தான் ஒரு லேடி டாக்டரிடம் போய் எட்டு மாதம் தினப்படி (மாத்திரை விவரம் தந்திருக்கிறார்) சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஜூனில் ஒரு டிப்ளமோ கோர்ஸில் சேர்ந்து கொண்டேன். (இந்தியா வந்துவிட்டதாகத் தெரிகிறது) அப்பாவுக்கு பி.பி. அதிகமாகி விட்டது. கிளியராகச் சொன்னார். 'நீ என் பையன் என்றே நினைத்துக் கொள்கிறேன். இவ்வளவு கொடுமை செய்தவனுடன் நீ போக வேண்டாம். தன்னை அவன் முழுவதும் திருத்திக் கொண்டாலன்றி என்று.

ஆகஸ்டில் வந்து "என் பெயர் ஆபீசில் பாழாகி விடும் தயவு செய்து திரும்பி வா" என்று அழைத்து வந்தார். மாறி விட்டார் என்றுதான் நினைத்தேன். என் அப்பாவுக்கு விருப்பம் இல்லாவிடினும் வந்தேன். லெட்சுமி ஹேவ் எ ட்ரை!

நல்ல நிலையில் இருக்கிறோம் இருந்தும். இருபதாயிரம் சம்பளம் வாங்கியும் நிம்மதி இல்லாத நிலை. நான் இந்தப் பணத்தைக் கேட்கவில்லை. இரண்டு புடவையும் எண்ணூறு ரூபாய் சம்பளமும் என்னை மகிழ்விக்கும், அவர் உண்மையாக இருந்தால். நான் பண்ணின பாவம் என்ன? ஒரு மனைவி ஒரு தேர்ந்த ஆசை நாயகியைப் போல் இருக்க முடியுமா? இப்போதும் எதாவது காரணம் வைத்து அங்கே போகிறார். இன்னும் விடவில்லை. கேட்டால், இப்படி நேக் பண்ணினா எங்காவது ஓடி விடுவேன் என்கிறார். எல்லாவற்றையும் விட்டுவிட்டு, போகட்டும் என்றும் போய் விடலாம் போல் உள்ளது. என்ன செய்வது என்றே புரியவில்லை. எந்த மனைவி, கண்ணுக்கு லட்சணமாக உள்ள, நல்ல குடும்பத்துப் பெண் அதைத் தாங்கிக் கொள்ள முடியும்? என்னை ஏன் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டார்? என் மாதிரி ஒரு நிலைமை யாருக்கும் வரவேண்டாம். கடவுள் என்னை சீக்கிரம் அழைத்துக் கொண்டால் நல்லது. தற்கொலை செய்துகொள்ள ஆயிரம் யோசனை என் கர்மா – நான் படும் கஷ்டம், தற்கொலை செய்து கொண்டால் அடுத்த பிறவியிலும் தொடரும், போதும் கடவுளே! இந்த ஜென்மம் ஒன்று போதும். எனக்கு ஏன் இந்தக் கஷ்டம்?

இவருக்கு உங்கள் எழுத்தில் அபார மதிப்பு. தயவு செய்து ஒருகதை அல்லது குறு நாவல் எனக்காக, இது எவ்வளவு பெரிய தப்பு என உணரும் விதத்தில் எழுத முடியுமா? இந்த உபகாரம் செய்தால் ஜென்மம் முழுவதும் நன்றியுடையதாக இருப்பேன்.

''என்னை யாரும் கேள்வி கேட்க முடியாது' என்கிறார்.

'கடவுளே! என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்?'

கடிதத்தின் சில அந்தரங்கமான பகுதிகளை நீக்கி விட்டுத்தான் கொடுத்திருக்கிறேன். கதைகளைப் படித்து விட்டு உடனே. 'இன்றைய தேதியிலிருந்து திருந்தினேன்' என்று யாரும் மாறியதாகச் சரித்திரம் இருக்கிறதா என்ன? என்னுடைய டைப்ரைட்டரில் ஒரு ராதாகிஷனையும் மதுமிதாவையும் சித்தரிக்க முடியும். நிஜ வாழ்வில் ஒரு கிஷனைச் சந்திக்கும்போது கடவுளே! என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள?" என்று ஊமைத்தனமான கோபம்தான் கொள்ள முடிகிறது. இருந்தும், இந்தக் கடிதத்தின் பகுதிகளை உங்கள் முன் வைத்த காரணம், நாம் எல்லோரும் சேர்ந்த ஒட்டு மொத்தமான பிரார்த்தனை இந்த சகோதரிக்கு ஒரு விடிவு காலத்தைக் காட்டும் என்றும், அவர் மனதிலிருந்து தற்கொலை போன்ற விபரீத எண்ணங்களைத் துரத்தும் என்றும் காலம் கடந்து மனமும் உடலும் தளரும்போது உறவுகளின் பாசங்களின் உண்மையான அர்த்தங்கள் புலப்படும்போது, இந்தச் சகோதரிக்கு விடிவு காலம் வரும் என்ற நம்பிக்கையுடன் இம்மாதிரி கணவர்களின் வக்கிரங்களைச் சகித்துக் கொண்டு வாழும் நூற்றுக்கணக்கான சகோதரிகளுக்கு அஞ்சலி செய்து இந்தக் கதையை முடிக்கிறேன்.



www.writersujatha.com